
சுந்தரி நீயும்
சுந்தரன் நானும்...
முதவல்லி கல்யாணசுந்தரம்
சுந்தரி நீயும் சுந்தரன் நானும்...!
அமுதவல்லி கல்யாணசுந்தரம்
ந்தரி நீயும்
ந்தரன் நானும்...!
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : சுந்தரி நீயும் சுந்தரன் நானும்...! |
| ஆசிரியர் | : அமுதவல்லி கல்யாணசுந்தரம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜூன், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 284 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.130.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : குமரன் பிரிண்டர்ஸ்,<br>போன் : 9840464862 |




சுந்தரி நீயும்
சுந்தரன் நானும்...!

# சுந்தரி நீயும் சுந்தரன் நானும்...!

## 1

வந்துதித்தாய் ராமா நீ கோசலை தன் திருமகனே!

சிந்தும் ஒளிசிறு காலை திசை எங்கும் புலர்கிறது!

மந்திரங்கள் வாய் மொழிந்து, வந்தனைகள் புரிந்தருள

சேர்ந்திரு கண் அருள் பொழிய, வேங்கடவா எழுந்தருள்வாய்...!

தமிழில் ஒலித்த வெங்கடேச சுப்ரபாதத்துடன் சேர்ந்து முணுமுணுத்தபடி, காலை ஆறு மணிக்கு சமையல் கட்டின் முதல் முக்கிய பணியான, டிகாஷன் இறக்கும் வேலையில் இருந்தார் கமலம்.

'ஒவ்வொரு நாளும் காபி கொட்டை வறுத்து, வீட்டிலேயே அரைத்து, புதிதாக மணக்க மணக்க காபி தயாரிக்க வேண்டும்' என்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அந்த வீட்டில் நிலவி வந்த சம்பிரதாயம்.

மாமனாரின் மறைவிற்குப் பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் சற்றே தளர்ந்து, பொடியை அரைத்து, ஒரு வாரத்திற்கு வைத்துக் கொள்ளலாம். தினமும் புதிதாக டிகாஷன் போட்டால் போதும் என்ற அளவில் வந்து நிற்கிறது.

பாலை அடுப்பில் வைத்து விட்டு, குக்கரில் வைக்க வேண்டிய பொருட்களைத் தயார் செய்து கொண்டு இருந்தவர், யாரோ நடமாடும் அரவம் கேட்டுத் திரும்ப, அவர் கண்கள் தெறித்து வெளியே விழுந்து விடும் அளவுக்குப் பெரிதானது.

''நீயா...?'' என்று கேட்ட கேள்வியில் தெரிந்த வியப்பின் அளவை உணர முடிந்தது.

''என்னம்மா அப்படி பேயைப் பார்த்த மாதிரி கண்ணை உருட்டுறீங்க? நான் உங்க பொண்ணு. மறந்து போய் விட்டதா?'' என்று அருகே வந்து அவரின் தோளைக் கட்டி, அப்போது தான் குளித்து வந்த அம்மாவிடம் இருந்து சந்தன சோப், குழைத்துப் பூசிய கஸ்தூரி மஞ்சள் இரண்டும் கலந்து வீசிய நறுமணத்தை ஆழ்ந்து மூச்செடுத்து நுகர்ந்தாள் திரிபுரசுந்தரி. அப்பா வழி பாட்டியின் பெயரை வைத்தாலும், மாமியார் என்ற மரியாதையில் தள்ளி வைக்காமல் சுந்தரி என்ற பெயர் சரளமாகவே கமலத்திற்கு வரும்.

''பேயாக இருந்தால் கூட எனக்குப் பிரச்னை இல்லை சுந்தரி. காலங்கார்த்தால நீ அல்லவா வந்து இருக்கிறாய்? சனிக்கிழமையும் அதுவுமா குளிக்காமல் மேலே வந்து விழுறியே? முதலில் தள்ளி நில்லு...'' என்று அவளை விலக்கி நிறுத்தினார்.

''ஆமா! இன்னிக்கு சனிக்கிழமை மேலே விழக் கூடாது. நேற்று வெள்ளிக்கிழமை தொடக் கூடாது.



அதற்கு முன்தினம் அமாவாசை. அதுக்கும் முன்னாடி பிரதோஷம். என்னிக்கு நீங்க சாதாரணமா தொட்டுப் பேச விட்டு இருக்கீங்க. சொல்லுங்க பார்ப்போம்...'' என்று இடுப்பில் கை வைத்து, அவரை முறைத்தபடி ஒரு வாக்கு வாதத்துக்குத் தயாரானாள்.

''அம்மா தாயே! உனக்குப் புண்ணியமா போகும். காலங்கார்த்தாலே இங்கே வந்து நின்று என் வேலையைக் கெடுக்காதே. எதுவா இருந்தாலும் பதினோரு மணிக்கு மேலே பேசிக்கலாம். இப்ப இடத்தைக் காலி பண்ணு...''

''ப்ச்! என்னம்மா நீங்க? என்னை இப்படித் துரத்தி விடுவதிலேயே குறியா இருக்கீங்க? நான் உங்களுக்கு ஹெல்ப் பண்ண வந்தேன். இப்ப என்ன செய்யணும் சொல்லுங்க. முதலில் பாட்டிக்கு காபி கொடுத்துட்டு வரட்டுமா?'' என்று உடனே தடாலடியாக சுருதி இறங்கி கெஞ்சத் தயாராக கமலம் உஷாரானார்.

''என்ன வேண்டும் உனக்கு?''

''ச்சே! இருந்தாலும் என் மேலே உங்களுக்கு இவ்வளவு அவநம்பிக்கை ஆகாதும்மா...'' என்று மீண்டும் தாஜா செய்ய முயன்றவளை தள்ளியே நிறுத்தினார் கமலம்.

''என்ன விஷயம் சொல்லு. அதுக்குள்ளே எழுந்து வந்து விட்டாய்? இப்ப ஏப்ரல் மாசமா இருந்தால் கூட மழை கொட்டோ கொட்டு என்று கொட்டப் போகுது...''

''சும்மா சொல்லக் கூடாது. காலேஜில் படித்து பட்டம் வாங்கா விட்டாலும், வெளி உலகத்திற்கு அதிகம் வரப் போக என்று இல்லாமல், சமையல் அறைக்குள்ளேயே இருந்தாலும், ஆட்களை எடை போடுவது மட்டும் கை

வந்த கலை எங்க அம்மாவுக்கு...'' என்று மீண்டும் ஒரு முறை கொஞ்சிவிட்டு, சமையல் மேடையில் ஏறி அமர்ந்தாள் சுந்தரி.

''நீ ஐஸ் வைக்க வேண்டிய அவசியமே இல்லை. சுருக்கமாச் சொல்லு. என்னால் முடிந்தால் தான் செய்ய முடியும்...''

''அம்மா. திங்கள், புதன் இரண்டு நாளுடன் பி.காம் எக்ஸாம் முடிந்து விடும். நான் மேலே எம்.பி.ஏ. அல்லது சி.ஏ. படிக்கலாம் என்று அப்பாவிடம் நேற்று சொன்னேன்...''

''ம்ம்ம்...''

''என்னம்மா வெறுமனே 'ம்ம்ம்' என்று சொல்றீங்க...'' என்றவளின் குரல் உள்ளே போய் இருந்தது.

''உங்க அப்பா என்ன சொன்னார்?''

''ப்ச்! நான் படிச்சது போதும் என்று சொன்னார்...''

''அப்புறம் என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்? உங்க அப்பாவிடம் இந்த விஷயம் பேச என்னால் முடியாது...''

''ஹையோ! அது மட்டுமில்லைம்மா. உடனே எனக்குக் கல்யாணம் பண்ணப் போகிறாராம். அதுதான் எனக்குப் பெரிய குண்டு. அதுக்கு தான் உங்களிடம் வந்தேன்...''

''சுந்தரி, கடந்த ஆறு மாசமா என்ன பிரச்னையோ? இப்பதான் நாலு நாளா அப்பா முகத்தில சின்னதா சிரிப்பு வந்து இருக்கு. தீர்வு கிடைத்த சந்தோஷம் இருக்கு. அதையும் இதையும் சொல்லி அந்தச் சிரிப்பைக் கெடுத்து விடாதே. அவ்வளவு தான் சொல்வேன். வயசுப் பெண்கள் இருவரை வீட்டில் வைத்துக் கொண்டு அவர் படும் கஷ்டம் எனக்குத் தான் தெரியும்...''



''என்னம்மா, இந்தக் காலத்துல போய் நீங்களும் இப் படிப் பேசுறீங்க? பையன் என்றால் உசத்தி பொண்ணு என்றால் சுமையா? அப்பா அப்படி நினைத்தாலும், நீங்க எடுத்துச் சொல்ல வேண்டாமா? இப்ப எனக்கு இருபது வயசு தானேம்மா ஆகுது? இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம்? நான் படிக்கணும்...''

''படி. கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு சென்னை யில் இருந்து நல்லா படி. யார் வேண்டாம் என்று சொல் கிறார்கள்?''

''கல்யாணம் பண்ணிய பிறகு படிப்பதற்கு... அதை பண்ணாமலேயே படிக்கலாமே... அது எனக்கு இன்னும் சுலபமா இருக்கும்...''

''கொஞ்சம் இடம் கொடுத்தால் போதுமே! உன்னுடன் இந்த விஷயம் குறித்து வாக்குவாதம் பண்ண எனக்கு நேரமும் இல்லை. மூடும் இல்லை. வெராண்டாவில் பேப்பரோடு இருப்பார் உங்க அப்பா. எதுவா இருந் தாலும் அங்கே போய் பேசிக்கோ. என்னை ஆளை விடு...'' என்று கழுத்தை பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்ற, அவள் கால்களை தரையில் உதைத்தபடி எரிச்சலுடன் வந்தாள்.

அடுக்களையில் இருந்து அம்மாவால் முடியாது என்று கை விரிக்கப் பட்டு வெளியேற்றப்பட்ட திரிபுரசுந்தரி. தன் கோரிக்கையை அத்துடன் விடுவதாக இல்லை.

சில கணங்கள் ஹால் சோபாவில் அமர்ந்தவள், மீண் டும் எழுந்து, அடுக்களைக்குச் சென்று, ''அப்பா காபி கேட்கறாங்க'' என்று அதிகாரத்துடன் நுழைந்து, அவரை மிரட்டி வாங்கிய காபியுடன் வாசலுக்கு வந்தாள்.

''ஹேய்! என்னடா இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்ட? வா, வா. பேப்பர் பார்க்கிறாயா?'' என்று வரவேற்றார் கிருஷ்ணமூர்த்தி.

''உங்களுக்காக நானே போட்ட சூப்பர் காபிப்பா...'' என்ற முஸ்தீபுடன் அருகே அமர, ''உனக்கு காபி போடத் தெரியுமா சுந்தரி...?'' என்று அவர் கேட்டதும், அவளுக்கு தொண்டையில் பதில் ஒரு கணம் சிக்கினாலும் உடனே வெளியே வந்து விட்டது.

''இவ்வளவு ஸ்மார்ட்டா எல்லா விஷயத்தையும் கண்டு பிடிக்கும் எங்க அப்பா ஒரு விஷயத்துல கோட்டை விட்டுட்டாரே...? எப்படி...?'' என்று சத்தமாக யோசிக்க, அவர் முகம் லேசாக வாட, அவர் கை தானாக உயர்ந்து உச்சியை வருடியது.

''மேலே படிக்கணும் என்ற உன் ஆசை எனக்குத் தெரியாமல் இல்லை சுந்தரி. நீ மேலே படிக்கணும். நீ ஆசைப் பட்ட மாதிரியே ஒரு புகழ் பெற்ற ஆடிட்டரா, சென்னையில கொடி கட்டிப் பறக்கணும். உன்னிடம் பல கோடி பணப் புழக்கம் உள்ள கம்பெனிகள் எல்லாம் கணக்கு தணிக்கை பண்ணி சர்ட்டிபிகேட் வாங்க கை கட்டி நிற்கணும் என்ற ஆசை எனக்கும் இருக்குடா! அதுக்காக தான் இந்தக் கல்யாணமே அவசரமா ஏற்பாடு பண்றேன்...''

''ஹய்யோ... அப்பா! நான் எங்கே இருந்தாலும், எப்படிப்பட்ட சூழலிலும் படிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நான் கவலைப் படுவது எனக்கில்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்களை நினைத்து தான் நான் கவலைப்படுகிறேன்...''

''உனக்குப் பொறுப்பு வந்து விட்டது என்று காண்பிக்க, இப்ப நீ சொன்ன இந்த ஒரு வார்த்தை போதுமேடா! அவங்களுக்காக எவ்வளவு கவலைப் படுகிறாய்? சமத்து...'' என்று சொல்ல அவளுக்கு ஹையோ என்று இருநதது.



''அதில்லைப்பா. நீங்களே சொன்ன மாதிரி ஒரு காபி கூட எனக்குப் போடத் தெரியாது. நான் அங்கே போய் என்னப்பா பண்ணுவேன்?'' என்று அவருக்காகப் பேசுவது போல நடிக்க அவர் புன்னகை செய்தார்.

''அதனால் என்னடா...? படிப்பு முடிஞ்சாச்சு. அம்மா, பாட்டி என்று ஒன்றுக்கு இரண்டா பெரியவங்க வீட்டில் இருக்காங்க. ஒரு மாசத்துல கல்யாணம் வச்சாலும் அதுக்குள்ளே நீ பிரமாதமா சமைக்கக் கற்றுக் கொள்வாய் சுந்தரி. எனக்கு நம்பிக்கை இருக்கு...''

''அங்கே அவர் மட்டும் இல்லையேப்பா! கூடவே...'' என்று மேலும் அப்பாவிற்கு விளக்கம் சொல்ல முயலும் போது, 'ஸ்ஸ்ஸ்...' என்று பாம்பு சீறும் சப்தம் ஹாலின் இடப்பக்கத்தில் இருந்து கேட்க, திரும்பினால், அங்கே தங்கை செல்வராணி நின்று கை காட்டி அழைத்துக் கொண்டு இருந்தாள்.

அவளின் தங்கை. பி.ஏ. ஜர்னலிசத்தை தொலைதூர கல்வி மூலம் படித்துக் கொண்டு இருப்பவள். எதிர்காலத்தில் ரேடியோ ஜாக்கியாக அல்லது டி.வி. காம்பியரராக வரும் ஆர்வம் உண்டு. சுந்தரிக்கு ஒரு ஆண்டு இளையவள். ஜாலியாக பொழுதை கழிப்பவள். வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொண்டு, என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்று வாழ்பவள்.

தீபாவளிக்கு எடுக்கப்படும், புடவையில் இருந்து வீட்டில் சமைக்கப்படும் உணவுப் பொருள் வரை, செல்வராணி தேர்வு தான் முதலில் இருக்கும். அதன் பிறகே மற்றவருக்கு போகும்.

''இதோ வரேன்பா... அம்மா கூப்பிடுவது மாதிரி இருக்கு...'' என்று சொல்லிவிட்டு வந்தவள் தங்கையின் அருகே நின்று முறைத்தாள்.

''முக்கியமான விஷயம் அப்பாவிடம் பேசிட்டு இருக்கும்போது எதுக்கு இப்படி நல்ல பாம்பு மாதிரி சீறுகிறாய்...?'' என்று அதட்ட அவள் அக்காவின் நெற்றியைத் தட்டிக் காட்டினாள்.

''ஆள் ஆறடியைத் தொடுவது மாதிரி வளர்ந்தால் போதாது. வெளியே வளர்ந்த அளவுக்கு, உள்ளே மூளை வரலையே...?'' என்று கேலி பேச, அவளின் கோபம் மேலும் கூடியது.

''ப்ளஸ் டூவில், ஐம்பது பெர்சண்ட் எடுத்துத் தடவித் தடவி பாஸ் பண்ணிய நீ புத்திசாலித்தனத்தை பற்றிப் பேசாதே!''

''இதான்...! மார்க் வாங்குவது ஒன்றே குறியாக இருக்க உன்னை மாதிரி படிப்பாளிகள் கிட்டே இருக்கும் பிரச்சனையே இதுதான். கடிவாளம் போட்ட குதிரை மாதிரி நேரே பார்த்துட்டு போவீங்களே தவிர அக்கம் பக்கம் பார்க்க மாட்டீங்க. இப்ப உனக்கு இந்தக் கல்யாணம் நிற்கணும். அவ்வளவு தானே? அதுக்கு நான் ஐடியா கொடுக்கட்டுமா?'' என்று சர்வ அலட்சியமாகக் கேட்க சுந்தரிக்குத் திகைப்பாக இருந்தது.

''என்ன இவ்வளவு அசால்ட்டா சொல்ற? உன்னால் இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியுமா?''

''என்னால் நிறுத்த முடியாது. ஆனால் யாரால் நிறுத்த முடியும் என்ற தகவல் எனக்குத் தெரியும். நிறுத்த என்ன செய்யலாம் என்ற ஐடியா கூட கைவசம் இருக்கு...'' என்று பெருமையாகச் சொன்னவளை நம்பிக்கை இல்லாமல் பார்த்தாள் சுந்தரி.



''எனக்கு ஒன்றும் உன்னிடம் கெஞ்சிக் கெஞ்சி ஐடியா விற்க வேண்டிய அவசியம் இல்லை. நான் வரேன்...'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு நகர, அவசரமாக கை பற்றி இழுத்து நிறுத்தினாள்.

''சரி என்ன செய்யணும் சொல்லு...''

''நான் சொல்றதுக்கு முன்னாடி நீ எனக்கு என்ன செய்வாய் சொல்லு?'' என்று பேரம் பேச அவள் முறைத்தாள்.

''தீபாவளிக்கு எடுத்த மயில் கழுத்து கலர் பட்டுப் புடவை நல்லா இருக்கு என்று சொன்னாயே... அதை உனக்கே தந்து விடுகிறேன்... போதுமா?''

''அஸ்கு... நீ கட்டிய புடவை எனக்கு வேண்டாம். கல்யாணத்துக்கு எப்படியும் நாலஞ்சு புடவை எடுப்பாங்க இல்லை. அதில் எனக்குப் பிடிப்பதை எல்லாம் நீ கொடுத்து விடு ஒ.கே?''

''பிடிப்பதை எல்லாம் இல்ல... அதில ஒன்று...''

''அதை தான் நானும் சொன்னேன்...''

''இருக்கட்டும். நானும் அதையே திருப்பி சொன்னேன் என்று வைத்துக் கொள். ஒரு பட்டுப் புடவை. டீல் ஓகே?'' என்று மீண்டும் சொல்லி உறுதிப் படுத்திக் கொண்டாள் சுந்தரி.

''ஓகே. நமக்கு ஒருத்தர் ஒரு ஆர்டர் போடுறாங்க என்றால், அந்த ஆர்டர் போடுறவங்களுக்கே ஆர்டர் போடக் கூடிய ஆள் யார் என்று பார்த்து அவரிடம் போகணும். இது முதல் வழி...''

''கல்யாணம் பற்றிச் சொல்வது அப்பா. அப்பாவுக்கே ஆர்டர் போடுவது என்றால் பாட்டியா...?'' என்று இழுத்தவளின் கண்களில் யோசனை வந்தது.

''ஆமா, அது உனக்கு வொர்க் அவுட் ஆகலை என்றால்... சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழலாம். அதாவது மாப்பிள்ளையிடமே போய்...'' என்று அவள் ஆரம்பிக்கும் முன்பே வேகமாக மறுத்தாள் சுந்தரி.

''பாட்டியாவது பெரியவங்க. நம்ம வீட்டிலேயே இருக்கவங்க. நம்ம நல்லது கெட்டது பார்த்துக்குவாங்க. நான் பாட்டி காலில் விழுந்துக்கறேன். நான் ஏன் அவன் காலில் போய் விழணும்? மாப்பிள்ளையை நான் போய் பார்க்கவும் வேண்டாம். இந்தக் கல்யாணம் நிற்கவும் வேண்டாம்'' என்று வேகமாக சொன்ன நேரத்தில் சுற்றிலும் இருந்த தேவர்கள் 'ததாஸ்து...' சொல்ல, 'இந்த திருமணம் நிற்கவும் வேண்டாம் என்று அவள் சொன்ன அந்த வாக்கு அப்படியே அடுத்த முப்பது நாட்களில் பலித்தது.

நேரே குளியல் அறைக்குச் சென்றவள், அடுத்த பதினைந்து நிமிடங்களில் தலைக்கு குளித்து, நுனியில் முடிச்சிட்ட கொண்டையுடன், இளம் பச்சை வண்ண பாவாடை சட்டையும், மெரூன் நிறத்தில் ஜார்ஜெட் தாவணியுடன், அழகு தேவதையாக பூஜை அறைக்கு வந்து நின்று, நெற்றியில் ஒரு கீற்று திருநீற்றினை பூச, ஏற்கனவே அங்கிருந்தவர் அவளை வியப்புடன பார்த்தார்.

அடுத்த வினாடி, கை குவித்து, கண்களை மூடி, 'ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே, சகஸ்ரநாம தத்துல்யம் ராம நாம வரானனே' என்று விஷ்ணு சஹஸ்ர நாமத்தை திரிபுரசுந்தரி ஜூனியர் சொல்ல, திரிபுரசுந்தரி சீனியரின் வியப்பு கூடி மனம் உருகியது.





# 2

சென்னை இராதாகிருஷ்ணன் சாலையும் கடற்கரை சாலையும் சந்திக்கும் இடத்தில் அமைந்து இருந்த காவல் துறை தலைமை அலுவலகம் மாலை ஐந்து மணி அளவில் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தது.

சைபர் க்ரைம் பிரிவில், இணை ஆணையர் அலுவலகம் கூடுதல் பரபரப்புடன் இருக்க, தான் மணி அடித்து அழைக்காமலே வாசலில் தயங்கி நின்று இருந்த உதவியாளரை பார்த்து புருவம் சுருக்கி 'என்ன விஷயம்?' என்று விசாரித்த ஷ்யாம்சுந்தர் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் எஞ்சினியரிங் பட்ட படிப்பு முடித்து, டிகிரி கையில் வாங்குவதற்கு முன்பே, யூனியன் பப்ளிஸ் சர்வீஸ் கமிஷன் மூலம், ஐ.பி.எஸ். பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவன்.

அவனுடைய அபார மூளையினாலும், மாற்றி யோசிக்கும் திறமையினாலும், சிக்கலான வழக்குகளை திறமையாகக் கையாண்டு, தீர்த்து வைத்த காரணத்தால் காவல் துறையில், பணியில் சேர்ந்து எட்டு ஆண்டுகள் முடிவடையும் தருணத்தில், இரண்டு பதவி உயர்வுகள் பெற்று, சென்னை மாநகரில் சைபர் க்ரைம் பிரிவின் இணை ஆணையராக இருப்பவன்.

அவனுடைய அன்றாட அட்டவணையில், வேலை, வேலை, வேலை, என்று வேலை மட்டுமே இருக்கும். நள்ளிரவில் கணினியை நொண்டி கொண்டு இருப்பான்.

அதிகாலையில், தொலைபேசியில் பேசிக் கொண்டு இருப்பான். எப்போது வீட்டுக்கு வருவான்? எப்போது கிளம்புவான்? எப்போது தூங்குவான்? எப்போது சாப்பிடுவான்? யாருக்கும் தெரியாது.

நாலு முதல் ஐந்து மணி வரை பொதுமக்களிடம் இருந்து புகார் பெற்று அந்தந்த அலுவலர்களிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லி விட்டு, தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தவன், வாசலில் நிழலாட நிமிர்ந்தான்.

''சார் ஒரு அம்மா உங்களைப் பார்க்கணும் என்று காத்திருக்காங்க. பார்வையாளர் நேரம் முடிஞ்சுடுச்சு. இனிப் பார்க்க மாட்டீங்க. பிசியா இருக்கீங்க என்று சொல்லிப் பார்த்துட்டேன். எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை என்று ஒரு மணி நேரமா காத்திருக்காங்க'' என்று தயக்கத்துடன் சொன்னான்.

''ஏதாவது கம்ப்ளைன்ட் கொடுக்க வந்தவங்களா இருக்கும். சிவாவை விசாரிக்கச் சொல்லுங்க...'' என்று முடித்துவிட்டு கையில் வைத்து இருந்த வேலையில் கவனத்தைச் செலுத்த முயன்றான்.

''இல்லை சார். உங்களிடம் தான் பெர்சனலா பேசணும் என்று இருக்காங்க...'' என்று மீண்டும் தயக்கத்துடன் சொல்ல, அவன் நிமிர்ந்தான்.

''என்கிட்டே பெர்சனலா என்ன பேசணும்? என்ன பேர் சொன்னாங்க...?''

''கௌசல்யா என்று சொன்னாங்க சார்...'' என்று அவன் முடிக்கும் முன்பே அவன் கண்ணில் அதிர்ச்சி மின்னல் தோன்றிய வேகத்திலேயே மறைந்தது.

''சரி வரச் சொல்லுங்க...'' என்று சொன்னவன், மீண்டும் கையில் வைத்து இருந்த முதல் தகவல் அறிக்கையில் மூழ்கிப் போனான்.



திறந்து இருந்த கதவில் ஒற்றை விரலால் தட்டி உள்ளே வர அனுமதி கேட்பது புரிய, இருக்கையில் இருந்து தன்னிச்சையாக எழுந்தான். பின் முடிவை மாற்றிக் கொண்டு, ஒரே கணத்தில் இணை ஆணையராக மாறி, இருக்கையில் அமர்ந்து, கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.

''வாங்க...'' என்று மட்டும் சொல்லி தலை அசைக்க உள்ளே வந்த அந்த மத்திய வயது பெண்மணி, கரம் குவித்து, ''வணக்கம் சார்...'' என்று சொல்ல இரத்த அழுத்தம் கூட ஆரம்பித்தது.

''உட்காருங்க'' என்று தன்னைக் கட்டுப்படுத்தியபடி அமைதியாகவே எதிரே இருந்த இருக்கையைக் காட்டினான் ஷ்யாம்சுந்தர்.

''நீங்க முக்கியமான வேலையா இருப்பதா சொன்னாங்க. நீங்க முடித்து விட்டு வேண்டுமானால் அழைக்கிறீர்களா? நான் காத்திருக்கிறேன்...'' என்று சொல்ல அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

''பரவாயில்லை, என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்தீங்க? சொல்லுங்க...''

''ஒரு பெர்சனல் பிரச்னை. நீங்க நிறைய பெண்களுக்கு சமூக விரோதிகள் மூலம், வரும் பிரச்னைகளுக்கு வெளியே அதிகம் தெரியாமல் சுமுகமான தீர்வு சொல்றீங்க என்று பேசிக்கறாங்க. அது வயசு பெண்களுக்கு மட்டுமா? இல்லை எங்களை மாதிரி நடுத்தர வயது பெண்களுக்கும் பொருந்துமா?'' என்று அவர் விசாரிக்க, சுறுசுறுவென்று ஏறிய எரிச்சலை, சிரமப்பட்டு அடக்கினான்.

''முதலில் உங்க பிரச்னை என்ன என்று சொல்லுங்க. அப்பத்தானே என்னால் தீர்வு சொல்ல முடியுமா முடியாதா என்று பார்க்க முடியும்?''

''எல்லா பெண்களுக்கும் வெளியே இருந்து பிரச்னை வரும். எனக்கு என் பிரச்னை வீட்டுக்குள்ளேயே இருக்கு சார்...''

''யாரால?'' என்று சுருக்கமாக இடையிட்டான்.

''வேறு யாரால? நான் பத்து மாசம் சுமந்து பெற்று, பாலூட்டி, சீராட்டி, வளர்த்தி, படிக்க வச்சு, ஒரு நல்ல நிலைக்கு வந்துவிட்ட என் பையனால தான்...'' என்று முடிக்கும் முன்பே, ''வாட்...?'' என்று அதிர்ச்சியோடு எழுந்தான்.

''என்ன ஆச்சு சார்?'' என்ற கேள்வியுடன் கூடவே அவரும் எழ, ''ஒன்றும் இல்லை. உங்க பையனால் உங்களுக்கு என்ன பிரச்னை என்று சொல்லுங்க...'' என்று பல்லைக் கடித்தபடி மீண்டும் இருக்கையில் அமர்ந்தான்.

''என் பையனைப் பற்றி நானே இப்படி ஒரு போலீஸ் ஆபீசரிடம் புகார் சொல்வதை நினைத்தால் எனக்கே சங்கடமா இருக்கு. ஆனால் எனக்கு வேறே வழி தெரியலை சார்...''

''அப்படி புகார் சொல்லும் அளவுக்கு என்ன தப்பு பண்ணினார்? வீட்டுல ஏதாவது பணம், பொருள், உங்க அனுமதி இல்லாமல் எடுத்து விட்டாரா?''

''ம்ஹூம்! அவன் வாங்கிப் போடும் பொருளை அனுபவிக்கவே எங்க வீட்டில் ஆள் இல்லை என்று நான் புலம்பிக் கொண்டு இருக்கிறேன். அவன் எதை எடுக்கப் போகிறான்?''

''ஓஹோ! அப்ப குடிச்சுட்டு வந்து கலாட்டா பண்றாரா?''

''குடி குடியை கெடுக்கும் என்று ஊருக்கே விளம்பரம் செய்ய மாடலாக போக தகுதி உள்ள ஆள் சார் அவன்...''



''ம்ம்ம்... சூதாட்டம்... பொண்ணு.. ஊர் சுற்றல்.. என்று ஏதாவது கெட்ட பழக்கம் இருக்கா?'' என்று அவன் கேட்க அவர் வாயை ஒரு கையால் பொத்தி ''ஆ... அ! அப்படி எல்லாம் சொன்னால், பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது சார்...'' என்று அவசரமாகச் சொல்ல அவனின் கட்டுப்பாட்டையும் மீறி சின்ன முறுவல் மலர்ந்தது.

''வேறே என்னதான் ப்ராப்ளம்?''

''சொன்ன பேச்சே கேட்க மாட்டேன் என்கிறான் சார்...''

''அதுக்கு புகார் கொடுக்கவா இங்கே வந்தீங்க?''

''பின்னே வேறே வழி? வீட்டுல நின்னு பேசவே மாட்டேங்கறான். இங்கே பொதுமக்கள் புகார் கொடுக்கும் நேரம் அல்லவா? இங்கே என்னை சந்திக்கவோ பேசவோ மாட்டேன் என்று சொல்ல முடியாதே? அதனால் தான் இங்கே வந்தேன்...''

''அப்படி நீங்க என்ன சொல்லி உங்க பையன் கேட்கலை...''

''மனு எழுதிக் கொண்டு வந்து இருக்கேன் சார்...'' என்று தன் கைப்பையை திறந்து ஒரு நான்காக மடித்த ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினார். அனுப்புனர், பெறுனர் என்று முறையாய் முகவரி இட்டு எழுதப்பட்ட ஒரு புகார் கடிதம்.

தன் மகனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி நான்கு வருடங்களாகத் தொடர்ந்து வற்புறுத்துவதாகவும், அவன் ஏதேதோ சாக்கு போக்குச் சொல்லி மறுப்பதாகவும் புலம்பி தள்ளி, ''நீங்க தான் எப்படியாவது அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்க வைக்க வேண்டும்' என்ற வேண்டுகோளையும் வைத்து, கடைசியாய், என்

மகனின் பெயர், அலுவலக முகவரி இது என்ற தகவலையும் சொல்லி முடித்து இருந்தார்.

''சரி, மனு கொடுத்துட்டீங்க இல்லையா? நடவடிக்கை எடுத்துட்டு உங்களுக்கு தகவல் சொல்றோம். இப்ப நீங்க கிளம்புங்க...''

''எப்ப சார் என் கோரிக்கை நிறைவேறும்?''

''நீங்க வீட்டுக்குப் போங்க. இன்னும் மூன்று மணி நேரத்தில் உங்க பையன் வீட்டுக்கு வந்து உங்களிடம் நேரே பேசுவார்...'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான்.

''மூன்று மணி நேரத்தில் சம்மதம் சொல்லி விடுவானா சார்?'' என்று வேகமாகச் சொன்னவரை முறைத்தான்.

''உங்களைப் பற்றி ஊருக்குள்ளே அசகாய சூரன் என்று பேசிக் கொள்வது நிஜம் தான் போல சார்...? நாலு வருஷமா நான் தலைகீழா நின்று தண்ணீர் குடித்தும் முடியாத ஒரு காரியம். உங்களிடம் மனு கொடுத்து மூன்று மணி நேரத்தில் நடைபெறும் என்றால்... ஆஹா! இத்தனை நாள் வேஸ்ட் பண்ணிட்டாயே கௌஷி...'' என்று அவனுடைய முறைப்பை சட்டையே செய்யாமல், உற்சாகமாகச் சொல்லி விட்டு வெளியேறினார்.

அவர் வெளியேறிய நிமிடத்தில் இருந்து, சரியாக மூன்றாவது மணி நேரம் முடியும் தருவாயில் அண்ணா நகர் ஆறாவது பிரதான சாலையில், சுந்தரம் மெடிக்கல் பவுண்டேஷன் பின்புறம், இருந்த அந்த தனி பங்களாவில் காவல் துறை வாகனம் வந்து நிற்க அதில் இருந்து இறங்கிய ஷ்யாம்சுந்தர், வாகனத்தின் கதவை சாத்திய வேகத்தில் அவனின் கோபம் தெரிந்தது.

''அப்பா எங்கே இருக்கீங்க?'' என்ற ஷ்யாமின் சத்தம் வீட்டின் உள்ளே நுழையும் போதே உச்ச ஸ்தாயில்



ஒலிக்க, பக்க வாட்டில் இருந்த அறையில் இருந்து எட்டிப் பார்த்தார் பத்மநாபன்.

தன் தந்தை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, சின்ன மளிகை கடையாக ஆரம்பித்ததை, அயராத உழைப்பினால், இன்று மூன்று க்ரவுண்ட் சொந்த மனையில், மூன்று மாடி கட்டிடமாக பத்தாயிரம் சதுர அடி பரப்பில், அறுபது வேலை ஆட்களை கொண்டு, அமர்க்களமாக நடைபெற்று வரும் 'சந்திரிகா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்' ஆக மாற்றி அமைத்து இருப்பவர் பத்மநாபன்.

கௌசல்யாவை கை பிடித்த நேரத்தில் இருந்து, அவருடைய ஒத்துழைப்பும் சிக்கனமும், சேமிப்பும், சேர படிப்படியாக வளர்த்து, இன்றைய நிலையை அடைந்தவர், என்பதால் மனைவியின் மீது மதிப்பும் மரியாதையும் நிறைய உண்டு.

''என்ன ஷ்யாம்! உள்ளே நுழையும் போதே இவ்வளவு சத்தம்? என்ன ப்ராப்ளம்?'' என்று விசாரித்தார்.

''சொல்றேன், எங்க உங்க தர்மபத்தினி...?'' என்று கோபத்தோடு அதட்ட, அவனின் குரல் கேட்டு அடுத்த அறையில் இருந்து வெளி வந்தாள் அவனுடைய தங்கை சைலஜா.

சைலஜா வைஷ்ணவா கல்லூரியில், மூன்றாம் ஆண்டு இளங்கலை பட்ட படிப்பில் அடி எடுத்து வைத்து இருக்கும் பத்தொன்பது வயது பருவப் பெண். ஷ்யாம்சுந்தருக்கும் அவளுக்கும் இடையே பத்து ஆண்டுகள் வித்தியாசம்.

இருவருக்கும் இடையே பிறந்த ரவிஷங்கர், அமெரிக்காவின் மிச்சிகன் யுனிவர்சிடியில் பையோ மெடிக்கல் எஞ்சினியரின் பட்ட மேற்படிப்பு படித்துக் கொண்டு இருக்கிறான்.

ஆஸ்திக்கு ஆண் மட்டும் போதாது. ஆசைக்கு ஒரு பெண், வேண்டும் என்ற அந்தக் கால ஆசையினால், இரண்டு பையன்களுக்குப் பிறகு, தவம் இருந்து, பெற்ற பெண் என்பதால், பயங்கர செல்லம்.

''என்ன எங்க அண்ணன் முகத்தில எள்ளும் கொள்ளும் வெடிக்குது? உங்க கமிஷனர். உன்னை கடிச்சுட்டாரா? திருப்பி பதிலுக்கு பதில் அவரைக் கடிக்க முடியாமல் அந்த எரிச்சலை இங்கே வந்து காட்டுற மாதிரி இருக்கு...? அய்யய்ய! ஷூ காலோடு உள்ளே வரது என்ன புதுப் பழக்கம்? உபதேசம் எல்லாம் ஊருக்கு தானா?'' என்று விசாரணையில் ஆரம்பித்து நக்கலில் முடித்தாள் அருமை தங்கை.

அவள் சுட்டிக் காட்டிய பின்பே, தான் காலில் ஷூவுடன் உள்ளே வந்து விட்டதை உணர்ந்து, 'சாரி...' என்ற சின்ன முணுமுணுப்புடன் வாசலுக்குச் சென்று காலணியை கழட்டி வைத்து விட்டு உள்ளே வந்தான் ஷ்யாம்.

''என்ன ஷ்யாம், ஏன் இவ்வளவு கோபம்? எப்பவும் நீ வீட்டுக்கு வருவதும் தெரியாது போவதுமே தெரியாதே?'' என்று மீண்டும் உள்ளே வந்தவனை விசாரித்தார் பத்மநாபன்.

''கோபம் வராதவனுக்கும் வர வைத்துப் பார்க்க வேண்டும் என்று உங்க வைஃப் ரொம்ப ஆசைப்பட்டாங்க. இப்ப எங்கே ஒளிஞ்சு இருக்காங்க...?'' என்று எரிச்சலோடு கேட்க இருவரும் நமட்டுச் சிரிப்பு சிரித்தனர்.

''சிரிக்காதீங்க. அவங்க இன்னிக்கு என் ஆபீசுக்கு வந்து என்ன பண்ணினாங்க தெரியுமா?'' என்று எரிச்சலோடு கேட்க, இருவரும் ஒரே குரலில், ''தெரியுமே...'' என்று கோரசாகச் சொன்னார்கள்.



''வாட்...?'' என்று அவன் அதிர்ந்து வாய் அடைத்துப் போய் நிற்க, ''ஐடியா கொடுத்ததே நான் தானே?'' என்று பத்மநாபனும், ''அம்மாவை ஆபீசில் டிராப் பண்ணியது நான்...'' என்று சைலஜாவும் பெருமை அடித்தனர்.

''என்ன ஷ்யாம், எதுக்கு என் பேரை இப்படிக் கூவிக் கூவி ஏலம் விடுகிறாய்? நான் உனக்கு தான் ஸ்வீட் பண்ணிக் கொண்டு இருந்தேன். கடைசி நேரத்தில் அதை விட்டு விட்டால் முறுகிப் போய் விடுமே என்று வரலை. மைசூர்பாக்கு சூப்பர் சாப்டா வந்து இருக்கு. டேஸ்ட் பண்ணி பார்க்கிறாயா?'' என்று கேட்டபடி கௌசல்யா அடுக்களையில் இருந்து வந்தார்.

''ஓஹோ! அதுக்குள்ளே ஸ்வீட் ரேஞ்சுக்கு வந்தாச்சா? வெரிகுட் ஷ்யாம் கை கொடு. கல்யாணத்திற்கு அம்மாவிடம் ஓகே சொல்லி விட்டாயா?'' என்று அவசரமாக அவன் கைகளை இழுத்துப் பிடித்து பத்மநாபன் குலுக்க, அவன் அவரின் கையை உதறினான்.

அந்த இடைவெளியில், சைலஜா, அம்மாவுக்கு ஹை-பை கொடுத்து, ''சக்சஸ்! என்னோட ப்ளான் சக்சஸ்...'' என்று உற்சாகமாக குதித்தாள்.

''ஹலோ! பளான் என்னுடையது...'' என்று பத்மநாபன் இடையிட ஷ்யாம் முறைத்தான்.

''திட்டம் போட்டது வேண்டுமானால் நீங்களா இருக்கலாம்பா. ஆனால், ப்ளானை செயல்படுத்தியது நான். அதனால் க்ரெடிட் எனக்குதான்...''

''வசனம் எழுதி கொடுத்தது நான்...'' - இது பத்மநாபன்.

''வாகனத்தில் அழைத்துச் சென்றது நான்...'' - இது சைலஜா.

''நீங்க இரண்டு பேரும் மாறி மாறி பெருமை அடிப்பதைப் பார்த்தால் எனக்கு என்ன ரோல்? திட்டம்

போட்டது வசனம் எழுதிக் கொடுத்து, வாகனத்தில் அழைத்துச் சென்றது எல்லாம் நீங்களா இருந்தாலும், ஒரிஜினலா, அவன் முன்பு பெர்பார்ம் பண்ணியது நான். அதனால் முழு க்ரெடிட்டும் எனக்கு தான்...'' என்று கணவன், மகள் இருவரையுமே, ஓரம் கட்டி, சத்தமாகச் சொல்ல ஷ்யாமிற்கு தலை சுற்றியது.

''இங்கே என்ன நடக்குது?'' என்று அவன் கோபமாக இடையிட, ''கல்யாணப் பேச்சு நடக்குது ஷ்யாம்...'' என்று சந்தோஷமாகச் சொன்னார் கௌசல்யா.

''யாருக்கு...?''

''ஹையோ... அண்ணா...! இப்படி பச்சை புள்ளையா இருக்கியே? முதலில் பிறந்தவங்களுக்கு தான் முதலில் கல்யாணம் பண்ணுவாங்க. அதுக்கு அப்புறம் ரவி அண்ணாவுக்கு... அதுக்குப் பிறகு தான் எனக்கு...''

''நான் எங்கே எப்போ யாரிடம் சம்மதம் சொன்னேன்...?'' என்று பரிதாபமாகக் கேட்டவனின் வார்த்தைகள் யாரையும் எட்டவே இல்லை.

''அம்மா மைசூர்பாக்கு எடுத்துட்டு வந்ததால் நீ சம்மதம் சொன்னதா தானே அர்த்தம்?'' என்று பத்மநாபன் சந்தோஷமாகக் கேட்க அவன் எரிச்சலோடு இடையிட்டான்.

''என்னப்பா விளையாடுறீங்களா? கல்யாணத்திற்கு சம்மதம் கேட்க என் ஆபீஸ் தான் உங்களுக்கு கிடைத்ததா? அது என்ன ஆபீசா? இல்லை, குடும்பத்தினர் கெட்-டுகெதர் நடத்தும் பிக்னிக் ஸ்பாட்டா? அவங்க தான் தெரியாமல் செய்றாங்க என்று நினைத்தால், நீங்க எல்லோரும் சேர்ந்து பிளான் பண்ணியதா பெருமை அடிச்சுக்கறீங்க?''



''சரி விடு ஷ்யாம். எங்கே கேட்டால் என்ன? சம்மதம் சொல்லியாச்சு இல்லையா? அதான் வேண்டும். சைலு, அண்ணனுக்கு திருவையாறு பெண் வீட்டில் இருந்து வந்த கவரை எடுத்துக் கொடு. அண்ணன் போட்டோ பார்க்கட்டும்...''

''திருவையாறு பொண்ணா? அந்த பொண்ணுக்கு தான் வயசு கம்மியா இருக்கு என்று சொன்னேனேப்பா? அந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணுவது சட்டப்படி தப்பு...''

''இல்லை. சட்டப்படி தப்பு இல்லை. பரிந்துரை தான் இருபத்தி ஒன்றே தவிர பெண்ணுக்கு கல்யாண வயது சட்டப்படி பதினெட்டு தான். அதுகூடத் தெரியாமல் நீ போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் எட்டு வருஷமா என்ன குப்பை கொட்டுகிறாய்?'' என்று இடையிட்ட கௌசல்யாவை, அவனுக்கு சக்தி இருந்தால் எரித்து பிடி சாம்பல் ஆக்கி இருப்பான். அது இல்லையே...? வெறுமனே முறைத்தான்.

''அம்மா... அண்ணனுக்கு இன்னும் கொஞ்சம் வளரணும் என்று ஆசை இருக்கு போல. ஆனால் கவலைப் படாதே அண்ணா... பெண்ணும் என்னை மாதிரியே அஞ்சரை அடிதான். உனக்கு மேலே இல்லை. டோன்ட் வொரி...''

''ஹேய்! நீ பனை மரத்துல பாதி இருந்தால் என்ன செய்வது? சராசரி இந்திய ஆணின் உயரம் ஐந்தடி எட்டு அங்குலம். அதை விட நான் ஜாஸ்தி. நான் அஞ்சு ஒன்பதுடீ...''

''சராசரி பத்தி எல்லாம் எனக்குத் தெரியாது. ரெண்டடிக்கு ஷூ போட்டால் எல்லோரும் அப்படி தான் இருப்பாங்க. நான் ஷூ இல்லாமல் சொல்றேன்...''

''சைலு... அதை விடு. முக்கியமான விஷயம் பேசும்போது பேச்சை மாத்தாதே. பொண்ணு திருவையாறு காலேஜில் மூன்றாம் ஆண்டு பி.காம் படிக்கிறாள். இன்னும் பத்து நாளில் படிப்பு முடிஞ்சுடும். அதுக்குப் பிறகு ஒரு நாள் நாம் நாலு பேரும் அவங்க வீட்டுக்குப் போகணும். என்னுடைய நெருங்கிய நண்பன். ஒரு தேவை என்று கேட்டான். நம்பிக்கையில வாக்கு கொடுத்து விட்டேன். பொண்ணு பத்தின டீடைல்ஸ் உன் டேபிளில் இருக்கு என்னிக்குப் போகலாம் என்று நீயே சொல்லு...'' என்று முடித்தார்.

தன் அறைக்குள் வந்தவன், வெளியே குடும்பத்தினர்களிடம் காண்பிக்க முடியாத எரிச்சலை, அந்த காகிதத்தில் காட்டினான். அந்தக் கவரை நாலாகக் கிழித்து, ஜன்னல் வழியாக வெளியே எறிந்தான்.

குடும்பமே சேர்ந்து என்னை வச்சு காமெடியா பண்றீங்க...? இந்தக் கல்யாணம் எப்படி நடக்கும் என்று நான் பார்த்து விடுகிறேன்...? உங்களிடம் எனக்கு என்ன பேச்சு? அந்தப் பெண்ணிடமே பேசிக் கொள்கிறேன்...!



## 3

ஹாலில் இருந்து உள்ளே நுழைந்த ஷ்யாம்சுந்தருக்கு தன் மனதை ஒரு பொருட்டாக மதியாத குடும்பத்தினர் மீது கட்டுக்கடங்காமல் கோபம் பெருகினாலும், அவர்கள் கடந்த நான்கு வருடங்களாகத் தன்னை விடாமல நச்சரித்து வந்து இருக்கிறார்கள் என்பதும், தான் தான் பிடி கொடுக்கவில்லை என்பதும் தெரிந்தே இருந்தது.



அதற்காக...? இந்தப் பெண்ணை தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று என்ன அவசியம்? அதுவும் உடனே...? தனக்குள்ளே பொருமிக் கொண்டு இருந்தவன் அறைக் கதவு திறந்த சப்தம் கேட்டு கட்டிலில் இருந்து எழுந்தான்.

''என்னடா இது...?'' என்று சற்று முன்பு தான் கிழித்து வீசிய கவருடன் வாசலில் நின்று இருந்தது கௌசல்யா.

''ப்ச்! நான் அந்த பெண்ணுக்கு வயது குறைவு. வேண்டாம் என்று சொன்ன பிறகும் நீங்க அதே முடிவில் இருந்தால் என்ன அர்த்தம்? எனக்குப் பிடிக்கலை...''

''எங்களுக்குப் பிடிச்சு இருக்கு. அதுவும் போக அப்பா ஏற்கனவே வாக்குக் கொடுத்துட்டாங்க. அதை மீற வைக்க எனக்கு இஷ்டம் இல்லை...''

''அப்ப அவரையே கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்க...''

''ஓஹோ! அம்மாவுக்கு போட்டியா ஒரு ஆள் வர வைக்க தான் ரூமில் இவ்வளவு நேரம் யோசித்தாயா? லூசாடா நீ? உன்னை இந்த நாலு வருஷத்தில எத்தனை தடவை எத்தனை விதமா கேட்டு இருப்போம்? எதுக்காவது பிடி கொடுத்தாயா நீ? நீ வேறே யாரையாவது லவ் பண்ணி தொலைஞ்சாலும் பரவாயில்லை. அதுக்கும் உனக்கு சாமர்த்தியம் போறாது. நான் வேறென்ன பண்றது?''

''ஒரு அம்மா மாதிரி பேசுங்கம்மா.''

''நான் அம்மா மாதிரி பேசுறதால தான்டா, இந்த போட்டோவை நீ இப்படி கிழிச்சு போட்டுட்டு இருக்க. இப்ப சொல்றேன் கேட்டுக்க. நீ இவ்வளவு தூரம் முரண்டு பிடிச்ச பிறகு இனிமேல் நீ நேரில் பார்க்க வேண்டிய

அவசியம் கூட இல்லை என்று பொண்ணு வீட்டில் சொல்லிடப் போறேன். நேரே கல்யாணம் தான். முகத்தை கழுவிட்டு சாப்பிட வா. மைசூர் பாக்குடன் டிபன் ரெடி'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு வெளியேறிய பிறகு தலையில் கை வைத்து அமர்ந்தான்.

''ஆஹா! சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி, போட்டோவை கிழித்து வைக்காமல் இருந்தால் நேரில் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்து இருக்கும். இப்ப அதுக்கும் வழி இல்லாமல் போச்சே!'' என்று அமர்ந்தவன் அடுத்த கதவு சுரண்டலில் நிமிர்ந்தான்.

''அண்ணா...! என்ன பண்ணிட்டு இருக்க? பசிக்குது வா சாப்பிடலாம்...'' என்று அழைத்தபடி வந்த தங்கையை யோசனையோடு பார்த்தான்.

''என்னண்ணா...! அப்படியே பார்த்து உட்கார்ந்து இருந்தால் என்ன அர்த்தம்? எழுந்திரிச்சு முகம் கழுவிட்டு வாங்க சாப்பிடப் போகலாம்...'' என்று கை பற்றி எழுப்ப, ''சைலு, அம்மா அப்பா நிஜமாவே அந்தப் பெண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பதில் சீரியஸா இருக்காங்களா?'' என்று யோசனையோடு கேட்டான்.

''என்னிடம் ஏன் கேட்கிறாய்? நான் தான் முளைச்சு மூணு இலை விடாத சின்னப் பொண்ணு ஆச்சே? எனக்கு குடும்ப விஷயம் எல்லாம் தெரியாது'' என்று அவன் அப்பப்போ அவளை அடக்கச் சொல்லும் வார்த்தைகளை சொல்ல அவன் விழித்தான்.

''ஏய் உதைப்பேன்! ஒழுங்கா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு...''

''நீ உதைச்சாலும் எனக்குத் தெரிந்த கேள்விக்கு தானே பதில் சொல்ல முடியும்? அம்மா அப்பா மனசுக்குள்



இருப்பது எனக்கு எப்படித் தெரியும்?'' என்று அலட்சியமாக தோளைக் குலுக்க அவன் ஒரு கணம் யோசித்தான்.

''சரி அதைப் பற்றி நீ சொல்ல வேண்டாம் விடு. அந்தப் பெண்ணுடைய பெயர், முகவரி தெரியுமா? தெரியாதா?''

''தெரியும். ஆனால் உனக்கு சொல்ல மாட்டேன்...''

''ஏன்...?''

''ஏன் என்றால் அவளும். சாரி... அவங்களும் உன் பாஷையில் என்னை மாதிரியே முளைச்சு மூணு இலை விடாத கேடகரியில் வர்றவங்க தான். அவங்களோடு பேசவும் உனக்குப் பிடிக்காது...''

''அப்படி எல்லாம் இல்லை சைலு...''

''இதை அம்மா அப்பாவிடம் சொல்லி வாங்கிக்கோ. இப்ப சாப்பிட வா...'' என்று முடித்து விட்டு வெளியேற அவன் பல்லைக் கடித்தான். வெளியே அம்மா அப்பா விடமும் பெண்ணோட பெயரை நேரடியாக விசாரிக்க தன்மானம் இடம் கொடுக்காமல் உணவை முடித்தான்.

அவனிடம் நேரடியாகப் பேசாமல், அம்மா அப்பா அவர்களுக்குள்ளே பேசிக் கொண்டதில் அவன் கண்டு பிடித்தது அவள் இருக்கும் இடம் திருவையாறு கட்டு பெட்டியான குடும்பம். படிப்பு பி.காம். பெயர்... என்னவோ சுந்தரி...

குற்றம் நடக்கும் இடத்தில ஒன்றுமே க்ளூ இல்லாமல் புலன் விசாரணை செய்து துப்பு துலக்கும் ஒரு புத்திசாலி காவல் துறை அதிகாரிக்கு ஒன்றுக்கு மூன்றாக துப்புகள் கிடைத்த பின்பு பெண்ணைக் கண்டு பிடிப்பதா சிரமம்? தனக்குள் சூளுரைத்தவன் அடுத்த நாள் காலை

அலுவலகத்தில் கணினி முன்பு நடத்திய தேடுதல் வேட்டையில் அவள் யார் என்பதை போகிற போக்கில் கண்டு பிடித்தான்.

கட்டுபெட்டியான குடும்பத்தில் இருபாலார் இணைந்து படிக்கும் கல்லூரிக்கு அனுப்ப சந்தர்ப்பம் குறைவு. வீட்டை விட்டு வெகு தூரம் அனுப்பவும் வாய்ப்பு இல்லை. எனவே திருச்சி தஞ்சாவூரை ஒட்டிய மகளிர் கல்லூரி... என்று கல்லூரிகளின் எண்ணிக்கையை முதலில் வடிகட்டினான்.

அடுத்து காமர்ஸ் குரூப் இருக்கும் கல்லூரிகள் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவிகளில் சுந்தரி என்று ஆரம்பிக்கும் அல்லது முடியும் பெயர்களை தேட, நான்கில் வந்து நின்றது. குடியிருக்கும் இடத்தைத் தேட, ஒன்றில் வந்து அழகாய் உட்கார. அடுத்த ஐந்தாவது நிமிடம் வயர்லெசில் சொல்லி அந்த வீட்டின் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடிப்பது சென்னையில் இருக்கும், ஜே.சி.சைபர் க்ரைமுக்குச் சிரமமா என்ன?

காலை பத்தரை மணிக்கு ஆரம்பித்த அவனின் தேடல் அரை மணி நேரத்தில் முடிந்து, பதினோரு மணிக்கு திரிபுரசுந்தரியின் வீட்டு முகவரியும் தொலைபேசி எண்ணும் அவன் மேஜையில் இருந்தது.

* * *

காலையில் ஏழு மணிக்குள் பேத்தி தலைக்கு குளித்து, வீட்டில் விடுமுறை நாட்களில் இருக்கும்போது, தவறாமல் அணியும் ஒரு உருப்படாத நைட்டியை போடாமல், பாவாடை தாவணியில், பூஜை அறைக்கு வந்து, சஹஸ்ர நாமம் சொல்ல, அவருக்கு உச்சி குளிர்ந்தது.

''ராஜாத்தி, இப்பவே உனக்கு பொறுப்பு வந்துடுச்சுடீ என் செல்லம்...'' என்று அவளின் கன்னத்தை வழித்து



கொஞ்சி பூஜை அறையில் இருந்து குங்குமம் எடுத்து நெற்றியில் வைக்க, முகம் மாறாமல் காக்க சிரமப்பட்டாள் சுந்தரி.

''பூஜை முடிந்ததா பாட்டி? உங்களுக்கு காபி எடுத்துட்டு வரட்டுமா?'' என்று சமாளித்துக் கேட்க அவர் தலை அசைத்தார்.

''தாழ்வாரத்துக்கு எடுத்துட்டு வா. அங்கே நேற்று பறித்த ஜாதிமல்லி வச்சு இருக்கேன். அதைத் தொடுத்துட்டே பேசலாம்...'' என்று சொல்லிச் செல்ல சில நிமிடங்களில், காபியுடன் அங்கே ஆஜரானாள்.

பாட்டி பூவை கட்ட வசதியாக ஜாதி மல்லி பூக்களை இரண்டு இரண்டாக எடுத்து வைத்தபடி, ''ஏன் பாட்டி, இந்த பூ கட்டுற வேலையை எத்தனை வருஷமா செய்றீங்க? போர் அடிக்கலை?'' என்று பேச்சை ஆரம்பித்தாள் சுந்தரி.

''அதெப்படி போர் அடிக்கும்? எந்த வேலையையும் பிடிச்சு செய்யும் போது போர் அடிக்காது. உனக்குத் தூங்க போர் அடிக்குதா சொல்லு? எப்ப நேரம் கிடைத்தாலும் கிடைத்த இடத்தில சுருண்டு படுக்க முடியுதுதானே? ராணிக்கு பத்து நிமிஷம் கிடைத்தாலும் டி.வி. முன்னால் உட்கார முடியுது தானே? அதே மாதிரி இது என் பேத்திக்கு, என் மருமகளுக்கு என்று ஆசையுடன் செய்யும் போது போர் அடிக்காது. அது சரி, இன்னிக்கு ஏதாவது காலேஜில் விழா இருக்கா?'' என்று விளக்கம் சொல்லிய தோடு அவளையும் விசாரித்தார்.

''இல்லையே, ஏன் பாட்டி?''

''நீ எழுந்திரிக்க உங்க அம்மா விடாமல் உனக்கு சுப்ரபாதம் பாடணும். நீயா எழுந்து இவ்வளவு சீக்கிரம்

தலைக்கு குளித்து, ரெடியாகி விட்டாயே? அதான் கேட்டேன்...''

''பாட்டி, அப்பா உங்களிடம் என் கல்யாணம் பற்றி என்ன சொன்னாங்க...?''

''என்ன திடீர் என்று என்னை விசாரிக்கிறாய்?''

''சொல்லுங்க பாட்டி...''

''அவனோட சிநேகிதன் பையன், சென்னையில் போலீஸ் ஆபீசரா இருக்கான். அவனுக்கு கொடுக்கலாமா என்று கேட்டான். நல்ல பையனா இருந்தால் கொடுக்க வேண்டியது தானே என்று சொன்னேன். ஏன் என்ன விஷயம்?''

''எனக்கு இப்ப கல்யாணத்திற்கு என்ன அவசரம் பாட்டி? நான் மேலே படிச்சு அப்பா தாத்தா மாதிரி இந்த மளிகைக் கடையைக் கட்டிக் கொண்டு அழாமல் பெரிய ஆடிட்டராகணும் பாட்டி.''

''மளிகைக் கடை என்றால் உனக்கு சீப்பா போச்சா? ஐம்பது வருஷமா, உங்க தாத்தா காலத்தில் இருந்து, நீங்க பிறந்தது படிச்சது நம்ம எல்லோரும் சாப்பிட்டது, உங்க அத்தை, சித்தப்பா, பெரியப்பாக்கு கல்யாணம் பண்ணியது இது எல்லாமே இந்த கடை வருமானத்தில் இருந்துதான்.''

''அதை நான் தப்பா சொல்லலை பாட்டி. இப்ப கார்த்திக் அண்ணாவும் சிவா அத்தானும் பார்த்துக்கறாங்க. அப்பாவிற்கு உடம்பு சரி இல்லாமல் போனதில் இருந்து அங்கே போகலை. அப்படி இருக்கும்போது, நம் வீட்டு வருமானத்திற்கு ஏதாவது வழி பண்ண வேண்டாமா... அதுக்கு தான் நான் படிச்சு முடிச்சதும் ஒரு வேலைக்கு போய்...''



''அதைப் பற்றி நீ கவலைப் படாதே! உன்னை வேலைக்கு அனுப்பிவிட்டு, அதில் வரும் வருமானத்தில் உட்கார்ந்து சாப்பிட அவனுக்கு மனசு வருமா சுந்தரி? சின்ன பொண்ணா லட்சணமா இரு. அதெல்லாம் உங்க அப்பா பார்த்துப்பான்.''

''நீங்க சொல்றபடி பார்த்தாலும் வீட்டுச் செலவுக்கு வருமானம் இல்லாத போது, இப்ப எதுக்கு அவசரமா கல்யாணம் பண்ணனும்?''

''அதது காலாகாலத்தில் நடக்க வேண்டியது தானே? உனக்கென்ன கொஞ்சமா வயசாகுது?''

''என்ன பாட்டி மாற்றி மாற்றி பேசுறீங்க. ரெண்டு செகண்ட் முன்னால சின்ன பெண்ணா லட்சணமா இரு. இப்ப உனக்கென்ன வயசு கம்மியா? இப்ப சரியா சொல்லுங்க. எனக்கு வயசு கம்மியா? ஜாஸ்தியா?''

''இந்த வியாக்கியானம் எல்லாம் என்னிடம் வேண்டாம். சின்னதோ இல்லையோ, உனக்கு கல்யாண வயசு வந்தாச்சு. அவ்வளவுதான்...''

''கல்யாணம் பண்ணிக்க 21 வயசாகணும் என்று அரசாங்கம் படிச்சுப் படிச்சு சொல்றதெல்லாம் உங்க காதுல விழவே விழாதா பாட்டி...?''

''எனக்குக் கல்யாணம் ஆகும் போது பதிமூன்று வயசு. எப்படா பெரியவளா ஆவேன் என்று காத்துட்டு இருந்த மாதிரி தள்ளி விட்டுட்டாங்க. நீ என்னவோ இருபது வயசை பற்றி பேசிட்டு இருக்க. உன் வயசுல எனக்கு மூணு பிள்ளை பிறந்தாச்சு தெரியுமா?'' என்று பேச அவளுக்கு தலையிலடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.

''என்ன பாட்டி நீங்க...? எது சொன்னாலும் ஏறுக்கு மாறாவே பேசிட்டு இருக்கீங்க? நீங்க எப்படியாவது அப்பாவிடம் சொல்லி இந்தக் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவீங்க என்று பார்த்தால்...''

''தள்ளிப் போடணுமா? ஏன் என்று காரணம் சொல்லு...?''

''நான் மேலே படிக்கணும் பாட்டி...''

''படி! இந்த ஊரை விட சென்னை பட்டிணம் படிக்க வசதியான ஊர்.''

''அதில்லை பாட்டி. அவர் யார் என்றே இதுவரை தெரியாது. திடீர் என்று எப்படி...?''

''இதுக்கு தான் வயசு பொண்ணுங்களை வெளியே அனுப்பி படிக்க வைப்பதா? பெரியவங்க பேசி முடிவு பண்ணிய பிறகு உனக்கென்ன? 'கழுத்தை நீட்டு...' என்றால் மேடையில் உட்காருவதை விட்டுட்டு இப்படி விதண்டாவாதம் பண்ணுகிறாயே? நாங்க எல்லாம் பையன் யார் என்று கேட்டுட்டா கல்யாணம் பண்ணிகிட்டோம்? உங்களுக்காவது போட்டோ கொடுக்கிறாங்க. போனில் பேசிக்கறீங்க. பிடிச்சு இருக்கா என்று அம்மா அப்பா விசாரிக்கிறாங்க...'' இந்த ரீதியில் இன்னும் என்னென்னவோ பேச அவள் காதுகளை மூடிக் கொண்டு எழுந்து விட்டாள்.

* * *

அன்று காலை பதினோரு மணி அளவில் வீட்டில் இருக்கும் தொலைபேசி மணி அடிக்க ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டு இருந்த செல்வராணியை ''கைக்கெட்டும் தூரத்தில் போன் இருக்கே அதை எடுத்துப் பேசினால் தேய்ந்தா போய்டுவ?'' என்று கமலம் அதட்ட எரிச்சலோடு எடுத்தாள்.



''வீட்டுல எத்தனை பேர் இருந்தாலும் இந்த போன் அட்டெண்ட் பண்ண மட்டும் என்னை தான் சொல்லுவீங்க...'' என்று சலித்தபடி எடுத்தவள் 'ஹலோ...' என்று சுவாரசியம் இன்றி சொல்ல எதிர்முனையில், ''நான் சென்னையில் இருந்து ஷ்யாம்சுந்தர் பேசுறேன்...'' என்று ஒலித்த குரல் அவளை அட்டென்ஷனில் நிற்க வைத்தது.

''ஹலோ... நான் ராணி பேசுறேன்... ஒரே நிமிஷம்... இருங்க. அக்காவைக் கூப்பிடுகிறேன்...'' என்று அவசரமாகச் சொல்லி விட்டு ரிசீவரை கீழே வைத்தவள் அக்காவின் அறைக்கு ஓடி வந்தாள்.

''ஹேய்... சுந்தரி.. போனில்.. அவர் மாப்பிள்ளை.. உன்னிடம் பேசணும்... என்று...'' என்று வார்த்தைகள் சிதைந்து துண்டு துண்டாக விழ மூச்சு வாங்க சொன்னாள் ராணி.

''என்ன சொல்ற? மாப்பிள்ளையா! யாரது...?''

''ப்ச்! சென்னையில் இருந்து ஷ்யாம்சுந்தர்... ஜே.சி...''

''ஓ...! நான் இருக்கேன் என்று சொல்லி விட்டாயா? என்ன கேட்டார்? நீ என்ன சொன்னாய்?'' என்று வேகமாக எழுந்தவளுக்கு அவனுடன் பேசும் எண்ணம் இல்லை.

''நான் சென்னையில் இருந்து ஷ்யாம்சுந்தர் பேசுகிறேன் திரிபுரசுந்தரியிடம் பேச வேண்டும் என்று சொன்னார்...'' என்று அவள் முடிக்கும் முன்பே அவள் கண்களில் மின்னல் அடித்தது.

''கவலைப் படாதே! திரிபுரசுந்தரியையே பேசச் சொல்லி விடுவோம். நீ பேசிட்டு இரு. நான் பாட்டியைக் கூட்டிட்டு வருகிறேன்...'' என்று சொல்ல அவள் திட்டம் புரிய அவள் உற்சாகத்துடன் ஓடினாள்.

''ஹலோ... இதோ வந்துடுவா... நீங்க இந்த நேரத்தில் திடீர் என்று பேசுவீங்க என்று நாங்க எதிர்பார்க்கவே இல்லை. எப்படி இருக்கீங்க...?'' என்று அந்த நீண்ட இடைவெளியை நிரப்ப பேச்சினை வளர்த்தாள்.

''ம்மம். நல்லா இருக்கேன். நீங்க என்ன செய்றீங்க?''

''உங்களோடு போனில் பேசிட்டு இருக்கேன்...''

''ஹைய்யோ! சைலுவே தேவலாம். படிக்கிறீங்களா? வேலை செய்றீங்களா என்று கேட்டேன்?''

''நாம் படிக்கிற படிப்பு எல்லாம் ஸ்கூல் காலேஜில் கிடைக்காது. அதனால் நானே ஸ்கூல் ஆரம்பித்தால் தான் உண்டு. இருந்தாலும் உங்களை மாதிரி விசாரிக்கிற ஆட்களுக்கு பதில் சொல்வதற்காக பி.ஏ. ஜர்னலிசம் இரண்டாம் ஆண்டு. தொலைதூர கல்வியில் படிக்கிறேன். உங்க சைலு என்ன பண்றாங்க...?''

''பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் சைன்ஸ் படிக்கிறாள். உங்க அக்காவுக்கு படிப்பு வராதா...? மேலே படிக்கும் ஐடியா எல்லாம் கிடையாதா?''

''இந்தக் கேள்வியை நீங்க அவளிடம் கேட்கணும். அவ்வளவு தான். உங்களை நார் நாராக் கிழிச்சுத் தொங்க விட்டு விடுவாள். அவளுக்குப் படிக்கணும் என்று ரொம்ப ஆசை...'' என்று சிரிக்கும்போதே பாட்டியுடன் வந்தாள் சுந்தரி.

''ஹலோ... நான் திரிபுரசுந்தரி பேசுறேன்... யார் பேசுறது?'' என்று கேட்க அவன் ஒரு கணம் திகைத்தான்.

'இதென்ன! இவ்வளவு வயசான மாதிரி இருக்கு? இவளுக்கு இருபது வயசா? இல்லை எழுபது வயசா...?' என்று மனதிற்குள் எண்ணியவன், தனக்கு காது சரியாக



கேட்கலையோ என்று காதுக்குள் ஒரு விரலை விட்டு ஆட்டிச் சுத்தப்படுத்தினான்.

''அவங்க ராணி... சொல்லலையா...?''

''ராணியா...? நீங்க யாரு?'' என்று அதட்டல் கேட்க அவன் மேலும் குழம்பினான்.

''நான் ஷ்யாம்சுந்தர். உங்க வீட்டில் பார்த்த மாப்பிள்ளை...'' என்றதும் அவர் குரலில் பவ்யம் வந்து ஒட்டிக் கொண்டது.

''அடேடே மாப்பிள்ளையா? முன்னாடியே பெயர் சொல்வது இல்லையா? போனில் முகமா தெரியுது?'' என்ற உரிமை குரலும் அவனுக்கு ஒரு மாதிரியே இருந்தது.

''உங்களிடம்... ஒரு முக்கியமான விஷயம்... சொல்லணும்...'' என்று இழுக்க அவர் முகம் சீரியஸ் ஆனது.

''என்ன விஷயம் சொல்லுங்க. உங்க அம்மா அப்பா கூட நீங்க பேசுவீங்க என்று சொல்லவில்லையே?''

''நான் பேசுவது அவங்களுக்குத் தெரியாது...''

''அது சரி இந்தக் காலத்துப் பிள்ளைங்க செய்றது எல்லாமே பெற்றவர்களிடம் சொல்லிட்டா செய்றாங்க? இதுவும் அப்படி தான்போல. ஆனால் எங்க சுந்தரி அப்படி இல்லை...'' என்று பதிலைக் கேட்டு குழம்பினான் ஷ்யாம்.

'எங்க சுந்தரியா...?' தன்னைத் தானே சொல்லும் போது கூட பெயர் சொல்லிக் கொள்ளும் ஆளா என்ன?

குழப்பத்தைத் தனக்குள்ளே மறைத்துக் கொண்டு, ''இந்தக் கல்யாணத்தில் உங்களுக்கு சம்மதமா?'' என்று பேச்சை தொடர்ந்தவனுக்கு அவரின் அடுத்த பதிலைக் கேட்டதும் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

''என்ன கேள்விப்பா இது? சம்மதம் இல்லாமலா போட்டோ ஜாதகம் கொடுத்து அனுப்பினோம்?''

'ஹா! கேள்விப்பாவா? இப்படிப் போகிற போக்கில் 'ப்பா..' என்றால் என்ன அர்த்தம்?' அவனுக்கு தலை சுற்றி கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. மரியாதை என்றால் திட பொருளா? திரவ பொருளா? எந்த கடையில் விற்கும்? கிலோ என்ன விலை என்று கேட்பாள் போல பயங்கர திமிர் பிடித்தவளோ?

இருந்தாலும் இதுவரை அவன் கற்ற கல்வியும் தொழில் முறை விசாரணை பயிற்சியில் பெற்ற அனுபவமும் கொடுக்க தன்னைச் சமாளித்துக் கொண்டு பேச்சினைத் தொடர்ந்தான் ஷ்யாம்.

''இந்த வயசுல பொதுவா.. மேலே படிக்கணும்.. என்று ஆசை இல்லையா?'' என்று மேலும் தயக்கத்தோடு இழுக்க, பதில் பட்டென்று வந்தது.

''ஆசை இல்லாமல் இருக்குமா? இருக்கு. ஏன் நீங்க படிக்க வைக்க மாட்டீங்களா?'' என்று ஆர்வத்துடனும் வந்த வார்த்தைகள் அவனை மீண்டும் தடுமாற வைத்தது. படிப்பைப் பற்றிய பேச்சு காதில் விழப் போனை லவுட் ஸ்பீக்கரில் போட்டாள் சுந்தரி.

'இவ்வளவு எதிர்பார்ப்புடன் திருமணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு பெண்ணைப் பிடிக்கவில்லை என்று எப்படிச் சொல்வது? ம்ஹூம்! போன் பேச்சு சரி வராது. நேரில் கிளம்ப வேண்டியது தான்...' என்று முடிவு பண்ணியவன் பேச்சே இல்லாமல், ரிசீவரை வைக்கும் ஓசை கேட்க, முகம் ஏமாற்றத்தில் சுருங்க, இறுகிப் போனாள் ஜூனியர் சுந்தரி.



# 4



மேற்படிப்பைப் பற்றிய பேச்சு நடக்கிறது என்ற ஆவலுடன் தொலைபேசி ஒலிபெருக்கியை இயக்கிய திரிபுர சுந்தரி. அவன் அதை வைத்து விட்டதால் எழுந்த 'பீப்', ஓசையைக் கேட்டதும் எரிச்சலின் உச்சத்திற்குச் சென்றாள்.

''திமிர் பிடித்தவன்! பேசிட்டு இருக்கும்போது பாதிப் பேச்சில் போனை வைப்பதை பாரேன்...'' என்று முனகியது பாட்டியின் காதில் விழுந்தது.

''ஏன் சுந்தரி அப்படிச் சொல்கிறாய்? பேசுறதைப் பார்த்தால் ரொம்ப மரியாதையான பையனா தான் தெரியுது...'' என்று அவனைத் தாங்கிப் பேச அவளின் எரிச்சல் மேலும் கூடியது.

''ஆமா! போனில் பேசியது ரெண்டே நிமிஷம். அதுல பத்து வார்த்தை பேசின உடனேயே அவருடைய குணம் உங்களுக்கு அத்துபடி ஆகிடுச்சு போல...''

''அந்த ரெண்டு நிமிஷத்துல, பெரியவங்களா இருக்கீங்க. உங்களுக்கு இந்தக் கல்யாணத்தில சம்மதமா என்று கேட்டான் பாரு. அதுல அவனுடைய மரியாதை தெரியுது திரிபுரசுந்தரி...'' என்று சுவரமாக இடையிட்டுச் சொல்ல, அது அவன் 'பாட்டியிடம் கேட்கவில்லை அக்காவிடம் கேட்க நினைத்தது' என்பது புரிந்ததால் ராணி வாயை பொத்திக் கொண்டு சிரித்தாள்.

ஏற்கனவே அவன் போனை பாதிப் பேச்சில் வைத்து விட்டான் என்பதில் ஆரம்பித்த எரிச்சல், பாட்டியின்

சாதகமான பேச்சில் மேலும் வளர்ந்து, இப்போது ராணியின் சிரிப்பில் உச்சத்தை எட்டியது.

''இங்கே என்ன காமெடி படமா காட்டுறாங்க? இப்படி என்னு இளிக்கிற?'' என்று தங்கை மேல் பாய்ந்தாள் சுந்தரி.

''என் வாய், என் பல் அழகா இருக்கு. அதனால் அதை எல்லோருக்கும் காட்ட நான் சிரிக்கிறேன். உனக்கென்ன போச்சு? உனக்கு பல் எடுப்பா இருக்கு என்ற பொறாமை...?''

''எனக்கா பல் எடுப்பா இருக்கு? உனக்கு தான் கண் தெரியலை. கண் தெரியாதவங்களுக்கு வாயும் பல்லும் எப்படி இருந்தால் என்ன?''

''எனக்குக் கண் தெரியுமா தெரியாதா என்று ஆராய்ச்சி பண்ணுவதை விட்டு விட்டு, அவருக்கு மரியாதை தெரியுமா தெரியாதா என்று பாட்டியிடம் விளக்கம் கேளு...'' என்ற ராணி முறைத்தாள்.

''சுந்தரி இப்ப எதுக்கு இவ்வளவு கோபம்? ஏன் இப்படி ராணியோடு மல்லுக்கு நிற்கிறாய்? அவளை விடு. என்னிடம் பேசு...'' என்று இருவருக்கும் இடையில் புகுந்து சமாதானம் செய்ய முயன்ற உடனேயே அவரிடம் திரும்பினாள்.

''பாதிப் பேச்சிலே போனை வைத்தது உங்களுக்கு மரியாதை குறைச்சலா தெரியலையா பாட்டி?'' என்று சுட்டிக் காட்ட அவர் மறுத்தார்.

''லைன் கட்டாகி இருக்கும். திரும்ப கூப்பிடுவான்...'' என்று நம்பிக்கையோடு சொன்னவரின் நம்பிக்கை பொய் ஆகிப் போனது.

* * *



திருவையாற்றில் பெற்றோர் பார்த்து முடிவு பண்ணி இருக்கும். 'அந்தப் பெண்ணிடம்' போனில் தன் நிலையைச் சொல்லி விட்டால் பிரச்னை முடிவுக்கு வந்து விடும் என்று பேச ஆரம்பித்த ஷ்யாம்சுந்தரின் கணக்கு, தப்பாகப் போகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

திருமணத்தை நிறுத்த வேண்டும் என்ற ஆவலில் அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும், திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் பாவனையை வெளிக் காட்டியதில் பதில் வார்த்தைகள், அவனை முடக்கிப் போட்டது.

தினம் தினம் பேசிப் பழகும் அம்மா அப்பா தங்கையிடமே ஒரு அளவுக்கு மேல் தன் எதிர்ப்பைக் காட்ட முடியாத ஷ்யாமிற்கு, முதல் முறையாக பேசும் ஒரு பெண்ணிடம், அதுவும் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெண்ணிடம் கோபமாகப் பேச முடியவில்லை.

பேச்சைப் பாதியில் நிறுத்தி, போனை வைத்து விட்டாலும் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். அவனை அப்படியே அமர விடாமல் அடுத்தடுத்து வந்த வேலைகள் அவன் கவனத்தைத் திருப்ப முயன்றாலும், முழு வெற்றி கிடைக்கவில்லை.

அடி மனதில் அந்த தொலைபேசி பேச்சின் தாக்கம் தொடர்ச்சியாக இருந்ததால், மாலை ஆறு மணிக்கு வீட்டிற்குள் நுழைந்த ஷ்யாம்சுந்தரைப் பார்த்து, வேகமாக வெளியில் ஓடி 'மழை வருகிறதா?' என்று பார்த்து விட்டு உள்ளே ஓடி வந்த சைலஜா, அவன் எதிரே நின்று மூச்சு வாங்கினாள்.

''இந்த வீட்டின் வரலாற்றிலேயே, கடந்த எட்டு ஆண்டுகளில் முதல் முறையாக, சூரியன் மறையும் வேளைக்கு முன்பாகவே வீடு திரும்பிய ஷ்யாம்சுந்தர் ஐ.பி.எஸ். அவர்களை மேள தாளத்தோடு வருக வருக என்று இரு கரம் நீட்டி மனமார வரவேற்கிறோம்... என்று நாடக பாணியில் சத்தமாகச் சொல்ல, அந்தச் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த கௌசல்யாவின் விழிகளிலும் வியப்பு தெரிந்தது.

''ஷ்யாம்! இவ்வளவு சீக்கிரம் வந்துட்ட? உடம்பு சரி இல்லையா?'' என்று கேட்டவரின் குரலில் கேலியே தூக்கலாகத் தெரிந்தது.

''இன்னிக்கு சனிக் கிழமை. லீவு நாள் என்பது கூடத் தெரியாதா? ராத்திரி ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்தால் இப்படி ஆச்சரியப்படுறீங்க?'' என்று சொல்லி விட்டு தன் அறைக்குள் சென்றான் ஷ்யாம்.

சில நிமிடங்களில் முகம் கழுவி உடை மாற்றி, வந்து அமர்ந்தவன், ''சைலு, அம்மாவிடம் ஒரு சுக்கு காபி வாங்கிட்டு வா. பால் சேர்க்க வேண்டாம்...'' என்று சொல்லி விட்டு டி.வி.யைப் போட்டான்.

சிற்றுண்டி தட்டோடு, அவன் கேட்ட சுக்கு காபியையும் எடுத்துக் கொண்டு அவனின் இரு பக்கமும் அம்மாவும் பெண்ணும் அமர அவன் திகைப்புடன் இருவரையும் மாறி மாறி பார்த்தான்.

''அப்புறம் சொல்லு ஷ்யாம். ஆபீசில் இன்னிக்கு என்ன விசேஷம்?'' என்று ஆரம்பித்தார் கௌசல்யா.

''விசேஷமா...? ஒன்றும் இல்லையே...? ஏன் கேட்கறீங்க...?'' என்று இழுத்தவன் முகம் உஷார் ஆனது. ஒரு வேளை தான் அவளிடம் பேசிய தகவல் அதற்குள் இங்கே கை கால் முளைத்து வந்து விட்டதா?



''சும்மா தான், சுக்கு காபி கேட்கிறாயே? ஒரு வேளை நாம் ரொம்ப ஆசைப் பட்ட, அல்லது நடக்கும் என்று நினைத்த வேலை நடக்கவில்லை என்றால் வரும் தலை வலியோ என்று நினைத்தேன்...'' என்று இழுத்தவர் கண்களிலும் பேச்சிலும் ஆர்வம் இருந்தது.

''அதெல்லாம் இல்லை. ஆபீசில் வேலை. அவ்வளவு தான். உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல நினைத்தேன்...''

''சொல்லு சொல்லு... கேட்க நாங்க காத்திருக்கிறோம்...'' என்று ஆர்வத்துடன் இருவரும் சொல்ல அவன் சில வினாடிகள் தயக்கத்திற்குப் பிறகு மெல்ல ஆரம்பித்தான்.

''வீட்டில் வயசு பெண்ணை வைத்துக் கொண்டு எனக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்று நினைக்க றீங்க. அந்த பொண்ணு கொஞ்சம் ஒரு மாதிரி... தலை கனத்தோடு பேசுற மாதிரி இருக்கே? சைலஜாவிற்கு சிரமமா இருக்கப் போகுது...'' என்று சொல்ல இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்தனர்.

''எந்த பொண்ணு...? யாரால சைலஜாவுக்கு என்ன சிரமம்? நீ பேசுறதே புரியலையே?'' என்று புரியாத பாவனை காட்டிய கௌசல்யாவைப் பார்த்த பின்பு சிரிப்பை அடக்குவது சைலஜாவிற்கு சிரமமாக இருந்தது.

''ப்ச்! தேவையான நேரத்தில ஒண்ணுமே புரியாது. தேவை இல்லாத நேரத்தில் மூளை இரண்டு மடங்கு வேகத்தோடு வேலை செய்யும். நான் யாரை சொல்கிறேன் என்று நிஜமாவே தெரியலையாக்கும்...?''

''தெரியலை ஷ்யாம்...'' என்று அப்பாவியாக சொன்ன கௌசல்யா, ''யாரை சைலு சொல்றான்? உனக்குப் புரியுதா...?'' என்று அவளிடமும் கேட்க, வெடித்துச் சிரித்தாள்.

''அண்ணியைச் சொல்றான்மா...'' என்று சைலஜா சிரிப்பினூடே எடுத்துக் கொடுக்க ஷ்யாம் சுதாரித்தான்.

''ஓ...! எனக்கு இந்த பொண்ணு வேண்டாம் என்று ஒரே பிடிவாதமா போட்டோ எல்லாம் கிழித்துப் போட்டானே? அந்த பெண்ணைப் பற்றி இவனுக்கு எப்படித் தெரியும்? நம்பர் நீ கொடுத்தாயா சைலு?''

''ம்ஹூம்! நான் கொடுக்கவில்லை. அண்ணி தலைகனம் பிடித்தவர் என்பது எப்படித் தெரியும்? முதலில் நம்பர் எப்படித் தெரியும்? என்று கேளுங்கம்மா.''

''நம்பர் கண்டு பிடிப்பது என்ன பெரிய கம்ப சூத்திரமா? இதெல்லாம் சப்பை மேட்டர். நான் ஒரு போலீஸ் ஆபீசர் என்பதை மறந்துட்டு பேசாதீங்க. நானே அந்தப் பெண்ணிடம் பேசினேன்...'' என்று அவன் முடிக்கும் முன்பே, அவர்கள் இருவரும் சேர்ந்து ''ஓ...'' என்று கோரசாக இழுத்தனர்.

''என்ன ஓ...? நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. இந்தக் கல்யாணம் நடக்காது என்று சொல்றதுக்காக தான் நான் போன் பண்ணினேன்...''

''அப்புறம்...?'' என்று மீண்டும் கோரசாகக் கேள்வி வர அவன் எரிச்சலோடு முறைத்தான்.

''நான் இங்கே என்ன கதையா சொல்லிட்டு இருக்கேன்?''

''கதை மாதிரி தான் இருக்கு ஷ்யாம்...''

''ப்ச்! உங்களிடம் எதையாவது செய்யாதே என்று சொன்னால் அதை தான் செய்வீங்க. உங்களை மாதிரியே தான் அந்தப் பொண்ணும், நான் சொல்ல வருவதை காதிலேயே வாங்கலை...''

''சபாஷ்! ஜாடிக்கேற்ற மூடி'' என்று சந்தோஷமாக கௌசல்யா சொல்ல, 'களுக்' என்று சிரித்தாள் சைலஜா.



''அம்மா என்றால் பிள்ளைங்க மனசறிஞ்சு நடப்பாங்க என்று நான் கேட்டு இருக்கேன். இங்கே நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்கக் கூட இல்லாமல் நான் நினைப்பதற்கு நேர் எதிரான ஒரு செயலைச் செய்யும் அதிசயம் நடக்கும். எனக்கு என்ன வேண்டும் என்பதை நானே பார்த்துக் கொள்கிறேன். இனிமேல் உங்களிடம் எதற்கும் வர மாட்டேன்...'' என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு அறைக்குள் சென்றான் ஷ்யாம்.

'வாழ்த்துக்கள் ஷ்யாம்' என்ற கௌசல்யாவின் ஆசியும், சைலஜாவின் சந்தோஷச் சிரிப்பும் அறை வரை பின் தொடர்ந்தது.

* * *

**ச**னியன்று காலை பாதி பேச்சிலேயே இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு மீண்டும் அவன் அழைப்பான் என்று காத்திருந்த சீனியர் திரிபுரசுந்தரி போன் வரவில்லை என்றதும் கவலையானார்.

''என்னவோ முக்கியமான விஷயம் சொல்லணும் என்று போன் பண்ணினான். அதை சொல்வதற்கு முன்னாடியே லைன் கட்டாகி விட்டதே!'' என்று புலம்பித் தள்ளி விட்டார்.

''அவன் வேண்டும் என்றே பாதிப் பேச்சில் போனை வைத்தான் என்று நான் சொன்னேனே?'' என்று தன் கருத்தை வலியுறுத்த முயன்ற சுந்தரிக்கும் வருத்தம் வந்தது ஏன் என்று அவளுக்கே புரியவில்லை.

''அதென்ன போகிற போக்கில், மாப்பிள்ளையை அவன் இவன் என்று சொல்கிறாய்? மரியாதை வேண்டாம்?'' என்று அவர் முன்னால் கவலைப்பட்ட விஷயம் மாறிப் பேச்சு திசை மாறியது.

''ஏன், பேர் சொன்னால் என்ன தப்பு? கூப்பிடுவதற்கு தானே பேர் வைப்பது? இந்த காலத்துல, அதுவும் சென்னைல இருக்கவங்க கணவன் பெயரைச் சொல்லி தான் கூப்பிடுவாங்க...''

''அந்த சென்னை பட்டண நாகரீகம் அங்கேயே இருக்கட்டும். இங்கே நம் வீட்டிற்குள் வர வேண்டிய தேவையும் இல்லை. படித்து முடித்து, அவ்வளவு பெரிய போலீஸ் ஆபீசரா இருக்கிறவர், உன்னைவிட எவ்வளவு பெரியவர் தெரியுமா? சும்மா போகிற போக்கில் மரியாதை இல்லாமல் பேசினால் என்ன அர்த்தம்? உன்னைக் கேள்வி கேட்க ஆள் இல்லை என்று நினைத்தாயா?'' என்று மீண்டும் அதட்ட அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

''நீங்க சொல்வது சரி தான் பாட்டி எல்லோரும் அவங்கவங்க கணவரைக் கூப்பிடுவது மாதிரி நான் இவரைக் கூப்பிட முடியாது தான். அவங்களுக்கு இடையே ரெண்டு மூன்று வயசு வித்தியாசம் இருக்கும். சமயத்தில் அதுவும் இருக்காது. ஆனால், இங்கே, இவரை நான் அப்படிக் கூப்பிட முடியுமா? என் வயசுல பாதி அவருக்கு அதிகம் இருக்கும்போல இருக்கே...? அதுக்காகவே நான் அ...வ..ர். இ...வ...ர் என்றே சொல்கிறேன்...'' என்று சலிப்புடன் சொல்ல அவளின் அருகே வந்து பேத்தியின் முகத்தை நேராகப் பார்த்தார்.

''மாப்பிள்ளை வயசு கூடுதல் என்று உனக்கு மனசுல வருத்தம் இருக்கா சுந்தரி...?'' என்று கனிவான குரலில் கேட்டார் திரிபுரசுந்தரி.

''ப்ச்! அதெல்லாம் எனக்கு பிரச்னை இல்லை பாட்டி. என் பிரச்னையே வேறே. அது உங்களுக்குப் புரியாது. அப்பாவிற்குப் புரியும். ஆனால் காதில் போட்டுக்க



மாட்டேன் என்கிறார்...'' என்று வருத்தமாகச் சொல்ல அவளின் கன்னத்தை வருடினார்.

''பசங்களைவிட பொண்ணுங்க சீக்கிரமா முதிர்ச்சி அடைந்து விடுவதால் இந்த வயசு வித்தியாசம் நல்லது தான் சுந்தரி. இந்த மாதிரி ஏழெட்டு வயசு வித்தியாசம் இருந்தால் உன்னை கடைசி வரைக்கும் அக்கறையோடு பார்த்துக்குவாங்க. எனக்கும் உங்க தாத்தாவுக்கும் எட்டு வயசு வித்தியாசம். நாங்க சந்தோஷமா வாழலையா? இந்த வயசு வித்தியாசம் அதிகம் இல்லை சுந்தரி...'' என்று விளக்கம் சொல்ல அவள் உச்சு கொட்டினாள்.

''சலிச்சுக்காதே சுந்தரி. பெற்றவங்க பிள்ளையோட நல்லதுக்கு தான் சொல்வாங்க. சில காரியங்கள் ஏன் அப்படி நடக்கிறது என்று நமக்கு அப்போ தெரியாது. ஆனால் சில வருடங்கள் கழித்து அது நம் நன்மைக்கு தான் என்பதை பிறகு புரிந்து கொள்ள முடியும். இந்தக் கல்யாணமும் நீ சந்தோஷமா இருப்பதற்கு தான்...'' என்று வலியுறுத்திச் சொன்னார்.

''நான் பரீட்சைக்குப் படிக்கணும் பாட்டி கல்யாணம் பற்றி அப்புறமா பரீட்சை எல்லாம் முடிந்த பிறகு நிதானமா பேசலாம்...'' என்று அவசரமாக பேச்சை முடித்து விட்டு அந்த இடத்தில இருந்து நகர்ந்தாள் திரிபுரசுந்தரி.

* * *

திங்கள் அன்று காலை ஆறு மணி அளவில் வராந்தாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டு இருக்க, சைலஜா ஸ்கிப்பிங் கயிற்றில் குதித்துக் கொண்டும், இடையிடையே மூச்சு வாங்கும் நேரத்தில் முக்கிய விளையாட்டு செய்திகளை அப்பாவிடம் கேட்டு தெரிந்து கொண்டு இருந்தாள். வாசலில் பேச்சு சப்தம்

கேட்டதும், கணவருக்கும் தனக்கும் என்று இரண்டு கோப்பைகளில் காபி எடுத்துக் கொண்டு வந்து அந்த பேச்சில் தானும் கலந்து கொண்டார் கௌசல்யா.

''என்னம்மா ரெண்டு கப் மட்டும் தானா? எனக்கு ஏன் எடுத்துட்டு வரலை...?'' என்று சலுகையோடு கேட்டபடி அருகில் வந்தவள் அவர் தனக்கு கொண்டு வந்ததை உரிமையாக எடுத்துக் கொண்டாள்.

''இருபது வயசாகப் போகுது! ஒரு நாள் ஒரு பொழுது அம்மாவுக்கு ஒரு கப் காபி கொடுக்கணும் என்று தோன்றாது. ஆனால் அம்மா தனக்கு வைத்து இருக்கும் காபியை எடுத்து சட்டமா குடிக்க மட்டும் தெரியும்...''

''ம்ம்ம், என்னை மாதிரி டபிள் வயசுக்கு மேலே பத்து வயசாகுது. பொண்ணு காபி குடிக்கும்போது, அதை பார்த்து ரசிக்காமல், கண் போடுறீங்களே? இன்னும் கொஞ்ச நாளில் இந்த வீட்டுக்கு உங்க மருமகள் வந் துடுவாங்க இல்லை. அவங்க உங்களை உட்கார வைச்சு காபி கொடுப்பாங்க குடிங்க...'' என்று சொல்ல பத்ம நாபன் அவசரமாக இடையிட்டார்.

''இல்லை கௌசி, சைலஜா பதிலுக்குப் பதில் சொல்லும் வேகத்தில் தெரியாமல் சொல்லி விட்டாள். மருமகளை வேலை வாங்குற நினைப்பெல்லாம் வைத்துக் கொள் ளாதே. அவளை மேலே படிக்க வைத்து, ஆடிட்டர் ஆக்குகிறேன் என்று நான் கிருஷ்ணமூர்த்திக்கு வாக்குக் கொடுத்து இருக்கிறேன்...'' என்று தீவிரமான குரலில் சொல்ல இருவரும் அவரை வியப்பாகப் பார்த்தார்கள்.

''என்னங்க இது? எதுக்கு இவ்வளவு சீரியஸா சொல் றீங்க? அவளும் சைலஜா மாதிரி தான். ஆண்டவன் புண்ணியத்துல வசதிக்குக் குறைச்சலே இல்லை.



சமையல் முதற்கொண்டு செய்ய நம்பிக்கையான ஆளும் இருக்கு. அவ வந்து வீட்டில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. அவ ஷ்யாமோட ஒற்றுமையா சந்தோஷமா இருந்தால் போதாதா?'' என்று தீவிரமான குரலில் கணவனுக்கு பதில் சொல்லும் போதே கணவனின் கவனம் சிதறுவதை உணர்ந்து, அவரும் அந்த திசைக்குத் திரும்பினார்.

அங்கே ஷ்யாம் அவர்களின் இனோவா காரை போர்டிக் கோவில் கொண்டு வந்து நிறுத்தி, அதில் இருந்து இறங்கினான். குடும்பத்தோடு எங்கேயாவது செல்வதாக இருந்தால் இந்த காரை எடுப்பது வழக்கம். தினசரி பயணத்திற்கு அவனுக்கு அலுவலக கார் வரும்.

சென்னைக்குள் பயணம் செய்ய பத்மநாபன் சைலஜா இருவருமே. இரு சக்கர வாகனத்தைப் பயன்படுத்து வார்கள். ரவிசங்கர் வந்தால் தான் இந்த வண்டியை எடுப்பான். ஷ்யாம் எடுக்கப் போகிறான் என்றால் சொந்த வேலையாக தொலை தூரப் பயணமா? அப்படி என்றால்... திருவையாறு தான். கௌசல்யாவின் முகம் பிரகாச மானது. அதே முடிவிற்கு கணவனும் மகளும் ஏற்கனவே வந்து இருப்பதும் புரிந்தது.

''வர வர ஷ்யாமின் போக்கே எனக்குப் புரியலை. சொல்றது ஒண்ணு செய்றது ஒண்ணா இருக்கான் கொஞ்ச நாளா...? வேண்டாம் வேண்டாம் என்று சொல்லி கிட்டே அதை ரசித்து அனுபவிக்கக் கிளம்புறவங்களை என்ன செய்றது?'' என்று கேலியாகக் குரலை உயர்த்தி கேட்க இருவரும் சிரித்தனர்.

அம்மாவின் கேள்வியும், மற்றவர்களின் சிரிப்பையும் பார்த்த பிறகே தான் டாக்சிக்கு சொல்லி இருக்க

வேண்டும் என்ற எண்ணம் ஷ்யாமிற்குத் தோன்றியது. வாகனம் சொன்ன உடனே வந்துவிடும் என்றாலும் இவர்கள் அதற்கும் கிண்டல் அடிக்க தான் செய்வார்கள்.

''காலை நேரத்தில் சிரிப்பது உடல் நலத்திற்கு நல்லது தான். ஆனால் அது அடுத்தவங்களை நக்கல் அடிச்சு சிரிக்காமல் இருந்தால் இன்னும் நல்லா இருக்கும். இப்ப நான் என்ன சொல்றது ஒன்று செய்றது ஒன்று என்று நான் என்ன செய்தேன்?'' என்று அருகே வந்து அமர்ந் தான் ஷ்யாம்.

''காபி சாப்பிடுறியா ஷ்யாம்? சாப்பிட்டுகிட்டே விலா வாரியா பேசலாம்'' என்று கௌசல்யா எழ, அவன் மறுத் தான்.

''இல்லை நான் அவசரமா வெளியூர் கிளம்பணும். நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க...'' என்று சொல்ல, ''வெளியூர் என்றால், திருவையாறா?'' என்ற கோரசான சப்தம் இப்போது எழுந்தது.

''திருவையாறு...? அங்கே என்ன எனக்கு வேலை?'' என்று உடனடியாக மறுத்தாலும் மூவருமே அதை நம்பத் தயாரில்லை.

''சரி நீ திருவையாறுக்கு போகவில்லை என்பதை நம்புகிறேன் ஷ்யாம். வெளியூர் என்றால் ரொம்ப தூரமோ...?'' என்ற அப்பாவை முறைத்தான்.

''நீங்களும் இப்படி எல்லாம் தோண்டித் துருவ ஆரம் பித்தாச்சா? வழக்கமா அம்மா தான் இப்படி எல்லாம் கேள்வி கேட்பாங்க. போகும் போதே எங்கே போகிறாய் என்று ஆரம்பித்தால் வேலை விளங்கிடும்...''

''எங்கே போகிறாய் என்று கேட்காமலே, நீ எங்கே போகிறாய் என்று நாங்க தெரிந்து கொள்ள, வேறென்ன



செய்யணும் என்று சொல்லி தா அண்ணா. அடுத்த முறை நீ அண்ணியைப் பார்க்கப் போகும்போது நான் அப்படியே கேட்கிறேன்...'' என்று சிரிப்புக்கு இடையே சொல்ல அவளின் முதுகில் தட்டினார் கௌசல்யா.

''சும்மா அவனை சீண்டிகிட்டே இருப்பதே உனக்கு வேலையாப் போச்சு. அவன் என்ன சீக்கிரம் அலுவலகம் கிளம்பாதவனா என்ன? ஆபீஸ் வேலையாகப் போகி றான். இல்ல ஷ்யாம்?'' என்று அவனுக்கு சாதகமாகப் பேசுவது போல வெளிப் பார்வைக்கு தோன்றினாலும், அவரின் கண்கள் அவரின் கேலியை காட்டி கொடுத்தது.

''நீங்க பேசுவதைக் கேட்க இப்ப டைம் இல்லை. நான் கிளம்புகிறேன். அநேகமாக இரவு வந்து விடுவேன். தாமத மாகி விட்டால், நாளை அதிகாலை கிளம்பி ஒன்பது மணி வாக்கில் வருகிறேன் பை'' என்று ஷ்யாம் அவசரமாகக் கிளம்பி விட்டாலும், இங்கே மூவரின் ஆராய்ச்சியும் தொடர்ந்தது.

''ஆபீஸ் வேலைக்கு அண்ணா போக மாட்டான் என்று நான் சொல்ல முடியுமா? போவார். ஆனால் அதுக் கும், இன்று அவர் கிளம்புவதற்கும் நூறு வித்தியாசம் இருக்கு...'' என்று சைலஜா அழுத்தமாகச் சொன்னாள்.

''நூறு வித்தியாசம் வேண்டாம். ஒரு ஆறு வித்தியாசம் சொல்லு பார்ப்போம்...'' என்று பத்மநாபன் பெண்ணுக்கு உற்சாகம் அளிக்க, அவள் சிரிப்புடன் சொல்ல ஆரம்பித் தாள்.

''வித்தியாசம் நம்பர் ஒன்று, அவருடைய டிரைவர் இன்று வரவில்லை. சரி அவரே ஓட்டலாம் என்றாலும், அலுவலகக் காரை எடுக்கவில்லை. அது நம்பர் டூ. ரகசிய விசாரணைக்காக கிளம்புகிறார் என்று வைத்துக்

கொண்டாலும், அவருடைய வலது கையாகத் திகழும் இன்ஸ்பெக்டர் சிவா, இந்த நிமிடம் வரை எட்டிப் பார்க்கவில்லை. நம்பர் நாலு, இனோவா கார் தொலை தூர பயணம் என்பதை உறுதி படுத்துகிறது. நம்பர் அஞ்சு, அண்ணனின் 'மைனஸ் யூனிபார்ம் உடை' நம்பர் ஆறு தான். முக்கியம்... அண்ணன் முகத்தில் இருக்கும் திருட்டுத்தனம். வீட்டுக்குத் தெரியாமல் ஒரு வேலையை செய்யும்போது வருமே ஒரு திருட்டுத் தனம். அது அண்ணனின் முகத்தில் இப்ப நிறைய இருக்கு. சோ கன்பர்ம்ட். அண்ணன் போவது திருவையாறுக்கு தான். அதுவும் அலுவலக வேலை இல்லை. அண்ணியைப் பார்க்க மட்டும்தான்...'' என்று அடித்துச் சொன்ன மகளை பத்மநாபனும் கௌசல்யாவும் பெருமையுடன் பார்த்துச் சிரித்தனர்.

## 5



சென்னையில் இருந்து திருவையாற்றுக்குக் கிளம்பத் திட்டமிட்ட போதே, தான் செய்யும் வேலைகள் அதிக நபர்களுக்குத் தெரிய வேண்டாம் என்பதால், சொந்த வாகனத்தில் போக முடிவு செய்து இருந்தான் ஷ்யாம்சுந்தர். ஆனால் அதை வைத்து, தங்கை தன் செய்கைகளுக்கு புதிய விளக்கம் சொல்வாள் என்று எதிர்பார்க்கவில்லை.

'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பான்' என்பது உண்மை தான் போலும். புத்திசாலிதான்...' என்று தனக்குள் மெச்சியபடி வாகனத்தை செலுத்த ஆரம்பித்தான்.



அதிகாலை நேரம் என்பதால், போக்குவரத்து சிக்கலில் மாட்டாமல், சென்னையில் இருந்து திருவையாற்றுக் கான சுமார் முன்னூறு கிலோ மீட்டர் தூரத்தை, காலை உணவுக்காகக் கூட எங்கேயும் நில்லாமல், நாலரை மணி நேரத்தில் கடந்து, பத்து மணிக்கு நகர எல்லையை நெருங்கும் போது தான், அவளை எங்கு பார்ப்பது என்ற கேள்வி எழ அவன் விழித்தான்.

வீட்டுக்குப் போகலாம் என்று எண்ணியவன் உடனே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். அப்பாவின் நண்பரின் மகள். அவருக்காக தானே அப்பா தன் ஆட்சேபணையை மீறித் திருமணத்திற்குச் சம்மதம் சொல்லி இருக்கிறார். அங்கே சந்திப்பதில் அர்த்தம் இல்லை. அந்த பெண்ணைக் கல்லூரியில் சந்திப்பது தான் நல்லது. பரீட்சை முடித்த பிறகு பேசலாம் என்று கல்லூரிக்கு வந்து சேர்ந்தான்.

கடவுளே! இன்னும் அவளை நேரிலோ போட்டோவிலோ பார்த்ததே இல்லையே? கல்லூரியில் நூற்றுக் கணக்கில் பெண்கள் இருக்கும் போது எப்படி அடையாளம் கண்டு பிடிப்பது என்று தோன்றிய கவலை அதே வினாடியில் மறைந்தது.

நம்மால் கண்டு பிடிக்க முடியாதா? நான் அவளைப் பார்க்கவில்லை என்றாலும், அவள் என்னைப் பார்த்து இருப்பாளே! அதில் தெரியும் முக பாவனைகளை வைத்துக் கண்டு பிடிக்க முடியாதா? பார்த்துக் கொள்ளலாம்! என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன் கல்லூரிக்கு வந்து சேர்ந்தபோது மணி பதினொன்று.

* * *

இன்று நிதி மேலாண்மை குறித்த பரீட்சை. அவளுக்கு மிகவும் விருப்பமான பாடம் கூட இனிமேல், ப்ராஜெக்ட்

வைவா மட்டுமே புதன் அன்று உண்டு. அத்துடன் இந்த படிப்புக்கு டாட்டா தான் படிப்பு முடிக்கப் போகிறோம் என்று பெருமை கலந்த சந்தோஷத்துடன் கிளம்பி வந்தாள் திரிபுரசுந்தரி.

''அம்மா, காலேஜ் கிளம்புகிறேன். பாட்டி பை...'' என்று கிளம்பிய சுந்தரியை, 'பார்த்துப் பரீட்சை எழுது' என்று ஆசீர்வாதம் வழங்க அருகே இருந்த ராணி சிரித்தாள்.

''அச்சோ பாட்டி, உங்களுக்கு அவள் மேல் என்ன கோபம்? நீங்க சொல்ற மாதிரி பார்த்து எழுதினால், உங்க பேத்தியை மூன்று வருஷத்துக்கு பரீட்சை எழுத விடாமல் தகுதி நீக்கம் பண்ணிடுவாங்க'' என்று கண் சிமிட்ட முதுகில் தட்டினார் கமலம்.

''உன் திருவாயைக் கொஞ்சம் மூடு. கவனமா எழுது சுந்தரி. இன்னிக்குத் தானே கடைசி பரீட்சை?'' என்று சின்ன மகளுக்கு ஒரு அதட்டும். பெரியவளுக்கு ஆசியையும் சேர்த்துக் கொடுத்தார் கமலம்.

''ப்ராஜெக்ட் வைவா புதன் அன்று இருக்கு. ஆனால் அது எக்சாம் என்று சொல்ல முடியாது. இன்னிக்கு கடைசி நாள் ஆச்சே? அப்பாவோட கைனடிக் ஹோண்டாவை எடுத்துட்டு போகட்டுமா?'' என்று கேட்ட மகளுக்கு சம்மதம் சொன்னார் கிருஷ்ணமூர்த்தி.

''தேங்க்ஸ் பா. எப்படி மனசு வந்து வண்டியை எடுக்க விட்டுட்டீங்க?'' என்று உற்சாகமாக கேட்டபடி சாவியை ஓடிச் சென்று எடுத்தாள் சுந்தரி.

''சீக்கிரமே சென்னைக்குப் போன பிறகு. வண்டி ஓட்டத் தெரியலை. என்று பீல் பண்ணக் கூடாது இல்லையா அதான்...'' என்று அப்பா சொன்னது அவள் மனதில் பதியவில்லை. இதுவரை பலமுறை வண்டியை



திருட்டுத் தனமாக ஓட்டி இருந்தாலும் அப்பாவின் அனுமதியோடு, இன்று அதுவும் கல்லூரி வரை நீண்ட தூரம் எடுத்துப் போகிறோம் என்ற சந்தோஷம் அவள் முகத்தில் கோலம் போட உற்சாகமாக வாகனத்தில் பறந்தாள் சுந்தரி.

அதே உற்சாகத்துடன், தேர்வு அறைக்குச் சென்றவள், புத்திசாலி பெண் என்பதால், சிரமம் இன்றியே தேர்வை எழுதி முடித்தவள், பேப்பரை நூல் கொண்டு கட்டும் போதே கண்கள் ஜன்னல் வழியே வெளியே மேய்ந்தது.

கல்லூரி வாசலில் அந்த பெரிய தூங்கு மூஞ்சி மரத்தின் அடியில், நின்று இருந்த அந்த வாகனம் கண்ணில் பட்டது. கல்லூரிக்கு இதில் வருபவர்கள் யாரும் இல்லை. யார் வாகனம் இது? கண்கள் கூர்ந்து கவனிக்க, சற்று தூரத்தில் இருந்து காரை நோக்கி நடந்து வந்து கொண்டு இருந்த அவன் பட்டான்.

டார்க் ப்ளூ ஜீன்சும், நேவி ப்ளூ, மற்றும் சிவப்பு நிறத்தில், பெரிய பெரிய கட்டங்கள் போட்ட ஷார்ட் ஸ்லீவ் ஷர்ட், கண்களில் குளிர் கண்ணாடி, ஸ்போர்ட்ஸ் ஷூ, என்று அந்த சுற்றுச் சூழலில், அதுவரை பார்க்க வாய்ப்பு இல்லாத நடை உடையுடன், வந்து கொண்டு இருந்தது, அவனா? ஷ்யாம்சுந்தர்...? இங்கே என்ன செய்கிறான்?

அதன் பிறகு ஜன்னல் வழியே மேலும் சில நிமிடங்கள், அவனையே பார்த்துக் கொண்டு இருந்தவளுக்கு, அவன் கல்லூரியில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு பெண்ணையும் உற்று உற்று பார்ப்பது தெரிந்தது. அவன் தன்னைத் தானே தேடுகிறான் என்பதையும் ஊகிக்க முடிந்தது. போனில் பேசுகிறான். நேரில் வருகிறான்.

அதுவும் வீட்டுக்குத் தெரியாமல் நேரடியாக முயற்சி செய்வது, அவனுக்கு திருமணத்தில் இருக்கும் ஆர்வத்தை அல்லவா காட்டுகிறது. இதை வளர விடுவது சரி இல்லையே? என்ன செய்யலாம்...?

வெளியே வந்ததும், அவனைக் காணாதது போலவே, தோழி ஒருத்தியுடன் பேசியபடி, அவனைக் கடந்து சென்றாலும், அவளின் கட்டுப்பாட்டை மீறி, கண்கள் இரண்டு முறை அவனைத் திரும்பிப் பார்த்து விட்டது. அவனும் அந்த நேரம் அவளையே பார்த்துக் கொண்டு இருக்க, அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டாலும், அவன் தன்னை வித்தியாசமாக பார்ப்பதை உணர முடிந்தது.

பொது தொலைபேசிக்கு சென்று, அருகே இருந்த காவல் நிலையத்தை அழைத்து, 'பெண்கள் கல்லூரி வாசலில் ஈவ் டீசிங் நடக்கிறது. வந்து உடனே நடவடிக்கை எடுங்க' என்று தகவல் சொன்ன பத்தாவது நிமிடம் அந்த காவல் துறை ஜீப் வந்து கல்லூரி வாசலில் நின்றது.

''ஹலோ மிஸ்டர்...! உனக்கென்ன பெரிய ரோமியோ என்று நினைப்பா? லேடீஸ் காலேஜ் வாசலில் நின்று போற வர பொண்ணுங்களை எல்லாம் லுக் விட்டுட்டு இருக்க?'' என்று அவனை நெருங்கி, தோளை தொட்டுத் திருப்பி, அதிகார குரலில் கேட்டவனை வியப்புடன் திரும்பிப் பார்த்தான் ஷ்யாம்.

''நீங்க என்ன சொல்றீங்க? முதலில் நீங்க யாரு?'' என்று கேட்டபடி அவனை எடை போட்டவன் கண்களில் மீண்டும் 'அவள்' பட்டாள். சற்று முன்பு தன்னைக் கடந்து போன, 'அந்த பெண்...' மீண்டும் திரும்பி வந்து சில அடிகள் தூரத்தில் நின்று இருந்தாள்.



ஆரஞ்சும் பச்சையும் கலந்த நிறத்தில் ஒரு சல்வார். தளர பின்னிய ஒற்றை பின்னல், தலையில் சூடி இருந்த முல்லைப் பூ லேசாக வெயிலில் வாடி இருந்த போதும் வாடாமல் மலர்ச்சியுடன் இருந்த அந்த முகம் மனதில் பதிந்தது.

அவள் தன்னைக் கடந்து போன போது, 'இவளாக இருக்கக் கூடுமோ...?' என்று தோன்றிய சந்தேகம், அவள் மீண்டும் திரும்பி வந்ததிலும், சற்று தூரத்தில் நின்று இவன் தன்னிடம் பேசுவதை கவனிப்பதிலும் உறுதியானது.

''என்னையே பார் என்று கேட்பியா? இங்கே நின்று நான் பேசிக் கொண்டு இருக்கும் போதே அந்த பெண்ணைப் பார்க்கிறாயே நீ?'' என்றவன் குரலில் இருந்த அதிகாரத்தைக் கண்டதுமே, இவன் காவல் துறையைச் சேர்ந்தவன் என்று ஊகித்த ஷ்யாமின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

'அவள் தான்' தகவல் கொடுத்து இவனை வரவழைத்து இருக்க வேண்டும்? ஆனால் ஏன்? அவளைத் திரும்பிப் பார்த்தான். 'நல்லா மாட்டினாயா?' என்ற ரீதியிலான சின்ன பெருமிதம், அவள் முகத்தில் தெரிய அவன் வியப்படைந்தான்.

இவளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்று அந்த வினாடியில் தோன்ற, 'உனக்கு நான் சளைத்தவன் இல்லை' என்று அவளுக்கு நிரூபிக்கும் வேகம் ஏனோ உடனடியாக வந்தது. நிதானமான கூர் பார்வையுடன் தன்னை கேள்வி கேட்டவனிடம் திரும்பினான்.

''நீங்க போலீஸ் துறையா? டி.எஸ்.பி? இன்ஸ்பெக்டர்? எஸ்.ஐ.? என்னவா இருக்கீங்க? உங்க எஸ்.பி. யாரு?'' என்று அலட்சியமாகவும் அதிகாரமாகவும் கேட்ட தொனியில் வந்தவன் அசந்து போனான்.

''ஹேமந்த் குமார் சின்ஹா. ஏன் கேட்கறீங்க?'' என்று கேட்டவன் குரலில் அவனையும் அறியாமல் மரியாதை பன்மை வந்து இருந்தது.

''ஹேமந்த்...? 2004 ஐ.பி.எஸ். பேட்ச் தானே?'' என்று கேட்டவன், தன் போனை ஒரு விரலால் உருட்ட ஆரம்பிக்க, ஒரு காலேஜ் படிக்கும் சின்ன பொண்ணு, பேச்சை கேட்டு, ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டோமோ, என்ற பயம் முதல் முறையாக வந்தது.

''சார்... யாருக்கு போன்...?'' என்று தயக்கத்துடன் இழுத்தான்.

''உங்க எஸ்.பிக்கு தான்...'' என்ற ஷ்யாமின் பதிலில் நடுங்கி விட்டான்.

''யா ஹேமந்த்...? நல்லா இருக்கேன்! உன்னுடன் லஞ்ச் சாப்பிட சென்னையில் இருந்து கிளம்பி விருந் தாளியா வந்து இருக்கேன்...''

''......''

''சொல்லக்கூடாது என்று இல்லை. திடீர் என்று ப்ளான் பண்ணியது...''

''.......''

''இங்கே ஆக்சிலியம் ஆர்ட்ஸ் காலேஜ் வாசலில்...''

''.......''

''என்னை ஈவ் டீசிங் கேஸ் புக் பண்ண உங்க ஆள்... பேர் இல்லைப்பா... போலீஸ் ஜீப்பில், யூனிபார்ம் இல் லாமல் இருந்தால் அபராதம் கிடையாதா ஹேமந்த்...? ஜீப் நம்பர் சொல்லலாம். டி.என் 23...'' என்ற ஷ்யாமின் சரளமான உரையாடலிலும், அவன் பேசிய விதத்திலும், வந்தவனுக்கு கால் நடுங்கி, உள்ளங்கை பயத்தில் வேர்த்துப் பிசுபிசுத்தது.



''உங்க எஸ்.பி. லைனில் இருக்கிறார்...'' என்று அவனிடம் ஷ்யாம் போனை நீட்டியதும் நடுங்கி விட்டான். பில்டிங் ஸ்ட்ராங் பேஸ்மென்ட் வீக் என்ற வடிவேலுவின் காமெடி நினைவுக்கு வர, அதை வலுக்கட்டாயமாக ஒதுக்கி, கால்கள் நடுங்குவதை மறைக்க முயன்றபடி விறைப்பாக நின்று அவனுக்கு சல்யூட் வைத்தான்.

''சார்... சார்.. அவரிடம் அப்புறம் பேசலாம் சார். சார் என்ன விஷயமா இங்கே வந்து இருக்கீங்க என்று சொன்னால் ஹெல்ப் பண்ணுவேன் சார்...'' என்று அவன் அந்தர் பல்டி அடித்து சரணாகதி அடைய, ஷ்யாம், திரிபுரசுந்தரியைத் திரும்பிப் பார்த்தான்.

'இப்போ என்ன செய்வாய்?' என்ற ஏளனப் பார்வையில், அவளுக்கு பூமி பிளந்து உள்ளே போய்விட மாட்டோமா என்று இருந்தது.

''அவர் மேல் தப்பில்லை ஹேமந்த்! யாரோ அவருக்கு தவறான தகவல் கொடுத்து இருக்கணும்...'' என்றவன் கண்கள் அருகே நின்று இருந்த சுந்தரியைப் பார்த்தது.

எதிர்முனையில் அவன் என்ன சொன்னானோ? இங்கே இவன் சொன்ன பதிலை கேட்டு, சுந்தரிக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை பற்றி எரிந்தது.

''நான் என்னுடைய வருங்கால மனைவியைப் பார்க்க வந்து இருக்கிறேன். அவங்க ரொம்ப நேரமா இந்த எரிக்கும் வெயிலில், என்னுடன் பேசுவதற்காக வெயிட்டிங். பிறகு கூப்பிடுகிறேன். நீ வேலையைப் பாரு. பை...'' என்று போன் இணைப்பைத் துண்டித்தான்.

தன்னுடன் பணியில் சேர்ந்து நண்பனாக இருப்பவ னிடம் சரளமாகப் பேசி, இணைப்பைத் துண்டித்த பிறகு

ஷ்யாம் தனக்கு இருபுறமும் சற்று தள்ளி நின்று இருந்தவர்களை அளந்தான். சுந்தரி வேறு புறம் திரும்பி பல்லைக் கடிக்க, சில நிமிடங்கள் முன்பு வீரம் காட்டியவன், காலில் விழுந்து விடுவான் போல இருந்தது. தன்னை இறைஞ்சுதலோடு பார்த்தபடி நின்று இருந்தான்.

''சார்... சாரி சார்... நீங்க யார் என்று எனக்குத் தெரியாது. லேடீஸ் காலேஜில் இருந்து படிக்கும் பெண்ணிடம் இருந்து வந்த போன் என்பதால்... சாரி சார்... தெரியாமல் நடந்துடுச்சு... சார்...''

''இருக்கட்டும். தகவல் வந்த பத்து நிமிடங்களில் சம்பவ இடத்துக்கு வந்துட்டீங்க. உங்க கடமை உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். ஆனால், அதுக்காக, என்ன ஏது என்று விசாரிக்காமலேயே, இப்படி தான் எடுத்த எடுப்பில் மரியாதை இல்லாமல் பேசுவீங்களா?''

''சாரி... சார்... கிரிமினல்களிடம் பேசிப் பேசி... பேச்சு அப்படி மாறி விட்டது சார். மன்னிச்சுக்கோங்க. அம்மாவை தான் அய்யாவுக்கு பார்த்து இருக்காங்களா சார்...?'' என்று பவ்யமாக விசாரிக்க ஷ்யாம் சுந்தரியை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு ஒப்புதலாக தலை அசைத்தான்.

''அவங்க என்னை இதற்கு முன்னால் பார்த்ததில்லை. அதனால் வந்த சின்னக் குழப்பம். உங்களுக்கு போன் பண்ணிட்டாங்க போல. இனிமேல் நீங்க வேலையாக கிளம்பும் போது மறக்காமல் யூனிபார்ம் அணிந்து செல்லுங்க. அது உங்களுக்கு மரியாதையைத் தருவதோடு, குழப்பத்தையும் தவிர்க்கும்'' என்று இலவசமாக அறிவுரை வழங்கியபடி, 'நீ இடத்தைக் காலி பண்ணு...' என்று சொல்லாமல் சொல்லும் விதமாக, தன் வலது கரத்தை நீட்டினான்.



அதை பட்டும் படாமல் தொட்டுக் குலுக்கியவன், அத்தோடு நிற்காமல், தள்ளி அட்டென்ஷனில் நின்று, விறைப்பாக ஒரு சல்யூட்டும் அடித்து விட்டு, தப்பித்தேன் பிழைத்தேன் என்று அந்த இடத்தை விட்டு ஓடுவதைப் பார்த்து விட்டு, சுந்தரியின் புறம் திரும்பினான்.

அவளை அழுத்தமான காலடிகளுடன் நெருங்கி, நேராகப் பார்த்து, ''சோ. யூ ஆர் மிஸ் திரிபுரசுந்தரி, நைஸ் மீட்டிங் யூ...'' என்று தன் வலது கரத்தை நீட்ட, அவள் கரம் குவித்தாள்.

''சாரி மிஸ்டர் ஷ்..யா..ம் சு..ந்..த..ர், நீங்க சொன்னதை என்னால் வெறும் வாய் வார்த்தையாகக் கூட சொல்ல முடியலை. உங்களைச் சந்திக்க எனக்கு இஷ்டம் இல்லை...'' என்று சொல்ல, அவன் கண்கள் ஒரு கணம் யோசனையில் சுருங்கி, பின் முகம் இயல்புக்கு வினாடியில் வந்து விட்டது.

''ம்ஹூம்! வார்த்தை சந்திக்க இஷ்டம் இல்லை என்று அர்த்தத்தில் வந்தாலும், கைகள் குவிந்து வணக்கம் சொல்கிறதே?'' என்று உதட்டைப் பிதுக்க அவளுக்கு உள்ளுக்குள் இரத்த அழுத்தம் கூடியது.

''நான் இந்த திருவையாற்று மண்ணில் பிறந்த தமிழ் பொண்ணு, எனக்கு வெள்ளைக்காரன் நாகரீகம் தேவை இல்லை. அதனால் வணக்கம் சொல்கிறேன். அதெல்லாம் சென்னை பட்டணத்தில் பிறந்து, வளர்ந்து, நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் உங்களுக்கு எப்படிப் புரியும்?''

''இருக்கட்டும்... இருக்கட்டும்... தமிழ் பாரம்பரியம் உன்னிடமே பத்திரமா இருக்கட்டும். அது சரி, என்னை யார் என்று தெரியாமலேயே போலீசில் புகார் கொடுத்து

விட்டாய். யார் என்று தெரிந்த பிறகு ஒரு சாரி சொல்லணும் என்று அந்த தமிழ் பாரம்பரியம் சொல்லித்தரவில்லையா?'' என்ற கேள்வியை முடிக்கும் முன்பே அவளின் பதில் பாய்ந்து வந்தது.

''ஹலோ... ஹலோ... நில்லுங்க. நீங்க பாட்டுக்கு பேசிட்டே போறீங்க. இதுல மரியாதை இல்லாமல் ஒருமை பேச்சு வேறே...? நீங்க யார் என்று எனக்குத் தெரியாது என்று எதை வைத்து முடிவு பண்ணினீங்க?'' என்று வேகமாக கேள்விகளை அடுக்க அவன் திகைத்தான்.

அதானே! தான் சொல்லாமலேயே தன் பெயரை அவ்வளவு அழுத்தம் திருத்தமாக மிஸ்டர் போட்டு சொன்ன பாவனையில் தயக்கம் எதுவுமே இல்லையே? இவளுக்கு தான் யார் என்று தெரிந்தால் ஏன் போலீசில் சொல்ல வேண்டும்? சுறுசுறுவென்று எரிச்சல் மூண்டது. தெரியாமல் செய்து இருக்கலாம் என்ற எண்ணத்தில், சற்று நேரம் முன்பு தைரியமாக தோன்றிய அதே செயல், இப்போது திமிராகத் தோன்றியது.

''தெரிந்து கொண்டே தான் செய்தாயா? அப்ப திமிர் தான்...''

''மிஸ்டர் ஷ்யாம்சுந்தர், அதுக்கு பேர் திமிர் இல்லை. தைரியம். தெரிஞ்சவங்க எல்லார்கிட்டேயும், பார்த்த இடத்தில் எல்லாம் நின்று பேச, இது ஒன்றும் சென்னை இல்லை. நீங்க ஏதாவது பேசணும் என்றால் வீட்டுக்கு வந்து இருக்கணும். சொல்ல வேண்டியதை பெரியவங்க மூலமா பேசணும். அதை விட்டுட்டு, போனில் பேசறேன். நேரில் பார்க்கிறேன் என்று நீங்க உங்க இஷ்டத்துக்கு நடந்து கொண்டால், அதுக்கு எல்லாம் ஈடு



கொடுத்து, நாங்க உங்களோடு நின்று கதை பேச வேண்டுமாக்கும்?''

''ஓஹோ! இப்ப காலேஜில் பரீட்சை முடிந்து, எல்லோரும் கிளம்பி காலேஜை காலி ஆகி முக்கால் மணி நேரம் கழித்து, நடு ரோட்டில் நின்று என்னுடன் இப்ப நீ வாக்குவாதம் செய்து கொண்டு இருக்கிறாயே! இதுக்கு பேர் என்ன?'' என்று கேலியாக ஷ்யாம் கேட்க, பதில் சொல்ல முடியாமல் அவன் மடக்கி விட்டான் என்பதாலேயே, அவள் முகம் கோபத்தில் சிவந்தது.

அத்துடன் வேண்டாம் பேசமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே தான் கூடுதல் நேரம் நின்றதும், அதை அவன் சுட்டிக் காட்டியதும், அவளின் கோபத்தை அதிகரித்தது. பதிலே பேசாமல் அவள் விடுவிடென்று திரும்பி நடக்க, அவன் விழித்தான்.

''ஹலோ... மிஸ்... மேடம்... திரிபு. ப்ச்! இந்த வேகத்தில் முழு பேர் வேறயா? ஹேய் சுந்தரி... நில்லு... நான் கொஞ்சம் தனியா பேசணும்... ஹேய்... ஸ்டாப்...'' என்று வேகமாக அவளை பின் தொடர்ந்தவன், அவளின் கை பற்றி நிறுத்த முயல, அவன் கையை உதறி விடுவித்துக் கொண்டவள் நின்று திரும்பி புன்னகை செய்தாள்.

''தனியா தானே பேசணும்?'' என்று அப்பாவியாக புன்னகையுடன் கேட்க, அவன் வேகமாக தலை அசைத்தான்.

''எஸ், அதுக்காக தான் சென்னையில் இருந்து வந்து இருக்கிறேன். எங்கே போகலாம்?'' என்று அவசரமாக கேட்க அவளின் புன்னகை மேலும் விரிந்தது.

''ஹய்யோ! பாவம்! இதுக்காக இவ்வளவு தூரம் வந்தே இருக்க வேண்டாமே? அவ்வளவு பெரிய சென்னை

பட்டணத்தில, நீங்க தனியா பேச இடமே கிடை
கலையா? சரி பரவாயில்லை. காலேஜிலேயே, அ
அந்த புளிய மரம் இருக்கு பாருங்க. அதுல பேய் இருக்
என்று யாரோ புரளியைக் கிளப்பி விட்டதனால் அ
பக்கம் நடமாட்டம் இருக்காது. நீங்க அங்கே பே
தனியா எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலா
யாரும் உங்களைத் தொந்தரவு பண்ண மாட்டாங்க..
என்று சொல்லிவிட்டு, அவள் மீண்டும் நடையை வே
மாக தொடர்ந்தாள்.

முதல் கணம் அவள் என்ன சொல்ல வருகிறா
என்பதே புரியாமல் விழித்தவன், அடுத்த கணமே அ
புரிய, 'ஹேய்... ஸ்டுப்பிட்... உன்னை...' என்று ஷ்யா
பல்லைக் கடிக்க, அவள் தன் கட்டை விரலை கவிழ்த்து
காட்டிய பின், கைகளை விரித்து டாட்டா காட்டினாள்

அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சற்று தூரத்தி
இருந்த தன் வாகனத்தை நோக்கி நடந்து சென்றவ
எரிச்சலுடன் பார்த்தபடி நின்றான் ஷ்யாம்சுந்தர்.

**தேசிங்கு ராஜா... தேசிங்கு ராஜா... திரு திரு திருன்னு முழிப்பது ஏ**
**தஞ்சாவூர் ராணி தஞ்சாவூர் ராணி குறுகுறுகுறுன்னு பார்ப்பது ஏ**
**பூவா தலையா போட்டு பார்த்தால் பூ ஒன்று விழுந்தது தலையிலே..**
**காயா பழமா கேட்டுப் பார்த்தால், காய் ஒன்று கனிந்தது கனவிலே**
**இனி ஒன்னும் ஒன்னும் ஒன்றா சேர்ந்து**
**மூணா ஆகிடும்...**



# 6



திரிபுரசுந்தரியைத் தனியாகச் சந்தித்து, தனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டம் இல்லை, என்பதை அவள் மனசு நோகாமல் சொல்ல வேண்டும் என்ற திட்டத்தோடு, அதிகாலையில் சென்னையில் இருந்து கிளம்பி வந்த ஷ்யாம்சுந்தர், திருவையாற்றில் அவள் படிக்கும் கல்லூரியில் நடந்த சம்பவங்களை எதிர்பார்க்கவில்லை.

அவள் தனியாக சந்திக்க, உற்சாகத்துடன், முக மலர்ச்சியோடு கிளம்பலாம், பயத்துடன் மறுக்கலாம், அல்லது, சுற்றுப் புறத்தை எண்ணி தயங்கலாம் என்ற ரீதியில் சுந்தரியின் பிரதிபலிப்பை எதிர்பார்த்து வந்தவனுக்கு, அவள் நடந்து கொண்ட விதம் மிகுந்த கோபத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணியது.

அவ்வளவு தூரம் பயணம் செய்து தன்னைச் சந்திக்க வந்து இருப்பவனிடம், நின்று சில நிமிடங்கள் பேசி, என்ன சொல்ல வருகிறான் என்று கேட்பதை விட்டு விட்டு, இவள் பெரிய மகாராணி மாதிரியும், இவளைக் காண நூறு பேர் தவம் இருப்பது மாதிரியும், எண்ணிக் கொண்டு, தன்னைத் துச்சமாகப் பேசிவிட்டுச் சென்றவளைக் கோபத்துடன் முறைத்தவன், அவளின் வாகனம் கண்ணில் இருந்து மறைந்த உடன் காரில் அமர்ந்தான்.

இவளை இன்று சந்தித்துப் பேசியே ஆக வேண்டும். இன்னொரு முறை இங்கே வருவதோ அவளை வீட்டில் சென்று சந்திப்பதோ சரிப்படாது. அவளை வெளியே வரவழைக்க வேண்டும். என்ன செய்யலாம்...?

ஸ்டியரிங் வீலில் தாளமிட்டபடி யோசித்தவன் சில வினாடிகள் கழித்து, அவளின் வீட்டுக்கு போன் பண்ணி பேசிவிட்டு, நகரின் ஜி-5 காவல் நிலையத்தின் அருகில், ஒரு மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு, அவளின் வருகைக்காகக் காத்திருந்தான்.

* * *

கல்லூரியில் இருந்து கிளம்பி இருபது நிமிடத்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தவளை வாசலிலேயே காத்திருந்த கமலம், 'எங்கே போனே இவ்வளவு நேரம்?'' என்று கோப கேள்வியுடன் எதிர்கொள்ள அவள் திகைத்தாள்.

''என்னம்மா! காலேஜில் இருந்து நேரே வீட்டுக்கு தானே வரேன்? எதுக்கு இவ்வளவு கோபம்? இன்று கடைசி நாள் என்பதால் கூடக் கொஞ்ச நேரம், ப்ரெண்ட் சோடு பேசி விட்டு வந்தால் அது என்ன அவ்வளவு பெரிய தப்பா?''

''வாயை மூடு, காலேஜுக்கு போனோமா வந்தோமா என்று இல்லாமல்...''

''அம்மா, காலேஜ் போனால் வீட்டுக்கு பத்திரமா திரும்பி வர மாட்டேனா? திருவிழா கூட்டத்தில் தொலைந்து போக, நான் என்ன சின்னக் குழந்தையா? எதுக்கு இவ்வளவு டென்ஷன்? எக்ஸாம் எழுதியதைப் பற்றி ரெண்டு வார்த்தை விசாரிக்கலாம். இல்லை சுட்டெரிக்கும் வெயிலில் வந்து இருக்கும் பெண்ணுக்கு ஒரு டம்ளர் ஜில்லுன்னு மோர் கொடுக்கலாம். அதெல் லாம் காணோம்...''

''அது ஒன்று தான் குறைச்சல். இந்த மாதிரி ஏதாவது நடக்கும் என்று தான் வண்டியை எடுக்க வேண்டாம்



என்று நான் பயப்படுவது. நீ இன்னிக்கு உங்க அப்பா வுக்கு ஐஸ் வைச்சு எடுத்துப் போய்...'

''அம்மா போதும். இதுதான் லிமிட்... எதுக்கு இப்படி குற்றவாளியைப் போல வாசலில் நிற்க வச்சு விசாரணை நடத்துறீங்க? வழியை விடுங்க. எனக்குப் பசிக்குது. நான் போய் சாப்பிடுகிறேன்...'' என்று அவரை தள்ளி விட்டு உள்ளே செல்ல உணவு மேஜையில் இருந்த ராணி கை காட்டி அழைத்தாள்.

''வா சுந்தரி. உனக்காக அம்மா ஸ்பெஷலா சேமியா பாயசம் ப்ளஸ் மசால் வடை பண்ணி வச்சு இருக்காங்க. இவ்வளவு நேரம் நீ வருவாய் வருவாய் என்று பார்த்து விட்டு மணி இரண்டாகப் போகுதே என்று பசி பொறுக்காமல் முன்னால் உட்கார்ந்த நான் உன் பேரை சொல்லி நான் சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றேன். நீ சீக்கிரம் வரவில்லை என்றால் அப்புறம் எண்ணிய குறை சொல்லக் கூடாது. பந்திக்கு முந்தணும் என்பது அடிப்படை விதி. இப்பவே சொல்லிட்டேன்'' என்று உற்சாகத்துடன் கூவி அழைத்த செல்வராணியை வியப் புடன் பார்த்தாள் சுந்தரி.

தனக்காக சிறப்பான சமையல் செய்துவிட்டு அப்புறம் என்ன கோபம்? என்ன குழப்பம்? என்ன விசாரணை? குழப்பத்தோடு மீண்டும் வாசலுக்கு திரும்ப எதிரே அவரே வந்தார்.

''என்னம்மா பிரச்னை? அப்பா எங்கே?''

''அப்பா, ஆலங்குடி மாமா வீட்டுக்குப் போயிட்டு வருகிறேன் என்று கிளம்பிட்டாங்க. எனக்கு கையும்

நான் ஓட வைக்கிறேன் என்ன விஷயம் என்று முதலில் பதட்டப் படாமல் நேரடியா சொல்லுங்க.''

''நீ இந்த பக்கம் வா, அவள் காதில் விழுந்தால் ஊருக்கே தண்டோரா போட்டு சொல்ற மாதிரி...'' என்று சுந்தரியை கை பிடித்து அறைக்குள் இழுத்துச் சென்ற கமலம் மெல்லிய குரலில் ரகசியமாகப் பேசினார்.

''ஜி 5 ஸ்டேஷனில் இருந்து போன் வந்தது. நீ ஏதோ ஒரு வண்டியை இடிச்சு தள்ளிட்டு நிற்காமல் வந்து விட்டாயாம். வண்டி நம்பர் வச்சு அட்ரஸ் கண்டு பிடிச்சு இன்ஸ்பெக்டர் பேசினார் உன்னை உடனே அங்கே ஸ்டேஷனுக்கு வரச் சொன்னார் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. ஏன்டி இப்படி பண்ணின?'' என்று கணகள் பயத்தில் உருள பதட்டத்துடன் பேசினார் கமலம்.

''என்னம்மா பேசறீங்க? நான் வண்டியை இடிச்சுட்டேனா? அப்படி எல்லாம் எதுவும் இல்லைம்மா...'' என்று விளக்கம் சொல்ல முயன்றவளை முறைத்தார்.

''இதுல பொய் வேற சொல்ல ஆரம்பிச்சுட்டியா? பகவானே... இன்னிக்கு காலையில் யார் முகத்தில் விழித்தேனோ? இப்படி இடி மேல் இடியா வந்து விழுதே...?''

''அம்மா! கொஞ்சம் புலம்பாமல் இருங்க. நான் யாரையும் இடிக்கவும் இல்லை. பொய் சொல்லவும் இல்லை. முதலில் சாப்பிட்டு விட்டு, நானே ஸ்டேஷன் போய் யார் போன் பண்ணினாங்க என்று நேரில் பார்த்து விளக்கம் சொல்கிறேன்.''

''சிவ சிவா! கல்யாணம் பேசிட்டு இருக்கும் வயசு பொண்ணு போலீஸ் ஸ்டேஷன் போறதா? ஹய்யோ! பகவானே! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான்



கார்த்திக்கை வரச் சொல்லி இருக்கேன் அவன் வரட்டும்...'' என்று அவர் பதட்டத்துடன் பேசும் போதே கல்யாணம் பேசிட்டு இருக்கும் பொண்ணு...'' என்ற வாசகத்தில் அவளுக்குள் விளக்கெரிந்தது. அம்மா பேசப் பேச விஷயம் தெளிவாகவே புரிய, கை காட்டி நிறுத்தினாள்.

''எந்த போலீஸ் ஸ்டேஷனில் இருந்து யார் தகவல் கொடுத்து இருப்பாங்க என்று எனக்குத் தெரிந்து விட்டது. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க கவலைப் படாதீங்க. கார்த்திக்கை அனாவசியமா அலைய வைக்காதீங்க...'' என்று சொல்லி எழுந்தாள் சுந்தரி.

''தனியாகவா போகிறாய்?''

''தனி என்னம்மா தனி? பகல் நேரம். நான் எதுவும் தப்பு பண்ணவில்லை. அதற்கு மேல் ஏதாவது போனாலும் சமாளிக்க நம்மிடம் ஆளா இல்லை? பெரிய போலீஸ் ஆபீசர் நம் கைவசம் இருக்காங்க! கவலைப்படாதீங்க...''

''பெரிய ஆபீசரா...? யாரை சொல்கிறாய்? ஷ்யாம் தம்பியா? அவர் சென்னையில் அல்லவா இருக்கிறார்...?''

''ஓ! அவர் சென்னையிலா இருக்கிறார்? பரவாயில்லை. அங்கிருந்து ஒரு போன் பண்ணி இங்கே இருக்கும். ஆபீசரிடம் பேசினால் பிரச்னை தீர்ந்து விடாதா...? நான் பார்த்துக் கொள்கிறேன்...'' என்று மனதிற்குள் பல்லைக் கடித்தாலும், விரிந்த புன்னகையுடன் அம்மாவிடம் சொல்லிவிட்டு, கைப்பையுடன் வெளியேறினாள்.

''சுந்தரி திரும்பி வர எவ்வளவு நேரம் ஆகுமோ? ஒன்றும் சாப்பிடாமல் கிளம்புகிறாய்?'' என்றதும் நின்று திரும்பி புன்னகை செய்தாள்.

"இப்பதான் எங்க அம்மாக்கு நான் சாப்பிடலை என்ற நினைப்பு வந்து இருக்கு. பரவாயில்லை நான் போயிட்டு வந்தே சாப்பிடுகிறேன்" என்று சொல்லியபடி, வண்டியை எடுக்க, அவர் அவசரமாக இரண்டு டிபன் பாக்சுடன் திரும்பி வந்தார்.

"இதுல கொஞ்சம் பாயசமும் வடையும் வச்சு இருக்கேன். நேரம் கிடைக்கும் போது சாப்பிடு. ஜாக்கிரதை ஏதாவது பிரச்னை என்றால் ஷ்யாமுக்கு போன் பண்ணு. இதுதான் அவர் நம்பர்..." என்று நீட்ட, அவள், 'ஈ'... என்று இழுத்து ஒட்ட வைத்த சிரிப்புடன் அதை வாங்கிக் கொண்டாள்.

அடுத்த பதினைந்தாவது நிமிடம், அந்த ஜி-5 காவல் நிலையத்திற்கு வந்து சேர்ந்த போதும் உள்ளே செல்ல வில்லை. சுற்றும் முற்றும் அலச, அவள் தேடியது கண் களில் பட்டது. அந்த சில்வர் கிரே இனோவா கார் சற்று தொலைவில் மரத்தடியில் நின்று இருக்க, அவள் வண் டியை நேராக அங்கே செலுத்தி அதன் அருகே நிறுத்தி இறங்க, ஷ்யாமும் மலர்ந்த புன்னகையுடன் காரில் இருந்து இறங்கினான்.

"ஹலோ மிஸ் திரிபுரசுந்தரி! வெல்கம் பேக். அப்போ காலேஜில் 'உங்களை சந்திப்பதில் சந்தோஷம்' என்று சொன்னது வெறும் வாய் வார்த்தையாக தான். ஆனால் இப்போ இந்த இடத்தில, உன்னை அரை மணி நேரத்தில் மீண்டும் சந்திக்க நேர்ந்ததில் எனக்கு ரொம்ப... ரொ..ம்..ப.. சந்தோஷமா இருக்கு..." என்று உற்சாகத் துடன் சொன்னவனை ஏளனமாகப் பார்த்தாள்.

"நேரத்துக்கு நேரம் நிறம் மாறும் பச்சோந்தி இல்லை. நான். அப்ப ஒரு பேச்சு, இப்ப ஒரு பேச்சு, எல்லாம்



என்னிடம் கிடையாது. அப்பவும், இப்பவும், எப்பவும், உங்களை சந்திப்பதில் எனக்கு இஷ்டம் இல்லை. ஆனால் நீங்க...?"

"ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த திருமணத் தில் உனக்கு சம்மதம் தானா என்று கேட்டபோது, இதே வாய் தானே சம்மதம் இல்லாமலா போட்டோ ஜாதகம் எல்லாம் கொடுத்து அனுப்பினாங்க என்று கட்ட ஞாபகம் இருக்கே? சனிக்கிழமை காலை பதினோரு மணிக்கு பேசியதற்கும் இன்று பேசுவதற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கே? இந்த லட் சணத்தில் அப்பவும், இப்பவும், எப்பவும், ஒரு பேச்சு என்று தலை கொள்ளாத பெருமை வேறு. ஒருவேளை அம்னீசியா எதுவும் இருக்கிறதோ?" என்று கேலியாக கேட்க அவள் உதட்டைச் சுழித்துப் புன்னகை செய்தாள்.

"சனிக்கிழமை பேசியது யார்? திங்கள் அன்று பேசிக் கொண்டு இருப்பது யார்? என்று குரலை வைத்துக் கூட வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாத உங்களுக்கு எல்லாம் யார் ஐ.பி.எஸ். கொடுத்தது?" என்று அவனுக்கு மேல் கேலியாக சுந்தரி சொல்ல அவன் முகம் மாறியது.

"என்ன சொல்கிறாய்? நீ சனிக்கிழமை என்னுடன் பேசலையா? உன் தங்கையிடம் உன்னிடம் பேச வேண்டும் என்று சொன்னேனே?"

"அவளும் வந்து என்னிடம் சொன்னாளே! ஆனால் நான் உங்களிடம் பேசவில்லை..."

"அன்று என்னிடம் திரிபுரசுந்தரி என்று பெயர் சொல்லிப் பேசியது யார்? ஆள் மாறாட்டம் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்று தெரியுமா?" என்று

எரிச்சலாகக் கேட்டவன் குரலில் ஏமாந்து விட்டோமே என்ற ஆதங்கம் இருந்தது.

''நல்லா தெரியும். அன்று பேசியதும் திரிபுரசுந்தரி தான்...''

''வாட்...?''

''நீங்க என்னிடம் பேசுவாக நினைத்து என் பாட்டியிடம் பேசினீங்க. பாட்டிக்கும் பேத்திக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கும் அளவுக்கு இருக்கு உங்களின் புத்திசாலித்தனம். அவங்க பேரும் திரிபுரசுந்தரி தான். இதை எப்படி ஆள் மாறாட்டம் என்று சொல்வீங்க?'' என்று அசால்ட்டாக தோளைக் குலுக்க அவன் ஒரு கணம் திகைத்தான். அடுத்த கணமே சுதாரித்தவன் தன் வாகனத்திற்கு திரும்பி, உள்ளே இருந்து ஒரு மாம்பழ ஜூஸ் பாட்டிலை எடுத்து வந்தான்.

''ரொம்ப சூடாக இருக்கிறாய் போல? இன்னும் பசியாறவில்லையோ? ஜூஸ் குடிக்கிறாயா?'' என்று கையில் வைத்து இருந்ததை அவளிடம் நீட்ட, அவள் விழித்தாள். சில வினாடிகள் முன்பு, அப்படிப் பேசினான் அடுத்த வினாடியே ஜூசுடன் வந்து நிற்கின்றானே! இவனுக்கு என்ன தான் வேண்டும்?

''நோ தேங்க்ஸ். பொய் சொல்லி என்னை இங்கே மீண்டும் வர வைத்ததுக்காக கொஞ்சம் கூட கூச்சமோ, வருத்தமோ இல்லாமல், என்னை பார்த்ததில் சந்தோஷம் என்று சொல்றீங்க. ஜூஸ் குடி என்று உபசரிக்கிறீங்க. மை காட்! எப்படி இதெல்லாம் உங்களால் முடியுது?'' என்று அலட்சியமாக தோளைக் குலுக்கினாள் சுந்தரி.

''நியாயமா பார்த்தால் இதெல்லாம் உன்னுடைய ஊர் என்பதனால் நீ செய்து இருக்கணும் நீ செய்யவில்லை



என்பதால் நான் என்னுடைய பழக்கத்தை விட்டு விட முடியாதே? விருந்தோம்பல் எங்க குடும்பத்துடன் கூடவே பிறந்தது. இன்னும் சொல்லப் போனால் ரொம்ப நேரமா நின்று கொண்டே பேசிக் கொண்டு இருக்கிறோம். என்னை நம்பி என் வாகனத்தில் உட்கார்ந்து கூட இதே சண்டையைத் தொடர்ந்து போடலாம்'' என்று காருக்குள் அழைக்க அவள் வேகமாக தலை அசைத்து மறுத்தாள்.

''தேவை இல்லை. எங்க அம்மாவிடம் எதுக்குப் பொய் சொல்லி என்னை இங்கே வரச் சொன்னீங்க என்று சொல்லுங்க. நான் கிளம்ப வேண்டும்.''

''தமிழ் பாரம்பரியம் பற்றி வாய் கிழியப் பேசும் செல்வி திரிபுரசுந்தரி பொய்மையும் வாய்மையிடத்து புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின், என்ற வள்ளுவர் வாக்கினை கேட்டதில்லையா? இல்லை கேட்டது மறந்து விட்டதா?'' என்றவனை முறைத்தாள்.

''நான் வாகனம் ஓட்டியதில் எதோ ஒரு வண்டிக்கு, சேதாரம் என்று பொய் சொன்னதால் விளைந்த அந்த புரை தீர்ந்த நன்மை என்னவோ? அந்த மிகப் பெரிய நன்மை யாருக்கு என்று முதலில் நான் தெரிந்து கொள்ளலாமா?''

''அந்த மிகப் பெரிய நன்மை உனக்கே உனக்கு தான்...''

''என்ன உளறல் இது? எனக்கு என்ன நன்மை? வெயிலில் நீண்ட நேரம் நின்றதில், மறை கழன்று விட்டதோ?'' என்று கடைசி வார்த்தைகளை வெளிப்படையாகச் சொல்லாமல் ஜாடை செய்து காண்பிக்க அவன் புன்னகை செய்தான்.

''நீ ரொம்ப புத்திசாலி மாணவி என்று உங்க அப்பா சொன்னதா என் அம்மாவும் தங்கையும் ரொம்பப் பெருமை அடித்துக் கொண்டாங்க. ஆனால் லாஜிகல் ரீசனிங் என்பதே இல்லாமல் வெறும் புத்தகத்தைப் படித்து பாடங்களை அப்படியே ஒப்பித்து அதிக மதிப் பெண் வாங்கும் ஆள் என்பது இப்போது தானே தெரியுது...''

''இந்த வெட்டிப் பேச்சு வேண்டாம். என் புத்திசாலித் தனத்தை உங்களிடம் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஆனால் நீங்க பொய் சொல்லி என்னை இங்கே வரவழைத்ததால் எனக்கு என்ன நன்மை என்று விளக்கம் சொல்லும் அவசியம் உங்களுக்கு இருக்கு...''

''அது சரி, உன்னுடன் தனியாகப் பேச வேண்டும் என்று நான் சொன்னதை, 'நான் தனியாக பேச வேண் டும்' என்று புரிந்து கொண்ட அதிபுத்திசாலி அல்லவா நீ? சின்ன பெண்ணிடம் இதற்கு மேல் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?'' என்று அவன் அலட்சியமாகச் சொல்ல அவளுக்கு சுறுசுறுவென்று கோபம் ஏறியது.

''நான் ஒன்றும் சின்ன பெண் இல்லை. ஐ.பி.எஸ். ஆபீசரா இருக்கும் உங்களுக்கு, சட்டம் தெரியாதா? குழந்தை தொழிலாளர் தடுப்புச் சட்டமும் கட்டாயக் கல்விச் சட்டமும், குழந்தை என்பதற்கு நிர்ணயித்துள்ள வயது வரம்பு பதினான்கு. இந்தியன் எவிடென்ஸ் ஆக்ட் படி, சாட்சி சொல்ல குழந்தை பருவத்தை தாண்டியவர் என்ற தகுதி நிர்ணயித்துள்ள வயது பதினாறு. இந்திய திருமண சட்டத்தின்படி, பெண் முதிர்ச்சி அடைந்து திருமணத்திற்கு தகுதியானவள் என்பதை நிர்ணயம் பண்ண வரையறை செய்துள்ள வயது பதினெட்டு. எனக்கு இருபது முடிந்து விட்டது'' என்று கோபத்துடன் வரிசையாக அடுக்க அவன் வியப்புடன் பார்த்தான்.



''இந்த மாதிரி பதிலுக்கு பதில் என்று வார்த்தைக்கு வார்த்தை திருப்பிக் கொடுப்பதும் கூட சிறு பிள்ளைத் தனமானது தான். அதை இனியும் தொடர்ந்து செய்ய எனக்கு விருப்பம் இல்லை. நீ இரண்டு தடவை சொன்ன, 'உங்களை சந்திக்க எனக்கு இஷ்டம் இல்லை' என்ற ஒற்றை வாக்கியத்தில் இருந்து, உனக்கு இந்தத் திரு மணத்தில் இஷ்டம் இல்லை என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது சனியன்று பேசியதும் நீ இல்லை என்று உன் வாயால் ஒப்புக் கொண்டதில் இருந்து அது ஊர்ஜிதம் ஆகிறது. என் வேலை இன்னும் சுலபம். நான் உன்னைப் பார்க்க வந்த நோக்கம் மிக எளிதில் நிறைவேறிவிடும்...'' என்று நிதானமாகச் சொல்லி புன்னகை செய்ய, அவள் விழித்தாள்.

அவன் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லியதன் அர்த்தம் புரிந்தாலும் புரியாதது போலவே தோன்றியது. தனக்கு இந்த திருமணத்தில் இஷ்டம் இல்லை என்று அவன் சொல்வது ஏன் கிரேக்க மொழி போலத் தோன்ற வேண்டும் என்பதை யோசிக்கும் மன நிலையில் அவள் இல்லை.

''நீங்க... என்ன விஷயமா என்னைப் பார்க்க வந் தீங்க...?'' என்று தடுமாற்றத்துடன் கேட்க, அவன் பதில் சொல்லாமல் காரை நோக்கி நடந்து அதில் ஏறி அமர்ந் தான்.

நிதானமாக காரைக் கிளப்பியவன் அவள் அருகே கொண்டு வந்து நிறுத்தி, கண்ணாடியை இறக்கி, அவ ளின் கண்களைப் பார்த்து புன்னகை செய்து, ''எனக்கும் இந்த திருமணத்தில் இஷ்டம் இல்லை என்று சொல்லிப் போக வந்தேன். சொல்லி விட்டேன். கிளம்புகிறேன்

பை..." என்று சொல்லி விட்டு காரை நகர்த்த அந்த கா
கண்ணில் இருந்து மறைந்த பிறகும் வெகு நேரம். அ
சென்ற திசையையே பார்த்தபடி நின்று இருந்தாள்.

# 7



சென்னையில் இருந்து இவ்வளவு தூரம் பயணித்து
வந்து, தன்னை பொய் சொல்லி இங்கே கட்டாயப்படுத்தி
வரவழைத்த ஷ்யாம், அவளைத் திருமணம் செய்து
கொள்ள விருப்பம் இல்லை என்று சொல்லக்கூடு
என்பதை ஒரு சதவிகிதம் கூட எதிர்பார்த்து இராத சுந்த
திகைத்து சிலையாக நின்றது சில கணங்களோ? சில
நிமிடங்களோ? அவள் அறியாள்!

பின்புறம் வந்த வாகனம் ஒன்று ஹாரன் அடித்து, ஒ
எழுப்பிய பின்பே, திரும்பி பார்த்தவள் அவசரமா
பாதையில் இருந்து நகர்ந்ததோடு, சுய நினைவுக்கு
வந்தாள்.

வந்தான்! சொன்னான்! சென்றான்!

அவ்வளவு தானா? நிஜமாகவே கிளம்பி விட்டானா
மனதிற்குள் சின்ன ஏமாற்றம் பரவியது. என்னவென்றே
புரியாத சின்னக் கலக்கத்துடன் தன் வண்டியை எடுத்
திரிபுரசுந்தரியின் மூளைக்குள் கேள்விகள் படை எடுத்தன

எனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டம் இல்லை
என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு கிளம்பி வி
டான். திருமணத்தை நிறுத்துவது என்பது அவ்வள



எளிதான காரியமா? இதென்ன மந்திரத்தில் மாங்காய் வரவைக்கும் சமாச்சாரமா? கல்யாணத்தை நிறுத்துவதைப் பற்றி ஒன்றுமே பேசாமல், கிளம்பி விட்டால் காரியம் எப்படி நடக்கும்?

படித்து முடித்து, எட்டு வருஷம் மிக உயர்ந்த பதவியில் இருக்கும், ஒரு ஆண் பிள்ளையால் செய்ய முடியாததை -இன்னமும் படிப்பை முடிக்காத கிராமப் புறத்தில் பிறந்து, கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட பெண்ணான தான் செய்ய வேண்டுமா?

இதை ஏன் அவன் தன் பெற்றோர்களிடம் சொல்லவில்லை? நான் மட்டும் அவன் சொல்வதைக் கேட்பேன் என்று எப்படி எதிர்பார்த்தான்? அவனுக்குத் திருமணம் பிடிக்கலையா? அல்லது தன்னைப் பிடிக்கலையா?

இந்தக் கேள்வி மனதில் தோன்றியதும் உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்பு ஓடியது. இதற்கான பதிலை உடனே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது.

அவன் இப்போது எங்கே இருப்பான்? அதிக தூரம் போய் இருக்க மாட்டான். இன்னும் நகர எல்லையைக் கூட தாண்டி இருக்க முடியாது. அவனிடம் இப்போது பேசினால் என்ன என்ற எண்ணம் தோன்றி, வலுப்பட்டது.

கைகள் ஆக்சிலரேட்டரை முறுக்குவதை தானாக நிறுத்த, கண்கள் அருகே தொலைபேசி நிலையத்தைத் தேடியது. அருகேயே இருந்த தொலைபேசி நிலையத்தைப் பார்த்து, வண்டியை ஓரம் கட்டி நிறுத்தினாள். அவசரமாக, உள்ளே நுழைந்து, அம்மா கிளம்பும் போது கையில் திணித்த காகிதத்தில் இருந்த அவனின்

அலைபேசி எண்ணை அழுத்த, மூன்றாவது ரிங்கில் போன் எடுக்கப்பட்டது.

''திரிபு...?'' என்ற அவனின் குரலில் கேட்டதும் அவளுக்கு மூச்சே ஒரு வினாடி நின்றது.

பொதுத் தொலைபேசியில் இருந்து பேசிய போதும் எப்படிக் கண்டு பிடித்தான்? தன் குரலை வைத்துக் கண்டு பிடித்தான் என்று சொல்வதற்கு வழி இல்லாமல் அவள் இன்னும் ஹலோ கூட சொல்லி இருக்கவில்லை. காவல் துறையில் உயர் பதவி வகிக்க தகுதியானவன் தான் என்ற எண்ணம் அந்த வினாடியில் அழுத்தமாகத் தோன் றியது.

''ஹாய்... ஆமா...'' என்று மட்டும் சொல்ல, ஷ்யாமின் வியப்பு மேலும் கூடி, உள்ளுக்குள் சின்ன இதமும் பரவியது.

''பார்த்து ரெண்டு மணி நேரம் கழித்து இப்ப தான் ஹாய் சொல்கிறாய்?'' என்று ஷ்யாம் நக்கலாகக் கேட்க நினைத்தாலும் வார்த்தைகளில் இருந்த கிண்டல், தொனியில் வரவில்லை.

''எப்படி நான் தான் என்று கண்டு பிடித்தீங்க?'' என்ற வளின் குரல் மென்மையாக இருந்தது அவளுக்கே பிடிக்க வில்லை.

''இந்த ஊரில் எனக்கு வேறு யாரையும் தெரியாது. இது உங்க வீட்டு நம்பர் இல்லை. லேண்ட் லைனில் இருந்து யார் பேசப் போறா?''

''என் உங்க ப்ரெண்ட் எஸ்.பி. பேச மாட்டாரா?'' என்று மடக்கும் போதே அவளின் பாதி நிமிர்வு வந்துவிட்டது.

''பேசலாம். ஆனால் அலுவலர்கள் பொதுவா மொபைலில் தான் பேசுவோம். அதை தெரிந்து கொள்ள தான் இப்போ எனக்கு போன் பண்ணினாயா?'' என்றவன் குரலில் கேலி இருந்தது.



''இல்லை... வேறே விஷயம் உங்களிடம் பேசணும்...'' என்று அவசரமாக சொன்னவளால் தொடர முடியவில்லை.

''பேசு...''

''போனில் இல்லை. நேரில்...'' என்று சொல்லும் போதே குரல் உள்ளுக்குள் சென்றது. அவன் வலிய வந்து பேச முயன்றபோது விரட்டி அடித்து விட்டு, தானே மீண் டும் அழைப்பது ஒரு மாதிரி இருந்தது. அவன் இப்போது வரமாட்டேன் என்று சொன்னால் என்ன செய்ய முடியும்? ஆனால் அவன் அப்படி எதுவும் சொல்லவில்லை.

''இப்போ எங்கே இருக்கிறாய்?'' என்று அமைதியாகக் கேட்டதும், அவளின் இயல்பான துடுக்குத் தனம் தலை தூக்கியது.

''நான் சொல்லா விட்டால் உங்களால் உடனே கண்டு பிடிக்க முடியுமா?'' என்று கேலியாக கேட்க அவன் சிரித் தான்.

''சவாலா...? நான் ரெடி. ஐந்து நிமிடம் போதும்...'' என்று நம்பிக்கையோடு சொல்ல அவள் சிரித்தாள்.

''ஓகே ஓகே...! உங்களால் முடியும். வேங்கடாசலம் சாலையில் உள்ள பெட்ரோல் பங்கின் அருகில் இருக்கும் டெலிபோன் பூத்தில் இருந்து பேசுகிறேன்...''

''இப்பதான் அந்த சாலையை தாண்டி வந்தேன் என்று நினைக்கிறேன். அஞ்சு நிமிஷத்தில் வருகிறேன்...'' என்று சொல்லிவிட்டு போனை வைக்க அவளும் பணத்தை செலுத்தி விட்டு வெளியே வந்து அவனின் வாகனத் தின் வருகைக்கு காத்திருந்தபோது, அவளுக்கு லேசான படபடப்பு இருந்தது.

அவளை தூரத்திலேயே பார்த்து விட்டவன் அருகே வந்து காரை நிறுத்த, அவள் புன்னகையோடு அவன் புற வந்து, "இங்கே பக்கத்தில் மியூசிகல் காலேஜ் இருக்கு அங்கே கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசலாமா?" என்று சொன்னதும், வந்த சிரிப்பை அடக்கினான்.

"ஏன் அங்கே ஏதாவது புளிய மரம் இருக்கா?"

"ப்ச்! எங்க ஊருக்கு முதல் முறை வந்து இருக்கீங்க எனக்கு விருந்தோம்பல் தெரியலை என்று வேறு சொ லிட்டீங்க. அதான், அந்தக் கருத்தை கொஞ்சம் மாற் அமைக்கலாம் என்று நினைத்தேன். நீங்க அவசரம கிளம்பணுமா?" என்று சமாளித்தவளின் பேச்சு அ னுக்குச் சிரிப்பை அதிகரிக்கவே செய்தது.

"எனக்கு அவசரம் ஒன்றும் இல்லை. நீதான் காலி வெந்நீரை கொட்டிக் கொண்டு கிளம்ப வேண்டும் என் சொன்னாய். என்ன திடீர் என்று என்னிடம் தனியாக பேச வேண்டும் என்று ஞானோதயம்?"

"ரெண்டு பேருக்கும் திருமணத்தில் இஷ்டம் இல்லை என்று தெரிந்த பின் ஏன் தனித்தனியாகச் செயல்ப வேண்டும்? எது செய்வதாக இருந்தாலும் கலந்து பே செய்யலாமே என்று தான்..." என்று அவள் இழுக்க அ னுக்கு தான் நினைத்ததற்கு செயல் வடிவம் கொடுக்க போகிறோம் என்று சந்தோஷம் வரவில்லை. மாற ஏமாற்றம் தோன்றியது.

மூன்றே நிமிடங்களில் கல்லூரியை அடைந்து ஓரம வண்டியை நிறுத்தியவர்கள், கல்லூரியின் பக்க வாட் இருந்த செயற்கை நீரூற்றினை சுற்றிப் போடப்ப இருந்த சிமெண்ட் இருக்கையில் அமர்ந்தார்கள்.



இருவருக்குமே பேச நிறைய விஷயம் இருப்பதாகத் தோன்றினாலும் அதை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாததால் அமைதியாகவே சுற்றுப்புறத்தை அலசியபடி சில வினாடிகள் அமர்ந்து இருந்தார்கள்.

காலையில் சென்னையில் இருந்து ஷ்யாம் கிளம்பிய போது இருந்த மன நிலைக்கும் இப்போதைய மன நிலைக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. கல்யாணம் வேண்டாம் என்று சொல்லப் போகிறாள் என்று தெரிந்த பிறகும், அவள் அருகே இப்படி அமர்ந்து பேசுவதை மனம் ஆவலாக எதிர்பார்ப்பது அவனுக்கே ஆச்சரியம் தந்தது.

"திருவையாறு என்றாலே தியாகராஜர் ஆராதனை தானே நினைவுக்கு வரும்? உனக்கும் இசைக்கும் எவ்வளவு தூரம்?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"பிடிக்குதோ பிடிக்கலையோ, இங்கே நிறைய இசை தொடர்பான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருப்பதால், கேள்வி ஞானம் உண்டு. கொஞ்சம் பாடுவேன். ஏன் நீங்க சபா நடத்துறீங்களா? என்னை வச்சு கச்சேரி நடத்தப் போறீங்களா?" என்று கேட்க, அவன் தலையை பின்னுக்குத் தள்ளி வாய் விட்டுச் சிரித்தது அவளின் மனதைக் கவர்ந்தது. இவ்வளவு நேரம் பதிலுக்கு பதில் வாக்குவாதம் செய்த போது இருந்ததைவிட இந்த மாதிரி சிரித்துப் பேசும்போது நன்றாக இருக்கிறான் என்ற எண்ணம் தோன்றியது.

"நீ என் தொழிலையே மாற்றி விடுவாய் போல? எனக்கு அதுக்கு எல்லாம் நேரம் இல்லை..." என்று சொல்லும் போதே அலைபேசியில் குறுஞ்செய்தி வந்த ஒலி கேட்க, அவன் எடுத்துப் பார்த்தான். ஹேமந்த், மதிய

உணவுக்கு வருகிறாயா என்று தகவல் அனுப்பி இருந் தான். மறுப்பான பதிலை அனுப்பி விட்டு, புன்னகை யோடு அவளிடம் திரும்பினான்.

''என்ன அப்படி ஒரு சிரிப்பு?''

''ஹேமந்த், எப்ப சாப்பிட வருகிறாய் என்று கேட் கிறான்'' என்று அந்த புன்னகை மேலும் விரிய அவன் பதில் சொன்னதும், அவள் முகம் லேசாகச் சிவந்தது.

''வரலை என்று சொல்லிவிட்டேன்...'' என்று அவளை உணர்ந்தது போல சொல்ல அவள் மேலும் முகம் சுருங் கியது.

''ஹேமந்த் மெசேஜ் பார்த்த பிறகு தான் இன்னும் சாப் பிடவில்லை என்ற நினைவே வருது. நீயும் சாப்பிட்டு இருக்க மாட்டாய் அல்லவா? பக்கத்தில் நல்ல ஹோட்டல் இருந்தால், அங்கே போய் சாப்பிட்டுக் கொண்டே பேச லாமே?'' என்று அவன் ஆரம்பிக்க அவள் வேகமாகத் தலை அசைத்து மறுத்தாள்.

''பேசுவதற்காக ஹோட்டலுக்குப் போவது எல்லாம் இங்கே நடக்காது. உங்க எதிர்பார்ப்புக்கு தகுந்த அளவு ஹோட்டலும் இங்கே இருக்காது. நான் ரொம்ப நேரம் இங்கே உட்கார்ந்து பேச முடியாது. அம்மா பயப்படுவாங்க கிளம்பணும்...'' என்று அவசரமாகச் சொல்ல, அவன் தோளைக் குலுக்கி விட்டு எழுந்தான்.

''உன் இஷ்டம். இதோ வருகிறேன்... என்று எழுந்தவன் காரில் இருந்து ஒரு பிஸ்கட் பாக்கெட், சற்று முன்பு நீட்டிய மாம்பழச் சாறு பாட்டில், இரண்டு பேப்பர் கப் ஆகியவற்றுடன் திரும்பி வர, அவள் நெற்றியில் தட்டிக் கொண்டு கைப்பையில் இருந்து டிபன் பாக்சை எடுத்தாள்.

''கையில் சாப்பாடு வைத்து இருக்கிறாயா? அப்ப எனக்காகப் பார்க்க வேண்டாம். நீ சாப்பிடு. நான் இதை



வைத்து மேனேஜ் பண்ணி கொள்வேன். இது எனக்குப் பழக்கம் தான்...'' என்று ஷ்யாம் சொல்ல அவள் மறுத் தாள்.

''சாப்பாடு இல்லை. நான் காலேஜில் இருந்து வந்து சாப்பிடாமல் கிளம்பியதால் அம்மா பாயசம் கொடுத் தாங்க. ரெண்டு பேரும் சாப்பிடலாம்'' என்று சொல்லி அவன் கொண்டு வந்த கப்பில் பாதியை ஊற்றிக் கொடுக்க, அவன் புன்னகையோடு அதைப் பார்த்தான். கல்யாணத்தை நிறுத்த ஆலோசனை செய்யும் கூட் டத்தை ஸ்வீட்டோடு கொண்டாடுகிறோம் என்ற எண் ணம் தோன்ற அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''பாயசம்...? என்ன விசேஷம் இன்று?''

''இன்று எனக்கு கடைசி எக்ஸாம் படிப்பை முடிக்கிறேன் என்பதால் ஸ்பெஷல் ஸ்வீட்...''

''கங்க்ராட்ஸ். இன்று விட்டு இருந்தால், உன்னை காலேஜில் பிடிக்க முடியாது என்று சொல்லு...''

''புதன் அன்று ப்ராஜெக்ட் வைவா இருக்கு...''

''ஓகே. கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டாய். மேலே என்ன செய்வதாக உத்தேசம்? படிப்பா? வேலையா?''

''சி.ஏ. படிக்க ஆசை இருக்கு. ஆனால் அதைவிட அவசரமா ஒரு வேலை கிடைத்தால் நன்றாக இருக்கும். சொந்த காலில் நின்று கொண்டே, மேலே படிக்க ஆசை. ப்ச்! நடக்குமா தெரியலை...''

''படிக்க ஆசைப்பட்டால் படிக்க வேண்டியது தானே? என்ன உதவி வேண்டும் என்றாலும் நான் பண்றேன். அப்புறம் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா?'' என்று

நிறுத்த அவள் நிமிர்ந்து பார்த்தாள். நீ படிக்க நான் உதவி செய்கிறேன் என்று சொன்னது அவள் மனதில் இனம் புரியாத ஒரு நிம்மதியை ஏற்படுத்தி இருந்தது.

''கேளுங்க...''

''நீ கல்யாணம் வேண்டாம் என்று சொன்னதற்கு மேலே படிக்க வேண்டும் என்ற ஆசை தான் காரணமா?'' என்று தயக்கத்துடன் கேட்க அவள், அவனுக்கு நேர் மாறாக, தயக்கமே இன்றி வேகமாக தலை அசைத்தாள்.

அவளின் அந்த ஆமோதிப்பு ஷ்யாம்சுந்தருக்குள் இனம் புரியாத சந்தோஷத்தை ஏற்படுத்த தன்னையும் அறியாமல், ''தேங்க்ஸ்...'' என்றான்.

''தேங்க்ஸ் எதற்கு?''

''பாயசத்திற்கு தான்...'' என்று அவசரமாக கையில் இருந்த டம்ளரைத் தூக்கிக் காட்ட அவள் தன் ஏமாற்றத்தை சமாளிக்க உங்களுக்கு மசால் வடை பிடிக்குமா? எனக்கு பிடிக்கும்' என்று பேச்சை மாற்றியபடி ஒரு வடையை எடுத்து நீட்டினாள்.

''பசி நேரத்தில் எல்லாமே பிடிக்கும் சுந்தரி. நீ சாப்பிடலையா?'' என்று கேட்டபடி வாங்கிக் கொண்டான்.

''வடை நல்லா க்ரிஸ்பியா இருக்கு. ஆறிய பிறகு கூட இந்த மொறுமொறுப்பு இருக்கே? நைஸ்...'' என்று பாராட்டு தெரிவித்தவன், ''உனக்கு சமைக்கத் தெரியுமா?'' என்று அடுத்து விசாரிக்க அவளுக்கு புரைக்கு ஏறியது.

''ஹேய் மெல்ல மெல்ல... தண்ணீர் காரில் இருக்கு எடுத்து வரட்டுமா? இல்லை அவசரத்துக்கு ஜூஸ் குடிக்



கிறாயா?'' என்று எழ அவள் சிரிப்புடன் வேண்டாம் என்று தலை அசைத்தாள்.

அடுத்த சில நிமிடங்கள் அவளின் இருமலைக் குறைப்பதிலும், ஜூஸை பகிர்ந்து கொள்வதிலும் கழிய அவளுக்கு சமையல் தெரியுமா என்ற கேள்விக்கு அவள் பதிலே சொல்லாமல் காற்றில் காணாமல் போனது.

''என்னிடம் ஏதோ பேசணும் என்று சொன்னாயே? சொல்லு...''

''அது... அது... என்னைக் கேட்டீங்க. நீங்க ஏன் கல்யாணம் வேண்டாம் என்பதற்கு ஒரு காரணமும் சொல்லவில்லையே?'' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு அவள் கடைசியாக கேள்வியைக் கேட்டு முடித்த பிறகும் பல வினாடிகள் அங்கே மௌனம் நிலவியது.

சென்னையில் அம்மாவிடமும் அப்பாவிடமும், மூச்சுக்கு முன்னூறு தடவை, ''அந்த பொண்ணுக்கு சின்ன வயசு வேண்டாம்...'' என்று சொன்ன காரணம், இப்போது சொல்ல வாய் வரவில்லை. அரை மணி நேரம் முன்பு, நான் ஒன்றும் சின்ன பொண்ணு இல்லை...'' என்று வேகத்துடன் அடுக்கிய வாதம் மீண்டும் காதுகளில் ஒலித்தது.

''என்ன சத்தமே காணோம்? கல்யாணம் இப்போ வேண்டாம் என்று நினைக்கிறீங்களா இல்லை... இந்த பொண்ணு வேண்டாம்... என்று...''

''ச்சே ச்சே! அப்படி எதுவும் இல்லை...'' என்ற பதில் அவசரமாக ஷ்யாம்சுந்தரின் வாயில் இருந்து வர, அவளின் முகம் மலர்ந்தது.

''இது... இதைத் தானே அறிந்து கொள்ள ஆசைப்பட்டாய் சுந்தரி? இப்போது திருப்தியா?'' என்று

அவளின் மனசாட்சி கேள்வி கேட்பது போலத் தோன்ற அவளின் புன்னகை மேலும் மேலும் விரிந்து பெரிய சிரிப்பானது. அவளின் அந்தச் சிரிப்பு சில வினாடிகளில் ஷ்யாம்சுந்தரையும் தொற்றிக் கொண்டது.



# 8

'ஷ்யாம் திருமணத்தை மறுப்பதற்கான காரணம் தன்னைப் பிடிக்காததனால் இல்லை' என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட பிறகு, சுந்தரியின் மனதில் இருந்த சுமை பெரிதும் விலக, அவளின் முகத்தில் புன்னகை தோன்றியது. அவளின் மனசாட்சி கேட்ட கேள்வியி னால், அந்த புன்னகை விரிந்து, நல்ல சிரிப்பாகவும் மலர்ந்தது, ஷ்யாமையும் தொற்றிக் கொண்டது.

''ரொம்ப சந்தோஷமா சிரிப்பது மாதிரி இருக்கு? ஏதாவது ஸ்பெஷல் நியூஸா சுந்தரி?'' என்று சிரிப்பின் ஊடே விசாரித்தான் ஷ்யாம்.

''ஸ்பெஷல் நியூஸ் எல்லாம் இல்லை...! எனக்கு ஹெல்ப் பண்ண உங்களை மாதிரி ஒரு நல்ல மன படைத்த மனிதர் கிடைப்பது சந்தோஷப் படும் விஷய தானே?

உங்க கல்யாணம் பற்றிய மறுப்பை உங்க பெற்றோ களிடம் சொல்லவில்லையா? ஏன் இங்கே என்னை தேடி வந்துட்டீங்க?'' என்று சிரிப்பை அடக்க முயன் வெற்றி பெற்றவள் விசாரித்தாள்.



''சொன்னேன். ப்ச்! பயன் இல்லை. உங்க அப்பாவுக்கு எங்க அப்பா ரொம்ப நாள் ப்ரெண்ட் போல. ஏதோ வாக்கு கொடுத்து விட்டார் என்று அம்மா வாயைத் திறக்க முடியாது என்று சொல்லிட்டாங்க. நீ எப்படி?''

''இங்கேயும் அதே கதை தான். எனக்கு வீட்டில் ரொம்ப எதிர்த்துப் பேசியும் பழக்கம் இல்லை. நடுத்தர பொருளாதார வசதி இருக்கும் குடும்பத்தில், கல்யாண விஷயத்தில் பெண் எதிர்த்துப் பேசுவது சாத்தியமே இல்லை சார்...''

''வாட்? சாரா? இதென்ன புது அழைப்பு? நல்லாவே இல்லை...'' என்று அவசரமாக ஷ்யாம் சொல்ல, அவள் தோளைக் குலுக்கினாள்.

''வேறென்ன சொல்வது? எனக்குத் தெரியலையே? நீங்களே சொல்லுங்க...'' என்று அவனையே கேட்க, ''பேர் சொல்ல வேண்டியது தானே?'' என்று உடனே திருப்பிச் சொல்ல, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''இல்லை சார், ஏற்கனவே உங்களை இதுவரை பேசி யதே ரொம்ப ஜாஸ்தி என் இயல்புக்கு மாறானது. எங்க அம்மா மட்டும் கேட்டு இருந்தால், என்னை உண்டு இல்லை என்று ஆக்கி இருப்பாங்க. பேர் சொல்வது எல் லாம் சாத்தியமே இல்லை. பரவாயில்லை, உங்களுக்கு சார் என்று சொல்வது பிடிக்கவில்லை என்றால், சும்மா வாங்க போங்க என்றே பேசுகிறேன். அதை விடுங்க. நாம் முக்கியமான விஷயம் பேசலாம். நமக்கு நடக்கப் போகும் கல்யாணத்தை எப்படி நிறுத்தப் போகிறோம்?'' என்று சுந்தரி கேட்க ஒரு பெருமூச்சு ஷ்யாமிடம் இருந்து வெளியேறியது.

''எங்க அம்மா இனி, இந்தக் கல்யாணத்தை நிறுத்த நான் என்ன சொன்னாலும், அதைக் காதிலேயே போட்டுக்க

மாட்டாங்க. அதனால் இந்த பக்கம் என்ன செய்யணும் என்று சொல். நான் செய்கிறேன்...''

''எங்க அம்மா அப்பா சொல் மீற மாட்டாங்க. எங்க அப்பா ஏதோ ஒரு கட்டாயத்தினால் தான், இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டு இருக்க வேண்டும். அது என்ன என்று யாருக்கும் வீட்டில் தெரியலை. இப் போதைக்கு கல்யாணம் நிற்க வேண்டும் என்றால்...'' என்று நிறுத்தினாள்.

''என்ன செய்யணும் சொல்லு...''

''அது... அது... நீங்க தப்பா எடுத்துக் கொள்ளவில்லை என்றால்...'' என்று மேலும் தயங்க, 'சும்மா சொல்லு...' என்று ஊக்கினான்.

''நீங்க... உங்க கேரக்டர் சரி இல்லை என்று ஏதாவது தகவல் வந்தால் எங்க அம்மா கொஞ்சம் யோசிப்பாங்க. அப்பாவிடம் பேசுவாங்க. உங்களுக்கு சம்மதம் என்றால் செய்யலாம். நான் யோசனையா தான் சொல்லறேன். முடிவு உங்களுடையது தான்...'' என்று அவசரமாகச் சொல்லி முடித்தாள் சுந்தரி.

''ம்ம்ம்... நீ நினைத்த பலன் கிடைக்கும் என்றால் செய்யலாம். லெட்டர் நீயே எழுதி அனுப்பி விடுவாயா?'' என்று ஆரம்பத்தில் லேசாக வார்த்தைகள் சிக்கினாலும் வாக்கியம் முடிவடையும் போது சாதாரணமாகவே சொல்லி முடித்தான்.

''உங்களைப் பற்றித் தப்பா சொல்ல எனக்கு மனம் வரலை. அதனால் நீங்களே தயார் பண்ணிடுங்க. அத்தோடு, அது சென்னையில் இருந்து வந்தால் தானே பொருத்தமா இருக்கும்'' என்று அவள் வலியுறுத்த

''என்னை நானே டேமேஜ் பண்ணி கொள்ளணுமாக் கும்? ரொம்ப நல்ல வேலைதான்'' என்று சிரித்தான்.



''சாரி...'' என்று மீண்டும் வருத்தத்துடன் சொல்ல, அவன் 'பரவாயில்லை விடு' என்று லேசாக தலை அசைத்து ஜாடை செய்தான்.

''நீ இதை சொன்ன பிறகு எனக்குக் கூட வேறே ஒரு ஐடியா தோன்றியது. எங்க அம்மாவுக்கு என் ஆட்சேபணை தான் பொருட்டில்லையே தவிர உனக்கு ஏதாவது பிரச்னை என்றால், அதை ஒருவேளை பரிசீலனை செய்யக் கூடும். உனக்கு வேறு யாரையாவது பிடித்து இருக்கு. அதனால், இந்த திருமணத்தில் இஷ்டம் இல்லை என்று தகவல் தெரிந்தால், அவங்க யோசிப்பாங்க...'' என்று சொல்லி ஒரு இடைவெளி கொடுக்க, அவளின் முகத்தில் யோசனை வந்தது.

''அந்த மாதிரி கடிதம் எழுதுவதில், உனக்கு சம்மதம் என்றால் நீயே சொன்ன மாதிரி இந்த கடிதம் நீயே இங்கே இருந்து போஸ்ட் பண்ணி விடு. இரண்டில் ஒன்று வொர்க் அவுட் ஆகக் கூடும்'' என்று தன் பங்குக்குச் சொல்ல அவள் தயக்கத்துடன் தலை அசைத்தாள்.

''உனக்கு சம்மதம் இல்லை என்றால் விட்டு விடு...''

''இல்லை. எனக்காகத் தானே சொல்றீங்க பரவாயில்லை. நானே நாளைக்கு ரெடி பண்ணிட்டு, கல்லூரிக்குப் போகும்போது போஸ்ட் பண்ணி விடுகிறேன்...''

''ஓகே, குட் அப்புறம் வேறென்ன விஷயம்? இன்னும் ஏதாவது கேட்க வேண்டுமா?'' என்று விசாரிக்க அவ ளுக்கு அவன் பேச்சை முடிக்கப் பார்க்கிறான் என்பது புரிந்தது. மறுப்பாக தலையை மட்டும் அசைத்தாள்.

''நான் திரும்ப உன்னிடம் பேசுவது என்றால் எப்படி? வீட்டுக்கு போன் பண்ணலாமா? வேறு யாராவது

எடுத்தால் என்ன சொல்ல வேண்டும்?'' என்று மேலும் விசாரிக்க அவள் விழித்தாள்.

''போனிலா...? என்ன பேசுவீங்க? எப்போ பேசுவீங்க?''

''ஏன் பேசக்கூடாதா? ஏதாவது தகவல் சொல்லணும் என்றால் என்ன செய்வது?''

''வீட்டுக்கே பேசுங்க...''

''ஏற்கனவே உங்க பாட்டியைப் பேச வைத்த மாதிரி இன்னும் ஏதாவது குழப்பம் பண்ணி என்னை காமெடி பீஸ் ஆக்கினால் நான் என்ன பண்ணுவது?''

''இல்லை. சாரி அப்படி எல்லாம் இனிமேல் நான் செய்ய மாட்டேன்...''

''நீ செய்ய மாட்டாய். ஒரு வேளை உங்க வீட்டில் இருக்கும் உன் தங்கை செய்தால்...''

''ப்ச்! நான் என்ன பண்ணனும்? நீங்களே சொல்லுங்க...''

''இனிமேல் நான் போன் பண்ணும்போது நீயே எடுத்தால், இன்னிக்கு பேசின மாதிரி ஒரு சின்ன அமைதி. அப்புறம் 'ஹாய்... நான் தான்...' என்று சொல்லு. அது போதும்'' என்று கேலியாக சொல்ல சிரிப்புடன் தலை அசைத்தாலும், கன்னம் சூடானதையும் லேசாக சிவந்ததையும் அவன் ரசனையான பார்வையில் இருந்து அவளால் மறைக்க முடியவில்லை.

''ஓகே... ஜாக்கிரதை! வீட்டுக்கு நீ போய் விடுவாய் அல்லவா? அப்ப நான் கிளம்பட்டுமா?'' என்று எழுந்தான்.

''மணி மூன்றரை ஆகப் போகுதே? வழியில் ஏதாவது சாப்பிட்டு விட்டுப் போங்க...'' என்று அவன் கார் வரை நடந்தவள், நினைவு படுத்த அவன் புன்னகை செய்தான்.



''தேங்க்ஸ். வழியில் நிறுத்தினால் இரவு போய் சேர நேரமாகும். நாளைக்கு ஆபீஸ் போகணுமே? உனக்கு இன்டர் சி.ஏ. கோச்சிங் சென்டர் விசாரித்துவிட்டு சொல்கிறேன். பை...'' என்று அவன் விடை பெற்றுக் கிளம்பிய பின்பும், ஐந்து நிமிடங்கள் அந்த இருக்கையில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட பின்னரே சுந்தரி அந்த இடத்தில் இருந்து கிளம்பினாள்.

இரவு நேரம் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டதால், வீடு திரும்ப பதினோரு மணியை நெருங்கிக் கொண்டு இருந்ததால், அம்மாவின் கேள்வி பார்வையையும் குறும்பு சிரிப்பையும் தவிர வேறு எதுவும் விசாரணை இன்றி தப்பித்துக் கொண்டான் ஷ்யாம்.

அடுத்த நாளும், அம்மா அப்பாவின் விசாரணையை தடுக்கும் நோக்கத்தில் அதிகாலை ஏழு மணிக்கே அலுவலகத்தில் வேலை இருப்பதாகச் சொல்லி வீட்டில் இருந்து கிளம்பியவன், தன்னைப் பற்றியே தவறாகச் சொல்லும் கடிதம் எழுத முனைந்த போதுதான். அது எவ்வளவு சிரமம் என்று புரிந்தது.

அட ச்சே! முன்னே பின்னே செத்து இருந்தால் தானே சுடுகாட்டைப் பற்றிய அனுபவம் இருக்கும்? அவளிடமே ஐடியா கேட்கலாம் என்று அவளின் வீட்டு எண்ணை அழுத்திய பின்பு தான், ஐயோ வேறு யாராவது எடுத்தால் என்ன செய்வது என்று யோசிக்கும் முன்பே, எதிர் முனையில் போன் எடுக்கப்பட்டு இருந்தது.

முதல் சில கணங்கள், சாப்பிட்டுக் கொண்டு இருந்த ராணி, அம்மாவின் அறிவுரையின் பேரில், மனதிற்குள் வீட்டினரை அர்ச்சனை செய்தபடி வந்து, போனை எடுத்து விட்டு, வாயில் இருந்த தோசையை முழுங்க எடுத்துக் கொண்ட அவகாசத்தில், அமைதி நிலவியது.

இங்கே ஷ்யாம், எதிர் முனையில் இருப்பது சுந்தரி என்ற தவறான ஊகத்துக்கு வந்து, அவளைச் சொல்ல சொன்ன, 'ஹாய்... நான்தான்...' என்ற வாசகத்தை அட்சரம் பிறழாமல் சொல்ல, ராணி வெகுண்டாள்.

''ஹலோ...! யாருங்க நீங்க... ஹாய் நான் தான்... என்றால்... என்ன அர்த்தம்? இங்கே என்ன சிசிடிவியில் உங்க முகமா தெரியுது? பேசுறது போனில...! இதுல வீடியோ சாட்டிங் பண்ற மாதிரி பந்தாவை பாரு?'' என்று சாப்பிடக் கூட விடாமல் அம்மா போனை எடுக்கத் துரத்திய கோபத்தைக் காட்ட, பதறிப் போன ஷ்யாம் அவசரமாக போனை வைத்துவிட்டு ஆசுவாசப் பெருமூச்சை வெளியிட்டான்.

மீண்டும் மீண்டும், சில நிமிடங்கள் இடைவெளியில், மூன்று முறை முயன்றும், ஒவ்வொரு முறையும் வீட்டில் இருந்த மற்ற மூவரும் எடுத்து ஹலோ சொல்ல, அவன் வெறுப்புடன், ஒவ்வொரு முறையும் போனை ஒரு வார்த்தை கூட பேசாமல் வைத்து விட்டான்.

'என்ன இது? இத்தனை தடவை கால் வருது? ஒருத்தரும் பேசவே மாட்டேன் என்கிறாங்க' என்று நான்கு பேரும் கூடிப் பேசும் போது, தன் அறைக்குள் சிறை இருந்து, தனக்கு இந்த திருமணத்தில் இஷ்டம் இல்லை என்பதை சொல்ல முயலும் கடிதத்தை எழுத முயன்று களைத்துப் போன சுந்தரி வெளியே வந்தாள்.



அம்மா, அப்பா தங்கை, பாட்டியின் பேச்சில் இருந்து வெகு சுலபமாகப் பேசியது ஷ்யாம் என்று ஊகிக்க முடிந்த சுந்தரியால் அதை வெளியே சொல்ல முடியவில்லை. ஹாலில் பொதுவாக இருக்கும் போனில் இருந்து எல்லோரும் நடமாடிக் கொண்டே இருக்கும் போது அதில் இருந்து பேசவும் முடியவில்லை.

ஒரு வழியாக பிற்பகலில், மற்றவர்கள் தூக்கத்திலும், ராணி கதை புத்தகத்திலும் ஆழ்ந்து இருக்கும் வேளையில் அவனின் மொபைலுக்கு முயற்சி செய்ய, அவன் எடுக்கவில்லை. முதல் ரிங்கிலேயே இணைப்பு துண்டிக்கப்பட்டது. அவன் மீட்டிங்கில் இருக்க வேண்டும் என்று உள்ளுணர்வு சொல்ல, முகம் வாடியது.

மீட்டிங் முடிந்து வந்த உடனே, ஷ்யாம் தஞ்சாவூர் எஸ்.பி. ஹேமந்துக்கு போன் பண்ணினான். ''ஹேமந்த் எனக்கு நீ ஒரு ஹெல்ப் பண்ணனுமே? அதுவும் உடனே... அர்ஜெண்டா...'' என்று அவசர கோரிக்கை வைத்தான்.

''சொல்லுடா.... என்ன பண்ணனும்?'' என்று சீரியஸாக அவன் கேட்க, ''ஒரு மொபைல் போன் வாங்கி, அதுல சிம் போட்டு, உடனே நான் சொல்லும் முகவரியில் கொடுக்கணும்...'' என்று தயக்கத்துடன் ஷ்யாம் சொல்ல அவன் கடுப்பானான்.

இவ்வளவு பெரிய வேலை என்னை செய்யச் சொன்னால், என்னால் எப்படி முடியும் என்ற அர்த்தத்தில், ''கித்னா படி காம் மே ஹெய்சா கருங்கி பாஸ்...?'' ஹிந்தியில் எரிச்சலோடு, கேட்க, ஷ்யாம் சிரித்தான்.

''உன்னால் முடியும் தம்பி, எனக்காக சிரமப்பட்டு என்றாலும் கட்டாயம் செய்து விடு ஹேமந்த். ப்ளீஸ்...''

என்று அவனும் அதே பாணியில் சொல்ல சேர்ந்து சிரித்தான்.

''அடப் பாவி, இதுக்கு ஏன்டா இத்தனை ப்ளீஸ் போடுகிறாய்? உன்னோட வுட் பீக்கு சர்ப்ரைஸ் கிப்ட் தானே? என்ன மாடல் சொல்லு. அரை மணி நேரத்துல அவங்க வீட்டுல கொடுத்துடலாம்.''

''வாங்குவது பெரிசில்லை. அது நான் கொடுத்தேன் என்பது அவளுக்கோ, அவங்க வீட்டுக்கோ தெரியாமல் கொடுக்கணும். அது தான் அங்கே சர்ப்ரைஸ்...'' என்று ஷ்யாம் சொல்ல அவன் விழித்தான்.

''ஆனால் ஏன்...?''

''ப்ச்! என்னை காரணம் எல்லாம் கேட்காதே. முடியுமா முடியாதா?''

''ஹேமந்த் டிக்ஷனரியில் முடியாது என்ற வார்த்தைக்கே இடம் இல்லை தெரிஞ்சுக்கோ...''

''குட். எப்படி அதைக் கொடுப்பாய்? சொல்லு?''

''ம்ம்ம். கல்லூரி மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு வாரம் கொண்டாடிய போது, பாதுகாப்புப் பற்றிய வாசகம் எழுத ஒரு போட்டி வைத்து இருந்தேன். அதுல ஜெயித்தவர்களுக்கு 5000 ரூபாய் மதிப்பிலான பரிசு என்று சொல்லி, ஒரு போனை கொடுத்து விடுகிறேன். ஐடியா ஓகேயா?''

''ம்ம்ம்... ஆனால் நான் ஸ்லோகன் எழுதி அனுப்பவே இல்லையே? எப்படி எனக்கு பரிசு வந்தது என்று அங்கே அவள் சொல்லி விட்டால்...?'' என்று ஷ்யாம் கேட்க,



''சென்னைக்கு நேரில் வந்து, உன் மூக்கை ஓங்கி ஒரு குத்து விட்டு உடைப்பேன். போனை வை. நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்லி முடித்தான் ஹேமந்த்.

அவன் சொன்ன மாதிரி, அடுத்த ஒரு மணி நேரத்தில், தன்னுடைய லெட்டர் பேடில், 'சாலை பாதுகாப்பு வார விழா கொண்டாட்டத்திற்கான விழிப்புணர்வு வாசகம் எழுதி அனுப்பியதில் வெற்றி பெற்றதற்காக ஐயாயிரம் ரூபாய் மதிப்பிலான பரிசு, உங்களுக்கு வழங்கப்படுகிறது' என்ற கடிதத்துடன் ஒரு மொபைலை கொண்டு வந்து காவல் துறை பணியாளர் கொடுத்து விட்டுச் சென்றார்.

''நானே உனக்கு மொபைல் போன் வாங்கிக் கொடுக்கணும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன் சுந்தரி. நீயே உன் திறமையில் வாங்கிக் கொண்டாயே? வாழ்த்துக்கள்'' என்று சந்தோஷத்துடன் கிருஷ்ணமூர்த்தி சொல்ல கமலம், சீனியர் திரிபுரசுந்தரிக்கும் பரிசு வந்து சேர்ந்த விதத்தில் சந்தேகம் எதுவும் வரவில்லை.

ஆனால், 'எனக்குத் தெரியாமல், இவள் எப்போது ஸ்லோகன் எழுதி அனுப்பினாள்? என்று ராணிக்கு வந்த சந்தேகத்தை அவளிடம் காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் தொடர்ந்து அவளை கண்காணிக்கத் தவறவில்லை.

போன் தன்னிடம் வந்து சேர்ந்த உடனேயே, அது ஷ்யாம் சொல்லி தான் வந்து சேர்ந்து இருக்கக் கூடும் என்பதை ஊகிக்க முடியாத அளவுக்கு முட்டாள் இல்லை என்பதால், அவனுக்கு போன் வந்து சேர்ந்த விபரத்தைக் குறுஞ்செய்தியில் சொல்ல, அடுத்த நிமிடமே அழைப்பு வந்தது.

வேகமாக சுற்றுப் புறத்தை ஆராய்ந்தவள், அருகி யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு போனை அழுத்தி, ''ஹாய்! நான் தான்...'' என்று ரகசி குரலில் சொல்லி முடிக்கும்போது எதிரில் இடுப்பில் கை வைத்து நின்று அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள் செல்வராணி.

# 9



காலையில் ஷ்யாம் தன்னிடம் பேச நான்கு முறை முயன்று தோற்ற பிறகு பிற்பகலில் தான் ஒரு முறை செய்த முயற்சியும் தோல்வியில் முடிந்ததால் மு வாட்டத்துடன் இருந்த சுந்தரி, ''அவன் ஹேமந்த் மூல அனுப்பி இருந்த அலைபேசியைக் கண்டதும் துள்ளி குதிக்காத குறை. அதில் இருந்தே ஷ்யாமுக்கு, அலை பேசி வந்து விட்ட தகவலையும் நன்றியையும் சொல்லி செய்தி அனுப்பிய போது சுற்றுப் புறம் நினைவி இல்லை.

ஆனால் அடுத்த சில வினாடிகளில் அவனிட இருந்து பதில் அழைப்பு வந்த உடனே தன்னைச் சுற் ஆராய்ந்தாள். அருகில் யாரும் இல்லை என்பதை உறு படுத்திக் கொண்டே பேச ஆரம்பித்தவளின் குர தழைந்து ரகசியமாக போனதை அவளே எதிர்பார்க் வில்லை.

''ஹாய் நான் தான்...'' என்று இரண்டு வார்த்தை சொல்லி முடிக்கும் போது கண் முன்னால் வந்து நின்



செல்வராணியைப் பார்த்து அவளுக்கு ஒரு கணம் மூச்சே நின்று விட்டது.

இவ்வளவு நேரம் இவள் எங்கே இருந்தாள் என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை. அதற்குள் ஷ்யாம் எதிர் முனையில் பேச அவசரப் பட்டான். ''ஹலோ... ஹலோ...!'' என்று இரண்டு முறை சொன்னவன் அவ ளிடம் இருந்து பதில் வராததற்கு ஒரு காரணம் இருக்கக் கூடும் என்பதை உணரவில்லை.

''சொல்லும் அறிவுரைகளை ஒழுங்காகப் பின் பற்ற மாட்டாயா சுந்தரி? போனை எடுத்ததும், முதலில் ஒரு மௌனம், அதன் பிறகு கோட் வேர்ட் என்று சொல்லி இருந்தேன். நீ அதை மாற்றிச் சொல்கிறாயே?'' என்ற வன் குரலில் உற்சாகம் பொங்கி வழிந்தது.

''நான் அப்புறம் பேசுகிறேன் சார்'' என்று அவசர மாகச் சொல்லி விட்டு இணைப்பைத் துண்டிக்க ஷ்யாம் மறுமுனையில் குழம்ப இங்கே எதிரே நின்ற ராணி தன் கேள்விக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தாள்.

''சாரா? போனில் யாரு?''

''தெரிஞ்சவங்க'' என்று முணுமுணுத்தவளுக்கு, 'அதை கேட்க நீ யார்?' என்று திருப்ப புத்திசாலித்தனம் இல்லை.

''போன் இப்போ தானே வந்தது? அதுக்குள்ளே சிம் கார்ட் எப்படிக் கிடைத்தது?''

''அதிலேயே இருந்தது. ஏன் கேட்கிறாய்?''

''பரிசாகக் கிடைக்கும் போன் சிம்மோடு வந்ததாக் கும்? யாரிடம் காது குத்துகிறாய்?'' என்று அவள் கையில் இருந்த போனை வாங்கிப் பார்த்தாள்.

இவள் யாரையும் அழைக்கவில்லை. அழைப்பு இந்த எண்ணுக்கு வந்து இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்த செல்வராணியின் விழிகள் விரிந்தது. இதை அவளுக்கு யாரோ பரிசாகத் தான் கொடுத்து இருக்கிறார்கள் என்ற சந்தேகம் இப்போது உறுதியாகி விட்டது. போன் கைக்கு வந்து சேர்ந்த அரை மணி நேரத்தில் இந்த எண்ணுக்கு இவளை யாரோ அழைக்கிறார்கள் என்றால் அவர் தான் இதை பரிசாகவும் கொடுத்து இருக்க வேண்டும்.

''உண்மையைச் சொல்லு இந்த போனை யார் கொடுத்தது?'' என்று அவளை ராணி உலுக்க, விழித்தாள் சுந்தரி.

''இப்ப நீ சொல்லப் போகிறாயா இல்லையா?'' என்று அதட்டியவள் தொடர்ந்த அவளின் மௌனத்தைப் பார்த்து, ''நீ சொல்லவில்லை என்றால், நானே இந்த நம்பருக்கு பேசி தெரிந்து கொள்கிறேன்'' என்று அந்த எண்ணை மீண்டும் அழுத்த முயல, அவள் அவசரமாக தடுத்து நிறுத்தினாள்.

''நானே சொல்கிறேன்... அது.. ஷ்யாம்சுந்தர்...'' என்று திக்கித் திணறி சொல்லி முடிக்க இப்போதும் செல்வ ராணியால் தன் காதில் விழுந்ததை நம்ப முடியவில்லை.

''ஹா! ஷ்யாமா? அவர் எதுக்கு உனக்கு போன் பரிசளிக்க வேண்டும்? அவர் எப்படி இங்கே இருக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர் மூலம் பரிசு கொடுக்க முடியும்? முதலில் அவருக்கு உன்னை எப்படித் தெரியும்? நீ என்னவோ இந்தக் கல்யாணமே வேண்டாம் என்ற மாதிரி நாலு நாளைக்கு முன்பு கதை சொல்லி அம்மா, அப்பா, பாட்டி என்று ஒவ்வொருத்தர் கிட்டயா கஜினி முகம்மது மாதிரி படை எடுத்தாய்? இப்ப என்ன



ஆச்சு?'' என்று ஆரம்ப கட்ட அதிர்ச்சி முடிந்த அடுத்த வினாடி கேள்விக் கணைகள் அடுத்தடுத்து பாய்ந்து வந்தன.

''நீ இப்படி ஒரே நேரத்தில் ஒன்பது கேள்வி கேட்டால் நான் எதற்கு பதில் சொல்லட்டும்? எனக்கு தலை சுத்துது'' என்று குழப்பத்துடன் சொன்ன சுந்தரிக்கு இவள் சீக்கிரம் பேச்சை முடிக்க மாட்டாளா என்று இருந்தது. அங்கே தான் அழைக்க அவன் காத்திருப்பான் என்ற எண்ணமும் தோன்றியது.

''ஒரே கேள்வி கேட்கிறேன். இந்த போனை ஷ்யாம் பரிசு கொடுத்தார் என்றால் அவருக்கு உன்னை எப்படித் தெரியும்? எங்கே பார்த்தாய்?''

''இது ஒரு கேள்வியாக்கும்? ரெண்டு கேள்வி...''

''நீ கேள்விக்கு பதில் சொல்லாமல் சுத்திச் சுத்தி வருவதைப் பார்த்தால் நீ ஏதோ திருட்டுத் தனம் பண்ணு கிறாய் என்பது கன்பார்ம்ட். முதலில் பதில் சொல்லு...''

''இனிமேல் எந்தக் கேள்வியும் கேட்க மாட்டாய் என்று உறுதி அளித்தால், இதுக்கு மட்டும் பதில் சொல்லி விடுகிறேன்'' என்று அவள் நிபந்தனை விதிக்க அவளை அசல் கிரகத்து வாசி மாதிரி பார்த்தாள் செல்வ ராணி. இந்த சுந்தரி புதுசு. இவளுக்கு இப்படி எல்லாம் பொடி வைத்துப் பேசவே தெரியாது.

''சரி சொல்லு...''

''ஷ்யாம் இந்த போனை, அவரோட ப்ரெண்ட் தஞ்சாவூர் எஸ்.பி.யா இருக்கும் ஹேமந்த் மூலம் கொடுத்து அனுப்பி இருக்கிறார். அவர் நேற்று காலேஜிற்கு என்னைப் பார்க்க வந்து இருந்தார். அதனால் தெரியும்...''

''ஹா! தஞ்சாவூர் எஸ்.பி. உன்னைப் பார்க்க காலே ஜிற்கு வந்தாரா?''

''ஹய்யோ எஸ்.பி. இல்லை ராணி. அவர்... ஷ்யாம் சுந்தர்...''

''நேற்றா? நேற்று நீ காலேஜில் இருந்து வரும் போது...''

''இனிமேல் கேள்வி கேட்க மாட்டேன் என்று ப்ராமிஸ் பண்ணிய பிறகு அதற்கு மேலே இரண்டு கேள்வி களுக்கும் பதில் சொல்லியாச்சு. இனிமேல் நீ கேட்கும் கேள்விக்கு எல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது''

''நீ இப்ப சொன்னதை நான் அம்மா அப்பாவிடம் சொல்வேன்...'' என்று மிரட்டலாக ராணி சொன்ன அதே சமயத்தில் மீண்டும் அழைப்பும் வர, அது ஷ்யாம் என்பதை அறிந்த உடனே சுந்தரிக்கு எங்கே இருந்து தைரியம் வந்ததோ?

''தாராளமா சொல்லிக்கோ. நான் எதுவும் தப்பு செய் யலை என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. இந்த விஷயம் அவங்களுக்குத் தெரிந்தால் கல்யாணம் ஆவதற்கு முன்பே மாப்பிள்ளை பொண்ணு மேலே இவ்வளவு பிரியம் வைத்து இருக்கிறார் என்று சந்தோஷப் படு வாங்க'' என்று சொல்லி விட்டு போனுடன் வெளி யேறிய சுந்தரியின் முகத்தில் லேசான கர்வம் இருக்க ராணி முகத்தில் யோசனை வந்தது.

செல்வராணியிடம் வேகமாகப் பேசி விட்டு வீட்டை விட்டு வெளியே வந்து, தூரத்தில் இருந்து பார்ப்பவர் களுக்கு அவள் குனிந்து எதோ வேலை செய்வது போலவே தோன்றும்படி மண்டியிட்டு, பக்க வாட்டில்



இருந்த சின்ன முற்றத்தில் காய வைத்து இருந்த மிளகாய் வற்றலை, அருகே இருந்த பாத்திரத்தில் ஒவ்வொன்றாக எண்ணி எண்ணி எடுத்துப் போட்டவாறே போனில் பேசினாள்.

''ஹலோ.. சார்.. சொல்லுங்க நான் தான்...'' என்று பேச ஆரம்பிக்க ஷ்யாம் உஷார் ஆனான்.

''நான் தான் என்றால்...?'' என்று ஷ்யாம் தயக்கத் துடன் விசாரிக்க சுந்தரியின் இரத்த அழுத்தம் எகிறி கோபம் வந்ததில் குரலும் சற்றே உயர்ந்து, அவள் பேசிய அத்தனை வார்த்தைகளும் ஒன்று விடாமல் ராணியின் காதுகளில் விழுந்தது.

''நான் திரிபுரசுந்தரி. உங்களுக்கு உங்க வீட்டில் பார்த்து இருக்கும் பொண்ணு. நேற்று ஆர்ட்ஸ் காலே ஜில் பார்த்தது போதாது என்று, மியூசிக் காலேஜிலும் சந்தித்து அரை மணி நேரம் உட்கார்ந்து, பாயசம், வடை சாப்பிட்டு விட்டு பேசிய திரிபு. நீங்க ஹேமந்த் சார் மூலமா கொடுத்து அனுப்பிய போனை வாங்கியதும் அதுல இருந்து மெசேஜ் அனுப்பிய சுந்தரி பேசுறேன். விளக்கம் போதுமா? இல்லை இன்னும் ஏதாவது சந்தேகம் இருக்கா?'' என்று கோபத்துடன் கேட்க ஷ்யாம் அவசரமாக அவளைச் சமாதானப்படுத்த முயன்றான்.

''எதிர் முனையில் யார் பேசுவது என்று தெரியாமல் நான் ஏதாவது சொல்லி, உனக்கு பிரச்னை ஆகி விடக் கூடாது இல்லையா? அதற்காக தான் விளக்கம் கேட் டேன். சாரி, ஏற்கனவே காலையில் உன் தங்கையிடம் நல்லா வாங்கிக் கட்டிக் கொண்டேன் தெரியுமா?'' என்று ஆதங்கத்துடன் விளக்கம் சொல்ல அவளுக்கும் உடனே மனம் இளகி விட்டது.

''ப்ச்! அவள் கொஞ்சம் துடுக்குதான். ஆனால் நல்லவள். அவள் ஏதாவது உங்களைத் தவறா பேசி இருந்தால் மனசில் வச்சிக்காதீங்க. மறந்துடுங்க. இப்பவும் உங்களிடம் பேச ஆரம்பிக்கும்போது அவள் வந்து விட்டாள். அதனால் தான் போன் கட் பண்ணும் மாதிரி ஆகி விட்டது சாரி சார்..''

''ஓ.கே. ஓகே. இந்த சாரியையும் சாரையும் விடவே மாட்டாயா? இப்ப மட்டும் எப்படி போனை எடுத்தாய்?''

''இப்ப வெளியே வந்துட்டேன். இருந்தாலும் சுருக்கமா சொல்லுங்க...''

''காலையில் இரண்டு மணி நேரம் நேற்று சொன்ன கடிதத்தை எழுத முயற்சி செய்தேன். சரியாக வரலை. அதான் உன்னிடம் பேச முயற்சி செய்தால் அதுவும் செட் ஆகலை. கட்டாயம் இந்த லெட்டர் எழுத வேண்டுமா என்பதை கேட்கத்தான் காலையில் இருந்து உன்னிடம் பேச முயற்சி செய்கிறேன்...''

''நானும் தான் எழுத முயற்சி பண்ணினேன். சரியாய் வரலை. அதுக்காக அப்படியே விட்டுட முடியுமா? மீண்டும் முயற்சி செய்வதில் என்ன தப்பு...? என்று வேகமாகச் சொல்ல, திருமணத்தை நிறுத்துவதில் இவளுக்கு ஏன் இவ்வளவு ஆர்வம் என்று ஒரு கணம் யோசித்து அடுத்த கணம் பெருமூச்சை வெளியேற்றி னான்.

''ஓகே! சரி...'' என்று அரை மனசாக சொன்னவனுக்கு பேச்சை தொடர இஷ்டம் இல்லை.

''அப்ப வச்சுடட்டுமா?'' என்று கேட்டவள் குனிந்து அமர்ந்து இருந்ததால், பின்னல் முன்னால் வந்து விழ,



அதை பின்னால் தூக்கிப் போட, மிளகாய் வற்றலை அள்ளிப் போட்டுக் கொண்டு இருந்தவளின் நுனி விரல் மூக்கின் அருகே பட, அடுத்த வினாடியே, அடுக்கடுக் காக தும்மல்கள் வந்து விழ, எதிர் முனையில் இருந்த ஷ்யாம் தவித்துப் போனான்.

ஒரு வினாடி முன்பு, அவளுடன் பேசப் பிடிக்காமல் போனை வைத்துவிட நினைத்த ஷ்யாம்சுந்தரின் மன நிலை, அவள் அடுத்தடுத்து போட்ட சில தும்மல்களில் மாறி விட்டது.

''சுந்தரி, என்ன ஆச்சு? ஏன் இப்படி திடீர் என்று தும்மல் போடுகிறாய்? ஆர் யூ ஓகே? பக்கத்தில் யாரும் இல்லையா? மிளகாய் நெடியா? சமையல் அறையில் இருக்கிறாயா? கையையும் முகத்தையும் கழுவிக் கொள் கிறாயா? உங்க வீட்டில் எல்லாரும் எங்கே போனாங்க...? திரிபு... ஏதாவது பேசேன்...'' என்றவனின் பதட்டம், அந்த தொலை தூரத்தை தாண்டி வந்து அவளின் நெஞ்சைத் தொட்டது.

''எல்லோரும் வீட்டுக்குள் இருக்காங்க. ஹச்சு...! அவங்களுக்குத் தெரிய வேண்டாமே என்று.. ஹச்! நான் காய வைத்த மிளகாய் வற்றலை... ஹச்! எடுத்துக் கொண்டே போனில் பேச ஹச்சு...! வெளியே வந்தேன். அந்த நெடி மூக்கில் ஏறி விட்டது. ஹச்...! இப்ப பரவாயில்லை... ஒன்றும் இல்லை... ஹச்...! அப்புறம் பேசுகிறேன்.. ஹச்சு...! ராணி வருகிறாள்.. பை ஹச்சு...'' என்று அடுக்கடுக்காக வந்த தும்மல்களுக்கு இடை யிலும், அவனை சமாதானப் படுத்த, மனமின்றி, 'டேக் கேர்...' என்று அக்கறையுடன் சொல்லி விட்டே போனை வைத்தான் ஷ்யாம்.

ஒருவர் மீது ஒருவர் மனம் நிறைய அன்பை வைத்து இருந்தாலும், அதை உணரவும், அடுத்தவரிடம் பகிர்ந்து கொள்ளவும் தெரியாத ஷ்யாம், சுந்தரி, இருவருமே ஒருவர் அடுத்தவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்று கிறேன் பேர்வழி என்று இரவு முழுவதும் கண் விழித்து இருபது காகிதங்களை வீணாக்கி, கிழித்துப் போட்டு இறுதியில், அவர்களுக்கு ஓரளவிற்கு திருப்தியாக வந்த 'அந்தக் கடிதத்தை' எழுதி முடித்தனர்.

அன்புள்ள திரு / திருமதி... என்று ஆரம்பித்து, ஷேம லாபங்களை முறையாக விசாரித்து, அவன் அனுப்புன முகவரி இல்லாமல் எழுதி இருந்தான்.

உங்க பெண்ணுக்கு பார்த்து இருக்கும் பையன் சரி இல்லை. அவன் இத்தனை நாள் திருமணம் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் உண்டு. எனக்கு வட இந்தியாவில் வேறு ஒரு இந்திக்கார பெண்ணுடன் தொடர்பு உண்டு. கல்யாணமும் ஆகி விட்டது. வீட்டின ஒத்துக் கொள்ளவில்லை என்பதால், இருவரும் தனித் தனியே வாழ்ந்து வந்தாலும் ஒருவரை ஒருவர் மறக்க வில்லை.

அதனால் இந்தக் கல்யாணத்தை நடத்துவதற்கு முன்னால் உங்க பெண்ணின் எதிர்காலம் பற்றி ஒரு முறைக்கு இரு முறை யோசித்துக் கொள்ளுங்க என்று ஷ்யாம் கடிதம் தயாரித்தான்.

அதை நூறு முறை படித்த பிறகும், அந்தக் கடிதத்தில் சில இடங்களில் எனக்கு, நான் என்றும், சில இடங்களில் அவனுக்கு, அவன் என்றும் எழுதி இருப்பது ஒன்றுக்கு ஒன்று முரண்படுகிற விஷயம் அவன் கண்ணிலும் கருத்திலும் படவே இல்லை.



சுந்தரி எழுதிய கடிதம், ''உங்க பையனுக்கு பார்த்து இருக்கும் பெண் இந்தத் திருமணத்திற்கு முழு மன சோடு சம்மதம் சொல்லவில்லை'' என்ற ரீதியில் ஆரம் பித்தது.

உங்க பையனின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண் டும் என்பதற்காக, இருபது வருடங்களாக பிறந்தது முதல், ''உனக்கு நான் எனக்கு நீ...'' என்று சொல்லிச் சொல்லி வளர்த்ததால், எங்களுக்கு இடையே இத்தனை நாள் பொத்தி வைத்த காதலை நாங்க மறந்து விட வேண்டுமா என்ற ரீதியில் தொடர்ந்தது.

கல்யாணத்தின் மகிமைக்கும், காதலின் மகத்துவத் திற்கும், இருக்கும் ஆறு வித்தியாசங்களை கோடிட்டுக் காட்டி, ஷ்யாம் அனுப்பிய கடிதம், சரியாக அடுத்த இரண்டாவது நாள், ராணி கையில் கிடைத்த அந்த நேரத்தில், ஷ்யாமின் வீட்டிலும், சுந்தரியின் கடிதம் சைலஜாவின் கையில் வந்து சேர்ந்தது.

தன் தோழி மூலம் உள்ளூரில், அஞ்சலில் சேர்க்கச் சொன்ன அந்தக் கடிதம், ஹாஸ்டலில் தங்கிப் படித்த அவள் கல்லூரி விடுமுறை ஆரம்பித்து விட்டதால் ஊருக்குக் கிளம்பும் அவசரத்தில் அதை மறந்து விட்டு, சென்னையில் திருவல்லிக்கேணி அஞ்சல் நிலையத்தில் சேர்த்து இருந்தாள்.

காலம் காலமாக அஞ்சல் முத்திரைகள் தெளிவில்லா மல் இருக்கும் என்று எழுதப்படாத சட்டத்தை உடைத்து எறிந்த அந்த அஞ்சல் முத்திரை. நான் திருவல்லிக் கேணியில் இருந்து வருகிறேன், என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்ன கடிதத்தை, பிரித்தாள் சைலஜா.

# 10

அனுப்புனர் முகவரி இல்லாமல் வந்த அந்த கடிதத்தை வாங்கிய செல்வராணி, வீட்டுக்குள் திரும்பி அடி எடுத்து வைத்த வினாடியில், சுந்தரி தன் அறையில் இருந்து மூச்சு வாங்க வாசலுக்கு ஓடி வந்ததைப் பார்த்து வியப்படைந்தாள்.

"என்ன சுந்தரி இப்படி ஓடி வருகிறாய்? என்ன விஷயம்?" என்று ஆரம்பிக்கும் போதே ராணியின் முகம் மாறியதை கவனித்த சுந்தரி உடனே சுதாரித்து பேச்சை மாற்ற முயன்றாள்.

''தபால் வந்த சத்தம் கேட்டதே! சி.ஏ. கோச்சிங் பற்றி விசாரிக்க ஒரு கடிதம் அனுப்பி இருந்தேன் அதற்கு பதிலோ என்று நினைத்து வாங்க வந்தேன். நீயே வாங்கி விட்டாயே? யாருக்கு கடிதம்?'' என்று சமாளிக்க முயன்ற படி அந்தக் கடிதம் ஷ்யாமிடம் இருந்து வந்ததா என்பதை உறுதி செய்து கொள்ள முயன்றாள் சுந்தரி.

''அப்படியா? இது கோச்சிங் பத்தி வந்த கடிதமும் இல்லை. உனக்கு வந்த வேறே கடிதமும் இல்லை'' என்று நிதானமாகச் சொன்ன ராணி அவளின் முகத்தில் இருந்த ஆர்வத்தின் காரணத்தை ஊகிக்க முயன்றாள்.

''எனக்கு இல்லை என்றால் யாருக்கு என்று சொல்ல மாட்டாயா?'' என்று கேட்டபடி அவள் கையில் இருந்த கடிதத்தைப் பிடுங்க முயற்சி செய்ய, அவளால் எடுக்க முடியாத அளவுக்கு அவள் அதை உயர்த்திப் பிடித்தாள்.



''யாருக்கு என்றால் உனக்கென்ன? இதில் என்ன உனக்கு இவ்வளவு ஆர்வம்?'' என்றவளின் குரலில் இப்போது சந்தேகம் கூடியது.

''வர வர இந்த வீட்டில் உன்னுடைய அராஜகம் ரொம்ப ஜாஸ்தியா ஆகிடுச்சு. உன்னைக் கேள்வி கேட்க ஆளே இல்லை என்று நினைத்துக் கொண்டாய் போல. என்னவோ பண்ணு...'' என்று எரிச்சலுடன் சொல்லி விட்டு தன் அறைக்குத் திரும்பியவளின் கவனம் முழுக்க, வெளியே தங்கை கையில் இருந்த கடிதத்திலேயே பதிந்து இருந்தது.

கடிதப் போக்குவரத்து வெகுவாகக் குறைந்து விட்ட இந்த நாட்களில் அபூர்வமாக, திருமண அழைப்பிதழ்கள், துணிக்கடை, நகைக்கடை திறப்பு விழாக்கள் என்று வெகு சில கடிதங்கள் மட்டுமே வரும். அவற்றை போகிற போக்கில் ஹாலில் இருக்கும் டீபாயில் தூக்கிப் போட்டு இருக்கக் கூடிய ராணியை, இந்த கடிதத்தின் மேல் சுந்தரி காட்டிய அதீத ஆர்வம் சிந்திக்க வைத்தது.

இந்தக் கடிதம் ஷ்யாமிடம் இருந்து வந்து இருக்கக் கூடும் என்பதாலேயே அவளுக்கு இவ்வளவு ஆர்வம் என்று அதைப் பிரிப்பதற்கு முன்பாகவே அவளுடைய உள்ளுணர்வு சொன்னது. அதனாலேயே அதைத் தூக்கிப் போடாமல், அது தந்தையின் பெயருக்கு எழுதப்பட்டு இருந்த போதும் அதைப் பிரித்துப் பார்க்கும் ஆவல் வந்தது. அவசரமாக அதை பிரித்துப் படித்தவளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. இந்தக் கடிதத்தின் வரவையா இவள் ஆவலுடன் எதிர்பார்த்தாள்?

ஏற்கனவே இந்தக் கல்யாணத்தை நிறுத்த சுந்தரி முயன்றாள் என்பது உண்மை தான். ஆனால் நேற்று முன்தினம் ஷ்யாம் பரிசளித்த மொபைல் போன் வந்த

பிறகு, அதை அவளே தன் வாயால் ஒத்துக் கொண்டதோடு மட்டுமில்லாமல் அதிலிருந்து, ஷ்யாமுடன் அவள் பேசியதை கேட்ட பின்பு, சுந்தரியின் மனம் மாறி விட்டது என்று எண்ணினாள்.

இப்போது இந்தக் கடிதம் வந்து இருக்கிறதே? ஒருவேளை இது அவளும் எதிர்பாராத குண்டா என்ற யோசனை வர, அப்படியே சோபாவில் அமர்ந்தாள். இதை அப்பாவிடம் காட்டுவதா வேண்டாமா? ஒரு வேளை சுந்தரி இதைப் பார்த்து மனம் வாடினால் என்ன செய்வது?

ஷ்யாம் ஒருவேளை ஏற்கனவே திருமணம் ஆனவன் என்ற பட்சத்தில், அக்காவின் எதிர்கால வாழ்க்கை கேள்விக் குறியாகி விடாதா என்ற சந்தேகமும் வந்தாலும், அப்படிப்பட்டவன் இவளை தேடித் தேடி, போன் பண்ணுவதும், நேரில் விஜயம் செய்வதும், பரிசளிப்பதும் செய்வானா என்ற கேள்வியும் எழுந்தது.

தஞ்சாவூர் எஸ்.பி. ஷ்யாம் சொன்னதற்காக அளித்த பரிசு, ஷ்யாம் பொய்யனாக இருக்க முடியாது என்ற உறுதியை ராணிக்கு அளித்தது. ஒரு காவல் துறை உயர் அதிகாரி என்னதான் நண்பன் என்ற போதிலும், இரண்டாவது திருமணம் நடப்பதற்கு, துணை செல்ல மாட்டான் என்ற உறுதி வந்தது.

அதனாலேயே ஷ்யாம்சுந்தரியின் மேல் அன்பு வைத்து இருந்தாலும் இவள் மனத்தை இவளே அறிவதற்கு முன்னால் இவள் உளறியதன் காரணமாக இந்த மாதிரி ஒரு கடிதம் எழுதி அனுப்பி இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்து விட்டாள் செல்வராணி.

இவளுக்காக இவ்வளவு பார்த்துப் பார்த்துச் செய்யும் ஷ்யாமை விட, உயர்ந்த மாப்பிள்ளை இவளுக்குக்



காத்திருக்கிறானா? அப்பாவின் மனசும் நிறையும். அவன் மனசும் நிறையும் இந்த திருமணம் நடக்க வேண்டும். அதற்காக அந்த பட்டுப் புடவையை தியாகம் செய்யலாம்.

ஒருவேளை கல்யாணம் முடிந்த பிறகு, அந்த சந்தோஷத்தில், இருக்கும் மாமாவிடம் இருந்தோ அல்லது அவங்க அம்மாவிடம் இருந்தோ, அக்கா தராமல் போன புடவையை, ஒன்றுக்கு மூன்றாக கறந்து விடலாம் என்று முடிவு பண்ணியவள் உற்சாகமாக எழுந்தபோது, வீட்டின் தொலைபேசி குரல் எழுப்பி, 'என்னைக் கொஞ்சம் கவனி' என்றது.

* * *

'தபால்' என்ற சப்தம் கேட்டு வாசலுக்கு வந்து கடிதத்தை வாங்கிய சைலஜா அந்த கடிதம் எங்கே இருந்து வந்து இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு முன்பே, அடுக்களையில் இருந்து அம்மாவின் குரல் ஒலித்தது.

''என்ன தபால் சைலு...?''

''என்ன அவசரம்மா உங்களுக்கு? வாங்கிப் பிரிச்சுப் படித்தால் தானே தெரியும்? உங்களுக்கு அவ்வளவு அவசரம் என்றால் நீங்களே வந்து வாங்கி இருக்க வேண்டும். எதுக்கு என்னை அனுப்பினீங்க?'' என்று சலித்துக் கொண்டவள் அந்தக் கடிதத்தை அப்படியே வந்து அவர் முன்னால் போட்டாள்.

''அடேங்கப்பா! நீ சொல்லா விட்டால் எனக்கென்ன படிக்கத் தெரியாதா? என்னை என்ன கைநாட்டு என்று நினைத்தாயா? தமிழ் மட்டும் இல்லை ஆங்கிலம் என்றால் கூட எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை மை டியர் டாட்டர். ஐ கேன் டாக் இங்கிலீஷ், வாக் இங்கிலீஷ்,

ஸ்பீக், ரைட், அண்ட் அன்டர்ஸ்டாண்ட் இங்கிலீஷ், ஓகே? நான் அதை பார்க்கிறேன். நீ இந்த சாம்பாரை பார்த்து இறக்கிடு...'' என்று ரஜினி ஸ்டைலில் சொல்லி விட்டு, அந்த கடிதத்துடன், அடுக்களையை விட்டு வெளியேறினார்.

''ஹையோ... அம்மா... சமையல் அறையில் என்னை தனியா விட்டுட்டுப் போறீங்களே...? மதியம் சாப்பிடும் அப்பா பாவம் இல்லையா? ஹோல்ட் ஆன்... ப்ளீஸ்.. நானே அந்தக் கடிதத்தை வாசித்துக் காண்பிக்கிறேன்... இதுக்கு எல்லாம் கோபித்துக் கொள்ளலாமா? என் செல்ல அம்மா இல்லை. வாங்கம்மா...'' என்று பின்னாலேயே சென்று அவரை கை பற்றி இழுத்து வந்து அடுப்பின் முன்னால் நிறுத்தியவவள், அவரிடம் இருந்து கடிதத்தை வாங்கினாள்.

''அது...! நீ செய்யும் எல்லா காரியத்தையும் என்னால் செய்ய முடியும். ஆனால் நான் செய்யும் விஷயம் எல்லாம் உன்னால் செய்ய முடியாது என்ற அந்த பயம் அம்மாவிடம் எப்பவும் இருக்கணும்...'' என்று மகளுக்கு செல்லமாக ஒரு குட்டு வைத்தபடி அடுப்பில் இருந்த சமையலை கண்காணித்தபடி, காதை மட்டும் மகளுக்குக் கொடுத்தார்.

'பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஸ்ரீமான் ஸ்ரீமதி, பத்மநாபன் அவர்களுக்கு...' என்று பாவனையுடன் கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தவள் அங்கேயே நிறுத்தினாள்.

''என்னம்மா இது? ஐம்பது அறுபதில் வந்த தமிழ் பட வசனம் மாதிரி இருக்கு? இந்த மாதிரி கடிதம் எழுதும் வயசானவங்க, இந்தக் காலத்துல யார் இருக்கா? உங்க சைடில் சொந்த பந்தம் யாராவது இருக்காங்க?'' என்று அவசரமாகக் கேட்டாள்.



''வித்தியாசமான ஆரம்பமா இருக்கு. எங்கே இருந்து வந்து இருக்கு?''

''திருவையாறு என்று போட்டு இருக்கும்மா...'' என்று சைலஜாவின் வார்த்தை முடியும் முன்பே அவளின் கையில் இருந்து கடிதத்தைப் பிடுங்கி வேகமாக வாசித்தார் கௌசல்யா.

வாசிக்க வாசிக்க, அவரின் முகம் யோசனைக்கு போனதோடு, வருத்தமான பாவனையையும் காண்பிக்க சைலஜா திகைத்தாள்.

''என்ன ஆச்சும்மா...? ஏன் டல்லாகிட்டீங்க?'' என்று கேட்டபடி அவள் கடிதத்தை வாங்க முயல, அதைக் கொடுக்காமல் அடுப்பை அணைத்து விட்டு ஹாலுக்கு நடந்தார்.

''அம்மா! என்ன விஷயம் என்று சொல்லாமல் இப்படி இருந்தால் என்ன அர்த்தம்? நான் உங்களை இப்படி அமைதியா பார்க்க எனக்கு இஷ்டம் இல்லை. அதைக் கொடுங்க முதலில்...'' என்று அவர் கையில் இருந்த கடிதத்தை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி படித்து விட்டு, அது சொன்ன செய்தியை நம்ப முடியாமல், அந்தக் கடிதம் வந்த உறையை மீண்டும் பார்த்தவள் முகம் மலர்ந்தது.

''ஓஹோ! கதை இப்படிப் போகுதா...?'' என்ற தலையை ஆட்டி கோலாகலமாகச் சொன்னவள் சிரிக்க, கௌசல்யா, ''எல்லாத்தையும் விளையாட்டா எடுத்துக்கக் கூடாது சைலு...'' என்று சன்னமான குரலில் கண்டித்தார்.

''கடிதத்தில் சொல்லப்பட்டு இருக்கும் விஷயம் உண்மை என்றால் யோசிக்க வேண்டியது அவசியம் அம்மா. ஆனால் அது எங்கே இருந்து வந்து இருக்குது அது உண்மையா என்று எல்லாம் பார்க்க வேண்டாமா? எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்... அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு...'' என்று தன் நெற்றியை சுட்டிக் காட்டி கேலியாகச் சொல்ல, அவர் குழப்பம் கூடியது.

''என்ன சைலு சொல்ற?''

''சொல்றேன். அதுக்கு முன்னாடி நீங்க ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்க இந்த கடிதம் எங்கே இருந்து வந்தது என்று நினைக்கறீங்க?''

''திருவையாறு என்று போட்டு இருந்ததே...''

''அந்த பேப்பரில் அப்படி இருக்கலாம். ஆனால் அது உண்மை இல்லை.''

''எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?''

''இதைப் பார்த்து தான்... டொட்டடாயிங்க்...'' என்று வாயில் இசை அமைத்தவள், அவருக்கு அந்தக் கவரில் பதிந்து இருந்த அஞ்சல் நிலைய முத்திரையைக் காண்பித்தாள்.

''திருவல்லிக்கேணி என்று போட்டு இருக்கே? நம்ம போஸ்ட் ஆபீஸ் அண்ணா நகர் இல்லையோ?'' என்று கேட்ட விழிகளும் கூடவே வியப்பில் விரிந்ததோடு ''ஓ...!'' என்ற ஒலியும் எழுந்தது.

''எஸ்! இந்த கடிதத்தை போஸ்ட் பண்ணிய இடம் திருவல்லிக்கேணி. டெலிவரி ஆன இடம் அண்ணா நகர் நான் ஏன் இந்தக் கடிதத்தை பொய் என்று சொல்கிறேன் என்று இப்ப புரியுதா?''



''இருக்கலாம் சைலு. ஆனால் காமாலை கண்ணுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சளா தெரிவது போல ஷ்யாம் சொல்லிக் கொண்டே இருப்பதனால் அப்படி யோசிக்கிறோமோ என்ற சந்தேகம் வருது. ஒருவேளை நம்முடைய ஊகம் தப்பாக இருந்தால்...''

''சான்சே இல்லை. வேண்டுமானால் ஒன்று செய்வோம். அண்ணிக்கே போன் பண்ணி பேசலாம்...''

''ஹய்யோ... சின்ன பெண்ணிடம் இந்த மாதிரி விஷயங்களை... நேரில் இல்லாமல் போனில் பேசுவது சரி இல்லை சைலு...''

''என்னம்மா நீங்க? கடித விபரம் எதுவும் சொல்லாமல், சும்மா பேசிப் பார்க்கலாமே? அதுவும் இல்லை என்றால் நாம் ரெண்டு பேரும் ஒரு தடவை, திருவையாறு போயிட்டு வரலாம். இப்ப போனில் பேசுங்க. சரி வரலை என்றால் அப்புறமா நேரில் போவதைப் பற்றி முடிவு பண்ணலாம். சென்னையில் இருக்க நூறு போஸ்ட் ஆபீசில், திருவல்லிக்கேணி போஸ்ட் ஆபீஸ் தான். இந்தக் கடிதம் போடறவனுக்கு கிடைத்ததாக்கும்? எனக்குத் தெரியும். இது அண்ணனோட பிராடு தனம் தான்...'' என்று உறுதியாகச் சொல்ல, கௌசல்யாவுக்கும் சந்தேகம் மறைந்தது.

அதை உறுதி பண்ணிக் கொள்ளவும். நேரில் இது வரை தான் பெண்ணிடம் பேசவே இல்லை என்பதையும் மனதில் வைத்து போனை எடுத்து அவர்கள் வீட்டிற்கு அழைத்தார்.

''ஹலோ, நான் சென்னை அண்ணா நகரில் இருந்து, கௌசல்யா பேசறேன். அங்கே கமலம்மா இருக்காங்

களா...?'' என்று கௌசல்யாவின் குரலை கேட்டதும் போனை எடுத்த செல்வராணி துள்ளிக் குதித்தாள்.

''ஆன்ட்டி நீங்களா? இப்ப தான் உங்களைப் பற்றி நினைத்தேன். உடனே பேசிட்டீங்க?'' என்ற ராணியின் உற்சாகக் குரலை கேட்டு, சுந்தரி என்று எண்ணி அவரும் சந்தோஷப்பட்டார்.

''யாரு...? சுந்தரி பேசுறது? என்னைப் பற்றி என்ன நினைத்தாய்? நல்ல விதமாகத் தானே?'' என்று அவரும் சந்தோஷமாகக் கேட்க, அப்போது தான் ராணிக்கு இரண்டு விஷயங்கள் உரைத்தது.

ஒன்று, தன் பெயரை சொல்லாதது, இரண்டாவது அக்கா தராமல் போன புடவையை, ஒன்றுக்கு மூன்றாகக் கறந்து விடலாம் என்ற வார்த்தைகளில் இல்லை என்றாலும், உங்களை நினைத்தேன் என்று வெளிப்படையாக உளறி வைத்தது. இப்போது அவர் அதைப் பற்றி மேலும் துருவினால் என்ன சொல்வது?

''நான் சுந்தரியின் தங்கை ராணி பேசறேன் ஆன்ட்டி அம்மாவைக் கூப்பிடட்டுமா?'' என்று பேச்சை மாற்ற முயன்றாள்.

''ராணியா? ரொம்ப சந்தோஷம். அம்மாவைக் கூப்பிடு. அதோடு அக்காவையும் கூப்பிடு. அதற்கு முன்னால் எதற்கு என்னை நினைத்தாய் என்று சொல்லவே இல்லையே?'' என்று தன் விஷயத்தில் உறுதியாக நின்ற கௌசல்யாவை மனசுக்குள் பாராட்டிக் கொண்டாள்.

''வேறென்ன பேசப் போகிறோம்? அக்கா கல்யாணம் பற்றி தான் பேசினோம். நேற்று முன் தினம் மாமா



இங்கே வந்தார் இல்லையா? அது பற்றி அக்கா சொல்லிட்டு இருந்தாங்க. அக்கா இப்பதான் அருகில் உள்ள நூலகத்துக்குச் சென்று இருக்கிறாள்...'' என்று அரை குறையாகக் கோடிட்டு நிறுத்த ஸ்பீக்கரில் அதை கேட்டுக் கொண்டு இருந்த சைலஜாவும் கௌசல்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

''மாமாவைப் பற்றி உங்க அக்கா என்ன சொன்னாங்க?''

''அது... அது... இருக்கட்டும்... ஆன்ட்டி... அக்காவைப் பற்றி மாமா என்ன சொன்னாங்க...? அதை முதலில் நீங்க சொல்லுங்க...'' என்று விசாரித்தவளுக்கு, இந்தக் கடிதத்தில் உண்மை ஒரு துளியாவது இருந்து இருந்தால், அவன் அவளைப் பற்றி நல்ல விதமாகச் சொல்லி இருக்க மாட்டானே என்ற எண்ணம் இருந்தது.

''அதுவா...? ஷ்யாம் எப்பவுமே எங்களை மாதிரி கலகலப்பா பேச மாட்டான். வேலை வேலை என்று சீரியஸா இருக்கும் ஆள். ஆனால், எப்பவும் கல்யாணப் பேச்சை எடுத்தாலே என்னைக் கடித்துக் குதறுபவன், இப்ப மூன்று நாளா ஒன்றும் சொல்வதில்லை. அதனால், அவனுக்குப் பிடித்து இருக்கு என்று தான் நினைக்கிறேன். அங்கே உங்க அக்கா எப்படி?'' என்று மகனைப் பற்றிய உண்மையையே சொன்னவர், தான் அறிந்து கொள்ள விரும்பியதையும் விசாரித்தார். அவர் பேசப் பேச, ராணியின் மனம் குதூகலித்தது.

''ஆஹா! ஜாடிக்கேற்ற மூடி தான். பெர்பெக்ட். பெண்ணரசி, கறார் கண்ணம்மா என்று எங்களால் கிண்டல் அடிக்கப்படும் சுந்தரி, தன்னுடைய குணத்தை மாற்றிக் கொண்டு, இப்போது சின்னச் சின்ன பொய்கள் எல்லாம்

சொல்லி, என்னிடம் மாட்டிக் கொள்கிறாள் என்றால் பார்த்துக்கோங்க. அது எல்லாமே மாமாவுக்காக தான் என்று நினைக்கிறேன். அவளுக்கும் பிடித்து இருக்கு அத்தை...'' என்று தானும் சற்று முன்பு யோசித்து உணர்ந்ததையே சந்தோஷமாக சொன்னாள் ராணி.

அவள் சொன்ன வாக்கியத்தில், சைலஜா மற்றும் கௌசல்யாவால் முக்கியமாக கணக்கெடுக்கப் பட்ட விஷயங்கள் இரண்டு. ஒன்று அவளுக்கு ஷ்யாமை பிடித்து இருக்கிறது. இரண்டாவது அவனுக்காக சின்ன சின்ன பொய் சொல்லி மாட்டிக் கொள்கிறாள். இரண்டுமே. அவளிடம் நேரிடையாகப் பேச முடியாத போதும், அவள் மீது பிரியத்தை வளர்க்க, அவர்களின் திருமணத்திற்கான முயற்சி மேலும் தீவிரம் அடைந்தது.

''இதோ அம்மா வராங்க ஆன்ட்டி. அவங்களிடம் பேசுங்க'' என்றவள் அருகே வந்த அம்மாவின் கையில் போனை திணித்து, 'உங்க சம்பந்தி சென்னையில் இருந்து பேசறாங்க' என்று சொல்லிவிட்டு ஓடி விட்டாள்.

அடுத்த சில நிமிடங்கள் கமலமும், கௌசல்யாவும் பொதுவாகப் பேசியதில், நலம் விசாரித்ததில், வித்தியாசமாக எதுவும் கண்டு பிடிக்க இயலவில்லை. கூடுதல் தகவலாக தஞ்சாவூர் காவல் துறையில் இருந்து மொபைல் போன் பரிசாகக் கிடைத்த செய்தியும், அந்த நம்பரும் கிடைத்தது.

''உங்களை முன்பே நேரில் சந்திக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கலை. கூடிய சீக்கிரமே நாங்க நாலு பேரும் உங்களைப் பார்க்க உங்க வீட்டுக்கு வருகிறோம். உங்க பெண்ணைப் பற்றி இனிமேல் எந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம். அவள் என் பொண்ணு மாதிரி



பார்த்துக் கொள்வேன். அவளிடமும் பேசுகிறேன்'' என்று உறுதி அளித்து விட்டு போனை வைத்த கௌசல்யாவின் கண்களில், என்றும் இல்லாத திருநாளாக, மதிய உணவுக்கு வீட்டுக்குள் நுழைந்த ஷ்யாமின் உருவம் பட்டு, புன்னகையை விரிவாக்கியது.

# 11



திருவையாற்றில் இருந்து வந்ததாக கடிதம் சொன்ன செய்தியின் உண்மை தன்மையை அறிய, உடனேயே நேரில் அங்கேயே பேசி தெளிவு பெற்ற கௌசல்யா அந்த தொலைபேசி பேச்சின் முடிவில் நுழைந்த ஷ்யாமைப் பார்த்து வியப்படைந்தார்.

''ஹேய்! ஷ்யாம், வா வா இப்பதான் உன்னைப் பற்றியும் உன் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தேன். கரெக்டா நீயும் வந்து விட்டாய். உனக்கு எப்ப லீவு கிடைக்கும் சொல்லு ரெண்டு நாள் திருவையாறு போய் வரலாம்...'' என்று ஆர்வமாக வரவேற்றவரை முறைத்தான் ஷ்யாம்.

''ஏன்மா, உங்களுக்கு என்னிடம் பேச வேறே விஷயமே இருக்காதா? எப்பப் பார்த்தாலும் கல்யாணம், கச்சேரி என்று அதைப் பற்றியே பேசிக்கிட்டு இருக்கீங்க. போனில் யாரு?'' என்று விசாரித்தான்.

''வேண்டாம்பா. நான் அதைச் சொல்லலை. சொன்னால் உடனே அதுக்கும் உங்களுக்கு போன் பேச வேறே

ஆளே கிடைக்கலையா என்று குறை சொல்வா... எனக்குத் தேவையா?'' என்று கேலியாகச் சலித்துக் கொண்... நேரத்தில், 'யாரிடம் அம்மா பேசிட்டு இருக்கீங்க?' என்று உள்ளே இருந்து வந்த சைலஜா அண்ணனை... பார்த்ததும், சிரிக்க ஆரம்பித்தாள்.

''வாங்க சார். வாங்க, செய்த வேலை நல்லபடியா... முடிஞ்சதா என்று கரெக்டா கடிதத்தின் பின்னாடியே... தேடி வரீங்க போல?'' என்று கேலியாக வரவேற்றாள்.

''என்ன உளறுகிறாய்? உனக்கு காலேஜ் இல்லையா? இந்நேரத்தில வீட்டில் என்ன பண்ணிக்கிட்டு இருக்க?'' என்று அதட்டினான் ஷ்யாம்.

''எனக்கு தேர்வு நடந்து கொண்டு இருக்கிறது. அதில் நடுவில் ஒரு நாள் ஸ்டடி லீவு. வீட்டில் இருக்கிறேன். இந்நேரத்துல ஆபீஸ்ல இல்லாமல் நீங்க இங்கே என்ன பண்றீங்க? ஆபீசில் லீவு விடாததால் நீங்களே லீவ் போட்டுட்டு முக்கியமான வேலை பார்க்க வந்துட்டீங்களா?''

''என்ன வேலை?'' எதற்கு லீவு? என்ன சொல்கிறாய் நீ? ஒன்றும் புரியவே இல்லை..'' என்று ஷ்யாம் விழிக்க... கௌசல்யா, கையில் இருந்த கடிதத்தை ஆட்டிக் காட்டினார்.

''ச்சே! ச்சே! ஷ்யாம் இந்த சின்ன விஷயத்துக்கா லீவு எல்லாம் போட மாட்டான். ஒரு கடிதம் எழுதினால் மட்டும் போதுமா? அது உரிய இடத்திற்குச் சென்று சேர்ந்ததா? தான் நினைத்த பலன் கிடைத்ததா? என்... பதை எல்லாம் உடனுக்குடன் தெரிந்து கொள்ள சி... சியரா நினைத்தால், அதைக் கிண்டல் அடிக்கலாமா சைலு? அண்ணனைப் பார்த்து நீ இந்த நல்ல குண...



தைப் படி'' என்று மகளுக்கு அறிவுரை வழங்க, அதில் கேலி இருந்ததை ஷ்யாமால் உணர முடிந்தது.

ஓ! கடிதம் வந்தாச்சா? ஆனால் ரொம்ப ஜாலியா இருக்காங்களே! பிரச்னையோ, முக வாட்டமோ ஒன்றும் காணவில்லையே? அதை நம்ப வில்லையா? தான் வீட்டுக்குள் நுழையும் போது அம்மா பேசிக் கொண்டு அவங்க வீட்டில் தான் இருக்க வேண்டும். அங்கே பேசியதில் யார் என்ன சொன்னார்களோ? கடிதம் பொய் என்பதைக் கண்டு பிடித்து விட்டார்களா? சுந்தரி இங்கே எழுதிய கடிதம் 'பணால்' என்றால், நான் அங்கே எழுதிய கடிதம் என்ன ஆனதோ தெரியலையே? உடன் பேசணுமே!

''என்னம்மா கடிதம் அது? எங்கிருந்து வந்தது? என்ன விஷயம்?'' என்று விசாரிக்க சைலஜா, 'வாவ்! அடுத்த ஆஸ்கார் உங்களுக்கு தான் அண்ணா!' என்று கை தட்டி பாராட்ட கௌசல்யா சிரித்தார்.

''ஹய்யோ பாவம் ஷ்யாம்! உனக்கு ஒன்றுமே தெரியாது இல்லையா? உனக்கே தெரியாமல் உன் கை தானாக எழுதி, உங்க அலுவலகத்திற்கு பக்கத்தில் இருக்கும் திருவல்லிக்கேணி போஸ்ட் ஆபீசில் இருந்து நம்ம வீட்டுக்கு வந்த கடிதம் ஷ்யாம். எழுதிய உனக்கே இது பற்றி ஒரு விபரமும் தெரியலை. அப்புறம் நாம் ஏன் அதை பெரிசு பண்ணனும் ஷ்யாம்? இதற்கு பொருத்தமான இடம் குப்பை கூடை தான். உன் கையால் நீயே கிழித்துப் போட்டு விடு. உனக்கு தான் கிழிப்பது என்றால் ரொம்பப் பிடிக்குமே நீயே செஞ்சுடு'' என்று சாதாரணமாகச் சொல்ல அவன் பேச்சை மாற்ற முயன்றான்.

''வர வர நீங்க என்ன பேசுறீங்க என்று எனக்கு ஒன்றுமே புரியலை. பேசுற உங்களுக்காவது புரிந்தால் சரி. சமையல் முடிஞ்சதா? சாப்பிட்டுட்டு நான் உடனே கிளம்பணும். சாப்பிடலாமா?''

''சமையல் முடிஞ்சது. ஆனால் எங்களுக்கு மட்டும் தானே செஞ்சு இருக்கேன். நீ சாப்பிட வருகிறேன் என்று சொல்லி விட்டு போனாயா என்ன? உனக்கென்று ஒருத்தி இருந்தால், முன்பே சொல்லவில்லை என்றாலும், நீ வந்த உடனே, உனக்கு தனியா சமையல் பண்ணி கொடுக்க வசதியா இருக்கும் இல்ல...'' என்று சிரிப்புடன் கௌசல்யா வம்பு பண்ண அவனுக்கு சுந்தரியின் முகம் உடனே மின்னி மறைந்தது.

தனியாகச் சாப்பிட மறுத்து பாயசம் வடையை சுந்தரி பகிர்ந்து கொண்டதும், கிளம்பும் போது 'சாப்பிட்டு விட்டுப் போங்க' என்று வலியுறுத்தியதும், நினைவில் வந்தது.

''அது சரி, நீங்க பேசுவதைப் பார்த்தால், இந்த வீட்டில், கல்யாணம் பண்ணிட்டா தான் மதியம் சாப்பிடனுமாக்கும்?'' என்று கேட்டவன் குரலில் எரிச்சலோ கோபமோ இல்லாமல் சின்ன புன்னகை இருக்க கௌசல்யாவும் சைலஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்படிச் சொல்ல முடியுமா ஷ்யாம்? நான் உன் அம்மா இல்லையா? எனக்கு வைத்து இருக்கும் சாப்பாட்டைச் சாப்பிடு. நான் சாதம் வைத்து பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்று வரவேற்க சைலஜா அண்ணனைத் திரும்பிப் பார்த்தாள். அம்மா ஷ்யாமை உண வருந்த அழைத்த விதம், கசாப்பு கடைக்காரன், பலி



பீடத்திற்கு அழைத்துச் செல்லும் ஆட்டினைப் போல தோன்ற, அடக்க மாட்டாமல் சிரித்தாள் சைலஜா.

''என்ன இப்படி திடீர் என்று சிரிக்கிறாய்?'' என்று இருவரும் கேட்ட பிறகும், 'ஒன்றும் இல்லை' என்று மறுப்பாக தலையை மட்டுமே அசைக்க முடிந்தவளால் பேசவே முடியவில்லை.

அடக்க மாட்டாமல் நீண்ட நேரம் சிரித்ததில், சைலஜாவிற்கு இருமல் வந்து விட, மிளகாய் நெடியினால் சில தினங்கள் முன்பு அடுக்கடுக்காக தும்மல் போட்ட சுந்தரியின் முகம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நினைவில் வந்தது.

அவசரமாக உணவு மேஜையில் இருந்து ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்து வந்து தங்கையிடம் நீட்டி, 'மெல்ல... மெல்ல... போதும் சிரித்தது...' என்று கனிவாகச் சொல்லி அவளின் முதுகை தடவிக் கொடுத்தான்.

''உனக்கு க்ரைம் நம்பர், எப்.ஐ.ஆர். இன்வெஸ்டிகேஷன், கோர்ட் கேஸ் மட்டும் தான் தெரியும் என்று நினைத்து இருந்தேன் ஷ்யாம். இதெல்லாம் உனக்குத் தெரியுமா ஷ்யாம்? வெரி நைஸ்...'' என்று கௌசல்யா சொல்ல புன்னகை செய்தான்.

''உங்க பையன் மேலே எவ்வளவு நம்பிக்கைம்மா உங்களுக்கு...?''

''உன் மேலே எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு ஷ்யாம். நீ நல்ல பையன். எங்க ஆசையைத் தட்டாமல் நிறைவேற்றுவாய். எந்த கெட்ட வழிக்கும் போக மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அது இல்லை என்றால் நீ வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல,

இந்தக் கல்யாண முயற்சியை துணிஞ்சு செய்வேனா?'' என்று சொல்ல, ஷ்யாமின் முகத்தில் இந்தக் கல்யாணம் நடக்கும் என்ற அம்மாவின் நம்பிக்கை புன்னகை மலர்ந்த அதே நேரம், சுந்தரியின் மறுப்பு நினைவில் வந்து லேசாக முகம் வாடவும் வைத்தது.

''அதானே பார்த்தேன். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணு எங்க அம்மா. சைலு நீயும் வா சாப்பிடலாம்'' என்று சொன்னபடி சாப்பிட அமர்ந்தான்.

''திருவையாற்றில் வெயில் ஜாஸ்தியா ஷ்யாம்?'' என்று உணவை பரிமாறிய கௌசல்யா, பேச்சை ஆரம்பிக்க அவன் எடுத்து வைத்த முதல் வாய் உணவே தொண்டையில் சிக்கியது.

''எனக்கு எப்படிம்மா தெரியும்? ஏன் என்னிடம் கேட்கறீங்க?'' என்று அவசரமாக தண்ணீர் குடித்துச் சமாளித்தவன் கேட்டான்.

''அதானே! இப்பதானே திருவையாற்றில் அவங்க வீட்டுக்கு போன் பண்ணி ராணியிடம் பேசினீங்க. கமலம் அத்தையிடம் பேசினீங்க. அவங்களிடம் கேட்காமல் நீங்க ஏன் இதை அண்ணனிடம் கேட்கறீங்க? அண்ணன் என்ன ரமணன் சார் ஆபீசில் வானிலை அறிக்கை தயாரிக்கும் வேலையிலா இருக்கிறார்?'' என்று சைலஜா கேலியாகக் கேட்க கௌசல்யா சிரித்தார்.

'இவள் தனக்கு சப்போர்ட் பண்ணுகிறாளா? இல்லை கேலி செய்கிறாளா? இவளை நம்ப முடியாதே!'' என்ற எண்ணத்துடன் ஷ்யாம் இருவரையும் மாறி மாறி பார்த்தான்.

''நீ சொல்றதும் சரி தான் சைலு. ஒன்று காலேஜ் காம்பசில், நிறைய மரங்கள் இருப்பதால் வெயில் தெரிந்து



இருக்காது. இல்லை, சுற்றுப் புற வெயிலின் தாக்கம் உரைக்க முடியாத அளவுக்கு, மனசு ஜிலுஜிலுன்னு இருந்து இருக்கும்...''

''கரெக்ட். அதனால் இந்த மாதிரிக் கேள்விகளை எல்லாம் தூக்கிப் போட்டுட்டு அவருக்குத் தெரிந்த மாதிரி கேள்வி கேளுங்க. சாலை பாதுகாப்பு வார விழா கொண்டாடுவது எப்படி? அதற்கு மொபைல் போன் பரிசளிக்க அரசாங்கம் காசு கொடுக்குமா? அப்படி என்றால், தஞ்சாவூரில் நடக்கிற அந்த போட்டி, சென்னையில் ஏன் நடக்கவில்லை?'' என்று சைலஜா பேசப் பேச வியப்பின் உச்சியைத் தொட்டான் ஷ்யாம்.

அம்மா காலேஜ் பற்றி பேசுறாங்க. இவள் போட்டி, மொபைல் போன் பரிசு என்று பேசுகிறாள். இவர்களுக்கு எப்படி இதெல்லாம் தெரிந்தது? சுந்தரி சொல்லி இருக்க மாட்டாள். ராணி சொல்லி இருப்பாள் என்றாலும் அவளுக்கு எப்படித் தெரிந்தது? அவனுக்கு தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல வந்தது. இவ்வளவு தூரம் விஷயத்தைத் தெரிந்து வைத்து இருப்பவர்கள் தான் என்ன மறுத்துப் பேசினாலும் பிரயோஜனம் இருக்க போவதில்லை.

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கு எப்படித் தெரியும் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இது உண்மையா இல்லையா? அதுக்கு பதில் சொல்லுங்க ஜே.சி. சார்...'' என்று சைலஜாவும்,

''இதுக்கு மேலேயும் எனக்குக் கல்யாணம் வேண்டாம். இந்த பொண்ணு வேண்டாம், என்று அதே பழைய பாட்டை படிக்கப் போகிறாயா ஷ்யாம்?'' என்று கௌசல்யாவும் சைலஜாவும் ஒரே நேரத்தில் கேட்டனர்.

''உங்க பேச்சை மறுத்துப் பேசுவது எனக்கும் கஷ்டமா தான் இருக்கு. ஆனால் எனக்கு வேறே வழி இல்லை. இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண்டாம்...'' என்று பெருமூச்சுடன் சொன்னான் ஷ்யாம்.

''மறுபடியும் மறுபடியும் லூசு மாதிரி பேசக்கூடாது ஷ்யாம். இப்பக் கல்யாணம் பண்ணிக்காமல் அறுபது வயசாகும் போதா கல்யாணம் பண்ணிக் கொள்வாய்?''

''வயசாகி விட்டதே என்பதற்காக ஏதாவது ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதும்மா. எனக்குப் பிடித்த மாதிரி பொண்ணு கிடைத்தால் பண்ணிக் கொள்வேன்'' என்று முடித்தான் ஷ்யாம்.

* * *

அன்று காலை பதினோரு மணி அளவில் செல்வராணி வாங்கிய அந்த தபாலை அதற்குப் பிறகு திரிபுரசுந்தரி பார்க்கவே இல்லை. வழக்கமாக வரும் தபால்களை வைக்கும் இடத்தில் அது இல்லை. பிரித்துப் படித்து விட்டு முக்கியமான விஷயம் என்பதால் அதை வேறு எங்காவது வைத்து விட்டார்களோ என்று எண்ணவும் வழி இல்லை.

அம்மா, அப்பா, பாட்டிக்குக் கடிதம் வந்த விஷயமே தெரியவில்லை. அது தெரியாமல், அதில் இருக்கக் கூடிய விஷயத்தைப் பற்றி எப்படிப் பேச முடியும் உனக்கு எப்படித் தெரியும் என்ற கேள்வி வராதா? அந்தக் கடிதம் இப்போது எங்கே என்று தெரிந்து கொள்ள முடியாமல் அவளுக்கு மண்டை காய்ந்தது. அதனால் இரவு உணவின் போது அவளே பேச்சை ஆரம்பித்தாள்.

''ராணி, இன்று காலை தபால் வந்ததே? அது யாரிடம் இருந்து வந்தது? என்ன விஷயம்?'' என்று கேட்க அவள் ஒன்றுமே அறியாதவள் போல அவளை நிமிர்ந்து புதிதாகப் பார்த்தாள்.



''தபாலா என்ன தபால்? எப்ப வந்தது?'' என்று அசால்ட்டாக கேட்க சுந்தரிக்கு ஆத்திரமாக வந்தது.

''நான் லைப்ரரிக்கு போகும்போது வந்ததே. நீதானே வாங்கினாய்? அதைக் கூட மறந்து விட்டாயா?'' என்று பொங்கிய கோபத்தை அடக்கியபடி அழுத்தமாகக் கேட்டாள்.

''ஓ! அதுவா...? அதுக்கு ஏன் இவ்வளவு டென்ஷன் ஆகிறாய்? லைப்ரரிக்குப் போகும்போது என்று சொன்னால் உடனே ஞாபகம் வந்துவிட்டுப் போகிறது. இதோ இப்பவே எடுத்து வந்து தரேன்'' என்று சொல்லி, அவசரமாகச் சாப்பிட்ட கையுடன் எழுந்து சென்று எப்போதும் கடிதங்களை வைக்கும் இடத்தில் இருந்து அதை எடுத்து வந்து அவளிடம் நீட்டினாள்.

''இந்தா! இது இன்னிக்கு வந்தது இல்லை. நேற்று வந்தது. அதை முதலில் தெரிஞ்சுக்கோ. ஒரு சின்ன பொண்ணு சாப்பிடும்போது தான் உனக்கு இல்லாத கேள்வி எல்லாம் வரும்.'' என்று சலித்துக் கொண்டபடி அவள் நீட்டிய கடிதம் அருகில் உள்ள பாதாள பொன்னியம்மன் கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழ்.

''ஏய்! இதையா நான் கேட்டேன்? இந்த விசேஷத்திற்கு அழைப்பிதழ் எழுதி தந்ததே நான் தான். அந்த விழாவுக்கு இன்னும் பத்து நாள் இருக்கு. எனக்குத் தெரியாதா? நான் இன்னிக்கு வந்த கடிதத்தைக் கேட்டேன். அழைப்பிதழ் இல்லை. பெரிய லைட் கிரீன் சுவர். வெளியூரில் இருந்து வந்த ஸ்பீட் போஸ்ட்...'' என்று

காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு மாதிரி விலா வாரியாக அங்க அடையாளம் சொல்லி விசாரிக்க ராணி சிணுங்கினாள்.

''பாருங்கப்பா இவளை...? என்னைச் சாப்பிட விடாமல் நொய் நொய்யுன்னு கேள்வியா கேட்டு பிடுங்கி எடுக் கிறா? இவளுக்கு என்ன வேண்டும் என்றாலும் கொஞ்ச நேரம் கழித்து கேட்கக் கூடாதாப்பா?''

''சரி விடு சுந்தரி, சாப்பிட்ட பிறகு தேடி எடுத்துத் தருவாள்...'' என்று கிருஷ்ணமூர்த்தி சமாதானமாகச் சொல்ல, அவள் அரை குறையாக தலை அசைத்தாள்.

அவளின் முக வாட்டத்தைப் பொறுக்க மாட்டாமல் ''என்னம்மா, சென்னையில் இருந்து நீ ஏதாவது தபால் அர்ஜெண்டா எதிர்பார்க்கிறாயா?'' என்று ஆதரவாகக் கேட்டதும், ஏதோ ஞாபகத்தில் ஆமாம் என்று தலை அசைத்து விட்டு நாக்கைக் கடித்தாள் சுந்தரி.

''ராணி, சென்னையில் இருந்து ஏதாவது தபால் வந்து இருந்தால் அதை உடனடியா சுந்தரியிடம் கொடுக்க வேண்டாமா?'' என்று கமலம் அதட்ட, அவள் முறைத் தாள்.

''வந்தால் தானே கொடுக்க முடியும்? நானே எழுதி இவளுக்கு போஸ்ட் பண்ணி, சென்னையில் இருந்து கடிதம் வந்ததா சொல்ல முடியுமா? என்னம்மா நீங்க பேசறீங்க?'' என்று அதட்டும் போது, சுந்தரிக்கு புரைக்கு ஏறியது.

''ஹேய் பார்த்து பார்த்து...'' என்று அம்மா,

''மெல்ல சாப்பிடு... தண்ணீர் குடிக்கிறாயா...?'' என்று அப்பா,



''யாரோ உன்னை நினைக்கறாங்க...'' என்று ராணி என்று மூவரும் ஒரே நேரத்தில் சொல்ல, ராணியின் வார்த்தை காதில் விழுந்த அந்த நொடியில் இன்ஸ் டண்டாக, ஷ்யாமின் முகம் தோன்றி, அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது. மிளகாய் நெடி ஏறியதில் சில தும்மல்கள் போட்டதில் எப்படி தவித்துப் போனான் ஸோ ஸ்வீட். இந்த இருமலிலும் அதைச் சமாளிப்பதிலும் பேச்சு வேறு திசைக்குத் திரும்ப, ராணி நிம்மதிப் பெரு மூச்சு விட்டாள்.

''என்னங்க, அம்மா தனியா கோவிலுக்குப் போனாங்க. மணி எட்டரை ஆகப் போகுது. நீங்க சாப்பிட்டுட்டு ஒரு நடை எட்டிப் பார்த்துக் கூட்டிட்டு வந்துடுங்க...'' என்று கமலம் கணவருக்கு சொல்லும்போதே,

''இதோ வந்துட்டேன் கமலா. கவலைப் படாதே'' என்று சொல்லியபடி உள்ளே நுழைந்தார் சீனியர் திரிபுர சுந்தரி.

''கிருஷ்ணா, நம்ம போஸ்ட்மேன் சாம்பமூர்த்தியை கோவிலில் பார்த்தேன். சென்னையில் இருந்து ஏதோ தபால் வந்தது என்று சொன்னானே? மாப்பிள்ளை வீட்டில் இருந்து ஏதாவது தகவல் வந்ததா? நீ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? மறந்து விட்டாயா?'' என்று உள்ளே நுழைந்ததும் சீனியர் சுந்தரி, மகனிடம் விசாரிக்க, ஜூனியர் சுந்தரியின் முகத்தில் பிரகாசம் கூடியது.

அவசரமாக திரும்பி தங்கையை சுந்தரி பார்த்த பார்வையில் ''என்ன செய்யப் போற? நீ என்ன செய்யப் போற?'' என்ற கேள்விக் குறும்புடன் கலந்து கூத் தாடியது.

# 12



திரிபுரசுந்தரி பாட்டியிடம், கோவிலில் தபால்காரர், 'சென்னையில் இருந்து வந்த கடிதம் ஒன்றைக் கொடுத் தேன்' என்று சொன்ன உடனே, 'அது மாப்பிள்ளை வீட்டில் இருந்து தான் வந்து இருக்க வேண்டும்' என்று சின்ன சந்தேகம் கூட இல்லாமல் முடிவே கட்டி விட் டவர் வீட்டுக்குள் நுழைந்த உடனே முதல் வேலையாக அதை தன் மகனிடம் கேட்டார்.

''என்னம்மா இது? மாப்பிள்ளை வீட்டில் இருந்து ஏதாவது தகவல் வந்தால், பெரியவங்க என்று நீங்க வீட்டில் இருக்கும் போது சொல்லாமல் விட்டு விடு வேனா? அவ்வளவு தானா என் மேலே நம்பிக்கை. அப்படி எதுவும் நான் இதுவரை பார்க்கவில்லையே? என்ன கமலா நீ ஏதாவது பார்த்தாயா?'' என்று அம்மாவிற்கு விளக்கம் சொன்னவர் மனைவியையும் விசாரித்தார்.

''கௌசி அண்ணி மதியம் பேசினாங்க என்று உங் களிடம் சொன்னேனே? அம்மாவிடமும் உடனே சொல்லி விட்டேன். ஆனால் தபால் எதுவும் நான் பார்க்கவில்லை'' என்று கமலம் சொல்லும் போதே சுந்தரி குறுக்கிட்டாள்.

''அதை தான் நான் அரை மணி நேரமா இவளிடம் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். இவள் அதுக்கு பதில் சொல்லாமல் நழுவுவதோடு, அப்பாவிடம் செல்லம் கொஞ்சி, வேறே என்னவோ புது புதுக் கதை சொல்லிக் கொண்டு இருக்கிறாள். சொல்லு அந்த தபால் எங்கே?''



''அதானே... எங்கே அந்த தபால் ராணி?'' என்று இப்போது அம்மாவும் சேர்ந்து விசாரிக்க ஒரு கணம் யோசித்தாள் ராணி. சற்று நேரம் முன்பு தபால் வரவே இல்லை என்று சொன்னது போல இனி சொல்லவே முடியாது. கூடவே போஸ்ட் மேன் சென்னையில் இருந்து தபால் என்றும் போட்டுக் கொடுத்து விட்டார். அதையும் மறைக்க முடியாது.

சென்னையில் இப்போதைக்கு ஷ்யாம் வீட்டினரைத் தவிர வேறு யாரும் கடித போக்குவரத்து வைத்துக் கொள்ளும் அளவிற்கு நெருங்கியவர்களும் இல்லை. வேறென்ன சொல்லி சமாளிப்பது? 'சீக்கிரமா யோசி ராணி' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள் கண்கள் ஒளிர்ந்தது.

''ஓகே ஓகே, அதுவா? இதோ எடுத்துட்டு வரேன். ஆனால் நீங்க இவ்வளவு ஆவலா எதிர்பார்க்கும் அளவுக்கு அது உங்களுக்கு முக்கியமான செய்தி இல்லை...'' என்று சொன்னவள் நிதானமாக அந்தக் கடிதத்தை எடுத்து வந்தாள்.

''இந்தக் கடிதம் தான்பா வந்தது. பெறுனர் முகவரி யில் உங்க பேர் இருக்கு. ஆனாலும் அதன் உள்ளே இருக்கும் விஷயம் எனக்கு என்பதால் நான் அதைப் பிரித்து விட்டேன். இதை அக்கா உங்களிடம் சொல் வாளோ மாட்டாளோ என்று யோசித்தேன். ஆனால் அதை பற்றிய அக்கறை அவளுக்கே இல்லை. நான் என்ன பண்ணுவது?'' என்று தனக்குள் புலம்பியபடி கடிதத்தைக் கொடுத்தாள்.

''ஏன் இதை சுந்தரி சொல்லாமல் இருக்க வேண்டும்? அதில் மறைக்க வேண்டிய விஷயம் என்ன இருக்கு?''

என்று கவலையுடன் கிருஷ்ணமூர்த்தியும் சீனியர் விசாரித்தார்.

'என்ன சுந்தரி, சொல்லி விடலாமா' என்று அப்பாவி யாக முகத்தை வைத்துக் கொண்டு, ராணி கேட்டாள்.

அப்போதுதான் இவள் ஏதோ திட்டம் போட்டு தன்னை மாட்டி விடப் போகிறாள் என்பது சுந்தரிக்குப் புரிந்தது.

''எ..ன்..ன.. சொ..ல்..லப்.. போ..கி..றா..ய்..?''

''நீ சொன்னா சொல்லிக்கோ என்று சொன்னாயே? அந்த விஷயம் தான்...''

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? என்ன உளறு கிறாய்?'' என்று வேகமாக இடையிட, கிருஷ்ணமூர்த்தி அதட்டினார்.

''இங்கே நாங்க மூணு பெரிய மனுஷங்க உட்கார்ந்து உங்களை பார்த்துக் கொண்டே இருக்கிறோம். நீங்க ரெண்டு பேரும் உங்களுக்குள்ளேயே பேசிக் கொண்டு இருந்தால் எப்படி முதலில் அந்தக் கடிதத்தைக் கொடு என்னிடம்...'' என்று அவளிடம் இருந்து கடிதத்தை வாங்க முயன்றார்.

''இந்தாங்கப்பா படிங்க...'' என்று அப்பாவிடம் கடிதத் தைக் கொடுத்தவள் அம்மாவிடம் திரும்பி, ''லெட்டரை படிச்சுட்டு அப்பா என்ன டயலாக் சொல்லப் போறார் என்று நான் இப்பவே சொல்லட்டுமாம்மா?'' என்று காதில் கிசுகிசுத்தாள்.

''என்ன சொல்வார்?''

''என்னம்மா... இது...? இவ்வளவு பெரிய விஷயத்தை சத்தமே இல்லாமல் மறைத்து விட்டாய்...?'' என்று



அவள் சொல்லி வாய் மூடும் முன்பே கிருஷ்ணமூர்த்தி யின் பதட்டமான குரலில் அதே வசனம் கேட்க, கமலம் வாயைப் பிளந்தார்.

''ஹேய் ராணி, உன் வாயில் சர்க்கரை தான் போடணும். அப்பா அப்படியே சொல்றாரே?'' என்று வியப்போடு சொல்ல, ''நான் சொன்னேன் இல்லையா...?'' என்று இல் லாத காலரை தூக்கி விட்டுக் கொண்ட ராணி, நிதான மாக தொண்டையை கனைத்துக் கொண்டு பேச ஆரம் பித்தாள்.

''அப்பா, அந்தக் கடிதத்தை மட்டும் படித்தால் இப்படி தான் குழம்பணும். அதற்கு முன்னால் என்ன நடந்தது என்று நான் முன் கதை சுருக்கம் சொல்கிறேன். நம்ம சுந்தரி, சாலை பாதுகாப்பு வார விழாவில் நடந்த போட் டிக்கு ஒரு ஸ்லோகன் எழுதினாள் இல்லையா...?'' என்று ஆரம்பித்து ஒரு இடைவெளி விட, சுந்தரிக்கு வியர்த்தது.

இவள் இதை ஏன் இப்போ ஆரம்பிக்கிறாள்? தானா வது கடிதத்தைப் பற்றிக் கவலைப் படாமல் வாயை மூடிக் கொண்டு இருந்து இருக்கலாம். 'ப்ச்! ரொம்ப லேட்டா யோசிக்கிறாயே சுந்தரி?' என்று மனசாட்சி இடித்தது.

'நீ ஆரம்பிக்கவில்லை என்றாலும் பாட்டி கோவிலில் இருந்து வந்த உடனே கேட்டு இருப்பார்களே? அப்ப எப்படியும் இந்த பேச்சு வந்து தான் இருக்கும். சும்மா இரு...' என்று கூடவே மூளை அதட்டியது.

''ஆமா! அதுல ஜெயித்து மொபைல் போன் பரிசு கூட இரண்டு நாட்களுக்கு முன்பு வந்ததே?'' என்று

பாட்டி சொல்ல, ''ஆமா! ஆமா! அதேதான் பாட்டி...'' என்று அவசரமாக ஒத்து ஊதினாள் ராணி.

''அதுக்கென்ன இப்ப...? அதான் முடிஞ்சு போச்சே...?'' என்று பதட்டமாகக் கேட்டாள் சுந்தரி.

சில நிமிடங்கள் முன்பு தான், இந்தக் கடிதத்தை எப்படியும் அப்பா கண்ணில் காட்டி விட வேண்டும் என்று துடித்த துடிப்புக்கும் இப்போது நிலைமை மேலும் மோசமாகாமல் தடுப்பது எப்படி என்ற யோசனைக்கும் இடையே ஏகப்பட்ட முரண்பாடு இருந்தது உறைக்கவே இல்லை.

''என்ன கதை பேசிட்டு இருக்க? சும்மா வளவள வென்று இழுக்காமல் சட்டுன்னு விஷயத்தைச் சொல்லு அப்பா முகம் பதட்டமா இருப்பது உன் கண்ணில் படலையா ராணி'' என்று கமலம் அதட்ட அவள் நேராகக் கை கட்டி நின்றாள்.

''அந்த போட்டியில் கலந்து கொள்ள சொன்னது நான் ஸ்லோகன் எழுதிக் கொடுத்ததும் நான். அதை உங்க ளிடம் எல்லாம் சுந்தரி சொல்லவில்லை என்றாலும் மறக்காமல் மாமாவிடம் அதாவது அவளுடைய வருங் கால மாப்பிள்ளை ஷ்யாமிடம் மட்டும், பரிசாகக் கிடைத்த அந்த போன் மூலமாக, சொல்லி விட்டாள். என்னுடைய எழுத்து திறமையை மேலும் வளர்த்து வெளிக் கொண்டு வர மாமா தான், சென்னை வானொலி நிலையத்தில் ஒரு நாடக போட்டி நடக்கப் போகுது. அதுல என்னை கலந்துக்கச் சொன்னாங்க. அதுல கலாட்டா கல்யாணம் என்ற தலைப்பில் ஒரு நகைச்சுவை வானொலி நாடகம் கிட்டத்தட்ட தயாராகி விட்டது. அதுல க்ளைமேக்ஸ்



எப்படி இருக்கணும் என்று நான் சுந்தரியிடம் டிஸ்கஸ் பண்ணிக் கொண்டு இருந்தேன். அதை அவள் மாமா விடம் சொல்லி இருப்பாள் போல. அதுக்காக இதை எழுதி அனுப்பி இருக்கிறார். இது நான் எழுதி இருக்கும் நாடகத்தில் இடையே வரும் வசனங்கள். இதை நான் இனிமேல் டெவலப் பண்ணனும். மாமாவிடம் கொடுத்து ஆல் இந்தியா ரேடியோவில் போட்டிக்கு பதிவு பண் ணனும். பரிசு வெல்லணும். இவளுக்கு ஒரு மொபைல் போன் கிடைத்த மாதிரி எனக்கும் ஒரு ஐ-பேடோ, லேப் டாப்போ கிடைக்கணும். அதை நான் வாங்கியே தீருவேன்!'' என்று மூச்சு விடாமல் பேசி முடிக்க அங்கே இருந்த நான்கு பேரும் திகைப்பில் வாய் மூடாமல் அவளையே பார்த்தனர்.

''ஹலோ...! என்ன அப்படிப் பார்க்கறீங்க! எங்கே சோடா? எங்கே கலர்? மைக் இல்லாமலே மூன்று நிமிஷம் மூச்சு விடாமல் பேசிய முத்தான நாடக ஆசிரியர் செல்வ ராணிக்கு ஜே! என்று கோஷம் போட மாட்டீங்களா? அதுக்கு நான் தனியா காசு கொடுத்து ஆளா கூட்டிட்டு வர முடியும்? அம்மா, அப்பா, பாட்டி, அக்கா, நீங்க தான் செய்யணும். சொல்லுங்க. ம்ம்ம்'' என்று மீண்டும் அழுத்தி சொல்லி விட்டுச் சிரிக்க இன்னும் கிருஷ்ண மூர்த்தியின் முகம் தெளியவில்லை.

நீளமாக ராணி சொன்ன விளக்கத்தில், சம்பந்தப்பட்ட சுந்தரி, தான் போட்டியில் பரிசு பெற்றதாக பொய் சொன்ன விஷயம் வெளியே தெரியவில்லை என்பதில் நிம்மதி!

மேலே ஏதாவது கேள்வி கேட்டு, ஏடாகூடமாக இவள் தன்னை மாட்டி விட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம்!

ஷ்யாமைப் பற்றி பெருமையாக நினைக்கும் தன் வீட்டினரை ஏன் திருத்த வேண்டும் என்ற எண்ணம்!

இந்தக் கல்யாணம் நடப்பது இப்போதைக்கு தடை படாது என்ற சந்தோஷம்! என்று பல்வேறு காரணங்கள் அவள் மனதில் நிழலாட அந்தப் பேச்சைத் துருவாமல் விட்டு விட்டாள் ஜூனியர் சுந்தரி.

அந்தக் கடிதத்தில் இருந்த தகவல் என்ன என்பதை நேரடியாகப் படிக்கவில்லை என்பதாலும், ராணி சொன்ன விளக்கத்தில் இருந்து, வருங்கால மனைவிக்கு மட்டும் இல்லாமல், அவளின் தங்கையின் வளர்ச்சிக்கும் உதவ நினைக்கும் ஷ்யாமின் நல்ல மனசு, மட்டுமே அவர் களின் நினைவில் நின்றதாலும் கமலம், மற்றும் சுந்தரி சீனியரின் மனம் நிறைந்து, முகம் மலர்ந்தது.

''அடேங்கப்பா! இவ்வளவு வேலை சத்தமே இல் லாமல் பண்றாரா மாப்பிள்ளை? பரவாயில்லையே, நல்ல மனசு தான். அன்னிக்கு நான் கூட போனில் பேசி னேனே? தங்கமான பிள்ளை! ரொம்ப மரியாதையா தெரிஞ்சான். சுந்தரி கொடுத்து வைத்தவள்...'' என்று திரிபுரம் பாட்டி பெருமையாக சொல்ல, அதை ஆமோ தித்தார் கமலம்.

''மாப்பிள்ளை மட்டும் இல்லைம்மா. அவங்க அம்மா கூட பெருந்தன்மை தான். இன்னிக்கு மதியம் பேசினாங்க என்று சொன்னேனே? சுந்தரியைப் பத்தி கவலைப் படாதீங்க அண்ணி, என் பொண்ணு மாதிரி பார்த்துக் கொள்கிறேன் என்று எப்படி அழுத்தம் திருத்தமா சொன் னாங்க தெரியுமா?'' என்று சந்தோஷமாக சேர்ந்து சொன் னவர் கமலம்.



''இந்த கடிதத்துல நீ சொன்ன மாதிரி விளக்கம் எதுவும் இல்லையேம்மா? நீ கேட்ட மாதிரி ஸ்க்ரிப்ட் அனுப்பி இருக்கேன் என்று நாலு வரி லெட்டர் கூட இல்லையே? மொட்டையா இருக்கே?'' என்று இன்னும் நம்பாமல் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி.

''என்னப்பா நீங்க! என்னை தான் நம்ப மாட்டீங்க. சுந்தரியைக் கூடவா நம்ப மாட்டீங்க? இந்த கடிதமே சுந்தரி, ஷ்யாம் மாமாவிடம் சொல்லி எழுதச் சொன்னது தான். இல்லை என்று சொல்லச் சொல்லுங்க பார்ப் போம்...'' என்று சவால் விடும் தொனியில் கேட்ட ராணி, 'சாமி அவள் மறுத்துடக் கூடாதே' என்று அவசரமாகப் பிரார்த்தனை செய்தாள்.

'தான் எழுதச் சொன்னது இவளுக்கு எப்படித் தெரி யும்?' என்ற குழப்பத்துடன் அப்பாவை பரிதாபமாகப் பார்த்து 'ஆமாப்பா' என்று இறங்கிய குரலில் சுந்தரி சொல்ல, இப்போது ராணி விழித்தாள்.

இதென்ன மொட்டை கடுதாசி இவள் எழுதச் சொன் னாளா? அடி பாவி! தான் ஊகமாக கணக்குப் போட்டது சரி தான். ஹய்யோ பாவம் ஷ்யாம்! அவரின் அன்பை புரிந்து கொள்ளாமல் இப்படி அலட்சியப் படுத்துகிறாளே என்ற ரீதியில் ஓடிய ராணியின் சிந்தனையை கிருஷ்ண மூர்த்தியின் குரல் கலைத்தது.

''என்னம்மா சொல்றே? இந்த மாதிரி கடிதம் நீ எழுதச் சொன்னாயா?'' என்று கிருஷ்ணமூர்த்தி நம்பாமல் மீண்டும் துருவ சுந்தரி பதில் சொல்வதற்கு முன்பு ராணி இடையிட்டாள்.

''ஹய்யோ! இந்த மாதிரி வாசகம் அக்கா சொல்லலை. நாடகத்திற்கான கருவைச் சொல்லி ஒரு க்ளைமேக்ஸ்

எழுதச் சொன்னாள் என்ற அர்த்தத்தில் அவள் பேசினால் அதை புரிஞ்சுக்காமல் கேள்வி கேட்கறீங்க? சரியான டியூப் லைட்டா இருக்கீங்களே...?'' என்று அப்பாவை சமாதானப்படுத்த முயன்றவள் பக்கவாட்டில் அக்காவை யும் முறைத்தாள்.

இவள் தான் லூசு என்றால் அவரும் இவள் பேச்சுக்கு ஆமாம் போடுகிறாரே! அவரை சொல்லணும். காதலுக் காக என்னென்னவோ தியாகம் பண்ணிய காதலர்களை இந்த உலகம் பார்த்து இருக்கும். ஆனால் இவர் அன்புக் காக அன்புக்குரியவளையே தியாகம் பண்ணத் தயாராக இருக்கிறார். அதற்காக தன்னையே தாழ்த்திக் கொள் கிறாரே!

என்ன மாதிரி மனிதர் ஷ்யாம்! அவர் படிப்பென்ன? பதவி என்ன? குடும்ப அந்தஸ்து என்ன? இவர் வேண் டாமா உனக்கு? லூசு... லூசு...! என்று மனதிற்குள் சுந்தரிக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தாள் ராணி. ராணி தன் முறைப்பில் சொல்ல நினைத்த விஷயம் சுந்தரிக்கு எந்த விதத்தில் புரிந்ததோ? அவள் அப்பாவிற்கு விளக்கம் சொல்ல முனைந்தாள்.

''ஆமாப்பா! ராணி சொல்ற மாதிரி நான் தான் அவ ரிடம்...'' என்று திக்கித் திணறிச் சொல்ல முயலும் போதே உள்ளே அலைபேசி மணி அடிக்கும் ஓசை கேட்க ராணி கை தட்டினாள்.

''வாவ்! அப்பா நீங்க என்னை நம்ப வேண்டாம். சுந்தரியை நம்ப வேண்டாம். உங்க மாப்பிள்ளை உங்க பெண்ணிடம் பேச அழைக்கிறார். அவரிடமே நேரே கேட்டுக்கோங்க...'' என்று சுந்தரியையும் ஷ்யாமையும் ஒரு சேர மாட்டி விட்டாள் ராணி.



''அப்படியா சுந்தரி? போனில் மாப்பிள்ளையா என்று பார்...'' என்று கேட்கும் போதே ராணியின் வார்த்தை களில் நம்பிக்கை வந்து விட்டது.

காரணம் வேறாக இருந்தாலும் சுந்தரி தான் ஷ்யா மிடம் அந்த கடிதத்தை எழுத சொன்னாள் என்ற அடிப் படை உண்மை அதில் புதைந்து இருந்ததால், திக்கித் திக்கி சுந்தரி பேசும் உண்மையை விட அடித்துப் பேசும் ராணியின் பொய்க்கு அந்த நேரத்தில் மகத்துவம் கூடித் தெரிந்தது.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல அவசரமாக அறைக்குள் ஓடோடி சென்று அலைபேசியை எடுத்த சுந்தரி, பதட்டத்தில் என்ன செய்கிறோம் என்று தெரி யாமல் கைக்குக் கிடைத்த பட்டனை அழுத்தியதில் ஸ்பீக்கர் மோடுக்கு மாறியது.

எதிர்முனையில், ''ஹாய்.. நான் தான்... மதியத்தில் இருந்து உன்னிடம் பேச எத்தனை முறை முயற்சி செய்தேன் தெரியுமா? ஏன் போனை எடுக்க இவ்வளவு நேரம்? லெட்டர் வந்துடுச்சா...?'' என்ற ஷ்யாமின் குரல் ஒலித்தது.

அவனின் அந்த வார்த்தைகள் அந்த சின்ன வீட்டில் இருந்த நான்கு பேரின் காதிலும் விழுந்து புன்னகையை மலர வைத்தது.

## 13



ஷ்யாம் அனுப்பிய கடிதத்தில் என்ன தகவல் இருக்கிறது என்பதை சுந்தரி அறிவதற்கு முன்பே, அந்த

கடிதத்தினால் எந்தப் பலனும் இருக்கப் போவதில்லை என்பது அவளுக்குப் புரிந்து விட்டது. ஆனாலும் அது குறித்து வருத்தம் எதுவும், சுந்தரிக்கு ஏற்படாமல் தடுத்த புண்ணியம் ஷ்யாமின் அலைபேசி அழைப்பிற்குச் சென்றது.

''ஹாய் நான் தான்'' என்று ஷ்யாம் ஆரம்பித்த வினாடியிலேயே அவளுக்கு அலைபேசி ஸ்பீக்கர் மோடில் இருக்கிறது என்பது புரிந்து விட்டாலும் அதை உடனடியாக சரியான சுவிட்சை கண்டு பிடித்து மாற்றத் தெரியாமல் தவித்த சில வினாடிகளுக்குள், அவன் பேசிய அந்த முதல் வாசகம், வீட்டில் இருந்த நான்கு பேருக்கும் கேட்டு விட்டது. அதைக் கேட்ட உடனேயே, அந்த இடத்தில் இருந்து ஒவ்வொருவராக நகர்ந்து சென்றதை கவனித்தவளுக்கு புன்னகை மலர்ந்தது.

''ஹலோ, சொல்லுங்க. என்ன இந்நேரத்தில் போன் பண்ணி இருக்கீங்க?'' என்று ஸ்பீக்கரை நிறுத்திய பின்பு விசாரித்தாள்.

''ஏன் இந்த நேரத்திற்கு என்ன? ரொம்ப லேட்டாகி விட்டதா? மணி எட்டரை தானே ஆகிறது?''

''லேட் என்று இல்லை. எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தோம்...''

''ஓ! இப்பவும் பக்கத்தில் ஆள் இருக்காங்களா?'' என்றவன் குரல் ரகசியமாகக் கேட்க அவள் சிரித்தாள்.

''உன்னை எந்த நேரத்தில் அழைத்தால் போனை சந்தோஷமாக எடுப்பாய் என்று சொல்லு. அந்த நேரத்தில் கூப்பிடுகிறேன். இப்ப பேசலாமா வச்சுடவா?'' என்று கேட்டவன் குரலில் ஆர்வம் இருப்பதை அவளால் உணர முடிந்தது.



''இல்லை... இல்லை... பேசலாம்... சொல்லுங்க...''

''போனை எடுத்த உடனேயே, உன்னை ஒரு கேள்வி கேட்டேன். நீ தான் பதில் சொல்லணும்.''

''அது... அந்தக் கடிதம் வந்து விட்டது... ஆனால்...''

''உங்க வீட்டில் ஏதாவது பிரச்னை விட்டதா? அதான் போனை எடுக்க இவ்வளவு தயங்கினாயா?'' என்று கவலையுடன் கேட்டான் ஷ்யாம்.

''இல்லை. பிரச்னை ஒன்றும் இல்லை. ஆனால் நான் கொஞ்சமும் எதிர்பாராமல், ராணி அந்த கடிதத்தை நீங்க அவளுக்கு எழுதிய டிராமா ஸ்கிரிப்ட் என்று சொல்லி விட்டாள். ஏன் என்று ஒன்றும் புரியவில்லை...''

''ட்ராமா... என்ன ட்ராமா? என்ன ஸ்கிரிப்ட்...? நான் ஏன் உன் தங்கைக்கு அனுப்பணும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை...''

''இங்கே இருந்த எனக்கே ஒன்றும் புரியலை. அப்புறம் எங்கே உங்களுக்குப் புரியறது?''

''ஆனால் அவள் ஏன் அப்படிச் சொல்லணும்? நீ திருப்பிக் கேட்க வேண்டியது தானே?''

''எங்கே இருந்து கேட்பது? நான் சாலை பாதுகாப்பு வார விழாக்கான போட்டியில் கலந்து கொண்டு பரிசு வாங்கியது போல அவள் ஆல் இந்தியா ரேடியோவில் நாடகம் எழுதி லேப்டாப் பரிசு வாங்க வேண்டுமாம். இதையும் அதையும் தொடர்பு படுத்திப் பேசும்போது நான் எப்படி மறுப்பது? எங்கே இருந்து பேசுவது?'' என்று சுந்தரி சலித்துக் கொள்ள அவன் சிரித்தான்

''கதை அப்படிப் போகுதா? உன் தங்கை ஸ்மார்ட். தங்கைகள் எல்லாமே அப்படி தான் இருக்காங்க.

இந்தக் கடிதத்தின் பலன் அங்கே பூஜ்யம் என்று சொல்லு...''

''ம்கூம்! நான் என்ன பண்றது? எல்லாம் ராணி பண்ணிய குளறுபடி...''

''ஆனால் அவள் ஏன் அப்படிச் செய்தாள்?''

''தெரியலையே!!? இத்தனைக்கும் உங்களிடம் பேசுதற்கு முன்பு, இந்தக் கல்யாணத்தை நிறுத்த ஐடியா கொடுக்கிறேன் என்று என்னுடன் ஒரு பட்டுப் புடவை வியாபார ஒப்பந்தம் போட்டவள், நேற்று அப்படியே பச்சோந்தி மாதிரி நிறம் மாறி எதிர் அணிக்குப் போனது ஏன் என்று தெரியலை...'' என்று அவள் சொன்ன விதத்தில் ஷ்யாம், சட்டென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?'' என்று கேட்கும் போதே இசை கல்லூரியில் பேசும்போது அவன் சிரித்த அழகு கண்ணில் மின்னி மறைய, அவளின் மௌனம் சில கணங்கள் கூடுதலாக நீண்டது.

''ஹலோ... லைனில் இருக்கின்றாயா? நான் பேசுவது கேட்கிறதா?'' என்று அவன் அழுத்திச் சொல்லவும் அவன் முன்னால் பேசிய வாக்கியத்தின் பின் பகுதி நினைவில் வந்தது.

இப்போ என்ன நினைத்தாய் என்ற கேள்வியை தவிர்ப்பதோடு, 'நீ பேசுவது எனக்கு கேட்கிறது' என்று அழுத்திச் சொல்வதற்காக, ''அதென்ன எல்லா தங்கைகளும் என்று பொதுவாகச் சொல்றீங்க? அங்கேயும் கடிதத்தால் ஒரு வேலையும் நடக்கவில்லையா?'' என்று சுந்தரி கேட்க, ஷ்யாமின் சிரிப்பு வினாடியில் காணாமல் போனது. வெறுமனே 'ம்ம்ம்...' என்று சொன்னான்.



''என்ன வெறும் ம்ம்ம் சொல்றீங்க? கடிதம் வந்ததா? உங்க அம்மா பார்த்தாங்களாம்? என்ன சொன்னாங்க? என்ன ஆச்சு சொல்லுங்க...''

''என்னத்தை சொல்றது? நீ போட்ட கடிதம் குப்பை தொட்டிக்குப் போயாச்சு...''

''ஹய்யோ ஏன்? உங்க அம்மா நீங்க சொல்வதைக் கேட்க மாட்டாங்க. ஆனால் எனக்கு விருப்பம் இல்லை என்று சொன்னால் மதிப்பு கொடுப்பாங்க என்று சொன்னீங்களே? ஏன் என்ன ஆச்சு?''

''ஆமா! என்ன ஆச்சு என்று என்னைக் கேளு. கடிதத்தை நீயே போஸ்ட் பண்ண வேண்டியதுதானே? யாரிடம் கொடுத்தாய்?''

''சுபாஷினி என்று என் பிரெண்டிடம் கொடுத்தேன். அப்பா என்னை பிக் அப் பண்ண காலேஜுக்கு அவரே வண்டி எடுத்துக் கொண்டு வந்து விட்டார். அவரிடம் இடையில் நிற்க சொல்ல முடியாதே. என்று அவளிடம் கொடுத்தேன். இன்னும் என்ன ஆச்சு என்று சொல்லவே இல்லை...''

''சொல்றேன். சொல்றேன். அந்த சுபாஷினி சென்னை பொண்ணா?''

''ஆமா...!''

''அதனால மேடம் திருவையாற்றில் போஸ்ட் ஆபீசே இல்லாத மாதிரி அங்கிருந்து சென்னைக்கு வந்து திருவல்லிக்கேணி போஸ்ட் ஆபீசில் போஸ்ட் பண்ணி இருக்காங்க. அதை எங்க வீட்டில் இருக்கும் சி.பி.ஐ. ஆபீசர் துப்பறிஞ்சு கண்டு பிடிச்சு சொல்ல, அதை நான் தான் எழுதினேன் என்று விசாரணையே இல்லாமல் எங்க

அம்மா முடிவு பண்ணி, அந்தக் கடிதம் குப்பைத் தொட்டிக்குப் போய்டுச்சு...'' என்று ஷ்யாம் சொல்லி முடிக்க, இப்போது சிரிப்பது சுந்தரியின் முறை ஆனது.

''என்ன இப்படிச் சிரிக்கிறாய்? உனக்கு ஒன்றும் வருத்தமா இல்லையா?'' என்ற ஷ்யாமின் தாழ்ந்த குரல் கேட்டதும் தான் அவளுக்கு உரைத்தது.

ஓ! அவனும் திருமணம் வேண்டாம் என்று சொன்னானே? அதை நிறுத்தும் திட்டங்கள் குறித்துப் பேச மொபைல் போன் எல்லாம் வாங்கிக் கொடுத்ததை மறந்து விட்டு, அந்த திட்டம் இப்படி தோற்ற வருத்தத்தில் அவன் இருக்கும்போதுதான் இப்படி சிரிக்கலாமா என்று மனசாட்சி உறுத்த அவள் அவசரமாக சிரிப்பதை நிறுத்தினாள்

''ப்ச்! சுபா! இப்படிச் செய்வாள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. நீங்க கரெக்டா. அதுவும் சீரியஸா உங் களுக்கு வேறு திருமணமே முடிந்து விட்டது என்று எழுதி முறையா போஸ்ட் பண்ணிய கடிதமே இங்கே இப்படி ஆகி விட்ட போது, என் கடித ஐடியா சொதப்பிய தில் ஆச்சரியமே இல்லை. சாரி சார்...''

''மை காட்! மறுபடியும் சாரி ப்ளஸ் சாரா? அடுத்து என்ன பண்ணலாம் என்று யோசி சுந்தரி...''

''ஓ...! சாரி. இனிமேல் நான் சார் சொன்னால் அந்த நிமிஷமே நீங்க போனை கட் பண்ணிடுங்க ஓகே...?''

''சாரி சொன்னாலும்...''

''ஓகே சார்...''

''சுந்தரீஈஈ'' என்று பல்லைக் கடித்ததில் சப்தம் கொஞ்சம் அதிகமாகவே வந்துவிட, 'இரவு மகன்



சரியாகச் சாப்பிடவில்லையே' என்று ஹார்லிக்சுடன் சரியாக அந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த கௌசல்யாவின் காதில் அந்த வார்த்தை மட்டும் கனகச்சிதமாக விழுந்தது.

''சாரி ஷ்யாம். ஹார்லிக்ஸ் குடிச்சுட்டு தெம்பா இரவு முழுக்க தொடர்ந்து பேசு...'' என்று சிரிப்புடன் சொல்லி விட்டு அவசரமாக வெளியேறிய கௌசல்யாவின் முகம் முழுக்க சிரிப்பு இருந்தது.

''அம்மா நில்லுங்க...'' என்று இங்கே விளக்கம் சொல்ல முயன்றதை கேட்க கௌசல்யா தயாராக இல்லை என்றாலும் எதிர் முனையில் சுந்தரி தவித்தாள்.

''என்ன ஆச்சு?''

''ப்ச்! ஒன்றும் இல்லை. அம்மா ஹார்லிக்ஸ் எடுத்துட்டு வந்தாங்க. வச்சுட்டுப் போயட்டாங்க. நீ சொல்லு...''

''நானா? நான் என்ன சொல்ல...?''

''ம்ம்ம்... பின்னே? இதுக்காக தனியா கன்சல்டன்சியா வைக்க முடியும்? வேறென்ன செய்யலாம் என்று சொல்லு...''

''வந்து... கடிதம் சரியா வரவில்லை என்பதால்... போனில் யாரையாவது பேச சொல்லட்டுமா?''

''என்ன பேசச் சொல்வாய்...?''

''இதே தான்... இந்த திருமணத்தில் எனக்கு இஷ்டம் இல்லை...'' என்று ஆரம்பித்தவளின் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கியது. பேச்சுக்காக என்று வார்த்தை யாகக் கூட சொல்ல அவளால் முடியவில்லை.

''போனில் பேசும் ஆளும் சொதப்பினால் என்ன செய்வாய்? நீ என்னிடம் மடக்கி மடக்கி அன்று காலேஜில் கேள்வி கேட்டாயே? அந்த மாதிரி பேசணும். நீயே பேசுகிறாயா?'' என்று கேட்டதும் காரணம் புரியாமல் அவளுக்கு எரிச்சல் பொங்கியது.

''நானே எப்படிப் பேச முடியும்?''

''நீ தானே கல்யாணம் வேண்டாம். படிக்கப் போகிறேன் என்றாய்...'' என்று உடனே ஷ்யாம் சுட்டிக் காட்ட, சுந்தரிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

முகம் வாட, ''சரி சார். நானே பக்கத்தில் இருந்து கொண்டு, பேசச் சொல்கிறேன். இந்தக் கல்யாணத்தை நிறுத்துவது என் பொறுப்பு. நீங்க கவலைப் படாதீங்க'' என்று சொல்லி முடிக்கும் முன்பே எரிச்சலில் பட்டென்று போனை வைத்தான் ஷ்யாம்.

இவளைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம் என்று நினைத்த தானே, அவளைப் பார்த்து மனசு மாறி விட்ட போது, அவளும் மாறி இருக்கலாம் என்று யோசிக்காத தால், ஷ்யாமிற்கும் எரிச்சல் வந்தது.

'கல்யாணத்தை நிறுத்தியே தீருவேன்' என்ற அவளின் வைராக்கியத்தில் விளைந்த கோபத்தில் அவன் போனை வைக்க, 'சார்' என்ற வார்த்தையைச் சொன்ன தால் வைத்து விட்டான் என்று அவள் நினைத்தாள். தங்களின் மனதை தெளிவு படுத்திக் கொள்ளாமலேயே அடுத்த முயற்சி அங்கே விதைக்கப்பட்டது.

எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை என்று வார்த்தை யாகக் கூட தனக்குச் சொல்ல வரவில்லை, என்பதைப் புரிந்து கொள்ளாமல் என்ன மாதிரி அகட்டுகிறான்?



இவன் என்னைப் படிக்க வைக்க உதவுகிறேன் என்று சொன்னதற்கு பிரதி உபகாரமாக இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறான் போல!

இந்த எண்ணம் வந்ததும் பெருமூச்சு வெளியேறியது. அதைச் செய்வது தன் கடமை. அதை சந்தோஷத்தோடு செய்ய வேண்டும். முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டாம். ஷ்யாமிடம் பேசி முடித்த உடனே, பல குரலில் பேசும் திறமை கொண்ட, தொலைகாட்சியில் மிமிக்ரி நிகழ்ச்சி செய்ய ஆர்வமும் உடைய தன் பெரியப்பா மகனான கார்த்திக்கை அழைத்தாள்.

''கார் மேகம் கனிவோடு கொஞ்சும் கோடை கால நிலவை கண் குளிர ரசிக்கும் கார்த்திக்கை, அகால நேரத்தில் அழைக்கும் அன்பு தங்கையே! என்ன வேண்டும் சொல்லு...'' என்று கலைஞரின் கரகரத்த குரல் கேட்க, அவனை அழைக்கும் போது இருந்த கொஞ்ச நஞ்ச வருத்தமும் வினாடியில் காணாமல் போனது.

''எப்ப பார்த்தாலும் அடுத்தவங்க குரலை கடன் வாங்கியே பேசுகிறாயே? ஒழுங்கா உனக்கு என்று இருக்கும் குரலில் பேசவே மாட்டாயா?'' என்று சிரிப்புடன் கேட்டாள் சுந்தரி.

''பிரபலமா இருப்பவர்களின் குரலில் பேசினால் அதை கேட்பவர்களுக்கு எந்தக் குரலில் பேசுகிறேன் என்று கண்டு பிடிக்க ஒரு டெஸ்ட் மாதிரி! அதை நீ சரியா கண்டு பிடித்தால் ப்ராக்டீஸ் பண்ணுவது பிரயோஜனமா இருக்கு என்று ஒரு சின்ன சந்தோஷம் கிடைக்கும். சரி சொல்லு. என்ன விஷயம்?''

''நாளைக்கு உனக்கு நிஜமாவே ஒரு பெரிய டெஸ்ட் வைத்து இருக்கேன். பதினோரு மணிக்கு வீட்டுக்கு வா. நான் சொல்லும் டயலாக்கை, சொல்லும் நம்பரில் வேறே ஏதாவது குரலில் பேசி விட்டால் உனக்கு டி.வி.யில் ப்ரோக்ராம் பண்ண சான்ஸ் கிடைக்கும்...''.

''ஹா! நிஜமாவா சொல்கிறாய்? அப்ப ஏன் இத்தனை நாளா என்னிடம் நீ இதைப் பற்றிச் சொல்லவே இல்லை...''

''இப்ப தானே எனக்கு சென்னையில் இவர் இருப்பதே தெரிந்தது...''

''ஓ! ஷ்யாம் சார் மூலமான ஏற்பாடா? பரவாயில் லையே! கல்யாணமே இன்னும் முடியலை. அதற்குள் உன் சிபாரிசுக்கு இவ்வளவு மரியாதையா? ஜமாய்...'' என்று அவன் சந்தோஷமாக போனை வைக்க அவளுக்கு உள்ளுக்குள் உதறலாக இருந்தது.

முதலில் இது தன் கல்யாணத்தை நிறுத்தும் முயற்சி என்று தெரிந்தால் ஒத்துக் கொள்ள மாட்டான். பேசப் போவது ஷ்யாமின் தாயிடம் என்று தெரிந்தால் அவ் வளவு தான் நாலு கால் பாய்ச்சலில் ஓடி விடுவான். அதைச் சொல்லாமல் பேச வைக்க வேண்டும். என்ன செய்யலாம் என்று இரவு முழுவதும் விழித்து வசனங் களை தயார் பண்ணியவள் மறுநாள் காலை எழுந்ததும் அம்மாவிடம் வந்து நின்றாள்.

''அம்மா... இன்னிக்கு தாரிணி கல்யாணத்திற்கு நான் கட்டாயம் வரணுமா?'' என்று பவ்யமாகக் கேட்டாள்.

''எல்லோரும் போகலாம் என்று அப்பா சொன்னாங் களே! ஏன் கேட்கிறாய்?''



''ஜுரம் வர மாதிரி இருக்கும்மா. கல்யாண சாப்பாடு வேண்டாமே என்று பார்த்தேன். ரெண்டு இட்லி சாப்பிட்டு, க்ரோசின் ஒண்ணு போட்டுட்டு படுத்துக் கறேன்மா. சாயங்காலம் சரியாகிடும்...'' என்று உடல் நிலையைக் காரணம் காட்டி மறுக்க அவர் தயங்கினார்.

''அப்பா, பாட்டி. ராணியோடு போயிட்டு வரட்டும். நான் உனக்கு துணையா இங்கேயே இருக்கிறேன்...'' என்று கவலையோடு சொல்ல, அவள் அலறத் தயாரான தொண்டையை இறுக்கிப் பிடித்தாள்.

''அதெல்லாம் வேண்டாம்மா. நீங்க போகலை என்றால் வத்சலா அத்தை உங்களை உண்டு இல்லை என்று ஒரு வழி பண்ணிடுவாங்க. அத்தோடு பாட்டி மூணு பேரா போகக் கூடாது என்று ராணியை வேண் டாம் என்று சொன்னால் வீடு என்ன கதையாகும் என்று யோசித்துப் பாருங்க...' என்று இரண்டு பெரிய பூகம் பங்கள் நிகழக் கூடிய அபாயத்தை சமயோசிதமாக சுட்டிக் காட்ட அவர் வேகமாக சம்மதம் சொன்னார்.

''ஹையோ! நல்ல வேளை ஞாபகப் படுத்தினாய். இல்லை நாளைக்கே நடு ரோட்டில் நின்று சத்தம் போட்டு சண்டைக்கு இழுக்கலாம். எதற்கு வம்பு? நானே போயிட்டு வந்து விடுகிறேன்'' என்று கமலமும் திரு மணத்திற்குக் கிளம்ப, நிம்மதிப் பெருமூச்சை விட்டாள் சுந்தரி.

''கதவைப் பூட்டிட்டு ரெஸ்ட் எடு...'' என்று பாட்டி.

''காலைக்கு இட்லியும் மதியத்துக்கு சாதமும் ரசமும் வச்சு இருக்கேன். சாப்பிட்டுவிடு...'' என்று அம்மா.

''மறக்காமல் மாத்திரை போட்டுக்கோ...'' என்று அப்பா மூவரும் அக்கறையோடு ஆளுக்கு ஒரு

வாக்கியம் பேச, அளை விசித்திரமாகப் பார்த்தாள் செல்வராணி.

இவள் ஒன்றும் இயல்பில் நோஞ்சான் இல்லை. திடீர் என்று காய்ச்சல் எப்படி வந்தது? உடல்நிலை சரி இல்லை என்று இவள் சொல்வதை நம்ப முடியாது. இவள் வேறு எதோ திட்டம் போட்டு வீட்டில் தங்கு கிறாள் என்று உள்ளுணர்வு சொன்னது.

''அம்மா, நீங்க முன்னாடி போங்க. நான் தண்ணீர் குடித்துவிட்டு ஒரே நிமிஷத்தில் வந்து விடுகிறேன்...'' என்று அவசரமாக அடுக்களைக்குள் சென்றவள் வேண்டும் என்றே சில நிமிடங்கள் இழுக்க அவள் எதிர் பார்த்தபடியே பாட்டியால் அதிக நேரம் நிற்க முடியாது என்பதால், அவர்கள் மெல்ல நடக்க ஆரம்பித்தனர்.

''ஹலோ... மிஸ்...! ஜுரம் என்று கல்யாண வீட்டுக்கு டிமிக்கி கொடுத்து இருக்கீங்க. நீங்க ஏதாவது பு..து.. க...தை.. இன்னிக்கு எழுதப் போறீங்களா?'' என்று இடுப்பில் கை வைத்து நின்று அவளை நேராகப் பார்த்து, கேலியாகக் கேட்க அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன உளறுகிறாய்?'' என்று உள்ளுக்குள் தோன்றிய பதட்டத்தை மறைத்து கெத்தாகவே சொல்ல முயன்றாள் சுந்தரி.

''நான் உளறலை. நேற்று போஸ்டில் வந்த அந்தக் கடிதம் எழுதியது நீ தானே? நேற்று உன்னுடைய ப்ளான் வொர்க் அவுட் ஆகலை என்று இன்னிக்கு வேறே பிளான் பண்ணுகிறாயா என்று கேட்கிறேன்...''

''நான் எழுதலை என்று சொன்னால்...''



''நான் நம்ப மாட்டேன்'' என்ற பதில் துப்பாக்கியில் இருந்து வரும் புல்லட்டை விட வேகமாகப் பறந்து வந்தது.

''ஓகே, நீ நம்பினாலும் நம்பா விட்டாலும் உண்மையை யாராலும் மறைக்க முடியாது. நான் எழுதலை. நான் சொல்லி ஷ்யாம் எழுதினார். எனக்கு எதிரா இருப்பாங்க என்று நான் பாய்ந்தவங்க எனக்கு உதவி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் நீ...? எனக்கு உதவி செய்வதாக வாக்களித்ததை மறந்து விட்டு கட்சி மாறி அவர் செய்த உதவியை பலன் கிடைக்காமல் செய்து விட்டாய். இனிமேல் உன்னை நம்பி பிரயோஜனம் இல்லை. என் வழியை நானே பார்த்துக் கொள்கிறேன். நீ கிளம்பு...'' என்று அவள் கரம் குவித்து வழி அனுப்ப ராணியின் கவலை மேலும் கூடியது.

நேற்றைய நிகழ்விற்குப் பிறகு இங்கே இவள் முயற்சி செய்ய மாட்டாள். ஒருவேளை அங்கே சென்னையில் ஷ்யாம் வீட்டினரிடம் இது மாதிரி ஏதாவது கடிதம் போனால் நன்றாக இருக்காதே? அப்பாவிடம் சொல்லி அங்கே பேசச் சொல்லலாமா என்று யோசித்தவள் உடனே அந்த யோசனையைக் கை விட்டாள்.

அப்பாவிற்கு ஏற்கனவே உடல்நிலை சரி இல்லை. வேண்டாம்! அவர் மனசை போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். பக்குவமாக அங்கே அந்த ஆன்ட்டியிடம் பேசி விட்டால் என்ன? பேச தனக்கு சொல்லித் தர வேண்டுமா? ஒரு தடவை முடிவெடுத்து விட்டால், என் பேச்சை நானே கேட்க மாட்டேன்' என்ற அடிப்படையில் முடிவெடுத்த பின் என்ன யோசனை?

அடுத்து கிடைத்த இடைவெளியில், திருமண வீட்டில் இருக்கும் போதே, சுந்தரி கார்த்திக்கை வீட்டிற்கு வர சொன்ன நேரத்திற்கு சரியாக ஐந்து நிமிடங்கள் முன்பு, அப்பாவின் அலைபேசியில் இருந்து கௌசல்யாவை அழைத்து ''ஹலோ அத்தை, நான் ராணி பேசுகிறேன்... எப்படி இருக்கீங்க?'' என்று ஆரம்பித்தாள்.



## 14

திருமணத்தை நிறுத்த சுந்தரி என்ன திட்டம் போட்டு இருக்கிறாள் என்பது சரியாக தெரியாத நிலையில், மாப்பிள்ளை வீட்டில் உஷார் படுத்தி வைக்க என்ன செய்யலாம் என்று யோசித்த ராணிக்கு, ஷ்யாம் கௌசல்யா இருவரில் யாரிடம் பேசுவது என்ற குழப்பம் வந்தது.

ஷ்யாம் பேசியதில் காவல் துறை அதிகாரி என்ற கறார் தனம் தெரிந்தது. அவங்க அப்பாவிடம் பேசும்போது புதிதாக அறிமுகப்படுத்திக் கொண்டு, உடனே குண்டு போடுவதெல்லாம் நடக்காத கதை.

ஆனால் நேற்று மதியம் போனில் பேசிய கௌசல்யா ஆன்ட்டி ரொம்ப கனிவாகவும், உற்சாகத்துடனும் பேசினார்கள். எனவே அவரிடமே கோடி காட்டலாம் என்று முடிவுக்கு வந்து, திருமண வீட்டிற்கு வந்திருந்த மாமா மகன் சந்தோஷிடம் மொபைல் போனுக்காக வந்து நின்றாள்.



''ஹாய் சந்தோஷ்! என்ன தனியா சுத்திட்டு இருக்க? கார்த்திக் எங்கே காணோம்?'' என்று அவனிடம் பேச்சை ஆரம்பித்தாள்.

''கார்த்திக்குக்கு சென்னையில் டி.வி.யில் ஏதோ மிமிக்ரி ப்ரோக்ராம் பண்ண சான்ஸ் பரிந்துரை செய்ய யாரையோ பார்க்கப் போகிறேன் என்று சொன்னான். அது சரி என்னை கேட்கிறாயே? சுந்தரி எங்கே காணோம்? நீ மட்டும் தனியா வந்து இருக்க?'' என்று எதிர் கேள்வி கேட்டான்.

''நல்ல வேளை ஞாபகப் படுத்தினாய் சந்தோஷ். அவளுக்கு ஜுரம். அதான் வரலை. போன் கொடு. சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டாளா என்று அவளிடம் ரெண்டு வார்த்தை பேசிட்டு தருகிறேன்...'' என்று கையை நீட்டிய ராணி தான் கேட்காமலேயே, அவனே போனை தாரை வார்க்கக் கொடுத்ததை எண்ணி சிரித்துக் கொண்டாள்.

''ரெண்டு வரி பேசிட்டு தரேன் என்று வாங்கி இருபது கால் பேசுவியே? போனை திருப்பி தரும்போது மிச்ச டாக் டைம் ஏதாவது இருக்குமா? உன்னை நம்பித் தரலாமா?'' என்று கேலி பேசியபடியே நீட்டினான்.

''அட பாவி! உங்க அப்பாவுடன் கூடப் பிறந்த அத்தை பொண்ணுக்கு ஒரு போன் கொடுக்க இப்படி அலுத்துக்கற...? சம்பாதிக்கிற பசங்களே இப்படி கஞ்சத் தனம் பண்ணினால், வேலைக்குப் போகாத பொண்ணுங்க நாங்க என்ன பண்றது? பத்து இருபது ரூபாய் கூட சமாளிக்க முடியாத பரம ஏழையா நீ? உன்னை நம்பி, மாமா நித்திக்கு அடுத்த வாரம் கல்யாணம்

வேறே வச்சு இருக்காங்க. பாவம் மாமா...'' என்று அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள்.

''நித்தி கல்யாணத்தைப் பற்றி நீ கவலைப் படாதே! அதெல்லாம் மாமா கொடுத்த பணத்தை வைத்து ஜாம் ஜாம் என்று நடத்தி விட மாட்டேன்? அவ கல்யாணம் முடிந்தால் தானே, எனக்கு ரூட் கிளியர் ஆகும். அதுக்கே சுந்தரி மூலமா அவரிடம் பேசணும் என்று இருக்கேன்...'' என்று அவன் சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் வேலை முடிந்ததும், போனுடன் அந்த இடத்தில் இருந்து சற்று தொலைவிற்கு நகர்ந்தாள்.

அப்பாவிடம் எப்போதோ கேட்டு இருந்த எண்ணை நினைவுக்குக் கொண்டு வந்து, நம்பர் சரியாக இருக்க வேண்டுமே என்ற வேண்டுதலுடன், அழைத்த ராணிக்கு எதிர்முனையில் கௌசல்யாவின் குரல் கேட்டதும் உற்சாகம் பெருக்கெடுத்தது.

''அத்தை, நான் திருவையாற்றில் இருந்து ராணி பேசுகிறேன். எப்படி இருக்கீங்க?'' என்று சந்தோஷமாக விசாரித்தாள்.

''ஹேய் ராணி...! சின்ன மருமகளே! நேற்று மத்தியானம் உன்னிடம் பேசும் போது எப்படி இருந்தேனோ, அதே மாதிரியே இருக்கேன். நீ எப்படி இருக்கிறாய்? முடி நரைத்தல், தோலில் சுருக்கம் விழுதல், வெயிட் கூடுதல், குறைதல் என்று உன்னிடம் ஏதாவது மாற்றம் இருக்கா?'' என்று அடையாளம் கண்ட கௌசல்யா சிரிப்புடன் விசாரிக்க அவளுக்கும் சிரிப்பு பொங்கியது.

''ஹையோ... அத்தை நானும் உங்களுடன் பேசும் போது எப்படி இருந்தேனோ, அப்படியே தான் இருக்கேன். உங்களுக்கு இந்த வயசிலேயே முடி நரைக்க வில்லை என்றால் அதுல மூன்றில் ஒரு பங்கு இருக்கும் எனக்கு எப்படி அத்தை முடி நரைக்கும்? நல்லா கரு கருவென்று நீளமா இருக்கு. உங்களுடன் பேசுவது ரொம்ப ஜாலியா இருக்கு அத்தை...''



''குட் குட்... எனக்கும் ஜாலியா தான் இருக்கு. சுந்தரி எப்படி, அவளும் உன்னை மாதிரி கலகலப்பா பேசு வாளா?'' என்று சந்தோஷமாக கேட்டார்.

''சுந்தரி கொஞ்சம் சீரியஸ் தான் அத்தை. ரொம்ப ஜோக் அடிக்க மாட்டாள். ஆனால் நான் பேசுவதை ரசிப்பாள். அம்மா ரொம்ப வாய் பேசுகிறேன் என்று என்னை திட்டும் போது எனக்கு சப்போர்ட் பண்ணு வாள். ரொ...ம்...ப... ந..ல்..ல...வ..ள்..'' என்று பாராட்டு பத்திரம் வாசித்தாள்.

''அது சரி, ஆல் இன் ஆல் அழகு ராணியே தன் அக்காவை ரொம்ப நல்லவள் என்று சர்ட்டிபிகேட் கொடுத்த பிறகு எனக்கென்ன சந்தேகம்? சுந்தரி பக்கத் தில் இருந்தால் கொடேன். பேசுறேன். நேற்றே அவ ளிடம் பேச முடியலை...''

''இல்லை அத்தை. நான் அம்மா அப்பாவோடு எங்க சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு வந்து இருக்கேன். அவள் வீட்டில் இருக்கிறாள். கொஞ்சம் உடம்பு சரி இல்லை...''

''ஹைய்யோ...! என்ன ஆச்சு? வீட்டுல தனியாவா இருக்கிறாள்? உடம்பு சரி இல்லை என்றால் யார் அவளைப் பார்த்துக் கொள்வா?'' என்று அக்கறையுடன் விசாரிக்க அவளின் மனம் குளிர்ந்தது.

''அத்தை... உங்களிடம் சொல்வதற்கு என்ன? அவ ளுக்கு உடம்பு சரி இல்லை என்பதைவிட மனசு சரி இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நான் உங் களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். நான் சொல்றது.. எங்கே வீட்டுல கூட யாருக்கும் தெரிய வேண்டாம்...'' என்று குரலைத் தாழ்த்தி, சுற்றிலும் பார் வையை ஓட்டியபடி பேச்சை ஆரம்பித்தாள்.

''என்ன ராணி சொல்கிறாய்?'' என்ற கௌசல்யாவின் குரலில் கேலியும் சந்தோஷமும் வினாடியில் காணாமல் போக, முதல் நாள் வந்த கடிதம் நினைவில் ஆடியது.

''நான் சின்ன பொண்ணு. எனக்கு சில விஷயம் தெரியாது என்று பெரியவங்க நினைத்துக் கொள்ளலாம். ஆனால்... நான் பார்த்த வரை... எனக்குப் புரிந்ததைச் சொல்கிறேன்... நீங்க அதுக்கு தகுந்தாற்போல... நடவடிக்கை எடுத்துக்கோங்க.''

''ராணி, பீடிகை போடாதே பட்டுன்னு விஷயத்தைச் சொல்லு...''

''அ..து அ..து.. நேற்று எங்க வீட்டுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில உங்க பையனுக்கு ஏற்கனவே வேறே ஒரு கல்யாணம் நடந்து விட்டதாக...''

''ஹைய்யோ! அப்படி எல்லாம் இல்லை. அது பொய்'' என்று பதறினார் கௌசல்யா.

''ஷ்யாம் திருமணம் வேண்டாம். சொன்ன உண்மை அவளுக்கு தெரியாததால், ''பயப்படாதீங்க அத்தை. அதை நான் நம்பலை. அது அவள் மனசை பாதித்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். அவளிடம் நீங்க பேசினால் தைரியமாகி விடலாம். அத்துடன் அதே



மாதிரி ஏதாவது விஷமமான செய்தி உங்க வீட்டுக்கும் வரலாம். ஒரு வீட்டுல நல்ல காரியம் நடக்குது என்றால் பொறாமை பிடிச்ச சிலர், ஏதாவது குற்றம் சொல்வ தையே வேலையா வச்சுக்கிட்டு இருப்பாங்க. அதை ஒதுக்கித் தள்ளணும் இல்லையா? எங்க வீட்டில் நான் அதை சமாளித்து விட்டேன். உங்க வீட்டில் நீங்க பார்த் துக்கணும். அதற்கு தான் அவசரமாகக் கூப்பிட்டேன்'' என்று பதறிய கௌசல்யாவை, ஆசுவாசப்படுத்தி னாள்.

''மை காட்! ராணி, இதெல்லாம் உங்க வீட்டுல இருப் பவங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியும். ஆனால் தெரியாது...''

''என்ன சொல்ற ராணி...?'' என்று திகைப்புடன் கேட்டார்.

''லெட்டர் வந்தது தெரியும். ஆனால் அது ட்ராமா ஸ்கிரிப்ட் என்று சொல்லி சமாளித்து விட்டேன்...'' என்று போகிற போக்கில் சொல்ல, அவர் வாய் அடைத் துப் போனார்.

''ராணி... உனக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது? உங்க அக்கா கல்யாணம் நல்லபடியா நடக்க வேண்டும் என்று நீ நினைக்கலையா? நாளைக்கு இந்தக் கடிதம் உண்மை என்ற எண்ணம் வந்தால்...''

''நிச்சயமா எங்க அக்கா நல்லா இருக்கணும் என்று நினைக்கிறேன். அதுக்கு ஒரு போதும் மாற்று கருத்து வராது அத்தை. வரக் கூடாது. இங்கே எங்க வீட்டுல வேலை நடக்கலை என்று இதே மாதிரி உங்களிடம் முயற்சி செய்தால்...? அத்தை, நான் சொல்றேன் என்று

தப்பா எடுத்துக்க வேண்டாம். ஒருவேளை... இந்தக் கல்யாணம் வேண்டாம்... அவளுக்கு இஷ்டம் இல்லை... என்ற ரீதியில்... உங்களுக்கு தகவல் வரலாம்... அதை அவள் மனசார சொல்வது இல்லை என்ற நம்பிக்கை யோடு நீங்களும் அந்தத் தகவலை ஒதுக்க வேண்டும் அத்தை. அதுக்கு தான் உங்களிடம் சொல்கிறேன்...''

''ராணி... இப்படி முழு நம்பிக்கையோடு இந்த வார்த் தையைச் சொல்லி, என் வயிற்றில் பால் வார்த்ததுக்கே, உனக்கு ஏதாவது ஸ்பெஷலா நான் செய்யணும் ராணி. உங்க மாமா பொண்ணு நித்யா கல்யாணத்துக்கு நானும் ஷ்யாம் அப்பாவும் வருவோம். அப்ப உனக்கு என்ன வேண்டும் என்று சொல்லு. வாங்கிட்டு வரேன்...'' என்று வாக்குறுதி அளித்தார்.

''அத்தை... பரிசு பொருளுக்காகவா சொல்கிறேன்? சுந்தரிக்காக பேசுகிறேன் அத்தை. அதை ஞாபகம் வச்சுக்கோங்க. இன்னும் ஏதாவது முயற்சி இதே ரீதியில் நடக்கலாம் என்று கோடி காட்ட தான் என்று பேசினேன். ரொம்ப நேரம் ப்ளேடு போட்டு விட்டேன் என்று நினைக் கிறேன். வச்சுடட்டுமா?''

''சுந்தரியை தைரியமாக இருக்கச் சொல்லு. ஷ்யாம் அந்த மாதிரி பிள்ளை இல்லை. என் பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும். உடம்பையும் பார்த்துக்கச் சொல்லு. நீ என்ன சொல்றது? நானே பேசி விடுகிறேன்...''

''உங்க பிள்ளையை எனக்கு நேரடியா தெரியாது அத்தை. ஆனால் இப்ப உங்களிடம் பேசியதில், நீங்க அக்காவை நல்லா பார்த்துக் கொள்வீங்க என்று உங்க மேலே முழு நம்பிக்கை இருக்கு...''



''தேங்க்யூ... தேங்க்யூ.. தேங்க்யூ... அது இருக்கட்டும். ஆரம்பிக்கும்போது நல்லா ஜாலியா ஆரம்பித்து விட்டு, இவ்வளவு சீரியஸா பேசி முடிக்க வேண்டாமே ராணி. ஏதாவது சிரிக்கிற மாதிரி சொல்லிட்டு போனை வை...'' என்று கௌசல்யா சொல்ல, அவள் சிரித்தாள்.

''நீங்க கேட்ட பிறகு நான் முடியாது என்று சொல் வேனா அத்தை? நீங்க எனக்கு ஆசைப் பட்டு தருகிறேன் என்று சொன்ன பரிசு பொருளை, நான் வேண்டாம் என்று சொன்னதற்காக, நீங்க அப்படியேவா விட்டுடப் போறீங்க? உங்களுக்குப் பிடித்த மாதிரி, உங்க மருமகளுக்கு ஒரு வைர நெக்லஸ் வாங்க நினைக்கும் நீங்க, அவளுடைய தங்கைக்கு அட்லீஸ்ட் ஒரு தங்க நெக்லஸ் வாங்கித் தர மாட்டீங்களா என்ன? அது அடுத்த வாரமே வேண்டும் என்று கூடச் சொல்லலை அத்தை. கல்யாணத்துக்குள் கொடுத்து விட்டால் போதும்...'' என்று சிரிக்காமல் ராணி சொல்ல, அங்கே எதிர் முனையில் விழுந்து விழுந்து சிரிக்க ஆரமித்தார் கௌசல்யா.

* * *

தனக்கு உடல்நிலை சரி இல்லை என்ற ரீதியில் ஏதேதோ கதை சொல்லி, அம்மா அப்பா பாட்டியை ராணி யுடன் கல்யாண வீட்டிற்கு மூட்டை கட்டி அனுப்பிய பின்பே சுந்தரிக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. வீட்டை விட்டு கிளம்பிய போது, ராணி, தன்னை நம்பாமல் பார்த்தது அவ்வப்போது குழப்பியது.

அவள் திரும்பி வந்து விடுவாளோ என்ற பயத்தில் பூட்டி இருந்த வாசல் கதவை பார்த்துக் கொண்டே இருந்தாள். தொலைபேசி மணி அழைக்கும் போது கூட

வாசல் அழைப்பு மணி என்று வெளியே சென்று பார்த்தாள். அரை மணி நேரம் சென்ற பிறகே இனிமேல் ராணி திரும்பி வர சாத்தியம் இல்லை என்ற நிம்மதி வந்தது. காலை பத்து மணிக்கு கார்த்திக் வந்து சேர்ந்ததும், தைரியம் கூடியது.

''வா வா கார்த்திக், எங்கே வரமாட்டியோ என்று பயந்து கொண்டே இருந்தேன்...'' என்று உற்சாகமாக வரவேற்றாள்.

''வராமல் எங்கே போவேன்? கிளம்பும் போது தான், அம்மா அப்பா எல்லோரும் நித்யா கல்யாண வீட்டுக்குக் கிளம்ப, எங்கே நீ இருக்க மாட்டியோ என்ற சந்தேகம் எனக்கு வந்தது. நல்லவேளை நீ இருக்கிறாய். வா... வா... யாரிடம் எப்போ பேசணும்? என்ன பேசணும் சொல்லு...'' என்று ஆர்வமாக உள்ளே நுழைந்தான்.

''என்னோட ப்ரெண்ட் சுபாஷினி சென்னையில் இருக்கிறாள். அவளுக்கு அவங்க வீட்டுல வேறே வசதி யான மாப்பிள்ளை பார்த்துட்டாங்க. ஆனால், அவள்... அவளுக்கு அவங்க மாமா பையன் மேலே விருப்பம் அதை வீட்டில் சொன்னால் அவங்க ஒத்துக் கொள் ளலை. மறுத்து விட்டார்கள்...''

''ஹலோ ஹலோ... யார் இந்த சுபாஷினி? அவளுக் கும் எனக்கும் என்ன சம்பந்தம்? எதுக்கு இந்த தேவை இல்லாத கதை எல்லாம் என்னிடம் பேசிட்டு இருக்க?'' என்று விளக்கம் கேட்டான் கார்த்திக்.

''கொஞ்சம் பொறுமையா இருந்தால், விஷயம் புரியும். அதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்?'' என்று சமாளிக்கும் போதே அவசரமாக யோசித்தாள். இவன்



இப்படி எல்லாம் குறுக்கு கேள்வி கேட்பான் என்று எதிர் பார்க்கவில்லையே? நேற்று ராணி மட்டும் எவ்வளவு கோர்வையாகப் பொய்களை அடுக்கினாள்?

'அவளால் முடியும் என்றால் உன்னால் முடியாதா சீக்கிரமா யோசி. ஏதாவது சொல்லி சமாளி...' என்று தனக்குள் தைரியம் ஊட்டிக் கொண்டாள்.

''இரு உனக்கு காபி போட்டு எடுத்துட்டு வரேன் குடிச் சுட்டே பேசலாம்...'' என்று சொல்லியபடி அடுக்களைக் குள் நுழைய அவன் அலறினான்.

''காபியா? நீயா? வேண்டாம்மா. நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டு தான் வந்தேன். டி.வி.யில் மிமிக்ரி ப்ரோக்ராம் பண்ண சான்ஸ் கிடைக்கும் என்றாசையில் இங்கே வந்தால் நீ காபி போட்டு நான் குடிக்கும் அவ் வளவு பெரிய ரிஸ்க் எல்லாம் நான் கட்டாயம் எடுக் கணுமா சுந்தரி...? என் மேல் கொஞ்சம் கருணை காட் டக் கூடாதா?'' என்று கார்த்திக் கேலியாகச் சொல்ல, அவள் கோபமாக இருப்பது போல காட்டிக் கொண் டாள்.

''எனக்கு காபி போடத் தெரியாது என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று தேவை இல்லாமல் அவனிடம் சண்டைக்கு நின்ற அந்த கூடுதல் நேரத்தில் அவசரமாக யோசித்து வேகமாக முடிவெடுத்தாள்.

''அய்யய்ய! என்ன சுந்தரி? எப்ப நீ ராணி மாதிரி இப்படி வம்பு சண்டைக்குப் போக ஆரம்பித்தாய்? எனக்கு சாப்பிட ஒன்றும் வேண்டாம். ஆளை விடு. ஏதோ பேசணும் என்று சொன்னாயே. அதை பேசிட்டு. நான் திரும்ப கல்யாண வீட்டிற்குக் கிளம்புகிறேன்.

அம்மா வரச் சொல்லி இருக்காங்க...'' என்று முடிக்க அவள் தலை அசைத்து ஆமோதித்தாள்.

''ஓகே நம்ம விஷயத்துக்கு வா. சுபாஷினிக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை பிசினெஸ் மேன். ஆனால் அவளுக்குப் பிடித்த அவளின் மாமா பையன் டி.வி. ஸ்டேஷனில் வேலை செய்கிறார். அவருக்கும் சுபாவுக்கும் கல்யாணம் நடக்க உன்னுடைய மிமிக்ரி திறமை உதவி செய்தால் அதைச் சொல்லி, உனக்கு டி.வி.யில் ப்ரோக் ராம் பண்ண சான்ஸ் வாங்கித் தருவாள். இப்ப சம்பந்தம் வருதா?'' என்று மூச்சு விடாமல் சொல்ல அவன் முகத்தில் சந்தேகம் இன்னும் முழுசாகத் தீரவில்லை.

''நான் இப்போ யாரிடம் பேச வேண்டும்?''

''அவளுக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளையின் அம்மாவிடம்...''

''ஹையோ! அவங்க பணக்காரங்க என்று சொல்கிறாய்? நான் யார் என்ன என்று கண்டு பிடித்து போலீசில் புகார் செய்து விட்டால்...'

''ப்ச்! அப்படி எல்லாம் நடக்காது நான் பார்த்துக் கொள்கிறேன்...''

''என்ன பார்ப்பாய்? போலீஸ் ஸ்டேஷனில் என்னை முட்டிக்கு முட்டி தட்டிய பின்பு எங்கெங்கே வீங்கி இருக்கு என்று பார்ப்பாயா?''

''ஹைய! திருவிளையாடல் தருமி மாதிரி புலம்பாதே அப்படி ஏதாவது நடந்தால் ஷ்யாம் மாமாவிடம் சொல்லி சமாளித்துக் கொள்ளலாம் கவலைப் படாதே'' என்று அவள் சொன்னதும், 'ஓ...! அந்த தைரியம் தானா?'



என்று ராகம் பாடி இழுத்தவன் முகத்தில் பிரகாசம் கூடியது.

''இக்கட சூடு...'' என்று ரஜினி ஸ்டைலில் அவளிடம் சொன்னவன் அதே பாணியில் தொலைபேசியை எடுத்து, சுந்தரி காகிதத்தில் எழுதி நீட்டிய ஷ்யாம் வீட்டு எண்ணை ஸ்டைலாக அழுத்தி விட்டு, திரிசூலம் பட சிவாஜியின் குரலில், 'அம்மாடி... யாரு...? கௌசல் யாவா பேசுறே...?'' என்று கேட்க, போனை எடுத்த சைலஜா உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்.

''நான் கௌசல்யா இல்லை... அதே மாதிரி... நீங்க சொர்க்கத்துல இருந்து பேசும் சிவாஜி கணேசன் சாரா இருக்க முடியாது. நீங்க யார் பேசுறீங்க என்று முதலில் சொல்றீங்களா...?'' என்று கேலியாகக் கேட்டாள் சைலஜா.

''நான் யாரா? என்னையா யார் என்று கேட்டாய்? என்னை பார்க்க தான்... சுமாரா இருக்கும்... ஆனால் என் திறமை உனக்குத் தெரியாது...'' என்று பதட்டமாகப் பேசும் திருவிளையாடல் பட நாகேஷின் குரல் வந்து இருக்க, இப்போது சைலஜா சிரித்தாள்.

''உங்களை என்னால் பார்க்க முடிந்தால் சாதாரண மான ஆளா? திறமைசாலியா என்று கண்டு பிடித்து இருப்பேன். ஆனால் அதுக்கு வழி இல்லை என்பதால், நீங்க யார் என்று நீங்களே சொல்றீங்களா ப்ளீஸ்...'' என்று விடாமல் தன் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க, அடுத்து அவன் எம்.ஜி.ஆர். குரலில் பேச ஆரம்பிக்கும் போது போன் கௌசல்யாவிடம் கை மாறி இருந்தது.

''யார் சைலு?'' என்றபடி அருகே வந்த கௌசல்யா விடம், ''தெரியலைம்மா உங்க பேரை சொல்லி சிவாஜி

நாகேஷ் என்று விதம் விதமான குரலில் பேசி காமெடி பண்ணுகிறான்...'' என்று சொல்லி அம்மாவிடம் போனை கொடுத்தாள் சைலஜா.

''நான்... மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன். தாயைக் காத்த தனயன், என் தங்கைக்காக ரிக்ஷாக்காரன். படகோட்டியாக இருக்கும் மீனவ நண்பன், அறிமுகம் போதுமா?'' என்று எம்.ஜி.ஆர். குரலில் அவன் பேசிக் கொண்டு இருக்கும் போதே, இவன் திருவையாற்றில் இருந்து ராணி சொன்ன திட்டத்துடன் குரலை மாற்றிப் பேசுகிறான் என்ற சுலபமான முடிவுக்கு, வினாடியில் வந்த கௌசல்யாவின் முகத்தில் புன்னகை பெரிதாகப் பூத்தது.



# 15

கார்த்திக்கை குரலை மாற்றிப் பேசச் சொன்னால் பின்னால் யாராவது கண்டு பிடிக்க முயன்றாலும் தப்பிக்க வசதியாக இருக்கும் என்பதற்காக அவனை அழைத்து முன்னுரையாக ஒரு பெரிய சொற்பொழிவு நிகழ்த்தி, கௌசல்யாவிடம் பேச சொன்னால், இப்படி ஒரே நிமிஷத்திற்குள் மூன்று குரலில் பேசி சொதப்பி விட்டானே என்று சுந்தரிக்கு பதட்டமாக இருந்தது.

''ஏய் கார்த்திக்... ஏதாவது ஒரு குரலில் பேசு.. குரலை மாத்தாதே... ஹேய் லூசு... நான் சொல்வதைக் கொஞ்சம் கவனி... இங்கே பாருடா...'' என்று சப்தம் வெளியே



வராமல் அவனின் கவனத்தை ஈர்க்க முயன்று அவன் எதிரே நின்று, நாட்டிய பேரொளி பத்மினியையே மிஞ்சும் வகையில் பரதநாட்டியம் ஆடாத குறையாக அபிநயம் பிடித்தும், அவன் கவனம் தொலைபேசியில் இருந்து, விலகி அவளிடம் வருவதாக இல்லை.

'தங்கையின் தோழிக்கு பெரிய உதவி செய்கிறோம்' என்ற நினைப்பில் பொங்கிய அவனுடைய கடமை உணர்வு ஒரு புறம், டி.வியில் ப்ரோக்ராம் பண்ணும் எதிர்கால கனவு மறுபுறம் அவனை ஆக்கிரமித்து இருந்தது.

அதற்கும் மேலாக எதிர்முனையில் கேட்ட சைலஜாவின் குரலிலும், கேலிப் பேச்சிலும் தன்னை மறந்து, அவளிடம் தன் முழு திறமையையும் அவளிடம் காட்டிவிட வேண்டும் என்ற வேகத்தில் அடுக்கடுக்காக வசனங்களை கோர்த்து பேசிக் கொண்டே போனான் கார்த்திக்.

ஒரு கட்டத்தில் தலைக்கு மேல் போய் விட்டது. இனி ஜாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற வெறுப்பில் தலையில் அடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து அவனை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் சுந்தரி.

''ஹேய்! இப்ப எம்.ஜி.ஆரா? பிரமாதமா பல குரலில் பேசி அசத்துகிறாயே? யாருப்பா நீ?'' என்று விசாரித்தார் கௌசல்யா.

''நான் யார் என்பது முக்கியம் இல்லை. என்ன சொல்லப் போகிறேன் என்பது தான் முக்கியம்...'' என்றபோது ரஜினியின் சாயல் இருந்தது.

''அது சரி. ஆனால் நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்கு ஏற்கனவே தெரியுமே?''

''இங்கே பாருடா! நீங்க எல்லாவற்றையும் உள்ளுணர்விலேயே கண்டு பிடிக்கும் வேட்டையாடு விளையாடு ராகவனா?'' என்ற கமல்ஹாசனின் குரல் வர கௌசல்யாவிற்குச் சிரிப்பு பொங்கியது.

''இல்லை. நான் கமல் இல்லை. ரஜினி ரசிகை. அதனால் தான் எதுவும் துப்பறியவே வேண்டாம். எனக்கு உங்க ஊரில் இருந்தே... ஏன் உங்க வீட்டில் இருந்தே... போனில் வேண்டிய தகவல் எல்லாம் பறந்து வரும். என் வழி தனி வழி...!'' என்று சிரிப்புக்கு இடையே அவரும் ரஜினியை மாதிரியே ஸ்டைலாகச் சொல்ல அவன் திரும்பி சுந்தரியை முறைத்தான்.

''எங்க வீடு...? நானும் ரஜினி ரசிகன் தான். என் வழியும் தனி வழிதான். இதுல யார் குறுக்கே வந்தது?''

''பத்து நிமிஷம் முன்னாடி எனக்கு திருவையாற்றில் இருந்து நீ பேசப் போகிறாய் என்று ஏற்கனவே போன் வந்து விட்டதே?''

''திருவையாற்றில் இருந்தா? நான் இங்கே இருந்து பேசுகிறேன் என்று உங்களுக்கு யார் சொன்னா?''

''நீ எங்கிருந்து பேசுகிறாய் என்பதை நீ எனக்கு சொல்ல வேண்டாம். இந்த விஷயத்தை யார் சொன்னா என்பதை நான் உனக்கு சொல்ல மாட்டேன். நீ சொல்லப் போகும் விஷயம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்பது தான் இங்கே விஷயம் ஓகே?''

''நான் என்ன சொல்லப் போகிறேன் என்று சொல்லுங்க பார்ப்போம். அந்த திருவையாறு பார்ட்டி



சொன்ன விஷயம் சரிதானா என்று நானும் பார்த்து விடுகிறேன்...'' என்று காதில் புகை வந்தாலும் அதை சமாளித்து சவால் விட்டான் கார்த்திக்.

''நான் சரியா சொல்லி விட்டால் எனக்கு என்ன பரிசு தருவாய்?''

''ஹலோ மேடம்! நான் எதுக்கு உங்களுக்கு பரிசு கொடுக்கணும்?''

''சவால் வைத்து அதில் நான் ஜெயித்தால் பரிசு வேண்டாமா தம்பி...?''

''என்னை தம்பி என்று சொல்லிட்டீங்க உங்க பையன் கல்யாணம் ந..ட..ந்..தா..ல்.. அதுல நான் மிமிக்ரி ப்ரோக்ராம் இலவசமா பண்ணி தருகிறேன் போதுமா...?''

''ஹேய்! அதென்ன அவ்வளவு சந்தேகமா சொல்கிறாய்? என் பையனுக்கும் நான் பார்த்து இருக்கும் பெண்ணுக்கும் எத்தனை தடை வந்தாலும், அதை எல்லாம் தகர்த்தெறிந்து கல்யாணம் ஜாம் ஜாம் என்று அமோக நடக்கப் போகிறது. நீ செலவில்லாமல் எனக்கு மிமிக்ரி ப்ரோக்ராம் பண்ணித் தரப் போகிறாய்...''

''முதலில் விஷயத்தைச் சொல்லுங்க கௌசல்யா மேடம்...''

''சொல்றேன் கேட்டுக்கோ. என் பையனுக்கு பார்த்து இருக்கும் பெண்ணுக்கு, இந்த கல்யாணத்தில் இஷ்டம் இல்லை. அல்லது ஏற்கனவே என் பையனுக்கு இன்னொரு கல்யாணம் முடிந்து விட்டது. அதை வெளியே சொல்லாமல் ரகசியமா வைத்து இருக்கிறான். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று. நோக்கம் என்னவோ இந்தக் கல்யாணத்தை நிறுத்துவது, சரியா?''

''ஹை! மாட்டிகிட்டீங்களா? உனக்கு உங்க பையனைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அந்தப் பொண்ணுக்கு உறவிலேயே வேறே விருப்பம் இருக்கு...''

''உறவு பையன் என்றால் யாரு...? சந்தோஷா?''

''சந்தோஷா? எந்த சந்தோஷை சொல்றீங்க?''

''சுந்தரியோட மாமா பையன் சந்தோஷ் தான்...?''

''எங்க மாமா பையன் சந்தோஷை எப்படி உங்களுக்குத் தெரியும்...?''

''உங்க மாமா பையனா? நீ யாரு பேசுறது? சுந்தரியோட பெரியப்பா பையன் கார்த்திக்கா?'' என்று உடனே கௌசல்யா கேட்க அவனுக்கு மூச்சடைத்தது.

எப்படி பால் போட்டாலும் சிக்சர் அடிக்கிறாங்க? வெற்றிலையில் மை போட்டு பார்த்த மாதிரி ஒவ்வொரு விஷயத்தையும் புட்டு புட்டு வைக்கறாங்க. யார் இவங்க...?

''ஆன்ட்டி, நீங்க யாரு..?'' என்று அவன் தயக்கத்தோடு கேட்டு முடிக்கும் முன்பே அவரின் பதில் பாய்ந்து வந்தது.

''சுத்தம். நான் யார் என்றே தெரியாமல் தான் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டு இருந்தாயா? நான் கௌசல்யா. சுந்தரிக்கு பார்த்து இருக்கும் பையன் ஷ்யாமோட அம்மா...'' என்று கௌசல்யா சொல்லி முடிக்க கார்த்திக் போனை பட்டென்று வைத்து விட்டான்.

''ஹேய் லூசு... யாரோட நம்பரைக் கொடுத்தாய்? அது ஷ்யாம் மாமா வீட்டு நம்பர்... தெரிஞ்சு கொடுத்



தாயா? தெரியாமல் கொடுத்தாயா? ஏன் இப்படி பண்ணினாய்...?'' என்று பதட்டத்தோடு அதட்டினான் கார்த்திக்.

''ஆமா இப்ப இத்தனை கேள்வி கேளு. பேசுவதற்கு முன்னால் கொஞ்சமாவது யோசிக்கணும்...''

''ஏய்! இது அவங்க நம்பர் என்று சொல்லியா கொடுத்தாய்? ப்ரெண்ட்... அவளுக்கு லவ்.. மாமா பையன்... டி.வி ஸ்டேஷனில் வேலை செய்கிறான்... என்ன எல்லாம் பொய் சொன்னாய்...? நீ பேசாதே... கடவுளே... நான் வேறே பேசும் போது என்ன உளறினேன் தெரியலையே? அவங்க சித்தப்பாவிடம் ஏதாவது சொல்லி விட்டால் நான் என்ன பண்ணுவேன்? ஷ்யாம் மாமா என்னை தப்பாக நினைப்பாரோ?'' என்று அவன் புலம்பித் தள்ளி அவளை அதட்டும் போதே தொலைபேசி மணி அடிக்க அவன் மேலும் பதறினான்.

''அவங்க தான் திரும்பக் கூப்பிடுறாங்க. ஹய்யோ...! இப்ப என்ன பண்றது சுந்தரி...? ஏதாவது செய்...'' என்று பதற அவள் தலை அசைத்துக் கை காட்டினாள்.

''போதும்... நிறுத்து. நான் எதுக்கு அப்படிச் சொன்னேன் என்று இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்கே புரிந்து விடும்... சும்மா இரு... நானே பேசுகிறேன்...'' என்று உள்ளுக்குள் இருந்த உதறலை வெளியே தெரியாமல் மறைத்து கம்பீரமாகச் சொன்னாலும் தொலைபேசியை எடுக்கும்போது கைகள் நடுங்கவே செய்தது.

* * *

மதிய உணவிற்காக தன் இருக்கையில் இருந்து எழுந்து பக்கவாட்டில் இருந்த சின்ன அறைக்குள் சென்ற

ஷ்யாம்சுந்தர் அங்கே இருந்த அப்பாவைப் பார்த்ததும் விழி விரித்தான்.

''அப்பா நீங்களா? நீங்க எங்கே இவ்வளவு தூரம்? நீங்க எப்போ வந்தீங்க? நான் பார்க்கவே இல்லையே? சிவா கூட சொல்லவே இல்ல...'' என்று வியப்புடன் விசாரிக்க அவர் மௌனமாக புன்னகை செய்தார்.

''நீ கமிஷனர் ரூமில் இருந்தபோது வந்தேன். இருபது நிமிஷம் இருக்கும். உன் வேலையைக் கெடுக்க வேண்டாம் என்று நான் தான் சிவாவிடம் உன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று சொன்னேன். சாப்பிட்டுக் கொண்டே பேசலாம். சாப்பிட்டு முடிக்கும் போது நான் கிளம்பி விடுவேன். பத்து நிமிஷம் போதும்...''

''சொல்லுங்கப்பா...''

''ஷ்யாம் உன்னிடம் நான் முதலில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்'' என்று பத்மநாபன் ஆரம்பித்த உடனே பதறினான் ஷ்யாம்.

''ஹைய்யோ என்னப்பா! திடீர் என்று இப்படிப் பேச றீங்க? நீங்க என்ன தப்பு பண்ணினீங்க?'' என்று குழப் பத்தோடு கேட்டான்.

''இல்லை ஷ்யாம், அம்மா உன்னோட கல்யாணத் தைப் பற்றி ரொம்ப கவலைப் பட்டாள். அதே நேரத்தில் நான் நன்றிக் கடன் பட்ட ஒரு குடும்பத்திற்கு ஒரு அவசர தேவை வந்தது. நான் கொடுக்கும் நிலையில் இருக்கிறேன். நீ வாங்கும் நிலையில் இருக்கிறாய் என்று சுட்டிக் காட்டாமல் அதை கௌரவமாக கொடுக்க நினைத் தால் வந்த அவசர ஏற்பாடு தான் இந்தத் திருமணம்.



ஆனால் அந்த அவசரத்தில் உனக்கும் ஒரு மனசு இருக்கு என்பதையோ அதில் எதிர்பார்ப்புகள் இருக்கும் என்ப தையோ கவனிக்கவில்லை என்று இப்போது தான் புரிகிறது சாரி ஷ்யாம். உன்னிடம் முதலிலேயே திரு மணத்திற்கு சம்மதமா என்று கேட்டு இருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகிறது கேட்காதது தப்பு தான்...''

''ஹைய்யோ... என்னப்பா நீங்க... எங்களை பெற்று வளர்த்து ஆளாக்கிய உங்களுக்கு எங்களுக்கு எது நல்லது என்று பார்த்து அதைச் செய்ய உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்குப்பா... அதை எப்படி தப்பாக நினைக்க முடியும்?'' என்று ஷ்யாம் மென்மையாகவே ஆறுதல் சொன்ன போதும் அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுப்பாக தலை அசைத்தார் பத்மநாபன்.

''அடுக்கடுக்காக நீ திரும்பத் திரும்ப செய்யும் முயற்சி களைப் பார்த்து, உன்னைக் கேட்காமல் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ததில் உன் வாழ்க்கை மட்டும் இல்லாமல் இன்னொரு பெண்ணின் வாழ்க்கையையும் கெடுத்து விட்டோமோ என்ற குற்ற உணர்ச்சி இப்போது ரொம்ப படுத்துகிறது. இப்பவும் நிச்சயம் கூட இன்னும் நடக்க வில்லை அதனால்... இந்த கல்யாணத்தை நிறுத்தி விடலாம் என்ற முடிவிற்கு வந்து விட்டேன். உனக்கு சந்தோஷம் தானே ஷ்யாம்?'' பத்மநாபன் பேசப் பேச திகைப்புடன் அவரையே பார்த்து இருந்த ஷ்யாமிற்கு அவர் ஏதோ புரியாத மொழியில் பேசுவது போல இருந்தது.

''என்னப்பா... என்னென்னவோ பேசறீங்க? ஒண் ணுமே எனக்குப் புரியலை...''

''நான் புரிஞ்சு தான் பேசறேன் ஷ்யாம். இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடலாம் உனக்கு எப்ப கல்யாணம் பண்ணிக்கலாம் என்று தோன்றுதோ அப்ப நீயே உனக்குப் பிடிச்ச பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்து. அப்ப சந்தோஷமாக பண்ணி வைக்கிறேன்...''

''என்னப்பா... என்ன ஆச்சு?''

''எதுவும் ஆகி விடக் கூடாதே என்று தான் இதைச் சொல்கிறேன் ஷ்யாம்...''

''அப்பா ப்ளீஸ்... பொத்தாம் பொதுவா பேசாமல் என்ன விஷயம் என்று சொல்லுங்க... யார் என்ன சொன்னா? அவங்க வீட்டில் இருந்து யாராவது பேசினார் களா?''

''அம்மா தான் பேசினாள் நேற்று அவளுக்கு ஒரு கடிதம் வந்ததாம்...''

''ஆமா! என்னிடமும் சொன்னாங்க அதைப் பற்றி நானே கவலைப் படலை. அவங்களும் அதைக் குப்பைத் தொட்டியில் தூக்கிப் போடுறேன் என்று சொன்னாங் களே? போடலையா?'' என்று சாதாரணமாகக் கேட்க அவருக்கு புன்னகையை அடக்குவது சிரமமாக இருந் தது.

''போட்டுட்டேன் என்று சொன்னாள் ஷ்யாம். ஆனால் அந்த விஷயம் தெரிந்ததில் இருந்து, எனக்கு மனசே சரி இல்லை. உங்க அம்மா மாதிரி எல்லா விஷயத்தையும் லைட்டா எடுத்துக்க என்னால் முடி யாது. அதனால் நான் கிருஷ்ணமூர்த்திக்கு, இந்தத் திரு மணத்தை கொஞ்சம் நிதானமாக செய்து கொள்ளலாம் ஆனால் உன் வீடு பத்திரமான கைகளில் இருப்பதற்கு



ஏற்பாடு செய்து விட்டேன் என்று ஒரு கடிதம் எழுதி போட்டு விட்டேன்...''

''என்னப்பா சொல்றீங்க?'' என்று பதறிய ஷ்யாமின் கண்களில் உச்ச பட்ச அதிர்ச்சி தோன்றியது.

''புரியுது ஷ்யாம். மூலைக்கு மூலை மூன்று பத்து ரூபாய் என்று கூறு கட்டி தெரு முனையில் மொபைல் போனை கூவி விற்கும் இந்த காலத்தில் கடிதமா என்று என்னை கேவலமா லுக் விடுகிறாய் என்று புரியுது. ஆனால் பாரு... சந்தோஷமான விஷயம் என்றால் போனில் பேசலாம். போன் என்ன? இதோ இருக்கும் திருவை யாறு, அஞ்சு மணி நேரத்தில் போய் விடலாமே? நேரில் போய் கூடப் பேசலாம். இது மனசுக்கு அவ்வளவு உவப் பில்லாத விஷயம் பாரு... அதான் கடிதம் எழுதி போட்டு விட்டேன்...'' என்று தீர்மானமாகச் சொல்ல ஷ்யாமிற்கு ஹய்யோ என்று இருந்தது.

''என்னப்பா இப்படி பண்ணிட்டீங்க? கடிதம் எழுது வதற்கு முன்னால் என்னிடம் ஒரு வார்த்தை கேட்கணும் என்று தோன்றவில்லையா?'' என்று அதட்ட அவனை பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு பார்த்தார் பத்மநாபன்.

''தப்பு தான் ஷ்யாம். உன்னிடம் கேட்காமலே கல் யாணம் பேசினேன். அதனால் தான் அதை நிறுத்து வதையும் உன்னிடம் சொல்லாமலேயே செய்து விட் டேன். உனக்கு சந்தோஷம் தானே ஷ்யாம்...'' என்று ஆர்வமாகக் கேட்க, அவன் 'இல்லை...' என்று திட்ட வட்டமாக மறுத்தான்.

''ஹய்யோ! என்ன ஷ்யாம் சொல்கிறாய்?''

''நான் என்ன சொல்ல வருகிறேன் என்பது இருக்கட்டும். நீங்க எந்த போஸ்ட் ஆபீசில் தபாலைப் போட்டீங்க? சீக்கிரம் சொல்லுங்க...''

''எக்மோரில் பார்சல் சர்வீஸ் ஆபீசுக்கு நம்ம வேலையா வந்தேன் ஆர்.எம்.எஸ்.ல போட்டேன் ஏன் ஷ்யாம் என்ன விஷயம்?'' என்று கேட்டவருக்கு பதிலே சொல்லாமல் அவசரமாக மொபைலை எடுத்தவன் அடுத்தடுத்து நான்கு பேருக்கு பேசினான். கடைசி போன் காலின் முடிவில் ப்ச்! என்று போனை தூக்கி எதிரே இருந்த சோபாவில் எறிந்தான்.

''என்னாச்சு ஷ்யாம்...?''

''என்ன ஆகணும்? உங்க தபால் ஆல்ரெடி சோழன் எக்ஸ்ப்ரசில் தஞ்சாவூருக்கு பயணம் பண்ணிக் கொண்டு இருக்கு...'' என்று எரிச்சலுடன் சொல்ல, அவர் 'ஓ...' என்று வியப்புடன் சொன்னார்.

''என்ன ஓ? என்னப்பா இது கல்யாணம் என்ன லேசான விஷயமா? நாலு நாளைக்கு முன்னால் இந்த பொண்ணுதான் உனக்கு என்று அம்மா இதே ஆபீசில் வந்து ஒற்றை காலில் நின்றாங்க. அடுத்த நாலு நாளில் கல்யாணத்தை நிறுத்தி விட்டேன் என்று நீங்க வந்து நிக்கறீங்க? என்ன இதெல்லாம்? கல்யாணம் என்பது விளையாட்டா போச்சா உங்க ரெண்டு பேருக்கும்? வயசாகிடுச்சே தவிர கொஞ்சம் கூட யோசிக்க மாட்டீங்களா?''

''யோசிக்கிறேன் ஷ்யாம். இப்பதான் யோசிக்கிறேன். கல்யாணம் விளையாட்டான விஷயம் இல்லையே? மறுபடி சாரி ஷ்யாம்...'' என்று சிரிக்க முயன்ற இதழ்களை



இருக்க மூடியபடி பாவமாக முகத்தை வைத்துக் கொள்ள கடுமையாக முயன்றார்.

''உங்க சாரியை வச்சு நான் என்ன பண்றது?''

''நான் வேண்டுமானால், இந்தக் கடிதம் அவசரமா யோசிக்காமல் எழுதி விட்டேன். அதுல இருப்பதை சீரியஸா எடுத்துக் கொள்ள வேண்டாம் கிருஷ்ணா என்று போன் பண்ணி சொல்லட்டுமா...?'' என்று அவசரமாகக் கேட்க ஷ்யாம் மேலும் பல்லைக் கடித்தான்.

''போதும்பா... நீங்க ஏறகனவே பண்ணிய குழப்பம் போதும். நானே பார்த்துக்கறேன். நீங்க முதலில் கிளம்புங்க...'' என்றவனும் அவசரமாக எழுந்தான்.

''அந்த கடித சமாச்சாரம் அப்படியே விட்டுட முடியாத ஷ்யாம்...?'' என்று பரிதாபமாக பின்னால் வந்தவர் மீண்டும் நினைவு படுத்த, அவரை திரும்பி முறைத்து விட்டு, 'திருவையாறு வரை போகணும். உடனே கிளம்பணும் ஒரு டாக்சி அனுப்புங்க'' என்று போனில் உத்தரவிட்டான்.

## 16



ராணி எச்சரிக்கை செய்துவிட்டு போனை வைத்த ஐந்தாவது நிமிடம் கார்த்திக்கிடம் இருந்து போன் வந்து விட்டதால், சந்தேகமே இன்றி அது ஷ்யாமின் அறிவுரைப் படி சுந்தரி செயல்படுத்தும் திட்டம் என்பதை

வினாடியில் கண்டு கொண்டார் கௌசல்யா. அவனிடம் வேடிக்கையாக பேச்சை வளர்த்து அவன் பயந்து போய் போனை வைத்ததும், உடனே கணவனை அழைத்தார்.

''இங்கே பாருங்க, நீங்க என்ன பண்ணுவீங்களோ எனக்குத் தெரியாது. ஷ்யாம் இந்த கல்யாணத்தை நிறுத்தும் முயற்சிக்கு இதோட ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். உடனே கிளம்புங்க...'' என்று அவரை கடையில் இருந்து கிளப்பி விட்டார்.

மருமகளாக வரப் போகிறவளிடம் இதுவரை பேசவே இல்லை. உடனே பேச வேண்டும். அத்துடன் ஷ்யாம் சொன்னதற்காக விருப்பம் இல்லாத ஒரு செயலை வருத்தத்துடன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உனக்கு இல்லை என்பதை தெளிவுபடுத்தி, உனக்கு ஆறுதலாக கடைசி வரை நான் இருப்பேன் என்பதையும் உறுதியாக அவளுக்கு சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சுந்தரியை அழைத்தார் கௌசல்யா.

பயந்து நடுங்கிய கார்த்திக்கை தைரியப்படுத்தி விட்டு எடுத்த சுந்தரிக்கும் உள்ளுக்குள் நடுக்கம் இருந்தாலும் அதை வெளியே தெரியாமல் மறைத்து, 'ஹலோ...' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

''ஹாய் சு..ந்.த..ரி..! நீயா...? எப்படி இருக்கிறாய் மருமக பெண்ணே?'' என்று அவளின் ஒற்றை ஹலோவில் அவளை இனம் கண்டு உற்சாகமாகக் கேட்டார் கௌசல்யா.

''நீங்க... ஷ்யாம் சாரோட... அம்மாவா...?''

''அதே அதே...! ஆனால் அதென்ன ஷ்யாம் சார்? ஐ.பி.எஸ். ஆபீசர் என்ற பந்தா காட்டுவதற்காக உன்னை



அப்படிக் கூப்பிடச் சொன்னானா? கூப்பிட முடியாது என்று சொல்வதற்கென்ன?''

''ஹய்யோ... இல்லை.. அவர் சார் என்று கூப்பிடாதே... பேர் சொல்லு என்று தான் சொன்னார்... நான் தான்...'' என்று வெகு இயல்பாக சொல்ல இங்கே கௌசல்யாவுக்கு புன்னகை பெரிதானது. அவன் அவளைப் பார்க்கவே இல்லை என்று சத்தியம் பண்ணாத குறையாகச் சொல்லிக் கொண்டு இருக்கையில், அவன் பொய் சொல்கிறான் என்பதற்கான சான்றுகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறதே?

''ஓகே ஓகே பரவாயில்லை. உங்க இரண்டு பேர் சௌகரியம் அது. எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக்கோங்க. அதில் நான் தலையிடவில்லை. என் மகனை விட நீ ரொம்ப பிசியான ஆளாக இருப்பாய் போல? அடிச்சு பிடிச்சு உன்னிடம் பேச கடைசியா சந்தர்ப்பம் கிட்டி விட்டதே? இதுக்கே நான் ஸ்வீட் பண்ணிக் கொண்டாட வேண்டும் என்று நினைக்கிறேன்...'' என்று கௌசல்யா சொல்லி முடிக்கும் முன்பே சுந்தரி பதறினாள்.

''ஹய்யோ ஏன் இப்படிப் பேசறீங்க...? சா...ரி! நான் உங்களை தவிர்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை. நேற்று நீங்க போன் பண்ணினீங்க என்று ராணி சொன்னாள். அப்ப நான் லைப்ரரிக்கு போய் இருந்தேன். அதனால் தான் பேச முடியலை.''

''தப்பே இல்லை சுந்தரி. நான் முன்பே அழைக்கப் போகிறேன் என்று சொல்லி இருந்தாலும் பரவாயில்லை. நான் போன் பண்ணுவேன் என்பதற்காக நீ எங்கேயும் போகாமல் வீட்டிலேயே அடைந்து கிடக்க முடியுமா?

என் மருமகள் தைரியமா நாலு இடத்துக்கு தனியா போய் வருபவளா தான் இருக்கணும். உங்க அம்மா உனக்கு உடம்பு சரி இல்லை என்று சொன்னாங்க. என்ன ஆச்சு என்று விசாரிக்கத் தான் போன் பண்ணினேன்...'' என்று அவளைத் தாங்கி பேசியது மட்டும் இல்லாமல் அவளுக்கு உடல்நிலை சரி இல்லையோ என்று விசாரிக்க அழைத்த அந்த பதட்டமும் அவளுக்குப் பிடித்து இருந்தது.

''நான்... நல்லா இருக்கேன் அ..த்.தை..! நீங்க எப்படி இருக்கீங்க...?'' என்று கேட்டவளுக்கு அதுவரை இருந்த கண்ணுக்குத் தெரியாத திரை மெல்ல விலகி தயக்கத்துடன் என்றாலும் அத்தை என்ற வார்த்தையும் வெளியே வந்தது.

''இத்தனை நாள் எப்படியோ? இன்னிக்கு மூன்று முறை முயற்சி பண்ணியும் பேச முடியாத மருமகளிடம் இன்று பேசி விட்டேனே? அதனால் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன்...'' என்று உற்சாகமாக சொன்னதும், அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது. அவன் கல்யாணத்தை நிறுத்த தலைகீழாக நின்று முயற்சி செய்து கொண்டு இருக்க இவர் இப்படிப் பேசுகிறாரே?

''வீட்டுல அம்மா அப்பா யாரும் இல்லை. நீங்க எதுவும் சொல்வதற்காக போன் பண்ணினீங்களா?'' என்று பேச்சை மாற்ற முயன்றாள் சுந்தரி.

''தெரியும், உங்க அம்மா கல்யாண வீட்டிற்கு வந்து இருக்கேன் என்று சொன்னாங்களே? அது சரி, உன்னிடம் நான் ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும். இப்ப உன் பக்கத்தில் யாரும் இல்லையே?'' என்று



கேட்க, கார்த்திக் இங்கே இருப்பதை சொல்வதா வேண்டாமா என்ற ஒரு தயக்கம் அவளுக்குள் வந்தது.

ஒரு அவசர ஆலோசனையின் பிறகு என்ன ஆனாலும் சரி, உண்மையைப் பேசுவதே நல்லது என்ற முடிவிற்கு வந்தாள். சில வினாடிகள் நீண்ட அவளின் யோசனையின் விளைவாக வந்த இடைவெளியை சரியாக கணித்த கௌசல்யா அவள் சொல்லப் போகும் பதிலுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தார்.

''எங்க பெரியப்பா பையன் கார்த்திக் வீட்டுல எனக்குத் துணையா இருக்கான் அத்தை. என்ன விஷயம் சொல்லுங்க...'' என்ற பதில் வந்ததும் கௌசல்யா, 'மருமகள் உண்மையாக இருக்கிறாள்' என்ற எண்ணத்தில் நிம்மதிப் பெருமூச்சை விட, 'இப்படி போட்டுக் கொடுத்து விட்டாளே' என்ற பயத்தில் கார்த்திக் பல்லைக் கடித்தான்.

''அப்படியா? சரி சரி. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் உங்க வீட்டில் இருந்து போன் வந்த மாதிரி இருந்தது. ஆனால் பேச்செல்லாம் பல குரலில் வந்ததால் பயந்து விட்டேன். உங்க அம்மா வேறே நீ தனியா இருக்கிறாய். உடல்நிலை வேறே சரி இல்லை என்று சொன்னார்களா? நீ எப்படி இருக்கிறாய் என்று தெரிந்து கொள்ள கூப்பிட்டேன். ஒன்றும் பிரச்னை இல்லையே?''

''அதெல்லாம் இல்லை அத்தை. கார்த்திக் தான் முதலில் பேசியது எங்க அண்ணா. பல குரலில் பேசுவான் அத்தை. நான் தான் உன் பேர் சொல்லாமல் உன் திறமையை இந்த நம்பரில் வெளிகாட்டு. அவங்க இம்ப்ரெஸ் ஆன மாதிரி இருந்தால் அவர்களிடம் நான்

பேசி உனக்கு சென்னையில் ஏதாவது நிகழ்ச்சியில் ப்ரோக்ராம் பண்ண வாய்ப்பு தேடித் தர சொல்லலாம் என்று சொன்னேன். ஆனால் நான் அவனிடம் இருந்து வாங்கி பேசுவதற்குள் லைன் கட் ஆகி விட்டது. திரும்ப முயற்சி செய்தால் உங்க லைன் எங்கேஜ்டா இருந்தது. அப்புறம் நீங்களே கூப்பிட்டு விட்டீர்கள். கார்த்திக் எப்படி பேசினான் அத்தை? மேடை ஏறினால் பாஸ் ஆவானா? நீங்க என்ன நினைக்கறீங்க?'' என்று சரளமாக பேசி முடித்த சுந்தரியைப் பார்த்து எதிர்முனையில் இருந்த கௌசல்யா மட்டும் இல்லாமல் அருகே இருந்த கார்த்திக்கும் பிரமித்துப் போனான். ஒரு கணம் செல்வராணி தான் சுந்தரியாக மாறி விட்டாளோ என்ற சந்தேகம் கார்த்திக்கிற்கு வந்தது.

'அடி பாவி! இதை எல்லாம் எங்கே எப்போ எப்படிக் கற்றுக் கொண்டாய்? ஒரு ராணியே இந்த வீடு தாங் காது. இப்ப நீயும் இப்படி புளுக கிளம்பி விட்டாயா?' என்று மனதிற்குள் வியந்தான்.

''அண்ணனுக்கு வித்தியாசமான முறையில் சான்ஸ் தேடுகிறாயா? நல்ல முயற்சிதான். கார்த்திக் ரொம்ப நல்லா பேசினான். ஆனால் கொஞ்சம் நெர்வஸா இருந் தான் போல. ஒரு மேடை ஏறினால் சரியாகி விடும். அங்கே இங்கே என்று ஏன் தேடிப் போய் சான்ஸ் பிடிக்க வேண்டும்? உன்னோட கல்யாணத்திற்கே கார்த்திக்கின் கச்சேரியை அரங்கேற்றம் பண்ணி விடலாம். ஷ்யாம் அப்பாவிடம் நான் சொல்லி விடுகிறேன் சந்தோஷம் தானே?'' என்று கௌசல்யா கேட்டதும், அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.



கல்யாணம் பற்றி அவர் இவ்வளவு உறுதியாகக் கூறியதும் அண்ணனுக்கு மேடை ஏற சான்ஸ் கொடுக் கிறேன் என்பதும் சந்தோஷமாக இருந்தது. ஆனால் ஷ்யாம் தான் அம்மா மூலம் திருமணத்தை நடத்த ஏற் பாடு செய்வதாக எண்ணிக் கொள்வானோ என்ற கவலை யும் தோன்றியது.

''சந்தோஷம் தான் அத்தை. ஆனால்... உங்க பிள்ளை என்ன சொல்வாரோ என்று...''

''அவன் என்ன சொல்றது? அதுக்கெல்லாம் அவனுக்கு நேரமே இருக்காது. கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் நாங்க தான் பண்ணனும். முகூர்த்த நேரத்தில் வந்து தாலி கட்டுறது மட்டும் தான் அவன் வேலை...'' என்று வேண்டும் என்றே அவள் சொல்ல வருவது புரியாதது போல சொன்னார் கௌசல்யா.

''அது... அதில்லை... அத்தை... கல்யாணத்தில்... அவருக்கு இஷ்டமா.. என்று...'' என்று முடிக்க முடி யாமல் தடுமாறினாள் சுந்தரி.

''யார் என்ன சொல்கிறார்கள் என்று யோசிக்காதே. உனக்கு அவனை பிடிச்சு இருக்கா? இல்லையா?'' என்று கேட்டதும் அவளுக்கு மூச்சடைத்தது.

கல்லூரி வாசலில் நின்றது, தன்னை காவல் நிலையத் திற்கு வரவழைத்தது. உன்னை பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டு சென்ற ஐந்தாவது நிமிடம் தான் போனில் அழைத்த உடனே திரும்பி வந்தது, தன்னை சாப்பிட சொன்னது, உன்னை படிக்க வைக்க நான் இருக்கிறேன் என்று சொன்னது, கல்யாணத்தை நிறுத்த சேர்ந்து திட்டமிட்டது, தனக்காக மொபைல் போனை கொடுத்து

அனுப்பியது. எல்லாமே வினாடிக்குள் கண்களில் தோன்றி மறைந்தது.

நான் நன்றி கெட்டவள் இல்லை. தனக்காக ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து செய்பவனை பிடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா? எப்படி சொல்வது?

''என்ன யோசிக்கிறாய்? நீ சொல்லப் போகும் பதிலில் தான், மேற்கொண்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டும் சுந்தரி தைரியமா மனசில் தோன்றுவதை சொல்லு. யாருக்கும் பயப்பட வேண்டாம்...''

''உங்க பையனை பிடிக்கலை என்று மூளை இருக்கும் யாருமே சொல்ல மாட்டார்களே அத்தை....'' என்று சன்னமான குரலில் பதில் வந்ததுமே கௌசல்யாவின் குரல் பெரிதானது.

''அப்புறம் என்ன? ஷ்யாமை பற்றி கவலைப்படாதே. அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். அவன் கல்யாணம் பற்றி நெகடிவா ஏதாவது சொன்னால் ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டுடு. உனக்கு என்ன வேண்டும் என்றாலும் என்னிடம் கேட்டுக்கோ. நீயும் சைலுவும் எனக்கு ஒண்ணு தான். புரிந்ததா?''

''ஆனால்.. அத்தை.. அவருக்கு என்னைப் பிடிக்க வேண்டாமா?''

''அவனுக்கு உன்னைப் பிடித்து இருக்கிறது என்று அவனையே உன்னிடம் சொல்லச் சொல்கிறேன். அடுத்த வாரம் நித்யா கல்யாணம் இருக்கே? அதுக்கு நாங்க வருவோம் அப்ப சொல்லச் சொல்கிறேன். அது வரை சந்தோஷமா இரு. உடம்பை பார்த்துக்கோ. பை பை...''



என்று முடித்து விட்டு கௌசல்யா போனை வைக்க சுந்தரிக்கு மழை பெய்து ஓய்ந்தது போல இருந்தது.

தயக்கத்துடன் போனை வைத்துவிட்டு திரும்பியவளை ஓடி வந்து கைகளை வலிக்கும் அளவுக்கு குலுக்கினான் கார்த்திக்.

''ஹேய் சுந்தரி, கற்பனையான சிச்சுவேஷன் சொல்லி என்னை நடிக்க வைத்து, எனக்கு சான்ஸ் வாங்கி கொடுக்கிறாயா? ஏற்கனவே நீங்க ரெண்டு பேரும் பேசி வச்சுட்டீங்க போல. அதான் அவங்க கூலா என்னை நல்லா தெரிஞ்ச மாதிரி பேசினாங்க. சந்தோஷை எல்லாம் கேட்டாங்க. என்ன ப்ளான்? என்ன நடிப்பு..? ஹய்யோ பின்னுறீங்களே மாமியாரும் மருமகளும். நான் கூட ஒரு நிமிஷம் மாட்டி கொண்டோமோ என்று நடுங்கி விட்டேன். நான் இப்பவே கல்யாண வீட்டிற்கு போய் இதை எல்லாரிடமும் சொல்லப் போகிறேன். தேங்க்ஸ்...'' என்று உற்சாகமாக சொல்லி, அவளின் கையை குலுக்கி, கன்னத்தை கிள்ளி, கொஞ்சி விட்டு வினாடியில் அந்த இடத்தில் இருந்து மறைந்து போனான் கார்த்திக்.

வெற்றிகரமாக தனது அடுத்த முயற்சியும் தோற்றுப் போனதை எண்ணி, சோர்வுடன் சோபாவில் சரிந்தவளுக்கு, உள்ளுக்குள் சந்தோஷம் பூத்தாலும் ஷ்யாமின் ஏமாற்றமான முகம் கண்களில் தோன்றி, 'ஹய்யோ பாவம்...' என்ற வருத்தத்தையும் வரவழைத்தது.

* * *

ஷ்யாம் வாடகைக்காரை அவசரமாக வர சொல்லி விட்டு போனை வைத்ததும், ஆச்சரியமாக எதிரே வந்த பத்மநாபன் அவனை நம்ப முடியாமல் பார்த்தார்.

''ஷ்யாம்.. நீ திருவையாற்றுக்கு இப்ப போக போகிறாயா?'' என்று வியப்புடன் கேட்க அவன் மௌனமாக தலை அசைத்தான்.

''அங்கே போய்... நீ என்ன செய்யப் போகிறாய்?''

''அந்த கடிதம் அங்கிளிடம் டெலிவரி ஆகாமல் தடுக்க வேண்டாமா?''

''அதுக்கு நீயே நேரில் அங்கே போக வேண்டுமா ஷ்யாம்?'' என்று பத்மநாபன் மீண்டும் கேட்ட பிறகே அவனுக்கு யோசனை வந்தது.

ஹய்யோ! இப்போது அப்பாவிற்கு என்ன பதில் சொல்வது? சுந்தரியுடன் ஆன தன் திருமணம் எங்கே நின்று விட போகிறதோ என்ற பதட்டமே அவனை கிளம்ப வைத்தது என்பது இப்போது தான் உரைத்தது அந்த கடிதம் சுந்தரியின் அப்பா கையில் சேராமல் நிறுத்துவது மட்டுமே தன் நோக்கம் என்றால் அதற்கு தான் நேரில் செல்ல தேவை இல்லை. சீக்கிரம் ஏதாவது சொல்லி சமாளி ஷ்யாம். ரொம்ப நேரம் இழுக்காதே என்று மூளை அறிவுறுத்த, தன்னை சுதாரித்து கொண்டான்.

''லெட்டருக்காக நேரில் போக வேண்டிய அவசியம் இல்லைப்பா. தஞ்சாவூர் எஸ்.பி என் பிரெண்ட். அவனோட சிஸ்டர் ஸ்வாதி ஸ்டேட்ஸ்ல இருக்கிறாள். அவள் விடுமுறைக்காக இப்போ அங்கே வந்து இருக்கிறாள். ரெண்டு வாரத்தில் அவளுக்கு டெலிவரி வேறு நடக்கப் போகிறது. என்னைப் பார்க்க வர சொல்லி இருந்தாள். கிளம்ப வேண்டும் என்று ஏற்கனவே முடிவு பண்ணி இருந்தேன். அத்துடன் இந்த வேலையும் சேர்ந்து



கொண்டது...'' என்று அவசரமாக சொல்லி முடித்த ஷ்யாமுக்கு பெருமூச்சு வெளியேறியது.

அவனின் நீண்ட விளக்கம் கேட்டு பொங்கிய சிரிப்பை மறைத்து, ''ஓகே ஷ்யாம், நீ உன் பிரெண்டோட தங்கையை பாரு. நான் என் பிரெண்டை பார்க்கணும். எப்படி என்றாலும் அடுத்த வாரம் ஒரு கல்யாணத்திற்கு திருவையாறு போக வேண்டிய வேலை இருக்கு. நாலு நாள் முன்னாடி போனால் ஒன்றும் தப்பில்லை. நானும் உன்னுடன் வருகிறேன்...'' என்று சொல்ல ஷ்யாம் திகைத்தான்.

''நீங்க.. எதுக்குப்பா... நாலஞ்சு நாள்... கடையை தனியா விட்டுட்டு...''

''கடையில் நான் இப்போதெல்லாம் கணக்கு வழக்கு பார்க்க மட்டும் இரண்டு மணி நேரம் போனால் போதும் ஷ்யாம். நான் என் திருப்திக்காகவும் பொழுது போவதற்காகவும் தான் அங்கே அமர்கிறேன். உனக்கு எதுவும் ஆட்சேபணை இருக்கா? எனக்குத் தெரியாமல் செய்ய வேண்டிய ரகசிய வேலை எதுவும் செய்யப் போகிறாய் என்றால் நான் வரவில்லை...'' என்று அப்பாவியாக சொல்ல, அவன் மௌனமாக தலை அசைத்தான்.

''ஒரு வாரம் தங்க வேண்டுமே? வீட்டில் போய் துணிமணி எடுத்து விட்டு போகலாமா ஷ்யாம்...?'' என்று பத்மநாபன் கேட்க தயக்கமாக தலை அசைத்தான். அங்கே சென்ற அடுத்த ஐந்தாவது நிமிடம் சைலஜாவின் குரல் சப்தமாக ஒலித்தது.

''அப்பா, எனக்கும் ஸ்வாதியை பார்க்க வேண்டும். ஸ்டேட்ஸ் கதை அவளிடம் பேச வேண்டும். எக்ஸாம்

வேறு முடிந்து விட்டது. காலேஜ் போகவில்லை என்றால் இங்கே தனியா போர் அடிக்கும். நானும் வருகிறேன்'' என்ற குரலை கேட்டு ஷ்யாம் தலையில் கை வைத்து அடுத்த வினாடி கௌசல்யாவின் குரல் ஒலித்தது.

''இந்த வீட்டுல யாருமே ஒரு முடிவெடுப்பதற்கு முன்பு என்னை ஒரு வார்த்தை கேட்க மாட்டீங்களா? ஷ்யாம் அவன் பிரெண்டை பார்க்க போகிறான். நீங்க உங்க பிரெண்டையும், சைலு அவளோட பிரெண்டையும், பார்க்க போகிறாள். இங்கே தனியாக உட்கார்ந்து நான் மட்டும் என்ன பண்றது நானும் என் ப்ரெண்டை பார்க்கணும். வருகிறேன்...''

''உங்களுக்கு யார் அங்கே ப்ரெண்ட்?'' என்று புரியாமல் குழப்பத்துடன் கேட்ட ஷ்யாம், ''என் மருமகள் தான்...'' என்று உடனே அவர் சொன்ன பதிலில் மறுப்பு சொல்ல முடியாமல் மௌனமானான்.

''என்னம்மா இது சைலஜாவை காட்டிலும் சின்ன பொண்ணு மாதிரி பீகேவ் பண்ற?'' என்ற பத்மநாபனின் குரல் அவரை மேலும் உசுப்பேற்றி விட்டது.

''எப்படியும் அடுத்த வாரம் நித்யா கல்யாணத்திற்கு நாம் இருவரும் போவதாக தானே பேச்சு? இப்ப எதுக்கு என்னை வேண்டாம் என்று சொல்றீங்க? கார் தானே போகிறது? என்னை தலையிலா தூக்கிட்டு போகப் போறீங்க? நீங்க என்ன அனுமதி கொடுப்பது? நான் ஷ்யாமிடம் கேட்டுக் கொள்கிறேன் அவன் என்னை வேண்டாம் என்று சொல்ல மாட்டான்... இல்லை



ஷ்யாம்...?'' என்று கேட்க, ஷ்யாம் வேறு வழி இன்றி தலை அசைத்தான்.

''ஏன் ஷ்யாம், நீ இதுக்கு முன்னாடி திருவையாறு போய் இருக்கிறாயா?'' என்று வண்டி கிளம்பிய ஐந் தாவது நிமிடம் கௌசல்யா தன் துருவலை தொடங்க அவன் காதில் விழாதது போல அமைதியாக இருந்தான்.

''அண்ணன் ஏதோ யோசனையா இருக்கும் போது தொந்தரவு பண்ணாதீங்க. நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா? புத்தகத்துக்கும் கடிதத்துக்கும் என்ன வித்தியாசம்? சொல்லுங்க பார்க்கலாம்...''

''எனக்கு தெரியலையே! ஷ்யாம் ஹெல்ப் பண்ணேன்...''

''எனக்கும் தெரியலை..'' என்று ஷ்யாம் நழுவ,

''புத்தகத்தைப் படிச்சுக் கிழிக்கிறோம். கடிதத்தைக் கிழிச்சுப் படிக்கிறோம்'' என்று பத்மநாபன் வேகமாக சொல்ல, மனைவியும் மகளும் அவரை பார்த்து, 'உங்களை யார் இப்போ சொல்ல சொன்னது' என்று பல்லை கடித்தனர்.

''சைலு மாதிரி காலேஜ் படிக்கும் மூன்று பெண்கள் சுதந்திர தின விழா அன்று கடைக்கு கொடி வாங்க போனாங்க. அப்ப அதுல நம்ம சைலு ப்ரெண்ட் கேட்ட கேள்வியை கேட்டு, கடைக்காரன் கடுப்பாயிட்டான். அப்படி என்ன கேள்வி கேட்டா சொல்லு ஷ்யாம்...'' என்று கௌசல்யா மீண்டும் சைலஜாவை வம்பிழுத்தார்.

''அதெல்லாம் அண்ணனுக்கு தெரியாதும்மா. அவன் ஓல்ட்...'' என்று சீண்ட, சிரிப்புடன் ஷ்யாமிடம் இருந்து பதில் வந்தது.

''நான் ஓல்டா இருந்தாலும் கோல்ட் சைலு. தேசிய கொடிக்கு வேறே கலர் காமி என்று கேட்ட அதி புத்தி சாலி உன் ப்ரெண்ட் என்று அம்மா சும்மா சொல்றாங்க. கேட்டது நீதான். இல்லம்மா?'' என்று கேட்க, தன்னை கேலி பண்ணுகிறான் என்பது கூட இல்லாமல் ஷ்யாம் கலகலப்பாகப் பேச ஆரம்பித்ததற்கே, ஹை பை கொடுத்து அம்மாவும் பெண்ணும் சிரிக்க ஆரம்பித்தனர்.

சென்னையில் இருந்து திருவையாறு செல்ல தேவைப் பட்ட அடுத்த ஆறு மணி நேரமும் வாகனத்தில் இருந்து பேச்சு சப்தமும் சிரிப்பு சப்தமும் கேட்டுக் கொண்டே இருந்தது.



## 17

சென்னையில் இருந்து தான் மட்டும் கிளம்பிச் சென்று, தபால் நிலையத்தில் இருந்தோ அல்லது அந்த பகுதி அஞ்சல் காரரிடம் இருந்தோ, அப்பா எழுதியதாக சொன்ன தபாலை, எப்படி சத்தம் இன்றி வாங்குவது என்ற யோசனையில் மூழ்கி இருந்த ஷ்யாமை, கௌசல்யாவோ சைலஜாவோ விடுவதாகவே இல்லை.

''ஷ்யாம், அங்கே சுந்தரி பாட்டியோடு நீ பேசி இருக்க தானே? அவ்வளவு கர்நாடகமாவா இருக்காங்க?'' என்று கௌசல்யா கேட்க ஏன் அப்படி கேட்கிறார் என்று புரியாமல் விழித்தான் ஷ்யாம்.

''ஏன் அப்படி கேட்கறீங்க?''



''இல்லை சைலு, ஏதோ பாட்டி பூட்டி என்று கிண்டல் பண்ணி என்னமோ கதை சொல்றா, என்ன என்று கேளு.'' என்று கௌசல்யா அதட்டலாக சொன்னதுமே அவளுக்கு சுந்தரியின் முகமும் அவளுக்கு அவங்க பாட்டியின் பெயர் வைத்து இருக்கிறார்கள் என்பது தான் நினைவில் வந்தது. அதை கிண்டல் அடித்தாளோ? அதை தான் கவ னிக்கவில்லையோ...? அதனால்தான் அம்மா தன்னை பேச்சில் இழுக்கிறார்களோ?

''என்ன... உன்னை மாதிரி பேரு ஸ்டைலா இல்லையா? பரவாயில்லை இருந்துட்டு போகட்டும். அதான் என் பேரு ஸ்டைலா இருக்கு இல்லை? அது போதும்...'' என்று ஷ்யாம் சொல்ல பத்மநாபன், கௌசல்யா சைலஜா மூவருமே வெடித்து சிரித்தனர்.

''ஹேய்! ஷ்யாம், இப்ப யாருக்கு பதில் சொல்கிறாய்? யாரை பற்றி பேசிக் கொண்டு இருக்கிறாய்...?'' என்று பத்மநாபன் கேட்க,

'ஓட்டப்பந்தயத்துல கலந்துக்கப் போறேன். ஆசீர் வாதம் பண்ணு பாட்டி' என்று காலில் விழுந்த பேர னுக்கு, 'பார்த்து மெதுவா ஓடிப்போ, வேகமாக ஓடி கைய, கால ஒடிச்சுக்கிடாதே' என்று ஆசீர்வாதம் பண் ணின பாட்டியைப் பற்றி ஜோக் சொன்னேன். அம்மா கழுத்தில் ரத்தம் வருது என்று உன்னை சப்போர்ட்டுக்கு கூப்பிட்டால் நீ என்ன புதுசா வேறே ஒரு கதை சொல்கிறாய்?'' என்று சைலஜா சிரிக்க,

''என்னவளே அடி என்னவளே...!

எந்தன் இதயத்தை தொலைத்து விட்டேன்.

எந்த இடம் அது தொலைந்த இடம்,

அந்த இடத்தையும் மறந்து விட்டேன்...''

என்று ராகமாக கௌசல்யா பாட, ஷ்யாம் பதிலே சொல்லாமல் கூச்சத்துடன் சிரித்து மழுப்ப, பிரயாணம் இனிமையாகத் தொடர்ந்தது.

அந்த ஒரு சறுக்கலுக்குப் பிறகு ஷ்யாம் விழிப்புடன் இருந்து சைலஜாவின் கேள்விகளுக்கு உரிய பதில் சொன்னதோடு தானும் சில ஜோக்குகளை சொல்ல, காருக்குள் சிரிப்பு சப்தம் மேலும் கூடியது.

தஞ்சாவூர் பத்து கிலோமீட்டர் என்ற மைல் கல்லை பார்த்த உடனே, ''அண்ணா, நேரா சுவாதியை பார்க்க ஹேமந்த் அண்ணா வீட்டுக்கு போகணும். டின்னருக்கு வருகிறேன் என்று சொல்லி வைத்து இருக்கிறேன். அங்கே சாப்ட் சப்பாத்தி, நவரத்ன குருமா, பீஸ் மசாலா, காஷ்மீரி புலாவ் என்று பெரிய மெனு எனக்காக காத்து இருக்கிறது...'' என்று சைலஜா ஆரம்பிக்க, பத்மநாபன் இடையிட்டார்.

''ஹோட்டல் சத்யமில் நமக்காக டேபிள் புக் பண்ணி வச்சுட்டு அங்கே கிருஷ்ணமூர்த்தி காத்திருப்பான். அங்கே போகலாம். முன்னே பின்னே சொல்லாமல், அதுவும் ஒன்றுக்கு நாலு பேரா திடு திப் என்று போய் நிற்பது ஒரு வீட்டுக்கு போவது சரி இல்லை...'' என்று பத்மநாபன் சொல்ல கௌசல்யா முறைத்தார்.

''அந்த பார்மாலிட்டி எல்லாம் அடுத்த வீட்டில் வச்சுக்க வேண்டியதுதான். நான் என் மருமகளை உடனே பார்த்தாகணும். யார் வேண்டுமானால் எங்கே வேண்டு



மானாலும் போங்க சாப்பிடுங்க. நானும் ஷ்யாமும் சுந்தரி வீட்டுக்குப் போறோம். அங்கே என்ன இருக்கோ அதை சாப்பிடுவோம். இல்லை என்றால் சாப்பாடே எங்களுக்கு வேண்டாம். இல்லை ஷ்யாம்?'' என்று கௌசல்யா ரகமாக கேட்க, அவன் தலை மறுப்பாக அசைந்தது.

''ஹா! என்ன ஷ்யாம்? உன்னை நம்பி வந்த அம்மாவை இப்படி நட்டாற்றில் கை விட்டு விட்டாய்...?'' என்று சோகமாக முகத்தை வைத்து கொண்டு கேட்க, ''அண்ணன் ஏன் அப்படி சொன்னார் என்று எனக்குத் தெரியுமே?'' என்று கண்களை உருட்டியபடி சொன்னாள் சைலஜா.

''ஹேமந்த் வீட்டுக்கு போக உனக்கு சப்போர்ட் பண்ணுவான் என்று நினைப்பா உனக்கு?'' என்று பத்மநாபன் கேலியாக கேட்க அதற்கு மறுப்பாக ஷ்யாம் தலை அசைப்பதற்கு முன்னால் சைலஜா அசைத்தாள்.

''அப்புறம்...?'' என்று கௌசல்யா ஆச்சரியமாக விழி விரிக்க, ''ஆஹா! அம்மாவுக்கே தெரியாத விஷயம் நான் சொல்ல போகிறேன்..'' என்று ரவிக்கையில் இல்லாத காலரை தூக்கி விட்டுக் கொண்டு, தொண்டையை கனைத்து பேச ஆரம்பித்தாள்.

''காரணம் நம்பர் 1, மணி இப்போ எட்டாக போகிறது இன்னும் தஞ்சாவூரில் இருந்து திருவையாறு போய் சேர எப்படியும் அரை மணி நேரம் ஆகும். எட்டரைக்கு ஒரு வீட்டுக்கு போனால் அங்கே தங்க போவதில்லை என்ற பட்சத்தில் எவ்வளவு நேரம் இருப்பீங்க என்று கொஞ்சம் யோசிச்சு பாருங்க..'' என்று சைலஜா கேட்க, ''ஓ...'' என்ற கௌசல்யா, பத்மநாபனுடைய கோரஸ் குரல்கள் அங்கே வெளியே வந்தது.

''ஆனால் நாளைக்கு காலை பத்து மணிக்கு வாக்கில் அங்கே போனால், மதிய உணவு வரை நிச்சயம். அதற்கு பிறகும் பழம், தாம்பூலம், சும்மா கண்ணால் பேசுவது, வார்த்தையால் விடைபெறுவது, என்று எவ்வளவு நேரம் செலவு பண்ணலாம்? அண்ணன் ப்ளான் பண்ணி தான் இப்ப வேண்டாம் என்று சொல்றாங்க. அதை புரிஞ்சு கிட்டு அண்ணனுக்கு சப்போர்ட் பண்ணுங்கம்மா. என்ன இருந்தாலும், உங்க முதல் பையன், செல்ல பையன், ஆசை பையன், அருமை பையன் இல்லையா?'' என்று கேட்க, அவசரமாக கை கட்டி வாயை பொத்தி, பவ்யமான பாவனையில் தலை அசைத்தார் கௌசல்யா.

''அது ஓகே. ஆனால் காரணம் நம்பர் ஒன்று என்று சொன்னாயே? அப்படி என்றால் இரண்டாவது காரணம் ஒன்றும் இருக்கிறதோ?'' என்று பத்மநாபன் மேலும் துருவ, ''என்னப்பா நீங்களும் அவளோட சேர்ந்து கிண்டல் பண்றீங்களா?'' என்று ஷ்யாம் அதட்டினாலும் சைலஜா சொன்னதை அவன் மறுக்கவில்லை என்பதை மூவருமே கவனிக்கத் தவறவில்லை.

''சும்மா இரு ஷ்யாம். நானும் இன்றைய யூத் ட்ரெண்டை தெரிந்து கொள்ள வேண்டாமா? உனக்கு பிடித்த மாதிரி தான் பொண்ணு என்னால் பார்க்க முடியலை. அட்லீஸ்ட் ஷங்கருக்கும் சைலுவிற்கும் பார்க்கிற பொண்ணு மாப்பிள்ளையாவது அவங்க ஓகே சொல்ற மாதிரி இருக்க வேண்டாமா? நீ சொல்லு சைலு...'' என்று மகளிடம் திரும்பினார் பத்மநாபன்.

''சொல்றேன்பா. இன்னும் ஒன்றில்லை இரண்டு காரணம் இருக்கு.''



''ம்ம்..! ஒன்று என்னால ஊகிக்க முடியுது. மூன்றாவது காரணம் என்ன?'' என்று கௌசல்யா ஆர்வத்துடன் மகளைத் திருப்பி கேட்டார்.

''இரண்டாவது காரணம் என்ன ஊகித்தீங்க என்று நீங்க சொல்லுங்க மூன்றாவது காரணம் என்ன என்று நான் சொல்கிறேன்...'' என்று சைலஜா பேரம் பேச, அவர் ஷ்யாமின் கன்னத்தை தன் கையால் வருடி கொஞ்சி கொண்டு சிரிப்புடன் சொன்னார்.

''ஷ்யாம் எவ்வளவு பெரிய போலீஸ் ஆபீசர்? ஆபீசில் அவன் கண்ணால் சொன்னதை, இல்லல்ல. மனசில் நினைப்பதை கூட ஊகித்து அறிந்து, கேள்வியே கேட்காமல் நீ நான் என்று போட்டி போட்டு நிறை வேற்ற எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா? அப்படி ஒரு சூழலில் இருக்கும் ஷ்யாம், நீயோ, நானோ அப்பாவோ சொல்லும் ஒரு வார்த்தையை அப்படியே போகிற போக்கில் ஒத்து கொள்வான் என்று எப்படி சைலு எதிர்பார்க்க முடியும்?'' என்று சிரிப்புடன் சொல்ல ஷ்யாம் முறைத்தான்.

''அப்படி எல்லாம் இல்லைம்மா. கண்டதையும் கற்பனை பண்ணி கொள்ளாதீங்க...'' என்று அவன் அதட்டும் போதே எட்டி அம்மாவின் கையில் தட்டி ஹை - பை கொடுத்தாள் சைலஜா.

''அப்பா இப்பதான் யூத் ட்ரெண்டை தெரிஞ்சுக் கிறேன் என்று அரிச்சுவடி படிக்கும்போது நீங்க எப் படிம்மா இப்படி கலக்குறீங்க?'' என்று பெருமிதத்துடன் கேட்டாள் சைலஜா.

''இல்லை என்றால், இப்ப சுந்தரியுடன் ஆன திரு மணத்தை மறுக்க ஷ்யாமுக்கு என்ன காரணம் இருக்கு

சொல்லு. நாம் சொன்னோம் என்ற ஒரே காரணத்திற்காக தான் அவளை வேண்டாம் என்கிறான்...'' என்று சொல்ல ஷ்யாம் திரு திருவென்று விழித்தான்.

''பாத்தியா... அவனே ஆஃப்! நீ அடுத்த காரணத்தை சொல்லு...''

''இது நீங்க சொன்னதுக்கு முரண்பாடு மாதிரி இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. ஆங்கிலத்தில் சொல்வது என்றால் ஐரனி. இப்ப அண்ணியை பார்த்து விட்டு வந்தால் அப்புறம் அண்ணனுக்கு ராத்திரி தூக்கம் வராது. அதுக்காக தான் நாளைக்கு போகலாம் என்று சொல்றாங்க...'' என்று குரலை தணித்து சைலஜா மேடை ரகசியம் பேச, ஷ்யாம் அதட்டினான்.

''சின்ன பொண்ணு மாதிரி பேசு சைலு. நீங்க மூன்று பேர் சொல்லும் இடத்திற்கும் போவதில்லை. எல்லா ப்ரோக்ராமுமே நாளை காலை தான். இப்ப ஹோட்டல் போறோம். சாப்பிட்டு விட்டு தூங்குகிறோம். நீங்க ஹோட்டல் சோழா போங்க டிரைவர்...'' என்று முறுக்குடன் முகத்தை வைத்து கொண்டு அதட்டலாக சொன்னாலும் உள்ளுக்குள் தன் மனதை இவர்கள் மூவரும் சேர்ந்து கொண்டு, அக்கு வேறு ஆணி வேறாக பிய்த்து போட்டு அலசுவது வியப்பையும் அளித்தது.

ஷ்யாமும் பத்மநாபனும் ஒரு அறையிலும், சைலஜாவும் கௌசல்யாவும் இன்னொரு அறையிலும் தங்கிக் கொள்ள, பத்மநாபன், தன் நண்பனை நேரில் பார்த்து விட்டு வருவதாக சொல்லி கிளம்பி விட்டதால் தனியே அறையில் இருந்த ஷ்யாமிற்கு கை துறுதுறுத்தது.



350 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் போதே பேசி விட்டு, இப்ப பத்து கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் சுந்தரியை நேரில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றினாலும், இரவு நேரம் என்பதை கவனத்தில் கொண்டு சிரமப்பட்டு அதை அடக்கியவனுக்கு, போனிலாவது பேச வேண்டும் என்ற ஆர்வம் கட்டு மீறியது.

இரண்டு முறை ஐந்து நிமிடங்கள் இடைவெளியில் முயற்சித்த ஷ்யாமிற்கு, அது இரண்டு முறையும் என் கேஜ்டாவோ இருக்க, எரிச்சல் வந்தது. தன்னை தவிர வேறு யார் அவளிடம் இவ்வளவு நேரம் பேசக்கூடும்?

மூன்றாவது முறை, 'இது தான் கடைசி' என்று மனதிற்குள் நினைத்து கொண்டு முயன்றவனுக்கு அது ரிங் போனதும் உற்சாகம் பிறந்தது.

ஒன்று... மூன்று... ஐந்து... பத்து... தொடர்ச்சியாக மணியடித்து ஓயும் வரை காத்திருந்தவனுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

அலைபேசி எடுக்கப்படவில்லை!

'இவளுடன் தான் நினைத்த நேரம் பிறரின் இடையூறு இல்லாமல் பேச வேண்டும் என்று போன் வாங்கி கொடுத்தால்...' என்று எரிச்சலுடன் பொருமியவன் சிந்தனை செல்லும் பாதை அப்போது தான் அவனுக்கு உரைத்தது.

தன் மனம் எப்போது மாறியது?

பார்த்த முதல் வினாடியே?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இல்லை என்றால், அவள் தன்னை போலீசில் பிடித்து கொடுக்க முயன்றதற்கு அவளை உண்டு இல்லை என்று பண்ணி இருக்க வேண்டாமா?

அவள் போனில் அழைத்த உடனே திரும்பி சென்று ஒரு மணி நேரம் உச்சி வெயிலில் அமர்ந்து பேசி இருக்க வேண்டாமே?

அந்த கடிதம் எழுது அவ்வளவு விவாதம் தேவை இல்லையே? அதை எழுத முடியவில்லை என்று அவளையே ஏன் அழைக்க வேண்டும்?

நாலு தும்மல் போட்டதற்கு மனம் ஏன் அப்படி துடிக்க வேண்டும்?

சுந்தரி அம்மா தனக்காக பார்த்த முதல் பெண் இல்லை. இதற்கு முன்பும் பல பெண்களைப் பார்த்து விட்டு, அதை வைத்து தன்னை சீண்டி இருக்கிறார்கள். அப்போதெல்லாம் அது காதிலே விழாது. நின்று கூடப் பேச மாட்டான். அது எந்த விதத்திலும் அவனைப் பாதிக்காது.

ஆனால் சுந்தரி விஷயத்தில் ஆரம்பத்தில் இருந்தே அப்படி இல்லை. வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே அவளைப் பற்றிக் கூடுதல் தகவல்கள் சேகரித்து இருக்கிறான்.

பார்த்து இருக்கிறான்!

பழகி இருக்கிறான்!!

பரிசு கொடுத்து இருக்கிறான்!!!

இவள் தன்னுடையவள் என்ற எண்ணம் வந்து வெகு நேரமாகி விட்டது போல இருக்கே? கண்கள் மலர



இதழ்கள் புன்னகையில் விரிய எதிரே இருந்த கண்ணாடியில் தன்னை பார்த்தே புன்னகை செய்தான். நெஞ்சுக்குள் இனித்தது.

அந்த புன்னகை மாறாமல் தன் இடது கையால் நெற்றியில் வழிந்த கேசத்தை பின்னுக்கு தள்ள முயன்றவன் தன் முகத்தை கண்ணாடியில் பிறந்ததில் இருந்து முதல் முறையாக பார்ப்பது போல ஆர்வத்துடன் அளவிட்டான்.

நன்றாக தான் இருக்கிறான்...!

எட்டு மணி நேர கார் பிரயாணத்திற்கு பிறகும், களைப்பின்றி முகம் ஜொலித்ததற்கு காரணம் காதல். நினைப்பே புன்னகையை வரவழைத்தது.

அந்த மயக்கத்துடனே, மீண்டும் சுந்தரியை அழைக்க, எதிர்முனையில், ''ஹேய்! மாம்ஸ்... நீங்க ரொம்ப ஸ்லோ. எவ்வளவு நேரமா உங்க போன் காலுக்காக வெயிட் பண்றது?'' என்ற உற்சாகமாக ஒலித்த அந்த குரலை கேட்டதும் பதறி அடித்து, 'சாரி ராங் நம்பர்...' என்று இணைப்பை துண்டித்தான்.

பதட்டத்துடன் டயல் செய்த எண்ணை மீண்டும் ஆராய்ந்தான். சரியான எண் தான். போனை எடுத்தது யாரு...? பேசியது சுந்தரியா? ம்ஹூம்! அது அவளின் தங்கையாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவன் வருவதற்கு முன்பே அவனின் அலைபேசி மீண்டும் அழைத்தது.

''ஹேய் மாம்ஸ்... நீங்க அநியாயத்துக்கு இவ்வளவு நல்லவரா இருக்க வேண்டாம்? நீங்க ராங் நம்பர் கூப்பிடவில்லை. சரியான நம்பரை தான் அழைத்து

இருக்கிறீர்கள்? எதிர் முனையில் யார் பேசுறாங்க என்று அதட்டலா கேட்பதை விட்டுட்டு இப்படி போனை வச்சுட்டீங்களே...?'' என்று கேலியாக சிரித்தவளை இப்போது தெளிவாகவே இனம் காண முடிந்தது.

அது செல்வராணியேதான்!

''கரெக்ட் அது இப்போதான் புரிந்தது. நம்பர் கரெக்ட் தான். ஆனால் அதை எடுத்தது தான் ராங் பெர்சன்...'' என்று கேலியாகவே குட்டினான் ஷ்யாம்.

''ஹய்! எங்க அக்கா போனை நான் எடுத்தேன் அது எப்படி ராங் பெர்சன் என்று சொல்வீங்க? அது சரி, இவ்வளவு நேரம் உங்க அழைப்பிற்காக காத்திருந்து காத்திருந்து வெறுத்து போன சுந்தரி, நீங்க கூப்பிட்ட போது கோபத்தில் போனையே எடுக்கவில்லை. ஹய்யோ பாவம் மாமா, என்று அவளை திட்டி விட்டு, உங்க போனை எடுத்தால் நீங்க என்னையே கிண்டல் அடிக் கிறீங்களா?'' என்று அவள் நீளமாக உரிய ஏற்ற இறக்கங் களுடன் சொல்லி முடிக்கும் போது, சுந்தரி வேகமாக ஓடி வந்தாள்.

''ஹேய் வாயாடி! யாரது போனில்? என்ன உளறிக் கொண்டு இருக்கிறாய்?'' என்று அதட்டியபடி போனை பரித்தவளிடம் கண் சிமிட்டி ''உங்க ஆள் தான்...'' என்று சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்த பிறகு, பல வினாடிகளுக்கு சுந்தரிக்கு பேச்சே வர வில்லை.

''அவ கோபமா இருந்தால் என்ன? நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை? உன்னை வைத்தே அவளை சரிகட்டி விட மாட்டேனா?'' என்று உற்சாகத்துடன்



அவளுடைய சீண்டலுக்கு பதில் சொன்னவனுக்கு எதிர் முனையில் இருந்த மௌனம் வியப்பை அளித்தது.

''ஹலோ...'' என்று மென்மையாக திருப்பி சொன்ன வன் காதுகளில் எதிர்முனையில் வேகமூச்சு வெளியே தெரியாமல் கட்டுபடுத்தும் முயற்சியின் சப்தமே கேட்க அவன் உடல் எங்கும் இனிய அதிர்வலை பரவியது.

'நீ இருக்கையில் எனக்கென்ன கவலை?' என்றவனின் உற்சாகமான குரல் இதயத்தை இளக்கி இருக்க, ''சுந்தரி...'' என்று கேள்வியாக நிறுத்திய அவனின் ஒற்றை வார்த்தையே அவளின் இதயத்தை உருக வைத் தது.

''ம்ம்ம்ம்....'' என்று மெல்லிய குரல் அவன் காது வழியே இதயம் தொட்டு உயிரை சிலிர்க்க வைத்தது.

# 18



எதிர்முனையில் இருப்பது சுந்தரி என்பது தெரிந்த துமே, அதுவரை இருந்த கேலியான மனநிலை மாறி, அந்த இடத்தை ஆர்வம் பிடித்து கொள்ள அவளிடம் என்னென்னவோ பேச வேண்டும் என்ற எண்ணம் முட்டி மோதினாலும், ஷ்யாம் சுந்தரியின் வாயில் இருந்து ஒரு வார்த்தை கூட வெளியே வரவில்லை.

''ஹலோ... நான்தான்...'' என்று குரல் உயர்த்தி தன் இருப்பை தெரிவிக்க முயற்சித்த சுந்தரியின் குரல் அவன்

முகத்தில் புன்னகை வரவைத்ததோடு, அவனின் மௌனத்தையும் உடைத்தெறிந்தது.

"அது ஹலோ... நான் தான் இல்லை... ஹாய்.. நான் தான்... கோட் வேர்ட் சரியா சொல்ல வேண்டாமா?" என்று சின்ன சிரிப்புடன் கேட்க சுந்தரிக்கும் அந்த புன்னகை போன் வழியாகவே ஒட்டி கொண்டது.

"ம்ம்ம்... சரி. இப்ப போனை வெச்சிட்டு திருப்பி கூப்பிடுங்க. கோட் வேர்ட் சரியா சொல்லி ஆரம்பிக்கிறேன்..." என்று சிரிப்புடன் திருப்பிக் கொடுத்தாள்.

"அடுத்த முறை சரியா சொல்கிறேன் என்று சொல்லி விட்டாயே! அதனால் பரவாயில்லை. இந்த ஒரு தடவை உன்னை மன்னிச்சு விட்டு விடுகிறேன்..."

"ம்ஹூம்! ஒன்றும் தேவை இல்லை. எனக்கு செய்றதை திருத்தமா செய்யணும். நான் செய்யும் எந்த வேலையிலும் யாரும் ஒரு குறை சொன்னால் என்னால் தாங்க முடியாது. நீங்க சொல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை. சொல்லிட்டீங்க, இனிமேல் அதை மறக்க முடியாது. நீங்க போனை வச்சுட்டு திரும்ப கூப்பிடுங்க..."

"வேண்டாம் விடு சுந்தரி, போனை வச்சுட்டு அந்த புறம் நகர, மறுபடியும் கூப்பிடும்போது உன் தங்கையோ உன் அம்மாவோ வந்து எடுப்பதற்கா?"

"ஹய்யே...! நான் ஒரு தரம் சொல்லிவிட்டால் பேச்சை மாற்ற மாட்டேன். அந்த புறம் இந்த புறம் நகராமல் கையிலேயே போனை வைத்து எடுக்கிறேன் ப்ராமிஸ்..."

"எப்படி நான் நம்புறது? உனக்கும் உன் தங்கை மாதிரி வால் இருந்தால்..."



"நானும் ராணியும் எதிரெதிர் துருவங்கள். இது தான் கடைசி பதில். இனி நீங்க போனை வைக்கவில்லை என்றாலும் நீங்க எந்த கேள்வி கேட்டாலும் பதிலும் சொல்ல மாட்டேன். நான் எந்த விஷயத்திலும் விளையாடுவதில்லை என்பது, நம் கல்யாணத்தை நிறுத்த முயன்ற விஷயத்திலேயே தெரிய வேண்டாமா?" என்று சொன்னவள் மனதில் 'எனக்கு பிடிக்கவில்லை என்றாலும்' என்ற வாசகம் மின்னி மறைந்தது.

அவள் சொன்ன வாக்கியத்தில் அவனின் உற்சாகம் வடிந்து காணாமல் போனது. தன் மனதை மட்டுமே நினைத்து அவளுடன் பேச குஷியாக கிளம்பியதில் அவளின் மனதை ஆராய மறந்து விட்டோமா? கேலியாக சொன்ன வார்த்தையைப் பிடித்து கொண்டு மீண்டும் அழைக்க வேண்டும் என்று இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாளே என்ற எண்ணம் தோன்றியது.

"நான் இங்கே தஞ்சாவூருக்கு வந்து இருக்கிறேன் என்பதை சொல்லத்தான் போன் பண்ணினேன்..."

"..........."

"ஏற்கனவே முயற்சி செய்த போது எங்கேஜ்டா இருந்ததே? யார் பேசிட்டு இருந்தாங்க?"

".........."

"ஒருவேளை அம்மா இந்த தகவலை ஏற்கனவே உன்னிடம் சொல்லி விட்டாங்களோ...?"

"........."

"மை காட்..! நீ பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்பதில் இவ்வளவு தீவிரமா இருப்பாயா?"

"............"

"ஹேய்! இதென்ன இப்படி சைலண்டா இருக்கிறாய்? இப்ப பேசப் போவதில்லையா?"

"..........."

"இப்ப போனை வைத்து விட்டு நான் உடனே திருப்பிக் கூப்பிடுகிறேன். வேறே எங்கேயும் போய் விடாதே..." என்று போனை வைத்த ஷ்யாமிற்கு உள்ளுக்குள் சின்ன கோபம் துளிர்த்து இருந்தது. ஆனால் மீண்டும் அவளை அழைத்த அடுத்த வினாடி அவள் போனை எடுத்து, "ஹாய்... நான்தான்..." என்று ரகசிய குரலில் சொல்ல, அந்த கோபம் காணாமலும் போய் இருந்தது.

"இருந்தாலும் உனக்கு ரொம்ப பிடிவாதம் தான். அவ்வளவு நேரம் மௌனம் சாதித்து விட்டாயே!"

"அது பிடிவாதம் இல்லை. கொள்கை பிடிப்பு. சொல்லுங்க. எப்படி இருக்கீங்க? என்ன திடீர் என்று குடும்பத்தோடு விஜயம்? காலையில் பேசும் போது கூட வருவதா உங்க அம்மா சொல்லவே இல்லையே?" என்று விளக்கம் சொன்னதோடு அவனையும் விசாரித்தாள்.

"திடீர் என்று கிளம்ப வேண்டியதாக போய்விட்டது. நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். அதை நீ எப்படி எடுத்து கொள்வாய் என்று தெரியலை.." என்று இழுத்தவனுக்கு, திருமணத்தை நிறுத்தும் வகையில் அப்பா எழுதிய லெட்டர் உங்க அப்பாவிடம் போய் சேராமல் தடுக்க வந்து இருக்கிறேன் என்ற உண்மையைச் சொல்ல வாய் வரவில்லை. மனம்



முழுக்க அவள் வேண்டும் என்ற ஆசை நிரம்பி வழிய, திருமணத்தை நிறுத்தும் வழி பற்றிப் பேசப் பிடிக்கவில்லை.

"நான் கூட.. உங்களிடம்... ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். அதை நீங்க எப்படி எடுத்து கொள்வீங்க என்று எனக்கும் தெரியவில்லை..." என்று அவனை மாதிரியே இழுத்தாள் சுந்தரி.

"ஓகே. போனில் முக்கியமான விஷயம் பேச வேண்டாம். எப்படியும் இந்த ராத்திரி பொழுதில் ஒன்றும் செய்யப் போவதில்லை. அதனால் காலையில் நேரில் பேசிக் கொள்ளலாம். நாளைக்கு காலை உங்க வீட்டுக்கு நாங்க நாலு பேரும் பதினோரு மணி வாக்கில் வருகிறோம். வச்சுடறேன். குட்நைட்" என்று போனை வைத்தவன் கதவு திறக்கும் ஓசை கேட்டுத் திரும்பினான்.

"ஹாய் அண்ணா சாப்பிட போகலாமா?" என்றபடி உள்ளே வந்தாள் சைலஜா.

"நீயும் அம்மாவும் போய் சாப்பிடுங்க. நான் ரூமுக்கே வரவைத்து சாப்பிட்டுக் கொள்கிறேன்."

"ஓகே ஓகே! அண்ணியிடம் தனியா பேசணுமா? அப்பா வேறே இல்லை. என்ஜாய்" என்று சொல்லி நகர, சலிப்பாக கட்டிலில் சரிந்தான் ஷ்யாம்.

'கோட் வேர்டை மறந்து விட்டாய்' என்று கேலியாக சொன்ன ஒரு வார்த்தையைப் பிடித்து வைத்து கொண்டு கடைசி வரையில் பேசாமல் மௌனம் சாதித்து விட்டாளே? தன்னுடன் பேச வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு இருந்திருந்தால் இப்படி மௌனம் சாதிக்க முடியுமா தான் மட்டும் ஆசைப் பட்டு என்ன செய்வது?'

என்ற ரீதியில் மனசுக்குள் பொருமிய ஷ்யாம் இரவு முழுவதும் தூங்கவில்லை.

என்னதான் இரவு முழுவதும் தூங்காமலே கழித்தாலும், பொழுது விடிந்து கதிரவன் தன் கதிர்களை நீட்டி பூமி பந்தை தொட்ட போது, நேரில் சந்திக்கும் ஆசை பெரிதாக கிளர்ந்து எழுந்தது. கடிகார முள் பதினோரு மணியை நோக்கி நகரும் பயணம் மிக மிக மெல்ல நடந்ததாக தோன்றியது.

* * *

காலை ஒன்பதரை மணிக்கு காலை உணவை முடித்ததும், கௌசல்யா தன் கணவரை மட்டும் அழைத்து கொண்டு, அவசரமாக கிளம்ப ஷ்யாமும் சைலஜாவும் வியப்பாக பார்த்தனர்.

ஹேமந்த் வீட்டுக்கு மாலையில் போகலாம் என்றும், பதினோரு மணிக்கு சுந்தரி வீட்டுக்கு போவதாக ஏற்கனவே பேசி வைத்து இருக்க, அதற்குள் எங்கே தனியாக கிளம்புகிறார்கள்? அதை எப்படி கேட்பது என்று அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்து, உதட்டை பிதுக்கி தோளை குலுக்க, அவர்களின் எதிரே வந்து நின்றார் கௌசல்யா.

''என்ன... எங்கே போறீங்க என்று கேட்க வாய் வரை வார்த்தை வந்து முட்டுமே...?'' என்று கேலியாக கௌசல்யா கேட்டதும், சைலஜா அவசரமாக தலையை ஆட்ட, ஷ்யாம் சிரித்தான்.

''ஷ்யாம் சிரிக்கிறான். அவனுக்கு தெரிய வேண்டாம் போல இருக்கு. நான் உனக்கு மட்டும் சொல்கிறேன்'' என்று அவளின் காதில் தான் போகும் இடத்தை



ரகசியமாக கௌசல்யா சொல்ல, அவள் புன்னகை செய்தாள்.

''நினைத்தேன். ஆனால் இங்கே வாங்குவீங்களா என்று ஒரு சின்ன சந்தேகம் வந்தது...'' என்று அவள் ரகசியமாக சொன்னாலும் அவளின் உதட்டசைவில் இருந்து, அவள் என்ன சொல்லி இருக்கக் கூடும் என்பதை ஷ்யாமால் ஊகிக்க முடிந்தது.

''ஏன்மா, என்னிடம் சொன்னால் நான் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்? எல்லோரும் ஒன்றாகவே போகலாம்...'' என்று ஷ்யாம் சொல்ல கௌசல்யா விழி விரித்தார்.

''நிஜமாவா சொல்றே? கல்யாண பேச்சு ஆரம்பித்ததில் இருந்து ஆயிரம் தடை சொல்லிக் கொண்டே இருந்தாயே? முதன் முதலில் மருமகளை பார்க்க போகும் போது ஏதாவது வாங்கி கொண்டு போகலாம் என்று நினைத்தேன் உன்னிடம் சொல்லி, நீ மறுத்து அதன் பிறகு வாங்க வேண்டாமே என்று தான் நானும் அப்பாவும் மட்டும் கிளம்பினோம்...''

''பரவாயில்லை. அம்மா சொல்றதை தட்ட முடியாது என்று ஆயாச்சு. இனி நடப்பது சந்தோஷமாக இருக்கட்டுமே? எல்லோரும் ஒன்றாகவே போகலாம்...'' என்று சொல்லியபடி சைலஜாவை பார்க்க, அவள் ஓடி வந்து அண்ணனை அணைத்து கொண்டாள்.

''தேங்க்ஸ் அண்ணா. இதை முதலிலேயே சொல்லி இருக்கலாம்...'' என்று கண் சிமிட்ட, அவன் அவளை தோளோடு அணைத்து, ''பெட்டர் லேட் தான் நெவர்..'' என்று சிரித்தான்.

''சோழா ஹோட்டல் ரூம் நம்பர் 307ல தான் அண்ணனுக்கு ஞானோதயம் பிறக்க வேண்டும் என்று இருந்தால் அதை மாற்ற யாரால் முடியும் சைலு? வாங்க வாங்க சீக்கிரம் போகலாம்'' என்று உற்சாகமாக வர வேற்ற கௌசல்யாவை இருவரும் பின் தொடர்ந்தனர்.

மகன் மற்றும் மகள் இருபக்கமும் அணிவகுக்க ஊர்வலமாக வந்த கௌசல்யாவை பார்த்த பத்மநாபன், 'இவர்களை ஏன் அழைத்து கொண்டு வருகிறாள்?' என்ற குழப்பத்தில் அவசரமாக காரில் இருந்து இறங்கினார்.

* * *

காலை பத்தரை மணி அளவில் சுந்தரியை கிளப்பும் பணியில் ஈடுபட்டு, அவளுக்கு உதவுகிறேன் என்ற போர்வையில் அவளின் பொறுமையை சோதித்து கொண்டு இருந்தாள் செல்வராணி.

''கலகலப்பா பேசுறவங்களை கூட ஒரு பங்கில் சேர்த்து கொள்ளலாம் அவர்களை நம்பலாம். ஆனால் வாய் பேசாமல் அமைதியாக இருப்பவர்களை ஒரு காலும் நம்பவே கூடாது. அவர்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக தான் இருக்கும். இந்தக் கல்யாணம் எப்படியும் நடக்க போகிறது. நல்ல வேளை ஒரு பட்டுப் புடவைக்கு உன்னிடம் போட்ட டீலை மாற்றி, கௌசி அத்தையிடம் போட்டேன். அங்கே ஒன்றுக்கு பத்தா எனக்கு வேறே ஏதாவது கிடைக்கும்...'' என்று செல்வ ராணி பெருமையாக பீற்றி கொள்ள, இழுத்து பிடித்து வைத்து இருந்த பொறுமை பறந்தது.

''நீ எனக்கு சப்போர்ட் பண்றியா? இல்லை எதிரிக்கு சப்போர்ட் பண்றியா என்றே எனக்கு தெரியலை ராணி...''



''ஹலோ.. ஹலோ.. யார் உன்னுடைய எதிரி..? கௌசி அத்தையா? இது நல்ல கதையா இருக்கே? அம்மா எதிரி, பையன் உறவா..? இது ஆவதற்கில்லை..'' என்று சொல்ல பதறினாள் சுந்தரி.

''ஹய்யோ.. நான் அவங்களை சொல்லலை...''

''அப்ப மாமாவை சொன்னாயா?''

''எனக்கு எதிரி வெளியே இல்லை. வீட்டுக்குள்ளேயே இருக்கு...''

''ஹய்யோ..! வீட்டுக்குள்ளேயே எதிரியா? யார் அது? அப்பாவா...? அம்மாவா? இல்லை பாட்டியா? யாரா இருந்தாலும் உன் நலன் நாடும் பெரியவங்களை இப்படி எல்லாம் நீ சொல்வாய் என்று நான் எதிர்பார்க் கவே இல்லை சுந்தரி...''

''பெரியவங்களை நான் சொல்வேனா? எனக்கு எதிரி நீதான். நீ மட்டும் தான். எனக்கு நீ உதவி பண்ணியது போதும். நீ கிளம்பு, அடுக்களையில் அம்மாவுக்கு ஏதாவது உதவி வேண்டுமா என்று கேளு...'' என்று அவளை துரத்தி விட்டு ஹாலுக்கு வந்தவள் கண்களில் அப்பா வாட்டத்துடன் அமர்ந்து இருப்பது கண்ணில் பட்டது.

''அப்பா.. என்னப்பா... ஒரு மாதிரி இருக்கீங்க? உடம்பு சரி இல்லையா?'' என்ற சுந்தரியின் குரல் கேட்டதும் அவசரமாக எழுந்தார்.

''நீ எங்கே வெளியே வந்தாய்? மாப்பிள்ளை வீட்டுல அவங்க வரும் நேரம் ஆச்சு. நீ உள்ளே போய் கிளம்பும்மா. தலையில் நிறைய பூ வச்சுக்கோ...''

''அப்பா நான் ரெடியாகிட்டேன். நீங்க என்ன விஷயம் என்று சொல்லுங்க ஏன் உங்க முகம் ஒரு மாதிரி இருக்கு...?''

''ஒன்றும் இல்லைடா. சந்தோஷ் அப்பா வருகிறேன் என்று சொன்னார்...''

''வரட்டுமே..! அதனால் என்னப்பா..? அதற்கு என்ன செய்ய வேண்டும்?''

''அதை நான் பார்த்து கொள்கிறேன். நீ உள்ளே போம்மா. மாப்பிள்ளை வீட்டுல வரும் நேரமாச்சு...''

''மாப்பிள்ளையோட அப்பா உங்க பிரெண்டு தானேப்பா? அவங்க விரும்பி தானே என்னை கல்யாணம் பண்ண போறதா சொன்னீங்க. அப்புறம் என்ன பயம்? இத்தனை நாள் உங்களுக்குள்ளே மறைத்து வைத்தது போதும். உண்மையை சொல்லுங்கப்பா ப்ளீஸ். நீங்க எங்க நல்லதுக்காக பாடு படும் போது அதே மாதிரி எங்களுக்கும் உங்க மேலே அக்கறை இருக்காதாப்பா?''

''நித்யாவுக்கு நகை செய்ய கொடுத்து இருந்தோம். அதை வாங்க போகணும். டியூ டேட் தாண்டியாச்சு. அதுக்காக வரேன் என்று சொன்னாங்க...'' என்று அவர் இன்னும் சுற்றி வளைக்க, அவளுக்குப் புரிந்தது.

''நான் பேசிக் கொள்கிறேன். மிச்ச விபரம் மாப்பிள்ளை வீட்டுல வந்து போன பிறகு கேட்டுக்கோ. மணியாச்சு நீ உள்ளே போ..'' என்று அவளை துரத்தாத குறையாக அறைக்குள் தள்ளியவர், அதோடு நில்லாமல் நண்பரின் குடும்பத்தை வரவேற்கும் பாவனையில் வாசலுக்கும் சென்றுவிட்டார்.



நித்யா கல்யாணத்திற்கு நகை வாங்குவது என்றால் பல லட்சங்கள் தேவைப் படும். அப்பா மருத்துவ மனையில் இருந்த போது மாமா தான் செலவு பண்ணினார். கடையில் தன் பங்கை எழுதிக் கொடுத்துவிட்டார். ஆனால் அதையும் தாண்டி செலவு பண்ணி இருக்கிறார் போலவே? அதை அப்பா திருப்பிக் கொடுக்க வேண்டும்.

ஐந்து மாதங்களாக அவர் அந்த பணத்தை திருப்பி கேட்கவில்லை. இன்னும் ஐந்து தினங்களில் நித்யாவிற்கு திருமணம் என்ற நிலையில், மாமாவால் இனியும் பொறுமையாக இருக்க முடியாது.

ஆனால் இவ்வளவு சிரமத்தில் தனக்கு ஏன் அவசரமாக கல்யாணம் செய்ய வேண்டும்? அதற்கும் செலவாகாதா? அம்மாவின் நகையை போடுவார் என்றாலும் மற்ற செலவுகளுக்கு என்ன செய்வார்?

தன் அறையில் வந்து அமர்ந்தவள் பெருமூச்சுடன் தலை கவிழ்ந்து அமர்ந்து இருந்த சுந்தரியின் தலையை வருடி, ''என்ன உங்க அப்பா நீ கேட்ட கேள்விக்கு சரியா பதில் சொல்லவில்லை என்று சோகமா இருக்கியா?'' என்று கேட்டபடி அருகில் வந்து அமர்ந்தார் திரிபுரசுந்தரி சீனியர்.

''பாட்டி... நித்யா கல்யாணத்திற்கு தேவையான பணம் புரட்டவே அப்பா இவ்வளவு சிரமப்படும் போது இப்ப எனக்கு என்ன கல்யாணத்திற்கு அவசரம் பாட்டி? நான் தான் படிக்கிறேன் என்று சொல்றேனே...?'' என்று தவிப்புடன் கேட்டாள் சுந்தரி.

''நித்யா கல்யாணம் நல்லபடியா முடியவும், கூடவே நீ படிக்கவும் வாய்ப்பு கிடைத்தால் தான் உங்க அப்பா

இந்த அவசர கல்யாணத்திற்கே சரி என்று சொன்னான்...'' என்று பாட்டி சொல்லி முடிக்கும் முன்பே அவசரமாக இடையிட்டாள் சுந்தரி.

''அப்படின்னா.. அவங்க வீட்டுல... அப்பாவுக்கு பணம் தராங்களா...?'' என்று கேட்டவளின் குரலில் வருத்தம் இருந்தது.

"ஆமா! ஒண்ணு ரெண்டு இல்லை. பதினஞ்சு லட்சம் ரூபாய் பணம் தராங்க. ஆனால் உங்க அப்பாவுக்கு அதை சும்மா வாங்கிக் கொள்ள மனசு இடம் கொடுக்கலை. அதனால், இந்த வீட்டில் பாதியை அவங்க பேருக்கு எழுதி கொடுக்க முடிவு பண்ணிட்டான். ஆனால் அவங்க அதை உன் பேரிலேயே எழுதி வைக்க சொல்லிட்டாங்க. அதனால நாங்க இங்கேயே தொடர்ந்து இருக்கலாம். மார்க்கெட் ரேட் என்று பார்த்தால் அவ்வளவு பெறாது தான். ஆனாலும் சொத்து என்ற ஒன்றை கொடுத்து கடன் வாங்குகிறோம் என்பதில் இவனுக்கு திருப்தி ஆனால் இதுல நீ வருத்தப்பட ஒன்றும் இல்லை. பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள பணம் கேட்பது தான் தவறு. கொடுப்பது நல்ல விஷயம் தானே?" என்று கேட்க அவள் முகம் மேலும் மலர்ந்தது.

என்னதான் நட்பு என்றாலும் பல லட்சங்களை இப்படி சில நாட்களில் கொடுக்க எல்லோருக்கும் மனசு வருமா என்ன? அவர்கள் வீட்டில் இருக்கும் எல்லோரும் எவ்வளவு நல்லவர்கள்? இவனை ஏன் வேண்டாம் என்று சொன்னேன்?

அவனுக்கு சம்மதம் என்றால், இனியும் அவனை மறுத்து பேசக் கூடாது. அப்பாவிற்கு காலத்தே உதவி



செய்தவர்களுக்கு தன்னால் இயன்ற நன்றிக் கடனைத் திருப்பி செலுத்துவது தான் நல்ல பெண்ணிற்கு அழகு என்று முடிவெடுத்தவள் மலர்ந்த புன்னகையுடன் ஷ்யாமை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

# 19



கௌசல்யாவை மட்டும் அழைத்துக் கொண்டு, நகை கடைக்கு செல்லலாம் என்று முடிவு பண்ணி இருந்த பத்மநாபன், மனைவி மகள் மற்றும் மகனுடன் வருவதை கண்டதும் குழம்பி காரில் இருந்து இறங்கினார்.

''கௌசி. இப்ப ஏன் ஷ்யாமையும் கூட்டிட்டு வருகிறாய்? நான் அவனுக்கு வேண்டாம் என்று நினைத்தேனே...?'' என்று அவரை அழைத்து சென்று அவசரமாக குரலில் விசாரித்தார்.

''ஏங்க? முன்னாடி ஷ்யாம் வேண்டாம் வேண்டாம் என்று அஸ்து போட்டுட்டு இருந்தான். அதனால வேண்டாம் என்று சொன்னீங்க. இப்ப அவனே அம்மா சொன்னால் ஓகே என்று சொல்லி விட்டான். பயப்படாதீங்க'' என்று சமாதானம் செய்ய முயன்றதும் அவர் மறுப்பாக தலை அசைத்தார்.

''ப்ச் அதுக்காக நான் சொல்லலை...'' என்று அவர் விளக்கம் சொல்ல முயலும் போதே அவர்கள் காரில் ஏறி இருந்தனர்.

''உங்க பிரச்சனை என்ன என்று எனக்குத் தெரியும். நீங்க உங்க பிரெண்டுக்கு செய்யும் உதவி ஷ்யாமுக்கு தெரியக் கூடாது. அவ்வளவு தானே? நான் பார்த்து கொள்கிறேன். பயப்படாதீங்க. கிளம்பலாம்...''

''ப்ச்! அதில்லை கௌசி, உதவி செய்கிறேன் என்று நானே நேற்றே அவனிடம் சொல்லிவிட்டேன். எவ்வளவு எப்படி என்று விளக்கமாக தெரியாது. அப்படியே இருக்கட்டும் என்று நினைத்தேன்...''

''ஏங்க அப்படி சொல்றீங்க? ஷ்யாமுக்கு தெரிந்தால் உங்களை உதவி செய்ய வேண்டாம் என்று சொல்லி விடுவானா என்ன? அவனைப் பற்றிய உங்க நம்பிக்கை இவ்வளவு தானா? என் பையனை பற்றி அவ்வளவு சீப்பாவா நினைத்தீங்க?'' என்று கோபத்துடன் பல்லைக் கடித்தார் கௌசல்யா.

''எப்போதுமே பெண்களுக்கு புருஷனை விட பையனை தான் பிடிக்கும் அவங்களுக்கு தான் சப்போர்ட் பண்ணுவாங்க என்பது காலம் காலமா நிலவும் நம்பிக்கை தானே? அதுக்கு நீ மட்டும் விதி விலக்கா என்ன? நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை புரிந்து கொள்ள முயற்சி கூட செய்யாமல்...''

''கணவனா பிள்ளையா என்று பட்டிமன்றம் நடத்த இப்ப நேரம் இல்லை. விலாவாரியா விளக்கம் வேண்டாம். உங்க வியாக்கியானத்தை சீக்கிரம் சுருக்கமா சொல்லுங்க. ஷ்யாமும் சைலுவும் ஏற்கனவே வண்டியில் ஏறியாச்சு. மணி வேறே ஆகுது...''

''செய்யும் உதவியை வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு ஷ்யாம் சீப் இல்லை. எனக்கும் தெரியும்.



ஆனால் சுந்தரியை மனமுவந்து கல்யாணம் பண்ணிக்கலையே? நம் கட்டாயத்துக்காக அரை குறை மனதோடு சம்மதம் சொல்பவன், ஏதாவது கோபத்தில் வார்த்தைகளை அந்தப் பெண்ணிடம் அள்ளி விட்டுடக் கூடாதே என்று தான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். கிருஷ்ணனிடமும் அவன் பெண்ணிடம் கூடச் சொல்ல வேண்டாம் என்று சொல்லி இருந்தேன். விளக்கம் போதுமா...?'' என்று நீளமாக பத்மநாபன் விளக்கம் சொன்னதற்கு, கௌசல்யா பதில் சொல்வதற்கு முன்பு, ஷ்யாமே காரில் இருந்து இறங்கி வந்தான்.

''என்னப்பா, இங்கே தனியா அம்மாவோடு குட்டி மாநாடு நடத்தி கொண்டு இருக்கேங்க? கிளம்பலாம்பா. அம்மாவையும் சைலுவையும் கடைசியில் விட்டுட்டு, நாம ரெண்டு பேரும் ஹெட் போஸ்ட் ஆபீஸ் போகணும்பா. நான் எதுக்கு இங்கே வந்தேன் என்பதையே மறந்துட்டீங்களா..?'' என்று கேட்க கௌசல்யா இருவரையும் மாறி மாறி பார்த்தார்.

''நான் எதுக்கு...? நீயே பார்த்து கொள்வதாகத் தானே சொன்னாய்...?'' என்று தயக்கத்துடன் பின் வாங்கினார் பத்மநாபன்.

''போஸ்ட் ஆபீசா? எதற்கு ஷ்யாம்?''

''நீங்க எப்படியாவது இந்த கல்யாணம் நடக்கணும் என்று சாமி கும்பிட்டு, இல்லாத வேலை எல்லாம் பண்றீங்க. ஆனால் அப்பா இந்தக் கல்யாணத்திற்கு இப்போ அவசரம் இல்லை, என்று அவருடைய பிரெண்டுக்கு லெட்டர் எழுதி அனுப்பி இருக்கிறார். உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேலியாக கேட்க கௌசல்யா அவசரமாக கணவனைத் திரும்பி முறைத்தார்.

''என்னங்க இது? ஷ்யாம் சொல்றது நிஜமா?'' என்று கோபமாக கேட்க, தான் சொன்னது பொய் என்று மனைவியிடம் உடனடியாக தெரிவிக்கும் அதே நேரத்தில் மகனிடம் இருந்து எப்படி தப்பிப்பது என்பது புரியாமல் திரு திருவென விழித்தார் பத்மநாபன்.

''அது.. நீதானே.. நேற்று மதியம்... ஷ்யாமிடம்.. பேச சொன்னாய்.. அதுக்கு.. நான்...'' என்று வார்த்தைகளுக்கு துழாவ, வினாடிக்குள் கௌசல்யாவிற்கு கணவரின் நிலை புரிந்து விட்டது. பேசத் தெரியாமல் எதையோ உளறி வைத்து இருக்கிறார் என்பது மட்டும் புரிந்தது.

''ஷ்யாம், போஸ்ட் ஆபீஸ் போறதுக்கு இப்ப என்ன அவசரம்? என்ன வேலையாக இருந்தாலும் அதை மதியம் பார்க்கலாம். காலையில் பதினோரு மணிக்கு நல்ல நேரம் பார்த்து சுந்தரியை பார்க்க அவங்க வீட்டுக்கு வரோம் என்று ஏற்கனவே சொல்லியாச்சு. அதை இப்ப எந்தக் காரணம் கொண்டும் மாற்ற வேண்டாம். அங்கே போயிட்டு திரும்பிய பிறகு நீ எங்கே வேணாலும் தனியா போ. என்ன வேலை வேண்டுமானாலும் பாரு. இப்போதைக்கு அந்த வேலையை அம்மாவுக்காக ஒத்தி வை. ப்ளீஸ்...! ஓகே?'' என்று உரிய ஏற்ற இறக்கங்களுடன் பாவனையாக சொல்ல ஷ்யாமிற்கு சிரிப்பு வந்தது.

அப்பாவின் பாவனையில் இருந்தும் அவர் சொல்வது உண்மை இல்லை என்பதை ஊகிக்க முடிந்ததால் அதையும் ஒதுக்கினான்.

''சரிம்மா, உங்களுக்காக அந்த முக்கியமான வேலை, மதியத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது. இப்போ நாம் நகை கடைக்கு போறோமா? துணி கடைக்கு போறோமா? நான் ரெடி...'' என்று ஷ்யாம் சிரிப்புடன் சொல்ல கௌசல்யா அவனின் கன்னத்தை வழித்து செல்லம் கொஞ்சினார்.



''அடேங்கப்பா... அம்மாவுக்கு ரொம்ப நாளைக்கு பிறகு இப்போதான் என்னை செல்லம் கொஞ்ச தோன்றி இருக்குது. இல்லைம்மா...?''

''ஆமா! ரொம்ப நாளைக்கு பிறகு, தஞ்சாவூர் சோழா ஹோட்டல் ரூம் நம்பர் 307-ல ஒரு போதி மரம் இருந்து என் பையனுக்கு ஞானம் பிறந்து விட்டதால், அவன் பின்னால் பெரிதாக ஒளிவட்டம் தோன்றி, திடீர் என்று அவன் ரொம்ப புத்திசாலித்தனமாக பேசுவதால், கொஞ்சு வதை தள்ளி போட முடியவில்லை. வா போகலாம்..'' என்று கேலியாகச் சொல்ல அவரை சிரிப்புடன் மற்ற இருவரும் பின் தொடர்ந்தார்கள்.

''அம்மா.. இங்கே தஞ்சாவூரில் எந்த நகை கடையில் வாங்கலாம் என்று விசாரிச்சாச்சா? என்ன வாங்க போறீங்க?'' என்று வண்டியில் ஏறிய உடனே வேகமாக கேட்டாள் சைலஜா.

''நானே நெட்ல தேடி பார்த்தேன்மா. ஐம்பது வருஷமா எஸ்.ஆர்.பி. கோல்ட் ஹவுஸ் நல்லா இருக்கு என்று போட்டு இருந்தது. அங்கேயே போகலாம்...'' என்று பதில் ஷ்யாமிடம் இருந்து வர, 'வாவ்!' என்ற ஆச்சரிய குரல் மற்ற மூவரிடம் இருந்து வெளி வந்தது.

''அப்புறம் என்னம்மா...அண்ணனே சொல்லியாச்சு. அங்கேயே போகலாம். ஆனால் அண்ணன் முதல் கேள்விக்கு மட்டும் தானே பதில் சொல்லி இருக்காங்க அடுத்த கேள்விக்கு பதில்....''

''அதுவும் உங்க அண்ணனே முடிவு பண்ணட்டும். அவரிடமே கேளு...''

''எனக்கு ஐடியா இல்லையேம்மா! எங்க அம்மா என்ன சொன்னாலும் ஓகேதான் எனக்கு...''

''ஓஹோ! அப்ப பட்ஜெட் பற்றி கவலை இல்லை என்று சொல்கிறாயா?''

''ஒரு லட்சத்துக்குள்ளே பாருங்க. க்ரெடிட் கார்டில் வாங்க முடிந்தது அவ்வளவுதான்...''

''ம்கூம்! ஒரு லட்சத்திற்கு என்னடா வாங்க முடியும்? ரெண்டு மோதிரம் தான் வாங்க முடியும்....''

''ரொம்ப நல்லது. இப்போதைக்கு அது போதும். அப்புறம் கல்யாணத்திற்கு, சென்னையில கணக்கில் லாமல் வாங்கிக்கலாம்...'' என்று ஷ்யாம் சொல்ல, கேலி பேசும் சிரிப்புமாக நகை கடையில் ஷ்யாம் சுந்தரி இரு வருக்கும் ஒரே மாடலில் மூன்று வைர கற்கள் பதித்த வைர மோதிரங்களும், ராணிக்கு வாக்களித்த படி அவ ளுக்கு மூன்று கிராமில் ஒரு தங்க மோதிரமும் வாங்கி னார் கௌசல்யா.

ஷ்யாம் சொன்ன ஒரு லட்சத்திற்கும் மேலே எட்டு லட்சத்திற்கான பில் அவன் கையில் கொடுக்கப்பட, அவன் யோசனையுடன் அப்பாவை கண்ணால் அருகே அழைத்தான்.

''அப்பா... இது...'' என்று தயக்கத்துடன் பில்லை நீட்டினான்.

''இது நான் கிருஷ்ணமூர்த்திக்கு செய்ய வேண்டிய நன்றி கடன் ஷ்யாம். அவன் பட்ட கடனை அடைக்கும்



முயற்சியில் இந்த நகை கடனை நான் செலுத்த வேண்டும். இது அவனுடைய சிஸ்டர் பொண்ணு கல்யாணத்திற்காக வாங்கிய நகை பில். பணம் வைத்து இருக்கிறேன். பில் நான் செட்டில் பண்ணி விடுவேன். உனக்குத் தெரியாமல் செய்ய வேண்டாம் என்பதற்காக உன்னிடம் தகவலுக்காக காட்ட சொல்லி அம்மா உத் தரவு... செய்யலாம் தானே?''

''என்னப்பா.. இது? ஒரு கல்யாணம் நடைபெற உதவி செய்ய என்னைக் கேட்கணுமா? ஆனால் அதுக்கு ஈடா இந்தக் கல்யாணம் என்றால் அந்த பெண்ணின் மனசு கஷ்டப்படும் என்று நினைக்கலையாப்பா? அதுதான் எனக்கு ஒரு மாதிரி இருக்கு...''

''இதை சொல்லாமலேயே செய்து விட முதலில் நினைத் தேன் கல்யாணம் பண்ண ஆயிரம் பொய் சொல்லலாம் என்று சாஸ்திரம் சொல்லும் போது நாம் சில உண்மை களை சொல்லாமல் இருக்கப் போகிறோம். அதில் என்ன தப்பு என்று நினைத்தேன்...''

''என்னப்பா நீங்க..? சாஸ்திரம் சொல்வது ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் பண்ணுவது அல்ல. ஆயிரம் முறை போய் சொல்லி கல்யாணம் செய்வது... நீங்களும் இந்த மாதிரியா புரிந்து கொள்வது...?''

''சாரி ஷ்யாம்.. உனக்கு இருக்கும் அளவுக்கு பெருந் தன்மையும் பக்குவமும்...''

''ஹையோ.. அப்பா.. நீங்க என்ன என்னென்னவோ பேசறீங்க? அந்த அளவுக்கு உங்களை தாழ்த்திக் கொள்ள அவசியம் இல்லை. நீங்க என்னைக்கும் எங்க மரி யாதைக்குரிய அப்பா. நீங்க எடுக்கும் எல்லா

முடிவுகளையும் நாங்க சந்தோஷமா ஏற்றுக் கொள்வோம். ஓகே? போய் அந்த பில்லை செட்டில் பண்ணிட்டு வாங்க. நாம உங்க ப்ரெண்ட் வீட்டுக்கு, என்னுடைய சுந்தரியைப் பார்க்கப் போக நான் ரெடி நீங்க ரெடியா?'' என்று உற்சாகமாக கேட்க, நெகிழ்ச்சியுடன் மகனை அணைத்து கொண்டார் பத்மநாபன்.

கேலி கிண்டல் பேச்சுடனும் மனம் கொள்ளாத சிரிப்புடனும் நான்கு பேரும் சுந்தரியைப் பார்க்க பதினோரு மணிக்கு வந்து சேர்ந்த போது, வாசலிலேயே நின்று சந்தோஷமாக வரவேற்றார் கிருஷ்ணமூர்த்தி.

நகை கடையில் பில் செட்டில் பண்ணிவிட்டேன் என்று அங்கிருந்தே பத்மநாபன் போனில் கிருஷ்ண மூர்த்திக்கு தகவல் சொல்லி விட, தன் கவலை முழுவதும் அகன்று, நன்றி உணர்வு பெருக்கெடுக்க உற்சாகத்துடன் வரவேற்றார்.

''வாங்க வாங்க சம்பந்திம்மா. உங்களை தான் எதிர் பார்த்து காத்திருக்கிறோம். நைட்டே வந்துட்டீங்க என்று பத்மநாபன் சொன்னான். உங்களை நேரில் பார்க்க இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கலை. ஆனால் உங்களை பற்றி நிறையச் சொல்லி இருக்கான்...''

''என்னங்கண்ணா! என்னை பேர் சொல்லி கூப்பிட லாம். வாங்க போங்க என்றால் சம்பந்திம்மா என்று தள்ளி வைப்பது மாதிரி இருக்கு. அது வேண்டாம். அண்ணி அம்மா எல்லாம் நல்லா இருக்காங்களா?'' என்று கௌசல்யா கிருஷ்ணமூர்த்தியிடம் விசாரிக்க, உள்ளிருந்து செல்வராணி துள்ளிக் குதித்து ஓடி வந்து அவரின் கை பற்றி வரவேற்றாள்.



''ஹாய் அத்தை! வாங்க வாங்க... அதென்ன அம்மா, பாட்டி எல்லாரையும் கேட்டீங்க உங்க மருமகளைப் பற்றி கேட்கலை. மறந்துட்டீங்களா?'' என்று கிண்டலடித்தபடி வரவேற்றாள்.

''என் மருமகளை மறப்பேனா? அவளையும் மறக்கலை. உன்னையும் மறக்கவில்லை உனக்கு ப்ராமிஸ் பண்ணிய பரிசும் கொண்டு வந்து இருக்கேன். எங்கே இருக்கிறாள் சுந்தரி? வா, போய் பார்க்கலாம்...'' என்று கௌசல்யா அவளின் கையை பற்றி அழுத்தி அன்புடன் சொல்ல சைலஜா புன்னகை செய்தாள்.

''நீங்க தான் இந்த வீட்டின் ராணியா? நேற்று காலையில் இருந்து அம்மா உங்க விசிறியாகவே மாறி விட்டாங்க. உங்களுக்கு தான் தேங்க்ஸ் சொல்லணும் என்று எத்தனை தடவை என்னிடம் சொல்லி இருப்பாங்க என்று கணக்கே கிடையாது நைஸ் மீட்டிங் யு...'' என்று கை நீட்டினாள்.

''ஹாய்! ஆளையும் அப்பியரன்சையும் பார்த்தால் நீ தான் சைலஜா? கரெக்டா? அத்தை எனக்கு விசிறியா? நான் தான் அவங்க ஃபேன். நேரே உன்னிடம் பேசியதில்லை அல்லவா? அதான் அத்தையிடம் முதலில் பேசினேன். எங்கே எங்க மாம்ஸ்...?'' என்று உற்சாகமாக நீட்டிய அவள் கைகளில் தன் கையை வைத்து அழுத்தியவள் இயல்பாக ஒருமைக்கு தாவ சைலுவின் கண்களில் சினேக பாவம் உடனடியாக துளிர்த்தது.

''மாம்ஸ்... யாரு...? அப்பாவா..?'' என்று அவளின் உற்சாகமான பேச்சை நம்ப முடியாமல் கேட்டாள் சைலஜா.

''நோ நோ... பெரியவங்களை அப்படி எல்லாம் சொல்வேனா? இது உங்க அண்ணன்.. எங்க அக்காவை கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதால் மாமா. செல்லமா மாம்ஸ்... இன்னும் வீட்டுக்குள்ளே வரலையா? உனக்கு தெரியுமா? முதன் முதலில் எங்க வீட்டுக்கு போனில் பேசும் போதே முதல் வார்த்தை மாம்ஸ் சொன்னது என்ன தெரியுமா? ஹய்யோ... சைலுவே தேவலாம் தான்.. தெரியுமா?'' என்று ஓட்டை பானைக்குள் நுழைந்த நண்டு மாதிரி இடைவெளியே இன்றி செல்வராணி பேச, அடைமழை பொழிவது போல இடைவெளியே இல்லாமல் பேசுவதாக அடிக்கடி ஷ்யாம் சொல்லும் குற்ற சாட்டுக்கு ஆளாகும் சைலஜாவே ஒரு கணம் அசந்து போய், மௌனமாக நின்றாள்.

வீட்டுக்குள் நுழையும் போது கவனமாக வலது காலை எடுத்து உள்ளே வைத்த ஷ்யாமின் கண்கள் சுந்தரியைத் தேட, முதலில் கண்ணில் பட்டது, ''வாங்க சம்பந்தி.... வாங்க மாப்பிள்ளை...'' என்று மரியாதையாக வரவேற்ற சீனியர் திரிபுரசுந்தரி.

''நமஸ்காரம் பாட்டி. ஆசீர்வாதம் பண்ணுங்க...''என்று இரண்டே எட்டில் அருகே வந்த ஷ்யாம், குனிந்து அவரின் காலை தொட்டு, கண்ணில் ஒற்றி கொள்ள, அந்த காட்சியை கண்ட அனைவருமே அசந்து போனார்கள். இரண்டே வினாடிகள் மட்டுமே நீடித்த அந்த ஷ்யாமின் சின்ன செய்கை அங்கே இருந்தவர்களின் மனதில் விதம் விதமான எண்ணங்களை தோற்றுவித்தது.

'அட பாவி அண்ணா...! பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டியது தான். தப்பில்லை



ஆனால் அதுக்காக இப்படி உள்ளே நுழையும்போதே ஒரே செகண்ட்ல இப்படி கவுந்துட்டானே! இத்தனை நாள் செமை ஆக்டிங்கா..?' என்று எண்ணினாள் சைலஜா.

'இப்படி ஒரு மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லும் அந்த லூசை என்ன தான் பண்றது?' என்று எண்ணினாள் செல்வராணி.

''இது ஷ்யாம் தானா? சுந்தரியின் போட்டோவையே பார்க்க மாட்டேன் என்று கிழித்து தூக்கி எறிந்தது இவன் தானா?'' என்று எண்ணினார் கௌசல்யா.

''கடவுளே! அரை குறையாக மனம் இல்லாமல் எங்களின் கட்டாயத்திற்காக மணம் செய்து கொள்கிறானோ என்ற சந்தேகத்தைப் போக்கியதற்கு நன்றி..'' என்று மனமார இறைவனுக்கு நன்றி சொன்னார் பத்மநாபன்.

''படிப்பு, வேலை, செல்வம் என்று எத்தனையோ உயரத்தில் இருந்தாலும் வயசுக்கு மதிப்பு கொடுத்து, நமஸ்காரம் செய்து விட்டானே! நல்ல மரியாதை தெரிஞ்ச பிள்ளை தான்...'' என்று சீனியர் திரிபுரசுந்தரி, கிருஷ்ணமூர்த்தி, கமலம் மூவருமே நினைத்தனர்.

''பெற்றவர்களிடம் மறுக்க முடியாமல் அவர்களுக்காக ஒத்து கொண்டு, தன் மூலமாக திருமணத்தை நிறுத்த எண்ணுகிறான் என்ற தன்னுடைய சந்தேகத்தை இந்த சின்ன செய்கை மூலம் நீக்கி விட்டானே என்ற எண்ணம் சுந்தரிக்கு தோன்றி மகிழ்ச்சி பொங்கியது. அறையில் இருந்து வெளியே வராத போதும், ஜன்னல் வழியாக அவனை முதல் முறையாக ஆர்வத்துடன் ரசித்தாள் ஜூனியர் சுந்தரி.

ஷ்யாமின் சின்ன செய்கை சில வினாடிகள் அங்கே அழுத்தமான மௌனத்தை ஏற்படுத்தி இருந்தாலும், அதைக் கலைத்து முதலில் வீட்டில் கலகலப்பை உரு வாக்கியது செல்வராணி தான்.

''வீட்டின் முக்கியமான ஆள் யார் என்று கரெக்டா கண்டு பிடித்து, அவங்க காலில் விழுந்தாச்சு. இனி நீங்க நினைத்தது எல்லாம் நடந்து விடும். கவலை படாதீங்க மாமா...'' என்று சந்தோஷமாக சொல்ல, கமலம் அதட்டி னார்.

''ஷ்! ராணி, உன் கேலி கிண்டல் எல்லாத்தையும் மூட்டை கட்டி வச்சுட்டு முதல் முதலில் வீட்டுக்கு வந்து இருப்பவர்களிடம் கொஞ்சம் மரியாதையா பேசு...'' என்ற கமலத்தை கௌசல்யா தடுத்தார்.

''ரொம்ப சம்பிரதாயமா ஆக்கிடாதீங்க அண்ணி. நாங்க உங்க வீட்டுக்கு நட்பு ரீதியில் தான் வந்து இருக்கோம்...''

''உண்மை தான் கௌசல்யா. உன்னோட பேச்சை கேட்டால் ரொம்ப சந்தோஷமா இருக்கு...'' என்று சுந்தரி சீனியர் சொல்ல கௌசல்யா அவரின் கையை பற்றி அழுத்தினார்.

''இந்தக் கல்யாணம் நடப்பதும் நடக்காததும் ஆண்ட வன் சித்தம்மா. உங்க வீட்டுல பெரியவங்க தான், எங்க மாமாவுக்கு ஐம்பது வருஷம் முன்னாடி நிறைய உதவி பண்ணி இருக்காங்க என்று ஷ்யாம் அப்பா சொன் னாங்க. வெளியூரில் இருந்ததனாலோ என்னவோ நமக் குள் நெருங்கிய பழக்கம் இல்லாமல் போய் விட்டது. இனிமேல் அந்தக் குறை இருக்காது...'' என்ற கௌசல்யா வின் பேச்சை ஆமோதித்தார் கிருஷ்ணமூர்த்தி.



''நீ சொல்வது சரி தான்மா. எத்தனையோ பிரச்சனை களுக்கு இடையிலும் அதை வளர்க்கலாம் என்று தான் இந்தக் கல்யாணம் பற்றிய பேச்சு வந்த போது சந்தோஷ மாக ஒத்து கொண்டோம்...'' என்று கிருஷ்ணமூர்த்தி மனம் குளிர்ந்து சொன்னார்.

''ஆளாளுக்கு பேசிட்டே இருக்கோமே ஷ்யாம் சத்தமே காணோம் பாருங்க. அவனுக்கு வேண்டியதை செய்ய வேண்டாமா? அம்மாடி... உன் பேர் என்ன ராணியா? அக்காவை கூட்டிட்டு வாம்மா. உங்க மாமா முதன் முதலா பொண்ணை பார்க்கட்டும்...'' என்று எதார்த்த மாக சொன்னார் பத்மநாபன்.

அவரின் வார்த்தைகள் காதில் விழுந்ததும் ராணி வருவதற்காக காத்திராமலேயே, அறைக்குள் இருந்து, ஹாலுக்குள் காலடி எடுத்து வைத்தாள் சுந்தரி.

''ஹா! முதன் முதலாகவா பார்க்கறாங்க...?'' என்ற கௌசல்யா, செல்வராணி, சைலஜா மூவரின் குரல் களும் மூன்றுகுரல்கள் கோரசாக சிரிப்புடன் சப்தமாக ஒலித்தது. சுந்தரி சீனியர், கிருஷ்ணமூர்த்தி, கமலம், மூவரும் இதற்கு ஏன் இவ்வளவு ஆச்சரியம் என்று விழித்தனர்.

ஆஹா! தேவை இல்லாமல் வாயை விட்டு விட் டோமோ? இப்ப எப்படி சமாளிப்பது?'' என்று பத்மநாபன் யோசிக்க, அந்த வினாடியில் ஹாலுக்குள் பிரவேசித்த சுந்தரியின் கண்களை சந்தித்த ஷ்யாமின் முகம் மலர்ந்தது.

அதன் பிறகே அவர்களின் காதில் 'முதன் முதலா கவா..?' என்ற கோரஸ் கேள்வி விழுந்தது. ''ஹைய்யோ

மாட்டி கொண்டோமே...'' என்ற கூச்சத்தில் இருவரின் முகமும், சிவந்தது. இணைந்த கண்கள் விலக வெகு நேரம் ஆனது.

## 20

அடர் பச்சை வண்ண உடலும், அதற்கு பொருத்தமான ஆரஞ்சு நிற பார்டரில் இரண்டு அங்குல அளவில் சின்னதாக கெட்டி ஜரிகையும் ஆரஞ்சு மற்றும் க்ரீம் வண்ணத்தில் மாற்றி மாற்றி நூலினால் மயில்களும், நெய்யப்பட்டு இருந்த அந்த பட்டு புடவை பாந்தமாய் தழுவி, அவளின் அழகை மேலும் கூட்டி அதிரூப சுந்தரியாக மாற்றி இருந்தது.

தளர பின்னிய ஒற்றை பின்னலும், வீட்டில் மலர்ந்த மொட்டுக்களை நெருக்கமாக தொடுத்த முல்லை பூ சரம் தோள் வழியாக முன்புறம் புரள, காதோரம் ஆடிய சின்ன குடை ஜிமிக்கி ரகசியம் பேச, கழுத்தை ஒட்டி இருந்த கல் நெக்லஸ், நீளமாக ஒரு டாலர் செயின், என்று குறைந்த நகையில், குளிர் நிலவாக ஜொலித்த சுந்தரியை பார்த்த ஷ்யாமின் கண்கள் இமைக்க மறந்து விட்டன.

கல்லூரியில் பார்த்த போது சல்வாரில் இருந்தாள். சாதாரண உடை என்பதாலோ, இன்றைய அளவிற்கு அன்று கவனம் சேர்த்து அலங்காரம் செய்யவில்லை என்பதாலோ, அவளை பார்க்கும் தன் கண்களில் இன்று மாற்றம் வந்து விட்டதோ, சுந்தரியை முதல் முறை



பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருப்பதாகத் தோன்றியது.

சைலுவை விட்டால் ஒன்று இரண்டு என்று நூறு வித்தியாசங்களை அடுக்கி விடுவாள். அந்த அளவு திறமை அவனுக்கு இல்லை என்றாலும் வித்தியாசம் இருப்பது ஷ்யாமிற்கு நன்றாகவே புரிந்தது. அது மட்டு மில்லை! ரொம்ப பிடித்தது. அதனால் அவளை பார்த்த கண்கள் அவளை விட்டு விலகாமல் பசை போட்டது போல ஒட்டி கொண்டது.

மிகவும் சின்ன பெண்ணாக இருக்கிறாள் என்ற காரணத்தை சொல்லி, இந்த் திருமணத்தை மறுத்தது போன ஜென்மம் போல ஷ்யாமிற்கு தோன்றியது என்றால், சுந்தரியின் நிலையும் கிட்டதட்ட அதுவே!

சந்தன வண்ண பேண்டும், அடர் நீல வண்ண சட்டையும், அவனின் மாநிறத்தை மேலும் எடுப்பாக காட்ட, பார்க்கும் வேலைக்காக என்று, பின்னால் முடியை குட்டையாக வெட்டி இருந்த போதும், கரு கருவென்று அலை அலையாக படர்ந்து தலையை தாண்டி முன் நெற்றியில் எட்டி பார்த்த கேசமும், மலர்ந்த முகத்தில் தெரிந்த சிரிப்பும், பாட்டியின் கால்களை இயல்பாக தொட்டு ஒற்றி கொண்ட அந்த பணிவும், சுந்தரியின் கண்களை மட்டும் இல்லாமல் கருத்தையும் கவர்ந்தது.

அன்று பார்த்த போது, பயணத்திற்கு என்று இலகுவாக அடர் நீல ஜீன்சும் சிவப்பு வண்ண டி-ஷர்ட்டும் ஸ்போர்ட்ஸ் ஷூவும் அணிந்து இருந்தான். அதில் அவனை பார்த்த போது, சின்ன பையன் மாதிரி

தோன்றியதாலோ அல்லது தனக்கு அவனைப் பார்க்க விருப்பம் இல்லை என்பதாலோ, வம்பிழுக்கத் தோன்றியது. ஆனால் இப்படி குடும்ப சகிதமாக முகத்தில் சிரிப்புடன் பார்மல் உடையில், பார்க்கும் போது ரசிக்கவே தோன்றியது.

இவனுக்கு என்ன குறை? அழகில்லையா? படிப்பில்லையா? வசதி இல்லையா? குடும்ப பாரம்பரியம் இல்லையா? இவனை ஏன் மறுத்தோம் என்ற கேள்வியும் தோன்றியது.

பெண்ணுக்கு கல்வி சுயமான சம்பாத்தியம் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை தான். ஆனால், அப்பாவே 'உன் படிப்புக்கு எந்த பிரச்சனையும் வராது' என்று சொன்ன பிறகு, அதையே அவனும் இசைக்கல்லூரி வளாகத்தில் உறுதி அளித்த பிறகும் எதற்காக தொடர்ந்து கல்யாணத்தை மறுத்தோம் என்ற கேள்வி சுந்தரிக்கு எழுந்த போது தான் தனக்கு அவனைப் பிடித்து இருக்கிறது என்ற 'அந்த மாபெரும் உண்மை' அவளுக்கு உரைத்தது.

தான் கல்யாணத்தை மறுத்தது கடந்த காலம். அவள் மனதில் ஷ்யாம் வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. இப்போது தான் செய்வது எல்லாம் அவனுக்கு இந்தத் திருமணம் பிடிக்கவில்லை என்பதனால் தானே? அழகும் கம்பீரமுமாய் பாட்டியின் காலில் விழுந்தது கண்ணில் பட்டதும் அதை எப்படி மறக்கலாம்?

**''கண்ணும் கண்ணும் நோக்கியா...**

**கொள்ளை கொள்ளும் மாஃபியா...**

**காப்பர்சினோ காஃபியா? ஸோ ஸீ யா...!''**



என்று தொண்டையை கனைத்து அங்கே நீண்ட அமைதியை கலைக்க, செல்வராணி பாட ஆரம்பிக்க, அவளை ஷைலஜா தொடர்ந்தாள்

**''தண்ணீரின் சிற்பம் நீ**

**கோடை கால தாகம் நான்**

**உன்னை மொண்டு நெஞ்சுக்குள் ஊற்ற வா''**

என்று சைலஜா தொடர, இருவரும் சேர்ந்து,

**''ஐவா ஐவா ஐவா... அழகே வா வா வா**

**ஐவா ஐவா ஐவா... அழகே வா வா வா...''**

என்று கோரஸ் பாட, அங்கே பெரிய சிரிப்பலை எழுந்தது. அந்தச் சிரிப்பொலியில் ஷ்யாமும் சுந்தரியும் அவசரமாக தங்கள் கண்களையும், சிந்தனையும் அடுத்தவரிடம் இருந்து அவசரமாக பிரித்து எடுத்து கொண்டனர்.

''ஷ்! ராணி கொஞ்சம் அமைதியா இரு...'' என்று சன்னமாக கமலம் சின்ன மகளை கண்டிக்க, ''வாம்மா... சுந்தரி, வந்து இப்படி பக்கத்தில் உட்காரு...'' என்று கௌசல்யா சுந்தரியை அழைத்தார்.

''அண்ணா... நல்லா சைட் அடிக்கிறீங்க... இதுக்கு ஈவ் டீசிங்க்ல கேஸ் போட முடியுமா?'' என்று ரகசிய குரலில் சைலஜா அண்ணனை விசாரித்தது, சுந்தரி காதில் விழுந்து அவசரமாக நிமிர்ந்து பார்த்து ஷ்யாமிடம் 'ஹையோ நான் இல்லை...' என்று அர்த்தத்தில் வேகமாக தலை அசைக்க அவன் புன்னகை பெரிதானது.

''இதுக்கு பதில் இப்போ சொல்ல முடியாதே சைலு? வேண்டுமானால் சீக்கிரமே உன்னை பொண்ணு பார்க்க

நம்ம வீட்டுக்கு ஒருத்தன் வருவான் இல்லையா? அப்ப சொல்கிறேன் செல்லகுட்டி...'' என்று சுந்தரியை கண்களால் தேற்றியபடி தங்கைக்கு சிரிப்புடன் தானும் ரகசியமான குரலிலேயே பதில் சொன்னான் ஷ்யாம்.

''பதில் என்னவோ நல்லா தான் இருக்கு. ஆனால் பார்வை தான் இங்கே இல்லை. நான் இருக்கும் இடம் தான் அண்ணனுக்கு கண் தெரியலை போல. நான் இங்கே இருக்கிறேன்...'' என்று ஷ்யாமின் முகத்தை தன்னை நோக்கி திருப்பினாள் சைலஜா.

அடுத்த சில நிமிடங்கள் அங்கே இருந்தவர்கள் அனைவருமே பொதுவாக அவரவருக்கு தெரிந்த விருப்பமான தலைப்புகளில் வானிலை, விவசாயம், வணிகம், அரசியல், சினிமா, மருத்துவம், என்று பலப் பல துறைகளைப் பற்றி பேசித் தீர்க்க, ஷ்யாமும் சுந்தரியும் அந்த இடத்தில், 'இ..ரு..ந்..தா..ர்..க..ள் ஆ..னா..ல் இ..ல்..லை..' என்ற ரேஞ்சில் அவ்வப்போது சில வார்த்தைகளில் பதில் சொல்லி கொண்டு, ஒருவரை ஒருவர் பார்வையால் தடவியவாறு அமர்ந்து இருந்தார்கள்.

''கமலா, பேசிட்டே இருக்கீங்களே? அவங்களுக்கு சாப்பிட ஏதாவது சுந்தரியை எடுத்து வந்து கொடுக்க சொல்லு'' என்று சுந்தரி சீனியர் இடையிட்ட பின்பே அவசரமாக எழுந்தார் கமலம்.

''இதோ ஒரு நிமிஷம்... காபி எடுத்துட்டு வரேன்... வா சுந்தரி..'' என்று கமலம் அழைக்க, ''நான் வரேன்மா... அக்கா நீ இங்கேயே இருந்து பேசிட்டு இரு...'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றாள் செல்வராணி.

அவள் சொன்ன அக்கா என்ற வார்த்தையில் மட்டும் இல்லாமல், நீ இங்கிரு நான் வேலை செய்கிறேன் என்று



எழுந்து சென்ற பாவனையிலும் மயக்கம் வராத குறையாக, 'இவ.. அவ தானா?' என்று அவளையே வெறித்து பார்த்தாள் சுந்தரி.

அம்மாவிற்கு சின்ன தட்டுக்களில் சிற்றுண்டியை எடுத்து வைக்க உதவியபடி, ''அம்மா.. நான் ஒன்று சொன்னால் கேட்பீங்களா இல்லை எப்பவும் போல, வயசுக்கு தகுந்த மாதிரி அடக்கமா பேசு. எல்லாம் எங்களுக்குத் தெரியும் என்று அடக்குவீங்களா?'' என்று பேச்சை ஆரம்பித்தாள் செல்வராணி.

''என்ன புதுசா பீடிகை எல்லாம் போடற மாதிரி இருக்கு?'' என்று எதிர்கேள்வி கேட்ட அம்மாவை இடுப்பில் கை வைத்து தள்ளி நின்று முறைத்தாள்.

''வயசில சின்னவங்க ஒரு கேள்வி கேட்டு அதுக்கு உடனே பதிலும் சொல்லிவிட்டால், உங்க கௌரவம் பாழா போய்டுமா? ஏன்மா இப்படி இருக்கீங்க? அந்த கௌசி ஆன்ட்டி எப்படி அவங்க பொண்ணோட சேர்ந்து சிரித்து பேசறாங்க என்று பாருங்க'' என்று ஒரு வாக்கு வாதத்திற்கு தயாராக கமலம் அவசரமாக கை எடுத்து கும்பிட்டார்.

''அம்மா தாயே! உனக்குப் புண்ணியமா போகும். ஒரு இரண்டு மணி நேரத்திற்கு உன் திருவாயை கொஞ்சம் மூடிக் கொண்டு இரு. ப்ளீஸ்...''

''இன்னும் நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரலை. அத்துடன் இப்ப புதுசா இன்னொரு சந்தேகம் வேறே வந்துடுச்சு. நான் ஒரு மணி நேரம் வாயை மூடிக் கொண்டு இருக்கணுமா? இல்லை இரண்டு மணி நேரமா? அதையும் தெளிவா சொல்லிடுங்க...''

''இந்த நேரத்தில் வந்து, நேரம் காலம் தெரியாமல் இப்படி கடிக்கிறாளே? கடவுளே!'' என்று சலித்து கொண்டாலும் ''நான் கேட்பதும் கேட்காததும் நீ சொல்ல போகும் விஷயத்தை பொறுத்தது'' என்று வேண்டா வெறுப்பாக பதில் சொன்னார்.

''அம்மா, சுந்தரியையும் மாமாவையும் ஒரு அரை மணி நேரம் எங்கேயாவது தனியா பேச சொல்லி அனுப்பி வைத்தால்...'' என்று ஆரம்பிக்கும் போதே கமலத்தின் முகத்தில் மறுப்பு தோன்றியது.

''ப்ச்! என்னம்மா...? இந்த காலத்தில் போய் இப்படி இருக்குறீங்க? கல்யாணம் பண்ணிக்க போறவங்க தனியா பேசினால்.. அதுவும் பட்ட பகலில் அரை மணி நேரம் பேசினால் என்ன ஆகிடும்?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் உனக்குத் தெரியாது ராணி. சும்மா இரு. நித்யா கல்யாணத்தில் இப்படி எதுவும் நடக்கலை. அப்புறம்...''

''அம்மா ப்ளீஸ்! நித்யா கல்யாணத்துல அது மட்டுமா நடக்கலை? சுந்தரி படிப்பை பற்றி கவலைப்படாதீங்க அதுக்கு நான் பொறுப்பு என்று மாப்பிள்ளை உறுதி சொல்லலை. பொண்ணை மட்டும் அனுப்பினால் போதும் என்று மாப்பிள்ளையோட அப்பா சொல்லலை. அவளை என் பொண்ணு மாதிரி பார்த்து கொள்வேன் என்று மாமியாரா வரப்போறவங்க சொல்லலை. அண்ணிக்கு மோதிரம் நான் செலெக்ட் பண்ணினேன் என்று நாத்தனார் சொல்லலை. இப்படி நிறைய வித்தியாசம் இருக்கு...''

''நீ சொல்வது எல்லாம் சரி தான் ராணி. ஆனால்...''



''இருங்க நான் முடித்து விடுகிறேன். நித்யா கல்யாணத்தையும் இதையும் கம்பேர் பண்ணாதீங்க. மாமா வந்தாலும் ஏதாவது சொல்லி சமாளிங்க...''

''அவர் சொல்வதற்காக மட்டுமில்லை ராணி, நம்ம பாட்டி கூட...''

''ஓகே! உங்க திருப்திக்காக வேண்டுமானால் நானும் சைலஜாவும் அவங்களோட போறோம். ஆனால் இப்பவே சொல்லிட்டேன். நாங்க அவங்க கூட இருக்க மாட்டோம். பக்கத்துல இருக்கும் மாரியம்மன் கோவிலில் இறங்கி கொள்வோம். அவங்க வரும் போது எங்களை கூட்டிட்டு வருவாங்க சொல்லிட்டேன். சும்மா ஊர் வாய்க்குப் பயந்து உங்க பொண்ணு வாழ்க்கையை கோட்டை விட்டுடாதீங்க. சொல்லிட்டேன்...'' என்று தீர்மானமாக முடித்த ராணியை திறந்த வாய் மூடாமல் பார்த்தார் கமலம்.

இவள் தன் மகள் தானா? முதல் முறையாக அவளைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. ஒப்புதலாக தலை அசைக்க, அவரை இருக்க கட்டி அணைத்து அவரின் கன்னத்தில் முத்தமிட்டு, 'மை ஸ்வீட் அம்மா. தேங்க்ஸ்...' என்று செல்லம் கொஞ்சி முத்தமிட, அவர் கூச்சத்துடன் விலகினார் கமலம்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் கமலம் சுந்தரி சீனியரிடம் சொல்ல, அவர் தன் மகன் மூலமாக பத்மநாபனிடம் சொல்லி, நான்கு பேரும் சிரிப்புடன் அவர்கள் வந்த வாகனத்தில் கிளம்பினர்.

''மாம்ஸ்! அந்த கோவில் வாசலில், ஒரு நிமிஷம் வண்டியை நிறுத்துங்க...'' என்று வீடு கண்ணில்

இருந்து மறைந்த உடனே ராணி சொல்ல மற்ற மூவரும் கேள்வியாக பார்த்தனர்.

சைலஜாவின் கையை பற்றி, அவசரமாக கீழே இறங்கிய ராணி, ''நாங்க ரெண்டு பேரும் இங்கேயே உட்கார்ந்து இருக்கிறோம். உங்களுக்கு ஒரு மணி நேரம் டைம் தரோம் அதுக்குள்ளே பேச வேண்டியதை பேசிட்டு, இதே இடத்திற்கு வந்து சேருங்க'' என்று சொல்லி அவர்கள் இருவருக்கும் கை அசைத்து விடை கொடுத்தாள்.

''நிஜமாவா சொல்ற ராணி? செம ப்ளான் தான். அண்ணா, இதுக்கே ராணிக்கு நீ பெரிசா ஏதாவது செய்யணும்...'' என்று சைலஜா சொல்ல, ''ஏற்கனவே செஞ்சாச்சு. நாளைக்கு அவளுக்கு ஒரு ஸ்வீட் சர்ப்ரைஸ் காத்திருக்கு...'' என்று சொல்லி முடித்த வினாடி வண்டி கிளம்பியது.

''ஹய்யோ மாம்ஸ்...! இப்படி சொல்லிட்டு போனால் எப்படி? என்ன விஷயம் என்று தெரியவில்லை என்றால் எனக்கு மண்டை காஞ்சு போய்டுமே...'' என்று அவசரமாக குரல் கொடுக்க, அவன் மறுப்பாக தலை அசைத்து விட்டு போய் விட்டான்.

''ஹேய் ராணி, எங்க அண்ணனைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். நீங்க ரெண்டு பேரும் நேரடியாகவோ சுந்தரி மூலமாகவோ என்ன பேசி இருக்கிறீர்கள் என்று சொன்னால், என்ன சர்ப்ரைஸ் வைத்து இருக்கிறான் என்று என்னால் ஊகிக்க முடியும்'' என்று சவால் விட்டாள் சைலஜா.

''நிஜமாவா..?'' என்று நம்பாமல் கேட்ட ராணியை பார்த்து, ''சேலஞ்... நூறு ரூபாய் பெட்...'' என்று பந்தயம் கட்டினாள்.



''நூரு ரூபாய் தானே... டன்..'' என்று ஒத்து கொண்ட ராணி, அடுத்த பதினைந்து நிமிடங்கள் சைலஜா துருவி கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல, அவள் கண்டு பிடித்த அந்த சர்ப்ரைஸ் பரிசு ராணிக்கு திருச்சி வானொலி நிலையத்தில் தொகுப்பாளினியாக ஒரு வேலை...

அவள் சொன்னதை நம்ப முடியாமல் ராணி மறுக்க, எஸ்.எம்.எஸில் அண்ணனுக்கு அனுப்பி, அவனின் ஒப்புதலையும் காட்ட ஷ்யாமின் திறமையிலும் அன்பிலும் அசந்து போய் நின்றாள் ராணி.

சைலஜா, செல்வராணி, இருவரும் இறங்கிய பிறகு வண்டி கிளம்ப, வெகு அருகில் அமர்ந்து இருந்த சுந்தரியை திரும்பி பார்த்தான் ஷ்யாம். அவன் பார்வையை உணர்ந்த சுந்தரியும் திரும்பிப் பார்க்க, ''என்னவோ, தொண்டை வரைக்கும் கேள்வி முட்டி நிக்குற மாதிரி இருக்கு. என்ன விஷயம்? கேட்டு விடு...'' என்று புன்னகை செய்தான்.

''ராணிக்கு சர்ப்ரைஸ் என்று சொன்னீங்களே! அ..து என்னது?'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

''ராணி சின்ன பொண்ணு, அவளே யோசித்து நம்ம தனியா பேசணும் என்பதற்காக சைலுவையும் கூட்டி கொண்டு இறங்கி விட்டாள். அவளை விட ரெண்டு வயசு பெரிய பொண்ணு, நீ அதை புரிந்து கொண்ட மாதிரி தெரியலையே...'' என்று கேலியாக கேட்டான் ஷ்யாம்.

''நான் பெரிய பொண்ணு என்பதால் தான், இந்த மாதிரி பேச வேண்டியதாக இருக்கு. எங்க வீட்டு நிலைமை எனக்குத் தானே நல்லாத் தெரியும்...''

''ஹேய்! என்ன இது தொட்டால் சுருங்கி மாதிரி ஆகி விட்டாய்? நான் சும்மா கேலிக்கு தான் சொன்னேன். உங்க வீடு நிலைமை என்ன என்று அப்பா என்னிடம் சொல்லி விட்டாங்க எனக்கும் தெரியும். அதனால் தான், ராணியின் படிப்புக்கு ஏற்ற மாதிரி அவளுக்கு ரொம்ப பிடித்தமான வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பதற்காக....''

''வேலையா..? ராணிக்கா...? என்ன வேலை..? எங்கே.. எப்படி? அவள் டிகிரி கூட முடிக்கவில்லையே?'' என்ற கேள்விகள் வியப்புடன் அடுத்தடுத்து பாய்ந்து வந்தது.

''ம்ஹூம்! தங்கை பற்றிய அக்கறை அவசியம் தான். ஆனால் இந்த வேகம் நேற்று ராத்திரி நம்மைப் பற்றி பேசும் போது காணோமே..?'' என்று ஷ்யாம் தாங் களுடன் சொல்ல, அவள் தயக்கத்துடன் திரும்பிப் பார்த் தாள்.

''கோபமா? நேற்று நான் ரொம்ப பிடிவாதமா இருந் துட்டேனோ? சாரி...'' என்று வருத்தத்துடன் சொல்ல, அவளின் கையை பற்றி அழுத்தினான்.

''ஹேய்! அதை நான் நேற்று இரவே மறந்து விட் டேன். சரி இப்போ எங்கே போகலாம் என்று சொல்லு...'' என்று கேட்டபடியே சுற்றிலும் பார்த்தான். இடம் அடை யாளம் தெரிந்தது அது இசைகல்லூரிக்கு செல்லும் சாலை.

''ஏற்கனவே இடம் டிரைவருக்கு சொல்லி விட் டாயா?'' என்று கேட்டவன் குரலில் நெருக்கம் தோன்றி இருந்தது.



''இல்லை. நான் சொல்லவில்லை. ராணி சொல்லி இருக்க வேண்டும்...''

''அவளுக்கு எப்படி இந்த இடம்...?'' என்றவனின் கேள்விக்கான பதில், அவளின் சிவந்த முகத்தில் இருந்தது.

''செம ஸ்மார்ட் தான் பொண்ணு. அவளுக்கு என்ன வேலை என்று கேட்டாயே...?'' என்று சொல்லும் போது அலைபேசியில் குறுஞ்செய்தி ஒலி கேட்க அவன் எடுத்து பார்த்தான். செய்தி சைலஜாவிடம் இருந்து என் பதே அவனுக்கு வியப்பை அளிக்க அதில் வந்து இருந்த தகவல் அவன் வியப்பை இன்னும் கூட்டியது.

''நான் ஏற்கனவே போனில் இந்த தங்கைகளே ஸ்மார்ட் தான் என்று சொன்னதை நீ நம்பவில்லையே? இதை பாரு, அப்புறமா உனக்கு சந்தேகமே வராது'' என்று அலைபேசியை காட்ட, அதை படித்தவளின் விழி விரிய அவனிடம் அதை உறுதிப்படுத்திக் கொள்ள திரும்பிய போது இசை கல்லூரி வந்து சேர்ந்து இருந்தது.

அன்று விடுமுறை நாள் என்பதால் மாணவர்களின் நடமாட்டம் கம்மியாக இருக்க, அந்த செயற்கை நீரூற்றை நோக்கி நடக்கும் வேளையில், ''சைலுவின் செய்தி கரெக்டா...?'' என்று கேட்டபடி அலைபேசியை அவனிடம் கொடுக்கும் போது அவன் கைகளில் அவ ளுடைய விரல்கள் உரச அவன் மெலிதாக புன்னகை செய்தான்.

''கேள்வி கேட்டால் பதில் சொல்ல மாட்டீங்களா?'' என்று அவள் மீண்டும் அவனின் கையை பற்றி உலுக்கி முடிக்கும் முன்பே ஆமோதிப்பான தகவலை மொபை

லில் தங்கைக்கு பதிலாகவும், இவளுக்கு தலை அசைப்பை நேரடி ஒலிபரப்பிலும் கொடுத்த வினாடியில் ''ஹேய்! தேங்க்யூ வெரி மச் ஷ்யாம்..'' என்று சந்தோஷமாக சொல்லி அவனின் கன்னத்தில் இதழ் பதித்து, மின்னல் வேகத்தில் விலகியும் இருந்தாள் சுந்தரி ஜுனியர்.



## 21

திருவையாறு இசை கல்லூரி வளாகத்தில் ஷ்யாமும், சுந்தரியும் சின்ன புன்னகையுடன் இறங்கிய போது, இரண்டு வாரங்களுக்கு முன்பு, இதே இடத்தில், ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அமர்ந்து தங்களுக்கு இடையே நடக்க போகும் திருமணத்தை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், இல்லாத கதைகள் பேசி பிரமாதமாக திட்டமிட்டு, அது தோற்று போன வருத்தம் எதுவும் அவர்களின் மனதிலோ முகத்திலோ இல்லவே இல்லை.

செல்வராணிக்கு திருச்சியில் செயல்படும் தனியார் பண்பலை நிலையத்தில் தொகுப்பாளராக சேர்வதற்கான ஆறு மாத பயிற்சிக்கு சொல்லி வைத்து இருந்தான் ஷ்யாம். பயிற்சி முடிந்ததும் 90% அங்கேயே வேலை வாய்ப்புக்கு இடம் உண்டு என்ற நம்பிக்கையையும் அளித்து இருந்தார்கள்.

செல்வராணிக்கு இருக்கும் சரளமான பேச்சு திறமைக்கு, நிச்சயம் தேர்வாகி விடுவாள் என்ற நம்பிக்கை



ஷ்யாமுக்கு இருந்ததால், பயிற்சியை பணி என்று ஊகித்த சைலுவின் ஆர்வத்தை உடைக்க விரும்பவில்லை. அதனாலேயே ஆமோதிப்பாக தகவல் அனுப்பிய ஷ்யாமுக்கு கிடைத்த பரிசு அவன் கனவிலும் எதிர்பாராதது. அவளின் பிரதிபலிப்பை பார்த்து திகைத்து விட்டான்.

தங்கை சுதந்திரமாக தன் சொந்தக் காலில் நிற்க ஏற்பாடு செய்ததற்கு, சந்தோஷப்படுவாள் என்று தெரியும். ஆனால் அந்த சந்தோஷத்தை இப்படி தன் கன்னத்தில் முத்திரை பதித்து காட்டுவாள் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதால் அந்த மின்னல் வேக இதழ் ஒற்றுதழ் அவனை விண்ணில் பறக்க வைத்தது.

''ஹேய்! சுந்தரி.. என்ன இது..?'' என்று வியப்பாக கேட்டவனின் விரல்கள் அவளின் இதழ் பதிந்த கன்னத்தை மீண்டும் வருடிப் பார்த்தது.

''சாரி... தேங்க்ஸ்... சொல்ல நினைத்தேன்...'' என்றவளின் முகம் சிவந்து வார்த்தைகள் தடுமாறியது.

''இந்த சாரி, தாங்க்ஸ், இதெல்லாம் நீ எனக்கு சொல்லத் தேவை இல்லை என்று உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கிறேன்....?''

''ஆமா.. அதனால் தான்...'' என்று ஆரம்பித்தவள் மீண்டும் முகம் சிவந்து, நாக்கை கடித்து பேச்சை நிறுத்த, அவன் முகத்தில், அதுவரை இருந்த மெலிதான சிரிப்பு பெரிதானது.

''அப்ப நான் என்ன சொன்னாலும் கேட்பாய்? ம்ம்ம்...?'' என்று கேள்வியாக நிறுத்தியவன் இடது கரம் நீண்டு அவளின் வலது கரத்தைப் பற்றியது.

''ம்ம்.. அதெப்படி... நீங்க சொல்ற எல்லாத்தையும் கேட்க முடியும்? நீங்க சொல்றது... எனக்கும் பிடித்து அது நல்லதாகவும் இருந்தால் தான் கேட்க முடியும். அது தானே.. ஒரு நல்ல..ம... பெண்ணுக்கு அழகு...'' என்று தடுமாறி, 'நல்ல மனைவி' என்ற வார்த்தையை விழுங்கி நல்ல பெண் என்று சுந்தரி மாற்ற அவளின் தடுமாற்றம் அவனின் சிரிப்பை மேலும் பெரிதாக்கியது.

''கரெக்ட் அப்படித்தான் இருக்கணும்... நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாதாடும் நக்கீரர் பரம்பரையோ..? ஐ லைக் இட்...'' என்றவன் தன் இடது கையில் இருந்த அவளின் வலது கையை அழுத்தி, அங்கே இருந்த கல் பெஞ்சில் அமர வைத்து, தானும் நாகரீகமான இடைவெளிவிட்டு அருகில் அமர்ந்தான்.

இருவருக்கும் இடையே ஒரு அமைதி நிலவ, அதை கலைக்க இருவருமே முயற்சி செய்யவில்லை. சுற்றுப் புறத்தை கண்களால் அளவிட்டாலும் மனம் மட்டும் அருகே இருந்தவர் மனதில் தான் இருக்கிறோமோ என்பதை அறிந்து கொள்ள மனம் ஆவலில் துடித்த தையும், அதை வெளியே தெரியாமல் மறைக்கவும் கடுமையாக முயற்சி செய்தனர்.

இருவர் மனதிலுமே கடந்த காலம் எப்படியோ இனி வருங்காலம் இருவருக்கும் சந்தோஷமாக இருந்தால் போதாதா என்ற எண்ணம் தோன்ற, நீண்டு கொண்டே சென்ற அமைதியை கலைக்க லேசாக தொண்டையை செருமினான் ஷ்யாம்.

''அப்புறம்... உன் தங்கை நம்மை இருவரையும் தனியாகப் பேச அனுப்பி வைத்தால் இருவரும் இசை



கல்லூரியில் மௌன விரதம் இருக்கிறோம். ஏதாவது பேசேன்..'' என்று கேலியாகப் பேச்சை துவக்கினான் ஷ்யாம்.

''நான்... என்ன பேசணும்..? நீங்க தான் குடும்பத் தோடு சென்னையில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் பயணம் கிளம்பி வந்து இருக்கீங்க. என்ன விஷயமா வந்து இருக்கீங்க என்று நீங்க முதலில் சொல்லுங்க...'' என்று அவளும் அதே பாவனையில் சிரிப்போடு சொல்ல அவனுக்கு உற்சாகம் பொங்கியது. இரண்டு வாரங்களுக் குள் எத்தனை மாற்றங்கள்? முதன் முறை இந்த இடத்தில் சந்தித்த போது பேசிய விதம் என்ன? இப் போது...

''அது... அம்மா அப்பா... சைலஜா கிளம்பியதற்கு என்ன காரணமோ எனக்குத் தெரியாது. நான் எதற்கு வந்தேன் என்பது மட்டும் தான் எனக்குத் தெரியும்..'' என்ற வன் இப்போது அவர்களுக்குள் இருந்த இடைவெளியை குறைத்து நெருங்கி அமர்ந்தான்.

அவன் குறைத்த இடைவெளியை சற்று பின்னால் நகர்ந்து அதே அளவில் இருத்தியபடி, ''அது சரி... உங் களுக்குத் தெரியாததைப் பற்றி நீங்க எப்படி சொல்ல முடி யும்? தெரிஞ்சதை சொல்லுங்க. அத்தை மாமா எதுக்கு வந்தாங்க என்று அவங்களையே நான் கேட்டு தெரிஞ் சுக்கறேன்...'' என்று பொங்கிய சிரிப்பை அடக்கியபடி பதில் கொடுத்தாள் சுந்தரி. பதிலுக்கு பதில் வாயடிப் பதும் மடக்கிப் பேசுவதும் அளவில்லாத உற்சாகம் கொடுத்தது.

''ம்ம்ம்... நான்.. என் ப்ரெண்டை பார்க்க வந்தேன்...''

''பொய்... நம்ப மாட்டேன்...''

''இது நல்ல கதையாக இருக்கிறதே? ஏன் நம்ப மாட்டாய்...?''

''கேள்வி எல்லாம் கேட்காதீங்க. ஆனால் உங்க முகத்தை பார்த்தாலே நீங்க பொய் சொல்றீங்களா நிஜம் சொல்றீங்களா என்று எனக்குக் கண்டு பிடிக்கத் தெரியும்'' என்று சுந்தரி சொல்ல அவன் புன்னகை மேலும் விரிந்தது.

''ம்ஹூம்! எங்க போலீஸ் துறையில பொய் சொல்ற வங்களை கண்டு பிடிக்க லை டிடக்டர் பயன்படுத்து வோம். அது மாதிரி ஏதாவது கருவி உன் கண்ணிலேயே வச்சு இருக்கிறாயோ..?''

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் ஏன் சுத்தி வளைக்கறீங்க? நீங்க எதுக்காக வந்தீங்க என்று உண் மையைச் சொல்லுங்க'' என்று சவால் விட அவன் திகைத் தான்.

அப்பா சொன்ன 'பொய்யான தபாலை' நிறுத்த வந்தேன் என்ற உண்மையை இவளிடம் சொல்லி அசடு வழிய வேண்டுமா? மறுபடியும் திருமணத்தை நிறுத்து வது தொடர்பான தேவை இல்லாத பேச்சை இந்த சந்தோஷமான நேரத்தில் எடுக்கத் தேவை இல்லை என்று முடிவெடுத்தான்.

''பயங்கரமான ஆள் தான். நீ சொல்வது சரி தான். ப்ரெண்டை பார்க்கணும் என்று கிளம்பியது ஒரு சாக்கு தான். உண்மை காரணம் வேறே தான். பார்க்க உழக்கு மாதிரி சின்ன பொண்ணா இருந்தாலும், எந்த விஷயத் தையும் அலசி ஆராய்ந்து ஒரு முடிவோடு தான்



செயல்படுத்துகிறாய்...'' என்று உல்லாசமாக சிரித்தபடி பெருமையுடன் ஷ்யாம் சொல்ல அவனை ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் சுந்தரி.

'உன்னை பார்க்க வந்தேன்...' என்று அவன் வாயால் சொல்லும் அந்த ஆசை வார்த்தைகளை கேட்டதும், தானும் 'முன்னால் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னதை மறந்து விடலாம் என்று தன் மனதை திறந்து காட்டி விட வேண்டும். அப்புறம் டும் டும் டும் தான்..' என்று கண்ணில் மிதக்கும் கல்யாண கனவுகளுடன் சுந்தரி ஆர்வமாக காத்திருந்த அந்த வினாடியில், அவ னுடைய அலைபேசி ஒலித்தது.

''ஹாய் ஹேமந்த்... உனக்கு சாவே இல்லைடா... உனக்கு நூறு வயசு தான்.. இப்ப தான் உன்னை பற்றி சுந்தரியிடம் பேசி கொண்டு இருந்தேன். உன்னை நான் அரை மணி நேரம் கழித்து கூப்பிடட்டுமா? கூப்பிடுறது என்ன? நேரிலேயே வந்து பார்க்கிறேன். ஓகே?''

''.........''

''ஹேமந்த்... என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி டென் ஷனா இருக்கிறாய்? என்னடா..? பதில் சொல்லு...''

''........''

''என்னடா சொல்றே....? வீட்டில் தீபிகா இல்ல...?''

''.......''

''எங்கே?''

''.....''

''மை காட்.. நான் நேற்றே வந்து பார்த்து இருக்கணும்டா.. சாரி.. சைலு சொன்னதற்கு கூட நான் தான் வேண்

டாம் என்று சொன்னேன். ப்ச்! இதை நான் எதிர் பார்க்கவே இல்லையே?''

''........''

''ஓகே, ஓகே. டோன்ட் வொரி. அம்மா அப்பா எல் லோருமே இங்கே தான் இருக்காங்க. நான் அம்மாவை உடனே வர சொல்றேன். தைரியமா இரு. நான் பார்த் துக்கறேன். பதினைந்து நிமிஷத்துல அங்கே போய்டு வேன். டேய்! நீ ஜாக்கிரதையா வா. நீ வண்டி ஓட்ட வேண்டாம். வேறே யாரையாவது ஓட்ட சொல்லு. அவ சரத்துல காரை விரட்ட வேண்டாம். சேப்டி முக்கியம். சொன்னது புரிஞ்சுதா? ஸ்வாதியை நான் பார்த்துக் கறேன்...'' என்று அவசரமாக அலைபேசி பேச்சை முடித்தவன் அவளின் கை பற்றி எழுப்பினான்.

கிட்டத்தட்ட இழுத்து சென்று காரில் ஏற்றி விட்டான். அமர்ந்து இருந்த பெஞ்சில் இருந்து காருக்கு நடந்து வந்த போது.. இல்லை இல்லை... ஷ்யாம் சுந்தரியின் கை பற்றி இழுத்து வந்த போது கிடைத்த அந்த இருபது வினாடி இடைவெளியில், ''ஸ்வாதி ஹாஸ்பிடலில் இருக்காளாம். நீ வீட்டுல இறங்கிட்டு, அம்மாவை இந்த காரிலேயே ஜே.எஸ் ஹாஸ்பிடலுக்கு வர சொல்லு. நான் அப்புறமா உன்னிடம் பேசுகிறேன்...'' என்று வேகமாக சொல்லி விட்டு டிரைவரிடம் காரை எடுக்க சொன்னான்.

''நீங்க.. எப்படி... போவீங்க?'' என்று காதில் விழுந்த செய்தியை எப்படி எடுத்து கொள்வது என்பதே புரி யாமல் குழப்பத்தோடு ஜன்னல் வழியே கை நீட்டி கேட்கும் போதே கார் நகர ஆரம்பித்து இருந்தது.



''நான் ஆட்டோவில் போய்க்கறேன். போகும் போது சைலுவையும் ராணியையும் கோவிலில் இருந்து மறக்காமல் கூட்டிட்டு போ. ஜாக்கிரதை'' என்று அவன் முடித்த வார்த்தைகள் முழுசாக அவள் காதுகளை வந்து அடையும் முன்பே, காரின் வேகத்தில் அவன் உருவம் கண்ணில் இருந்து மறைந்துவிட்டது.

இனிமையாக சென்று கொண்டு இருந்த கனவின் நடுவே சட்டென்று வந்த அலைபேசி பேச்சின் முடிவில், அரை குறையாக விவரம் சொல்லி, தன்னை ஷ்யாம் காரில் ஏற்றி அனுப்பி வைக்க சுந்தரிக்கு கண்ணை கட்டி காட்டில் விட்டது போல இருந்தது.

பேசியது ஹேமந்த் என்ற அளவில் புரிந்தது. ஸ்வாதி யாரு..? தீபிகா யாரு? ஸ்வாதி ஏன் மருத்துவமனையில் இருக்க வேண்டும்? அவளுக்கு என்ன ஆச்சு? அதற்கு ஷ்யாம் ஏன் பதறியடித்து மருத்துவமனைக்கு ஓட வேண்டும்? அதுவும் பெண் பார்க்க வந்து இருக்கும் இந்த நேரத்தில் தன்னை பாதியில் விட்டு விட்டு அவன் நடுவில் கிளம்புவது என்றால், ஸ்வாதி தன்னை விட முக்கியமா...?

காற்றை விட வேகமாக பறக்கும் வல்லமை படைத்த மனம் வினாடிக்குள் எங்கெங்கோ சுற்றி என்னென்னவோ கற்பனை செய்ய, அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சிந்தனை குதிரை கடிவாளமின்றி கன்னா பின்னாவென்று பறந்ததில், அடுத்த அரை மணி நேரம் எப்படிக் கழிந்தது, என்று கேட்டால் அவளுக்குத் தெரியாது.

நடுவில் கோவில் வாசலில் கார் நின்றதும், அதில் சைலுவோடு ஏறிய ராணி அங்கே ஷ்யாம் இல்லாததை கண்டதும், ''ஹேய் சுந்தரி, என்ன அரை மணி

நேரத்திலேயே ரூல்ஸ் பேசிப் பேசியே மாம்சை இந்த பொண்ணு எனக்கு வேண்டாம் என்று ஓட வைத்து விட்டாயா?''என்று கேலியாக கேட்க அவளுக்கு ஆத்திரம் பொங்க, அதை வெளிக்காட்டாமல் சிரமப்பட்டு அடக்கினாள்.

''அதுக்கெல்லாம் சான்சே இல்லை ராணி. நியூஸ் பேப்பரை மடிச்சு வை, காபி கப்பை ஹால் டீபாயில் வைக்காதே, துப்பட்டாவை சோபாவில் போடாதே, என்று தொட்டது தொண்ணூறுக்கும் ரூல்ஸ் பேசும் பார்ட்டி எங்க அண்ணன்! அண்ணன் பேசிய பேச்சை தாங்க முடியாமல் அண்ணி தப்பிச்சு ஓடி வந்துட்டாங்க என்று நினைக்கிறேன். கரெக்டா அண்ணி...?'' என்று விடாமல் அந்த கேலியை தொடர்ந்த சைலுவின் மீதும் எரிச்சல் வந்தது.

அதற்கும் மேலே வீட்டுக்கு மூன்று பெண்களும் தனியாக போன போதும், ஷ்யாம் ஸ்வாதியை பார்க்க மருத்துவமனை சென்று இருக்கிறான் என்ற தகவல் சொன்ன உடனே பதட்டத்துடன் உடனே எழுந்த கௌசல்யாவை பார்க்க கோபம் வந்தது.

''அண்ணி, நான் போய் பார்த்து விட்டு வந்து விடுகிறேன். அங்கே ஸ்வாதி தனியா என்ன பண்ணுவாளோ..? ஹையோ.. இதுக்கு தான் நேற்றே பார்க்கணும் என்று நினைத்தேன். இந்த பையன் கேட்டானா? 'நான் ஸ்வாதியை பார்க்கப் போகிறேன் என்று ஊருக்கு கிளம்பும் போது மட்டும் வாய் கிழிய சொல்ல தெரியும். ஆனால் அதைக் கடைப் பிடிக்கத் தெரியாது. லூசு... லூசு.. அவன் தான் புரியாமல் பேசுகிறான் என்றால் எனக்கு எங்கே போச்சு புத்தி?'' என்று புலம்பியபடி ஒருவரிடமும் முறையாக சொல்லி கூட விடை பெறாமல் அவசரமாக கிளம்பினார் கௌசல்யா.



அவர் கிளம்பியதே அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது என்றால், பின்னாலேயே ''சாயங்காலம் பார்க்கலாம்... கிருஷ்ணா..'' என்று கை குலுக்கி பத்மநாபனும், ''பை அண்ணி. சி யூ ராணி. சீக்கிரமே திரும்பி வருகிறேன்'' என்று கை காட்டி சொல்லி விட்டு துள்ளலோடு சைலுவும் கிளம்ப அவளுக்கு பொங்கிய எரிச்சலுக்கு ஒரு அளவே இல்லை.

சைலுவும் நீயும் எனக்கு ஒன்று தான் என்று சொன்ன கௌசல்யாவும் ஷ்யாம் தன்னை பாதியில் இறக்கி விட்டு விட்டு சென்றதைப் பற்றிக் கவலை படவில்லை. உன் எதிர்காலம் என் பொறுப்பு உன்னை படிக்க வைத்து, ஒரு பெஸ்ட் ஆடிட்டர் என்று சென்னை சிட்டியில் உனக்கு ஒரு நல்ல பெயரை வாங்கி தருவது என் பொறுப்பு என்று உறுதி அளித்த பத்மநாபனும் கவலைப் படவில்லை. அது பரவாயில்லை. அவர்கள் அவன் பெற்றோர்கள். அவன் செய்கையை ஆமோதிக்கிறார்கள் என்று வைத்து கொள்ளலாம். ஆனால், இங்கே அம்மா அப்பா அவர்களை சந்தோஷமாக வழி அனுப்பி வைப்பதை எந்த கணக்கில் சேர்ப்பது?

''எதுக்கு இங்கே வந்தீர்கள்? ஏன் பாதியில் கிளம்புகிறீர்கள்? பையன் கல்யாணம் முக்கியம் இல்லையா என்று ஏதாவது நாலு கேள்வி நறுக் என்று கேட்கக் கூடாது..?'' மனசுக்குள் பொருமினாலும் அதை யாரிடமும் காட்ட முடியவில்லை.

ராணி, தனக்கு கொடுத்த மோதிரத்தை பாட்டியிடம் காட்டி கதை பேசிக் கொண்டு இருக்க, அதை பார்த்ததும்

இன்னும் எரிச்சல் கூடியது. தனக்கே இன்னும் கொடுக்க வில்லை. இவளுக்கு எதுக்கு இப்ப பரிசு என்ற பொரு மல் எழுந்தது.

ஷ்யாமை வாயில் ஈ போவது தெரியாமல் ஜொள்ளு விட்டு ரசித்த போது சுற்று புறத்தில் இருந்தவர்கள் என்ன பேசினார்கள் என்பதை கவனித்து இருந்தால், அவளுக்கு வாங்கியது தங்கம். தனக்கு வாங்கியது வைரம். அது இதை மாதிரி ஐந்து மடங்கு விலை அதிகம் என்பது புரிந்து இருக்கும்.

எரிச்சலுடன் முகத்தை திருப்பினால் அந்த பக்கத் திலும், அம்மாவும் அப்பாவும், மலர்ந்த முகத்துடன் ஏதோ கதை.. ம்ஹூம்..! ஏதோ கதை இல்லை, அவர்களின் பொல்லாத மாப்பிள்ளை பற்றிய கதை தான் பேசி கொண்டு இருந்தார்கள்.

பத்மநாபன் பயிற்சி நிலையம் குறித்த தகவல்களை தந்து இருக்க வேண்டும். அந்த பேப்பர்களை கையில் வைத்து, அப்பா விளக்கம் சொல்ல அதை ஆர்வத்துடன் கேட்டு கொண்டு இருந்தார் கமலம். முகத்தில் பெருமை பொங்கி வழிந்து கொண்டு இருந்தது. அதை பார்க்கவும் பிடிக்கவில்லை. தன் வீட்டுக்குள்ளேயே தான் தனி ஆளாகி விட்டது போல இருக்க, அவசரமாக எழுந்தாள் சுந்தரி.

''அம்மா... நான் லைப்ரரிக்கு போயிட்டு வருகிறேன்...'' என்று சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் கைப் பையுடன் கிளம்பிய சுந்தரியை நான்கு பேருமே வியப் புடன் பார்த்தார்கள்.

அவள் லைப்ரரிக்கு போவது ஒன்றும் புதிதில்லை. வழக்கமாக இந்த நேரம் செல்லும் பழக்கம் உடையவள்



தான். ஆனால் பட்டுப் புடவையை கூட மாற்றாமல் கூடுதல் நகைகளோடு, விசேஷ அலங்காரத்துடன் லைப்ரரிக்கு போவதை அவர்கள் யாருமே எதிர்பார்க்க வில்லை.

''ஹேய் சுந்தரி... ஒரு நிமிஷம்... இப்பவா..? இந்த ட்ரெஸ்லயா?'' என்று நான்கு பேரும் நான்கு விதமாக கேள்வி கேட்டும் அவர்களின் கேள்வி காதில் விழுந்த மாதிரியே காட்டி கொள்ளாமல் விடுவிடுவென்று வெளி யேறிய சுந்தரி நேரே சென்று நின்று இடம் ஜே.எஸ். ஹாஸ்பிடல்.

## 22



ஹோட்டல் அறையில் இருந்து கிளம்பி சுந்தரியின் வீட்டிற்கு செல்லும் போது அவளுடன் தனியே வெளியே சென்று பேச சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஷ்யாம் எதிர்பார்க்கவில்லை. அந்த சந்தர்ப்பம் கிடைத்ததே அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்து இருக்க, ராணிக்கு ஏற்பாடு செய்த வேலைக்கு கிடைத்த சுந்தரியின் பரிசு அவனை சந்தோஷத்தின் எல்லையைத் தொட வைத்தது. ஆனால் அதனைத் தொடர்ந்த பேச்சின் இனிமையை, ஹேமந்தின் தொலைபேசி அழைப்பு முற்றிலும் மாற்றி விட்டது.

ஸ்வாதி தன்னை பார்க்க வேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பே பேச இருந்தாள். இரவு ஒன்பது மணிக்கு மேல் வீட்டுக்கு போக வேண்டாமே என்று

தள்ளி போட்டால், ஒரே இரவில் அவளுக்கு என்ன ஆகி விட்டது?

பிரசவத்திற்கு குறித்த நாள் இன்னும் வரவில்லை என்ற தைரியத்தில், தீபிகாவும் ஹேமந்தும், தங்களின் ஐந்து வயது மகளை மாநில அளவில் நடக்கும் படம் வரையும் போட்டிக்கு திருச்சிக்கு அழைத்து சென்று இருந்த நேரத்தில், குறித்த நாளுக்கு மூன்று வாரங் களுக்கு முன்பே, ஸ்வாதிக்கு வலி எடுத்து மருத்துவ மனையில் சேர்த்து இருப்பதாக தகவல் வந்ததும் பதறி அடித்து கொண்டு கிளம்பினான் ஷ்யாம்.

என்னதான் வேலையாட்கள் இருக்கிறார்கள் என்றாலும் உரியவர்கள் இருப்பது மாதிரி ஆகாதே? ஹேமந்தின் நிலையில் அவன் வரும் வரை இரண்டு மணி நேரம் அருகில் இருந்தால் அவளுக்குத் தைரியமாக இருக்குமே என்ற எண்ணத்தில் தகவல் கிடைத்த உடனே பறந்து வந்த ஷ்யாமை கண்டதுமே சுவாதியின் முகம் நிம்மதியை காட்டியது.

''தீவிர சிகிச்சை கண்காணிப்பு பிரிவில் நினைவின்றி இருப்பாளோ? என்ன செய்ய வேண்டுமோ?'' என்று பதறி அடித்து ஓடி வந்த ஷ்யாம், அவன் அறைக்குள் நுழைந்த உடனே, ''ஷ்யாமண்ணா! இப்ப தான் என்னை பார்க்க வர வழி தெரிந்ததா?'' என்ற ஸ்வாதியின் குரலை கேட்டதும் திகைத்தான்.

''ஹேய் ஸ்வாதி! நீ நினைவில்லாமல் இருப்பாயா? லேபர் ரூமில் இருப்பாயா? பார்க்க விடுவாங்களா? சர்ஜரி செய்ய வேண்டும் என்றால் கையெழுத்து கேட் பாங்களே என்ன செய்வது என்று எல்லாம் குழம்பி, பதறி



அடித்து ஓடி வந்தால் நீ ஜாலியா இந்த ரூமில் படுத்துக் கொண்டு என்னை வா வா என்று வரவேற்கிறாய்? ஹேமந்த் திருச்சியில் இருந்து கொண்டு என்னை ஓடு ஓடு என்று துரத்தினான். என்ன ஆச்சு?'' என்று வியப் புடன் ஷ்யாம் கேட்ட அதே நேரத்தில், அவன் மனதில் அவள் ஆரோக்கியமாக இருப்பதால் வேகமாக நிம்மதி யும் பரவியது.

''அதை ஏன் கேட்கறீங்க? எது நிஜ வலி, எது பொய்யான வலி என்று வித்தியாசப்படுத்தி சொல்லி கொடுக்க வீட்டில் பெரியவங்க யாரும் இல்லை. அப்ப வலித்தது. அண்ணா அண்ணி இருவரும் வீட்டில் இல்லை என்றதும் பயந்து விட்டேன். வீட்டில் துணைக்கு இருந்த வேலைக்கார அம்மா என்னை விட பயந்து விட் டார்கள். இங்கே வந்த பிறகு தான் இன்னும் டெலி வரிக்கு இரண்டு வாரம் ஆகும் என்று டாக்டர் சொன் னாங்க. நான் என்ன பண்ணட்டும்?'' என்று தோளை குலுக்கி சிரிப்புடன் ஸ்வாதி சொல்ல, நிம்மதியுடன் அருகே இருந்த இருக்கையில் சரிந்தான் ஷ்யாம்.

''ஹேய் வாலு சிரிக்கவா செய்கிறாய்? கடந்த ஒரு மணி நேரத்தில் நாங்க மூன்று பேரும் என்ன பாடுபட் டோம் என்று எங்களுக்கு தான் தெரியும்...'' என்று அவள் கன்னத்தை செல்லமாக நிமிண்டியவன், உடனே நினைவு வந்து ஹேமந்தை அழைத்தான்.

''ஸ்வாதிக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. பயப்பட வேண்டாம். நிதானமா வா. நீயே அவளிடம் பேசிடு...'' என்று போனை சுவாதியிடம் கொடுக்க இருவரும் பேசு வதை ரசனையோடு பார்த்தான் ஷ்யாம்.

''ஹேய் ஷ்யாம்.. ஸ்வாதி எப்படி இருக்கிறாள்..?'' என்று விசாரித்தபடி வந்த கௌசல்யா, பத்மநாபன், சைலஜா மூவருக்கும் மீண்டும் விபரம் மறு ஒளிபரப்பு செய்யப்பட எல்லோரும் சிரித்தனர்.

''நீங்க ரெண்டு பேரும் ரூமில் ரெஸ்ட் எடுங்க. ஷ்யாம், நான் ஹேமந்த் வீட்டுக்கு போய், இவளுக்கு மட்டும் ஏதாவது சமைச்சு எடுத்து வருகிறேன். நீ நான் வரும் வரை இங்கே இரு...'' என்று சொல்லி விட்டு கௌசல்யா கிளம்பினார்.

''பாதியில் அண்ணியை கழட்டி விட்டுட்டு இங்கே வந்துட்டீங்க. டெலிவரி என்பதால் நாங்களும் அப்ப ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அண்ணியின் முகம் ரொம்ப வாட்டமா இருந்ததை என்னால் உணர முடிந்தது. அதனால் அம்மா வந்த பிறகு ஊருக்கு கிளம்புவதற்கு முன்னால் அண்ணியிடம் கொஞ்ச நேரம் பேசிட்டு வாங்க'' என்று அறைக்கு கிளம்பும் முன்னால் அண்ணனிடம் அருகில் வந்து மிரட்டலாக சொல்ல, அவனுக்கு அப்போதுதான் உரைத்தது.

''சரிங்க பாட்டி. உங்க சொல் படியே கேட்கிறேன்...'' என்று கிண்டலாகச் சொன்னாலும் அவளை பாதியில் விட்டு விட்டு வந்த போத அவளின் மனசு வாடி இருக்குமே என்ற எண்ணமும் தோன்றியது.

உடனே சுந்தரியின் அலைபேசிக்கு பேசவும் முயற்சி செய்த ஷ்யாமிற்கு ஏமாற்றமே கிட்டியது. முதல் முறை முழுசாக மணி அடித்து ஓயும் வரை எடுக்கப்படவே இல்லை. இரண்டாம் முறை எடுத்தது செல்வராணி.

ஷ்யாமின் குரல் கேட்கும் முன்பே அவசரமாக ''மாம்ஸ் நான் ராணி. எடுக்க வேண்டாம் என்று தான்



நினைத்தேன் மாம்ஸ். ஏதாவது அவசர செய்தி சொல்லணும் என்று நினைப்பீர்களோ என்று எடுத்தேன் சாரி...''

''சுந்தரி இல்லை..?'' என்ற அவனின் ஆர்வமான குரல் கேட்டு புன்னகை செய்தாள்.

''சுந்தரியை நாங்க வீட்டுக்குள் ஒளித்து வைக்கவில்லை மாமா. லைப்ரரி போகிறேன் என்று சொல்லிவிட்டு போனாள்.''

''லைப்ரரியா..? இப்பவா...?'' என்று நம்ப முடியாமல் கேட்டவன் குரலில் ஏமாற்றம் இருந்தது.

''உங்களாலும் நம்ப முடியலை இல்லை. என்னாலும் நம்ப முடியலை. மாம்ஸ் உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா? அங்கே மருத்துவமனைக்கு உங்களை தேடி தான் வந்து இருப்பாள் என்பது என் ஊகம். இன்னும் ஒரு அரை மணி நேரம் பாருங்க. அங்கே வராவிட்டால் அப்புறமா நான் லைப்ரரிக்கு போய் பார்த்து போனை கொடுக்கிறேன் ஓகே?'' என்று சொல்ல அவன் ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தான்.

''ஷ்யாமண்ணா... ஷ்யாம் பையா... ஷ்யாம்... என்ன ஆச்சு?'' என்று கொஞ்சம் கொஞ்சமாக குரல் உயர்த்திய ஸ்வாதியின் மூன்றாவது அழைப்பில் நிமிர்ந்தான் ஷ்யாம்.

''சாரி... கவனிக்கவில்லை.. என்ன கேட்டாய்?''

''அது சரி. இங்கே உடம்பு மட்டும் தான் இருக்கு என்று நினைக்கிறேன். மனசெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. என்ன விஷயம்? போனில் யாரு? அண்

ணியா...? அதான் அவங்க ஞாபகம் வந்து விட்டதா?'' என்று கண் சிமிட்டி விசாரித்தாள்.

''ம்ம்ம். அது அவளோட சிஸ்டர். அவளிடம் பேச முடியலை...''

''நீங்க அவங்க மொபைலுக்கு பேச வேண்டியது தானே..?'' என்று அவசரமாக சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''என்னுடைய பயத்தில், ஹேமந்தை குழப்பி உங்க ப்ரோக்ராம் ஸ்பாயில் பண்ணி விட்டேனா? ஐ ஆம் சாரி. கடிகாரத்தை திருப்பி வைக்க என்னால் முடியாது. ஆனால் உங்களை சந்தோஷப்படுத்த என்னால் முடியும்.''

''என்ன செய்ய போகிறாய்...?''

''அண்ணன் எஸ்.பி என்பதால், டாக்டரை டிஸ்சார்ஜ் பண்ண சொன்னால் கூட பயப்படுறாங்க. ஒரு நாள் இருந்துட்டு போங்க என்று சொல்றாங்க. நான் நன்றாக இருக்கிறேனே! இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆன்ட்டி வந்து விடுவாங்க. நீங்க கிளம்புங்க அண்ணா. நான் பார்த்துக்கறேன்'' என்று நம்பிக்கையோடு சொல்ல அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

''ஹேமந்த் வரும் வரைக்கும் நான் எங்கேயும் போவ தாக இல்லை. வேறே ஏதாவது சொல்லு...''

''ஓகே, அப்ப உங்க வுட் பி யை பற்றி சொல்லுங்க...'' என்று கேட்டதும் அவன் கண்கள் மலர்ந்தது.

''சுந்தரியை பற்றி என்ன சொல்லணும்...?'' என்று மெல்லிய குரலில் கேட்டவனின் குரல் குழைந்து இனிமை யாக மாறியது.



''என்ன அண்ணா இப்படி கேட்கறீங்க? லவரை பற்றி பேச விஷயமா இல்லை? அவங்க உங்களிடம் முதன் முதலில் என்ன பேசினாங்க? நீங்க அவங்களிடம் முதலில் என்ன பேசினீங்க? அவங்களுக்கு உங்களிடம் என்ன பிடிக்கும். அவங்களிடம் உங்களுக்கு என்ன பிடிக் கும் என்று சொல்லுங்க...'' என்று அவள் அடுக்க, அவளை முதன் முதலில் கல்லூரியில் சந்தித்த நேரம் நினைவில் வந்து அவன் கண்களில் சிரிப்பு பெரிதாக மலர்ந்தது.

''அட! முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரியுது போல இருக்கே...? முதலில் எப்போ எங்கே பார்த்தீங்க...?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

''இங்கே ஆக்சிலியம் ஆர்ட்ஸ் காலேஜ் வாசலில்...''

''வாவ்... வீட்டுக்குத் தெரியாமல் ரகசிய சந்திப்பா...? குட்... குட்... சுவாரஸ்யமா இருக்கு. சொல்லுங்க சொல் லுங்க. முதலில் யார் பேசினா? நீங்களா.. பாபியா?''

''நான் தான்...''

''என் பேசினீங்க...? அவங்க என்ன பதில் சொன் னாங்க?''

''முதன் முதலில் என்ன பேசுவாங்க. எல்லாரும் சொல் வது தான். ஹாய் நைஸ் மீட்டிங் யு... சேம் ஹியர்...'' என்று சொல்லும்போதே அவள் சொன்ன பதில் நினை வுக்கு வந்ததில் புன்னகை மலர்ந்தது. உண்மையை அப்படியே எல்லா இடங்களிலும் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை.

''ஹய்யே! என்ன அண்ணா, இந்த பேச்சில் சுவா ரஸ்யம் எதுவும் இல்லையே? ஸ்பைசியா ஏதாவது சொல்லுங்க...''

''ஸ்பைசியா. எங்க உறவில் எதுவும் இல்லை ஸ்வாதி. ஸ்பைசியா எதுவும் வேண்டும் என்றால் நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து மிளகாய் தான் காய வைக்கணும்'' என்று சொன்னவனுக்கு அதுவும் நினைவில் வந்து சிரிப்பு வந்தது.

''குட் ஐடியா. கல்யாணம் முடிந்த உடனே முயற்சி பண்ணிப் பார்த்துட்டு எப்படி இருந்தது என்று சொல்லுங்க. ஆனால் அதுக்கு முன்னாடி ஸ்பைசியா இல்லை என்றால் ஹியூமரசா ஏதாவது சொல்லுங்க...''

''இது கரெக்ட். அவளோட சென்ஸ் ஆஃப் ஹியூமர் சூப்பரா இருக்கும்...''

''ரியல்லி. ஏதாவது இன்சிடென்ட் சொல்லுங்க...''

''அவளை முதலில் சந்தித்த போது தனியா பேசணும். அதுக்காக தான் சென்னையில் இருந்து வந்து இருக்கிறேன் என்று சொன்னேன். சென்னையில் தனியா பேச இடமே இல்லையா என்று கேட்டாள்...'' என்று சொல்ல அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''பஹூத் அச்சா ஹை...''

''அது மட்டும் இல்லை. சரி வந்தது வந்துட்டீங்க. அதோ அந்த புளிய மரத்தில் பேய் இருக்கு, என்று யாரோ புரளியைக் கிளப்பி விட்டதால் அங்கே ஆள் நடமாட்டம் இருக்காது. அங்கே போய் பேசுங்க...'' என்று காலேஜ் ஒதுக்கு புறத்திற்கு வழி காட்டினாள் தெரியுமா...''

''லவ்லி.. லவ்லி.. பையா... எனக்கு உடனே அவங்களைப் பார்க்கணும் போல இருக்கே.... ஷ்யாம் அண்ணாவையே ரசித்து சிரிக்க வைத்தவங்களை நான்



கட்டாயம் பார்க்கணுமே...'' என்று ஆர்வமாகச் சொல்ல அவன் சிரித்தான்.

''அவளே உன்னைப் பார்க்க இங்கே தான் வந்து கொண்டு இருக்கிறாளாம்...''

''ஐ! என்னை பார்க்கவா? இந்த கதை வேண்டாம். உங்களைப் பார்க்க என்று சொல்லுங்க...'' என்று பதிலுக்கு மடக்கிய போது, ''உள்ளே வரலாமா...?'' என்ற குரலுடன் கதவை மெலிதாகத் தட்டும் ஒலியும் கேட்டது.

* * *

திரிபுரசுந்தரி வீட்டில் இருந்து கிளம்பி தஞ்சையில் இருக்கும் ஜே எஸ். மருத்துவமனைக்குச் செல்ல பேருந்திற்கு நிற்கும்போது, அருகில் இருப்பவர்கள் தன்னை அடிக்கடி திரும்பிப் பார்ப்பது புரிந்த பிறகுதான், தன் வித்தியாசமான உடை கண்ணில் பட்டது.

ப்ச்! உடையை மாற்றி விட்டு வந்து இருக்கலாம். ஆனால் அது எங்கே மனசில் பட்டது? உடனே ஷ்யாமை பார்க்க வேண்டும். அந்த ஸ்வாதி யார் அவளுக்கு என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே பிரதானமாக இருந்ததில் இது கண்ணில் படவில்லை.

பேருந்திற்கு காத்திருக்க பொறுமை இன்றி, ஆட்டோ பிடித்து அடுத்து இருபது நிமிடத்தில் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்து வரவேற்பில், ''ஸ்வாதி என்று இங்கே...'' என்று விசாரிப்பதற்கு முன்பே சீருடை அணிந்த ஒரு காவலர் அருகே வந்தார்.

''எஸ் பி வீட்டு அம்மாவை பார்க்க வந்தீங்களா? அம்மா நல்லா இருக்காங்க. ரூம் இந்தப் பக்கம் இருக்கு...''

''அ...வ..ங்..க..ளுக்கு... என்ன...?''

''அம்மா மாசமா இருக்காங்க. வலி எடுத்து விட்டதோ என்று அழைத்து வந்தோம். நீங்க யார் என்று தெரிய லையே? இது வரை அம்மா வீட்டுக்கு வந்து நான் பார்த்ததே இல்லையே...?'' என்று விபரம் சொல்லி, அவளைப் பற்றியும் துருவி, தான் போலீஸ்காரன் என்பதை நிரூபித்தார்.

''இதுவரை பார்க்கவில்லை. இனிமேல் அடிக்கடி பார்ப் பீங்க. உங்க அய்யாவோட ப்ரெண்டை நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள போகிறேன்...'' என்று நின்று திரும்பி அவருக்கு மட்டும் இல்லாமல் தனக்கும் அழுத்தமாகச் சொல்லிக் கொண்டாள் சுந்தரி.

''சென்னை ஜே.சி.க்கு பார்த்த அம்மாவா...? அய்யா கூட இங்கே தான் இருக்காங்க. வாங்கம்மா...'' என்று வரவேற்றவரின் குரலில் மரியாதை மேலும் சேர்ந்து இருக்க, அவளுக்கு கூச்சமாக இருந்தது. காவலர் காட்டிய அறை கதவைத் தட்டி உள்ளே வர தயக்கத் துடன் மெல்லிய குரலில் அனுமதி கேட்டாள் சுந்தரி.

''பையா...! பாபி வந்தாச்சு... வாங்க கதவு திறந்து தான் இருக்கு...'' என்று உற்சாகமாக சொன்ன ஸ்வாதியின் குரல் சுந்தரியின் காதுகளில் விழுந்தது. பையா, பாபி என்ற அந்த குரலும், உறவு முறை அழைப்பும் அவளை மேலும் குன்ற வைத்தது. அவளுக்கு தான் இங்கே வருவது எப்படித் தெரியும்?



அவசரப்பட்டுக் கிளம்பி வந்ததை என்னவோ மாற்ற முடியாது. ஆனால் இனிமேல் அவர்களிடம் பேசுவதில் கண்ணியம் காட்டலாம் வார்த்தைகளை விட்டு விடக் கூடாது என்று முடிவு பண்ணி விட்டு, அடி எடுத்து வைத்தாள்.

''பாபி, யூ ஆர் சோ ப்ரெட்டி! வாங்க வாங்க. இப்ப தான் அண்ணனிடம் உங்களைப் பற்றி பேசிட்டே இருந்தேன்'' என்று, நிறை மாத வயிறுடன் மலர்ந்த புன்னகையுடன் குழந்தைத்தனம் மாறாத முகத்துடன், படுக்கையில் இருந்த ஸ்வாதி வரவேற்றாள்.

''ஹாய்... உங்களைப் பற்றி போன் வந்ததும்... ஷ்யாம்... பதறி அடிச்சு... வந்தாங்க... அவங்களுக்குப் பிடிச்சவங்க... எல்லோரும் எனக்கும் வேண்டியவங்க... என்பதால் நானும் பின்னாடியே வந்து விட்டேன்... எப்படி இருக்கீங்க...'' என்று தயக்கத்துடன் ஸ்வாதியை யும் ஷ்யாமையும் மாறி மாறி பார்த்தபடி மெல்லிய குரலில் சொல்லி முடித்தாள் சுந்தரி.

அவளின் தயக்கம், குரலில் இருந்த உண்மையான அக்கறை, எல்லாவற்றிற்கும் மேலே அவள் முதன் முதலில், தயக்கம் இன்றி மனதில் அன்றாடம் அழைத்துப் பழகிய மாதிரி வெகு இயல்பாகத் தன் பெயரை உச் சரித்த விதம் எல்லாமே ஷ்யாமை உருக வைத்து, கண்கள் அவளை விட்டு விலக மறுத்து பசை போட்டு ஒட்டிக் கொண்டது.

தான் இங்கே வந்தது அவனை சந்தேகப்பட்டு வந்தது மாதிரி தோன்றி விடக் கூடாதே என்று கவனத்துடன் வார்த்தைகளைப் பொருக்கி எடுத்துப் பேச, இருவரும் சந்தோஷமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஷ்யாம் சுந்தரி இருவரின் கண்களும் ஒருவரை ஒருவர் விழுங்குவது போலப் பார்த்ததைக் கண்ட ஸ்வாதி மெல்ல தொண்டையைச் செரும, இருவரும் ஒரே சமயத்தில் அவளைத் திரும்பிப் பார்த்தனர்.

''ஹவ் ஸ்வீட் பாபி? தேங்க்ஸ். பையா அதோ அந்த பாட்டிலில் ஜூஸ் இருக்கு பாருங்க. பாபிக்கு கொடுங்க. சரியான வெயிலில் என்னைப் பார்க்க ஆசையா ஓடி வந்து இருக்காங்க. ப்ளீஸ்...'' என்றதும், குரலில் டன் டன்னாக வழிந்த கேலியைக் கூட உணராமல் அந்த பாட்டிலின் அருகே இருந்த கண்ணாடி தம்ளர்களைக் கழுவ குளியல் அறைக்குள் செல்ல, அவன் பின்னால் வேகமாக வந்தாள் சுந்தரி.

''நான் கழுவித் தருகிறேன். இதை எல்லாம் நீங்க செய்ய வேண்டாம். அதுவும் நான் இருக்கும்போது நிச்சயம் வேண்டாம். நீங்க போய் சேரில் உட்காருங்க'' என்று அதட்டலாகச் சொல்ல அவன் பிரமிப்பாகப் பார்த்தான்.

''அப்படி என்றால், எல்லா நேரமும் என் கூடவே இருக்கப் போகிறாயா?''

''போகிறாயாவா? இன்னும் அதில சந்தேகமா உங்களுக்கு...?'' என்று சிரிப்புடன் கேட்டவள் 'சரியான டியூப்லைட்....' என்று முணுமுணுத்தாள்.

''நானா டியூப் லைட்...?'' என்று ரகசியமாகக் கேட்ட வன் சின்ன பாத்ரூமில் அவளை மேலும் நெருங்கினான்.

''அதிலும் சந்தேகமா...?'' என்று அவள் பேச ஆரம் பிக்கும் போதே, ''ம்ம்...?'' என்று குறும்பாகக் கேட்டபடி அவளின் கையில் இருந்த கண்ணாடி தம்ளர்களை



வாங்கி முன் ஜாக்கிரதையாக வாஷ் பேசினில் வைத் தான்.

''சந்தேகமே வேண்டாம்... நீங்க... டியூப் லைட் தான்... அதிலும்... மெகா, கிகா டியூப் லைட்... சொல்லி முடிக்கும்போது, அவளின் முகத்தைப் பற்றி நிமிர்த்தி, அவள் இதழ்களில் அழுத்தமாக தன் முதல் முத்திரையைப் பதிக்க அவள் பேச்சும் மூச்சும் நிற்க, அவர்கள் இரு வருக்கு மட்டும் உலகம் தன் சுழற்சியை நிறுத்திக் கொண்டது.



## 23

ஹேமந்தின் வீட்டுக்குச் சென்று, ஸ்வாதிக்கு சமைத்து, எடுத்துக் கொண்டு அரை மணி நேரத்தில் திரும்பி வந்த கௌசல்யா அறைக்குள் நுழைந்த போது, அவள் மட்டும் கட்டிலில் படுத்து இருக்க, அவர் வியப் படைந்தார்.

''என்ன ஸ்வாதி, நீ மட்டும் படுத்து இருக்க? ஷ்யாம் உன்னை தனியா விட்டுட்டு எங்கே போய்ட்டான்?'' என்று கேட்க அவள் சிரித்தாள்.

''அதை ஏன் கேட்கறீங்க ஆன்ட்டி? ஒரு கண்ணாடி கிளாசை, ரெண்டு பேர் சேர்ந்து அஞ்சு நிமிஷமா கழு விட்டு இருக்காங்க...'' என்று சொல்லும் போதே ஒன்று இரண்டு ஐந்து என்ற எங்களுக்கு கூடுதல் அழுத்தம் கொடுத்து சொல்லி, அருகே இருந்த அறையைக் காட்ட அவரின் கண்கள் விரிந்தது.

''ரெண்டு பேரா...? ரெண்டாவது ஆள் யாரு?'' என்று கேள்வியாக நிறுத்த, அவளின் கண்கள் பக்க வாட்டில் ஜாடை காட்டியது.

ஸ்வாதியின் சிரிப்பு சப்தத்திலும் பேச்சுக் குரலிலும், சுய உணர்வு பெற்று 'ஹையோ... அம்மா...' என்று மெல்லிசாக ஷ்யாம் அலற, அவசரமாக ஷ்யாமின் அணைப்பில் இருந்து சுந்தரி விலகி வெளியே எட்டிப் பார்த்தாள்.

''நல்லவேளை அத்தை மட்டும் தான் இருக்காங்க. மாமா ஷைலு எல்லாம் இல்லையே என்று சந்தோஷப் படலாம் வாங்க...'' என்று முணுமுணுப்பாக சொல்லி விட்டு வெளியே வந்தவளின் பின்னால் ஷ்யாமும் வந்தான்.

''சுந்தரி! நீ எப்போ வந்தாய்? நான் கிளம்பும் போது உன்னிடம் சொல்லிவிட்டு தானே வந்தேன். அப்பவே நீயும் வருகிறேன் என்று சொல்லி இருந்தால் என்னுடனே கூட்டி வந்து இருப்பேன் இல்லையா?'' என்று ஆச்சரிய மாக மருமகளிடம் கேட்டவர் மகனைப் பார்த்து பெருமை யுடன் புன்னகை செய்தார்.

''நீங்க நேற்று காலையில் போன் பண்ணும்போது என்னைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லவில்லை தானே? அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு. உங்களுக்கு மட்டும் தான் சர்ப்ரைஸ் கொடுக்கத் தெரியுமா எனக்கும் தெரியும் என்று உங்களிடம் காட்டலாமே என்று தான்...'' என்று கேலிக் குரலில் சொல்ல, கௌசல்யா பெருமை யாகத் தலை அசைத்தார்.

''அது சரி, சஸ்பென்ஸ் அத்தைக்கு மட்டுமா? இல்லை அத்தை மகனுக்குமா?'' என்று கேட்க, அவள்



அதற்கு பதில் சொல்லத் தயங்கி ஷ்யாமை பார்த்து புன்னகை செய்ய பதில் ஸ்வாதியிடம் இருந்து வந்தது.

''ஆன்ட்டி, ஏற்கனவே அவங்க பாதி பேசிக் கொண்டு இருக்கும்போது அண்ணன் போன் பண்ணி இங்கே விரட்டி விட்டுட்டாங்க. அடுத்து நீங்க நிற்க வச்சு கேள்வி மேலே கேள்வி கேட்டால், பொறுமையா இருக் கும் ஷ்யாம் அண்ணாவே பொங்கி எழுந்துடுவாங்க. அதனால் அவங்களை அனுப்பிடலாம் ஆன்ட்டி. சாரி பையா. ஹேவ் நைஸ் டைம் பாபி. எப்ப தோணுதோ அப்ப எங்க வீடு பக்கம் எட்டிப் பாருங்க. ஓகே?''

''ஸ்வாதி சொன்ன பிறகு அப்பீல் ஏது? அப்படியே செய்து விடலாம். சுந்தரியை பத்திரமா அவங்க வீட்டில் விட்டுட்டு ஹோட்டல் ரூமுக்கு மெதுவா வா'' என்று கௌசல்யா சொல்ல அவன் வியப்பாக பார்த்தான்.

''என்ன ஷ்யாம்? ஆன்ட்டி சொல்றதை நம்ப முடிய லையா? நிஜம் தான். வேண்டுமானால் நான் கிள்ளி காட்டுகிறேன்...'' என்று சொன்னவள் சுவாதீனமாக அவனின் சட்டை பையில் கைவிட்டு, மொபைல் போனை எடுத்து கௌசல்யாவிடம் கொடுத்தாள்.

''ஹேய் என்ன பண்ற...?'' என்று ஷ்யாம் பதற அவள் சுந்தரியைப் பார்த்து புன்னகை செய்தாள்.

''இன்னிக்கு மனிதனின் ப்ரைவசியை கெடுப்பது மொபைல் போன்தான். இது இல்லாமல் இருந்து இருந் தால் ஹேமந்தால் உன்னை இங்கே விரட்டி விட்டு இருக்க முடியாது. இல்லையா? அதுக்கு தான் போனை எடுத்தேன். சாரி பாபி. ரொம்ப உரிமை எடுத்துக் கொள்கிறேன் என்று தப்பா எடுத்துக்காதீங்க. சர்வீசுக்கு

வந்து நாளில் இருந்து எட்டு ஆண்டுகள் பழக்கம். இந்த உரிமையும் கூட உங்க சந்தோஷத்துக்காக தான். ரெண்டு மணி நேரம் வெளி உலக தொந்தரவு இல்லாமல் நிம்மதியா என்ஜாய் பண்ணிட்டு வாங்க...' என்று சொல்லி, நட்புடன் சுந்தரியின் கையைப் பற்றிக் குலுக்கினாள் ஸ்வாதி.

''ஹேய்... நீங்க... உங்களை எப்படி தப்பா நினைக்க முடியும்? சாரி எல்லாம் தேவை இல்லை. சைலுவுக்கு ஒரு அவசரம் என்றால் அவர் வர மாட்டாரா என்ன...? அது மாதிரி தான் நினைத்தேன் என்னங்க...'' என்று அவசரமாக சமாதானம் சொன்னவள் லேசாக ஷ்யாமின் விலாவில் இடிக்க அவன் பெருமையாக புன்னகை செய்து தலை அசைத்தான்.

''அம்மா, ஹேமந்த் பதினைந்து நிமிடத்தில் வந்து விடுவேன் என்று எஸ்.எம்.எஸ். அனுப்பி இருந்தான். வரும் நேரம் தான். நீங்க ஸ்வாதியைப் பார்த்துக்கோங்க. நான் சுந்தரியைக் கொண்டு போய் அவங்க வீட்டில் விட்டுட்டு வருகிறேன். ஸ்வாதி டேக் கேர். இன்னும் நாலு நாள் இங்கே தான் இருப்பேன். அப்புறம் வீட்டுக்கு வருகிறேன். வா சுந்தரி...'' என்று அவளின் கை பற்றி வெளியே புன்னகையோடு திரும்பி நடக்க, கௌசல்யா அவனை பின் தொடர்ந்து அவன் கையில் எதையோ திணித்தார்.

''ப்ச்! என்ன ஆன்ட்டி... நான் அவங்களுக்குத் தொந்தரவு இருக்கக் கூடாது என்று போனை எடுத்து உங்க கையில் கொடுத்தால், திருப்பிக் கொடுத்துட்டீங்களே? ப்ச்... போங்க ஆன்ட்டி... உங்க பேச்சு காய்...'' என்று எரிச்சலுடன் ஸ்வாதி சொல்லிவிட்டு முகத்தை வேறு



புறம் திருப்பிக் கொள்ள அவர் நகர்ந்து சென்று அவளை தன் புறம் திருப்பினார்.

''என் பேச்சு காய் என்று சொன்னதை, அடுத்த நிமிஷம் மாற்ற மாட்டாயே?'' என்று அவளின் முகவாயைப் பற்றி கேலியாகக் கேட்டார் கௌசல்யா.

''ப்ச்! போங்க ஆன்ட்டி போலீஸ்காரங்களுக்கே கடமை உணர்ச்சி அதிகம். அதிலும் ஷ்யாம் அண்ணாவுக்கு கேட்கவே வேண்டாம். இதுக்காக தான் இத்தனை நாளாக கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிட்டு இருந்தாங்க. இதுல இந்த போன் வேறே...'' என்று எரிச்சலோடு சொன்னவளின் பேச்சு பாதியில் நின்று கண்கள் வட்டமாக விரிந்தது. அவளின் முகத்தில் முன்னால் சற்று முன்பு தான் கொடுத்த ஷ்யாமின் மொபைலை கையில் வைத்து ஆட்டிக் கொண்டு இருந்தார் கௌசல்யா.

''ஆன்ட்டி... போன் இங்கே... இருக்கே...? அப்ப நீங்க என்ன அவசரமா போய் அவரிடம் கொடுத்தீங்க...?''

''ம்ம்ம்... என்னுடன் டூ விட்டுட்டுப் பேசாமல் இருப்பவர்களிடம் எல்லாம் நான் என்ன குடும்ப ரகசியம் சொல்வதில்லை என்று புளிய மரத்து சாமியாரிடம் நான் சத்தியம் பண்ணி இருக்கேன்...'' என்று சொல்லிவிட்டு சோபாவில் அமர்ந்து கொண்டார் கௌசல்யா.

''ஆன்ட்டி நீங்களுமா புளிய மரத்து பேயிடம் காண்ட்ராக்ட் போட்டு இருக்கீங்க...?''

''நானுமா என்று கேட்டால் என்ன அர்த்தம்? வேற யாரு...?'' என்று கௌசல்யா ஆர்வமாகக் கேட்க அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''ஹேய் இப்படிச் சிரிக்காதே. எங்கேயாவது பிடித்துக் கொள்ளப் போகிறது ஜாக்கிரதை...'' என்று சொல்ல அவள் சிரிப்பு கொஞ்சம் அடங்கியது.

''நீங்க புளிய மரத்து சாமியார் என்று சொன்னீங்க. நான் புளிய மரத்துப் பேய் என்று சொன்னால் அது வேறே என்று தோன்றவில்லையா? சரி அதை விடுங்க. உங்களுக்குத் தெரியுமா...? உங்க மருமகள்...'' என்று ஆரம்பித்து ஸ்வாதி ஷ்யாம் சொன்ன கதைக்கு உப்பு மசாலா சேர்த்து சுவையாக கௌசல்யாவுக்கு கதை சொல்லிக் கொண்டு இருந்த நேரத்தில், அதே புளிய மரத்தின் அடியில் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி, இதழ்களில் நிரந்தரமாக உறைந்து இருந்த புன்னகை யுடனும், கனவு மிதக்கும் விழிகளுடனும் ஷ்யாமும் சுந்தரியும் அமர்ந்து இருந்தனர்.

''ஏதோ பேசணும் என்று சொல்லி கூட்டிட்டு வந்துட்டு, ஒண்ணுமே பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்...? ஏதாவது பேசுங்க...'' என்று தன் கையில் இருந்த ஷ்யாமின் கையை உலுக்கி, கேட்டாள் சுந்தரி.

அவளின் கையை உயர்த்தி புறங்கையில் முத்தமிட் டவன் அவளைச் சுற்றி தன் இடது கரத்தை போட்டு இழுத்து தன் தோளில் சாய்த்து, அவளின் நெற்றியில் தலையை பக்க வாட்டில் சாய்த்து முட்டினான்.

''பேசறதுக்கு ஒன்றும் இல்லை சுந்தரி. எல்லாம் நீ ஹாஸ்பிடலில் சொன்ன ஒரு வாக்கியத்தில் எல்லாமே பேசி முடித்த திருப்தி வந்து விட்டது. தேங்க்ஸ்... எல் லாத்துக்கும்...''

''தேங்க்ஸ் சாரி சொல்ல வேண்டாம் என்று சொன் னீங்க. அட்வைஸ் அடுத்தவங்களுக்கு மட்டும் தானாக்கும்...''



''ஆமால்ல. அப்ப நீ சொல்லிக் கொடுத்த மாதிரி தேங்க்ஸ் சொல்லிடுவோம்'' என்று சிரிப்புடன் சொன்ன வன் அவசரமாக அவளின் கன்னத்தில் முத்தம் ஒன்று வைத்தான்.

''ஹேய் என்ன இது...? சான்ஸ் கிடைத்தால் விட மாட்டீங்களே...''

''ஆமா, அப்படித்தான். அது சரி, அதென்ன, வாங்க போங்க மட்டும் தானா...? ஸ்வாதி கிட்டே மட்டும் பேர் சொல்லி கூப்பிட்டாய். தனியா இருக்கும்போது சொல்ல மாட்டாயா?''

''ஹய்யோ... பேர் சொன்னால் அம்மா தோலை உரிச் சுடுவாங்க...''

''நீ என் பெயரை சொன்னால் உங்க அம்மா எதுக்குத் தோலை உரிக்கணும் நான் பார்த்துக்கறேன். நீ இயல்பா இரு. உங்க வீட்டிலும் சரி, எங்க வீட்டிலும் சரி. நீ நீயா இரு. ஓகே? உனக்கு என்ன வேண்டுமானாலும் என்னிடம் தயங்காமல் கேட்கலாம். அது படிப்பா இருந்தாலும் சரி, பொருளா இருந்தாலும் சரி, வேறே எதுவா இருந்தாலும் என்னிடம் தயங்காமல் கேட்கலாம். ஓகே?'' என்று உறுதி அழைக்க அவள் கனிவாக புன்னகை செய்தாள்.

''இது என்ன நம்ம குடும்ப டயலாக்கா?''

''நம்ம குடும்ப டயலாக்...? ஏன் அப்படிக் கேட் கிறாய்?''

''அப்பா இன்று காலையில் வீட்டுக்கு வந்த போது இதே வாசகம் சொன்னாங்க. நேற்று அம்மா என்னிடம் போனில் பேசியபோது இதே வாசகம் சொன்னாங்க. இப்ப நீங்க. நான் எனக்கு வேண்டியதை யாரிடம்

கேட்கணும். அதையும் நீங்களே சொல்லிடுங்க...'' என்று சிரிப்போடு சொன்னாலும் அதில் மிகுந்த அன்பும் நன்றி உணர்வும் நிறைந்து இருந்தது.

''அம்மா சொன்னதுக்கு காரணம் இருக்கு சுந்தரி...''

''தெரியும். நீங்க இந்தக் கல்யாணத்திற்கு முழு மன சோட சம்மதிக்கலையோ என்ற பயம் இருக்கு அவங் களுக்கு...''

''அவங்க பயம் போய்டுச்சு. உனக்கு எதுவும் அந்த மாதிரி பயமோ சந்தேகமோ இருக்கா?''

''அவங்க பயம் போய்டுச்சு என்று எப்படிச் சொல் றீங்க?''

''அதுக்கு ஆதாரம் நான் அப்புறம் காட்டுறேன். நீ நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு...''

''என்னைக் கொஞ்சம் நல்லா பாருங்க. உங்க கேள்விக்கு ஏதாவது பதில் நான் சொல்லணுமா என்று அப்புறம் சொல்லுங்க...'' என்று கேலியாகக் கேட்க அவனின் கண் கள் அவளை உச்சி முதல் பாதம் வரை அங்குலம் அங் குலமாக ஆராய்ந்தது.

அவளின் தலை, அவனுடைய தோள் வளைவில் ஒயிலாக சாய்ந்து இருக்க, கண்களில் கனவும் இதழ்களில் சிரிப்பும், மலர்ந்து இருக்க, அவளின் இரண்டு கரங்களும் அவனின் இடது கரத்தை சுற்றி வளைத்து இருந்தது. இருவருக்கும் இடையே இடைவெளி என்பது மருந்துக் கும் இல்லை.

''சொல்ல வேண்டியது அவசியம் இல்லை தான். ஆனால் சொன்னால் எனக்குப் பிடிக்கும் என்றால், அது



எனக்கு சந்தோஷம் கொடுக்கும் என்றால், சொல்ல லாமே...?'' என்றவன் குரலில் கொஞ்சலும் குறும்பும் சரி விகிதமாக கலந்து இருந்தது.

''எல்லா இடத்திலும் ஆண் தான் பெண்ணிடம் தன் விருப்பத்தைச் சொல்வது வழக்கம். நீங்க முதலில் சொன்னால் என்னவாம்...? நீங்க சொன்னால் நான் சந்தோஷப்பட மாட்டேன் என்று உங்களிடமா பளிய மரத்து விருந்தாளி வந்து ரகசியமா சொன்னாங்களா என்ன?'' என்றவளின் இதழ்கள் அவனின் கன்னத்தில் உரசிக் கொண்டு இருக்க, அவள் முகத்தில் காதல் மயக்கம் கூடுதலாகவே இருந்தது.

''எல்லோரும் செய்றதை நான் ஏன் செய்யணும்? ஒரு மாற்றமா இருக்கலாம். அது போக லேடீஸ் பர்ஸட் கேள்விப் பட்டதில்லை. நீயே முதலில் சொல்லு...''

''ரொம்ப தான் பந்தா பண்றீங்க. இப்படித்தான் நீ சொல்லு நீங்க சொல்லுங்க, என்று நாம் இருவரும் இன்று காலை இசை கல்லூரியில் போட்டி போட்டு, வம்பிழுத்துக் கொண்டே இருந்ததில் முக்கியமான விஷயம் பேசுவதற்குள் போன் வந்து... ஹேய்... போன் என்றதும் ஞாபகம் வருகிறது. ஸ்வாதி பிடுங்கிய போனை, உங்க அம்மா கொண்டு வந்து திருப்பிக் கொடுத்தீங் களா? உங்க அம்மாவுக்கு நீங்க ரொம்ப செல்லம் தான் போல...'' என்று கேட்டதும் ஆமோதிப்பாக தலை அசைத்தான்.

''அம்மாக்கு நான் மட்டும் செல்லம் இல்லை. எனக்குப் பிடித்த எல்லோருமே செல்லம்தான். இல்லை என்றால் உனக்கு பரிசு கொடுக்கச் சொல்லிக் கொடுத்து அனுப்பி இருப்பாங்களா? அவங்க அவசரமா கொடுத்தது

உனக்கான பரிசு. என்னுடைய போன் இல்லை'' என்று அவன் சொல்லவும் அவள் வியப்பில் விழி விரித்தாள்.

''எனக்கு பரிசா...? என்ன பரிசு...?''

''சொல்றேன். சொல்றது மட்டுமில்லை. உன்னுடைய பரிசு உனக்கு தானே...? அதை தருகிறேன். ஆனால் அதுக்கு முன்னாடி நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லு. இரண்டு வாரம் முன்பு நான் உன்னைப் பார்க்க வந்தபோது, என்னிடம் இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னாயே? அந்த எண்ணம் இன்னும் ஏதாவது ஒரு மூலையில் ஒட்டி இருக்கா? ப்ளீஸ்... தெளிவா வாயைத் திறந்து சொல்லி விடேன்...''

''இல்லை ஷ்யாம். இந்தக் கல்யாணத்திற்கான ஒரே ஆட்சேபணை...''

''வாவ்! ஷ்யாமா...? எமோஷனலா ஆன மட்டும் தான் பேர் வருமோ...?''

''ப்ச்! பேச்சை மாத்தாதீங்க. என்னுடைய படிப்பு தொடர வேண்டும் என்பது தான். அது நீங்க பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை போதுமா? நீங்க சொல்லுங்க. உங்களுக்கு ஏதாவது இருக்கா?'' என்று உறுதியாக தன் மனதை வெளிக் காட்ட, அவன், அவளின் முகவாயைப் பற்றி நிமிர்த்தி அவளை கண்களுக்குள் பார்த்து புன்னகை செய்தான்.

''தேங்க்ஸ் சுந்தரி. எனக்கும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள, எந்த ஆட்சேபணையும் இப்போ இல்லை. முதலில் அம்மா உன்னைப் பற்றிச் சொல்லும் பொழுது உனக்கும் எனக்கும் இடையே இருந்த வயசு



வித்தியாசம் ஜாஸ்தி என்று யோசித்தது உண்மைதான். ஆனால் உன்னைப் பார்த்த பிறகு, அந்த எண்ணம் மாறி விட்டது சுந்தரி.

சரிக்கு சரியா நின்று, என்னையே போலீசில் மாட்டி விடத் துணிந்தாயே? அந்த தைரியத்தைப் பார்த்த பிறகு, என்னைப் பிடிக்கலை என்று முகத்திற்கு நேரே நீ சொன்ன பிறகு...''

''ஹலோ ஹலோ! என்னைப் பிடிக்கலை என்று முகத்திற்கு நேரே சொன்னது நீங்க தான். நான் இல்லை...'' என்று அவள் அவசரமாக மறுக்க அவளின் நெற்றியில் முட்டினான்.

''இதுதான்...! இந்த தைரியம் தான்... நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாதாடும் இந்த நேர்மை தான் எனக்குப் பிடித்தது. கல்யாணம் வேண்டாம். அதை நிறுத்தத் திட்டம் போடலாம் என்று சொன்னது உண்மைதானே? அந்த தைரியம் எனக்குப் பிடித்தது. உன்னை மாதிரி சுய மரியாதை உள்ள, நேர்மையான சிந்தனை இருக்கும் தைரியமான பெண்ணை வேண்டாம் என்று சொல்வது என்னையே நான் வேண்டாம் என்று சொல்வது மாதிரி. அதைச் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சு இருக்கு. போதுமா...?'' என்று கேட்க அவள் அவனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''பிடிச்சு இருக்கு என்று வாயால் சொன்னதற்கு கன்னத்தில் முத்தம். அப்ப அம்மா தந்த பரிசு கொடுத்தால்...'' என்று இழுத்தவன் தன் சட்டை பையில் இருந்து அந்த குட்டி டப்பாவை எடுத்தான்.

''அம்மா தந்த பரிசு என்றால் அவங்களுக்கு தானே நன்றி சொல்லணும். உங்களுக்கு எதுக்கு...?''

''இந்த மோதிரம் அம்மா தந்த பரிசு இல்லை மேடம். அம்மாவின் பரிசு என்று நான் சொன்னது, என்னை... இந்த ஷ்யாம் சுந்தரை... இப்ப புரியுதா...? ''ஐ லவ் யு சுந்தரி...'' என்று சொல்லி இடது கையை பற்றி உயர்த்தி அன்று காலை வாங்கிய மோதிரத்தை அணிவித்து விட்டு விரல்களில் மென்மையாக முத்தமிட்டான்.

''புரியுது இந்த சுந்தரிக்கு ஏற்ற சுந்தரன் நீங்க தான். அதனால் பரிசு உங்களுக்கு தான் கொடுக்கணும் என்று நல்லாப் புரியுது..'' என்று அவன் கையில் இருந்த மற்ற மோதிரத்தை வாங்கி அவனுக்கு ஆசையாக அணிவித்தவள் அதே வேகத்தில் மார்பில் சாய, அவளை ஆசையுடன் அணைத்துக் கொண்டான் ஷ்யாம் சுந்தர்.

# 24



மருத்துவமனையில் ஸ்வாதியைப் பார்த்துவிட்டு, தன்னுடைய அலைபேசியை அம்மாவிடம் அவளே பறித்து கொடுத்துவிட, அது குறித்த வருத்தம் எதுவும் இன்றி உற்சாகத்துடன் சுந்தரியுடன் அவள் பயின்ற கல்லூரிக்கு வந்த ஷ்யாமின் கால்கள் அவளை முதன் முதலில் சந்தித்தபோது அவள் கேலியாக சுட்டிக் காட்டிய புளிய மரத்தடிக்குச் சென்றன.

''ஹேய் எங்கே போறீங்க...?'' என்று கேலியாகக் கேட்டவளுக்கும் அவன் செல்லும் இடம் புரிந்தே



இருந்தாலும் விருப்பத்துடனே அவன் கைகளை பற்றிக் கொண்டு சென்றாள் சுந்தரி.

கல்லூரி விடுமுறை காலம் என்பதாலும், நடுப்பகல் வேளையில் வெயில் அடித்ததாலும் பொதுவாகவே அந்த பகுதியில் மாணவர் நடமாட்டம் கம்மியாகவே இருக்கும் என்பதும் சேர்ந்து கொள்ள அந்த இடத்தில், இருவரும் தங்களின் மனதில் உள்ளவற்றை எந்த இடையூறும் இன்றி பகிர்ந்து கொண்டனர்.

''என்னங்க. நான் உங்களிடம் ஒன்று சொல்லணுமே...'' என்று அவனின் தோளில் சாய்ந்து இருந்த தன் தலையை நிமிர்த்தி அவனின் முகத்தைப் பார்த்துப் பேச்சை ஆரம்பித்ததில் நேரம் கடந்ததே அவர்களுக்குத் தெரியவில்லை.

''ஒன்று என்ன கணக்கு? நூறு சொல்லேன். யார் என்ன சொல்லப் போறா?'' என்று கேலியாக சொல்ல அவன் மார்பில் செல்லமாகக் குத்தினாள்.

''ஹையோ... அதில்லைங்க... ஒரு விஷயம் சொல்லணும்...''

''நானும் விஷயத்தைத் தான் சொன்னேன்... நீ என்ன நினைத்தாய்...?'' என்று மீண்டும் அவன் வம்பிழுக்க அவன் கன்னத்தை நிமிண்டினாள்.

''இதை நான் நம்பணுமா...?''

''நம்புவதும் நம்பாததும் உன் விருப்பம் சுந்தரி. ஆனால் உண்மை இதுதான்'' என்று கண் சிமிட்டியவனின் குரலில் இருந்த குறும்பே அவன் சொல்வது பொய் என்று அடித்துச் சொன்னது.

''சரி விடுங்க. அதுவே உண்மையாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால், இப்ப நான் சொல்லப் போவ தையும் விளையாட்டா எடுத்துக் கொள்ளக் கூடாது. இது ரொம்ப முக்கியமான விஷயம்...'' என்றவளின் குரலில் இருந்த தீவிரம் அவனின் விளையாட்டு தனத்துக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தது.

''சொல்லு சுந்தரி...''

''வந்து... நான் இதுவரை எங்க அம்மா அப்பாவிடம் எந்த விஷயத்துக்குமே பொய் சொன்னதே இல்லை. அதனால், நாம் ஏற்கனவே எழுதிய கடிதங்கள்... நாம் தான் எழுதினோம் என்று அம்மா அப்பா அத்தை மாமா விடம் வெளிப்படையா இன்றே சொல்லி விடு வோமா...?'' என்று கவலையுடன் கேட்க அவன் புன்னகை செய்தான்.

''அவங்களுக்கு இது தெரியாது என்றா நினைக் கிறாய்? உங்க வீட்டைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எங்க வீட்டுல எல்லோருக்கும் ஏற்கனவே தெரியும் என்று என்னால் அடித்துச் சொல்ல முடியும் தெரியும் சுந்தரி...''

''இல்லை ஷ்யாம். அவங்களுக்குத் தெரியும் என்பது வேறு விஷயம். நாம் செய்த முட்டாள் தனத்தை தவறு என்று பெரியவர்களிடம் ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்பது என்பது வேறு விஷயம். தவறை ஒப்புக்கொள் வது என்பது வேறே. நான் இரண்டாவதைப் பற்றி சொல் கிறேன்...'' என்று அவள் வருத்தமான பாவனையுடன் சொல்ல, அவன் அவளின் தோளைப் பற்றி இறுக்கி கன்னத்தில் முத்தமிட்டான்.



''ப்ச்! என்ன இது? நான் சீரியசா பேசிட்டு இருக் கேன்.''

''நானும் அதை உன்னைவிட சீரியசா கேட்டுட்டு இருக் கேன். அதுக்கு தான் இந்த கிஸ். முன்னாடி பண்ணியது முட்டாள் தனம் என்பதை ஒத்துக் கொண்ட சந்தோஷத்தை உன்னுடன் பகிர்ந்து கொண்டேன்.''

''சரி, இங்கே வந்து ரொம்ப நேரமாச்சு. கிளம்பலாமா? பசிக்குது...'' என்று சுந்தரி பேச்சை மாற்ற, கையைத் திருப்பி மணி பார்த்தான். மணி மூன்றரையை நெருங்கிக் கொண்டு இருக்க அவனுக்கே வியப்பாக இருந்தது. இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லையே? அப்படி என்னதான் பேசினார்கள்? அவனுக்கு நினை வில்லை.

''இப்பதான் மணி ஆனதே தெரியுது சுந்தரி. எனக்கும் பசிக்குது. வா போகலாம்...'' என்று எழுந்தவன் அவ ளுக்கு கையை நீட்ட அதில் தன் கரத்தை வைத்து அழுத்தி எழுந்த சுந்தரியும் அவனைச் சிரிப்புடன் பின் தொடர்ந்தாள். அங்கிருந்து ஆட்டோ பிடித்து வீடு வந்தபோது அங்கே ஏற்கனவே காலையில் சென்னை யில் இருந்து பயணம் செய்த வாகனம் நின்று இருக்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்ன இந்த வண்டி இங்கே இருக்கு? அம்மா அப்பா மீண்டும் வந்து இருக்காங்க போல...?'' என்று ஷ்யாம் குழப்பத்துடன் கேட்க அவள் அவன் பின்னால் ஒளிந்தாள்.

''ஹய்யோ... நான் அம்மாவிடம் லைப்ரரிக்கு போறதா சொல்லிக் கிளம்பினேன். இப்ப நாம் இருவரும்

ஒன்றாகப் போவதைப் பார்த்தால் கேள்வி கேட்பாங்களே! அவங்களுக்கு என்ன பதில் சொல்றது என்று தெரியலையே...'' என்று பயந்தாள் சுந்தரி.

''அட! என்னோட கூட வருவதற்கு என்ன பயம்? இப்ப தான் கொஞ்ச நேரம் முன்னாடி நாம் இதுவரை செய்த திருட்டுத் தனம் எல்லாம் கூடச் சொல்லி விடலாம் என்று தைரியமாகச் சொன்னாய். இதையும் சேர்த்துச் சொல்ல வேண்டியதுதானே?''

''அது திருட்டுத் தனம் இல்லை. முட்டாள் தனம்...''

''ம்கூம். இதில் எல்லாம் நல்லா தப்பு கண்டு பிடி. ஆனால் உன் மனசுல என்ன இருக்கு என்று சரியான நேரத்துல புரிஞ்சு சொல்லாதே...''

''என்னைக் குற்றம் சொல்வதிலேயே இருக்காதீங்க. இப்ப என்ன பண்றது என்று சொல்லுங்க...''

''இனிமேல் எதற்கும் பொய் சொல்ல வேண்டாம். நாம் எதுவும் தப்பு செய்யவில்லை. உண்மையைச் சொல்லலாம். பயப்படாதே. திட்டினால், கேலி செய்தால், வாங்கிக் கொள்வோம். இதுநாள் வரை அவர்கள் பண்ணாததா புதுசா செய்யப் போறாங்க?'' என்று நம்பிக்கை ஊட்டியவன், அவள் விலக முயற்சி செய்தும் விடாமல் அவளின் கையை தன் இடது கரத்தில், அடக்கி, இருவரும் ஒரே நேரத்தில் தன் வலது காலை எடுத்து உள்ளே வைத்து வீட்டுக்குள் நுழைந்தனர்.

அம்மா அப்பா வந்து இருக்கும் பட்சத்தில் அங்கே கலகலப்பாக பேசிக் கொண்டு இருப்பார்கள் என்று ஷ்யாமின் எதிர்பார்ப்புக்கு நேர் எதிராக அங்கே அமைதி நிலவியது.



இவர்கள் இருவரும் கை கோர்த்து உள்ளே நுழைவதைக் கண்டதும், ''இதோ வந்துட்டாங்க. நீங்களே சந்தேகம் இருந்தால் கேட்டுக்கோங்க'' என்ற செல்வராணியின் குரல் மட்டும் கேட்டது.

''வாங்க...'' என்று பொதுவான மிக மெல்லிய வரவேற்பு கமலம் அம்மாவிடம் இருந்து மட்டுமே வெளிவர, கௌசல்யாவும் பத்மநாபனுமே அமைதியாக அமர்ந்து இருந்தனர்.

''என்னப்பா... ரொம்ப அமைதியா இருக்கீங்க...? ராணி என்னிடம் என்ன கேட்க சொல்கிறாள்?'' என்று மெதுவாக அப்பாவின் அருகே வந்து சுந்தரி விசாரிக்க, அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டாலும், ''இப்ப எங்கே போயிட்டு வருகிறாய்?'' என்ற கேள்வி சுந்தரி சீனியரிடம் இருந்து வந்தது.

''அது... லைப்ரரிக்கு தான் பாட்டி கிளம்பினேன். ஆனால்... அப்புறம்... அங்கிருந்து.. ஹாஸ்பிடல் போயிட்டு... ஷ்யா... ஸ்ஸ்ஸ்... அவங்களோடு... காலேஜ் போயிட்டு வரேன்பா...'' என்று சொன்னவளின் குரல் மெலிதாக வந்தாலும் உண்மையைச் சொல்லத் தயங்கவில்லை சுந்தரி.

''முன்னாடியே சொல்லிட்டுப் போக வேண்டியது தானே? ஏன் பொய் சொன்னாய்?'' என்ற கோபமான கேள்வி இப்போது கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து பாய்ந்து வர அவள் தடுமாறினாள்.

''சாரிப்பா! கிளம்பும்போது அங்கே போகலாம் என்று நான் முடிவு பண்ணலை...'' என்று சுந்தரி வார்த்தைகளுக்கு தடுமாற ஷ்யாம் அவளின் துணைக்கு வந்தான்.

''நான் போன் பண்ணினேன் மாமா.... அதனால்...'' என்று நடுவில் புகுந்து விளக்கம் சொல்ல முயன்ற வரைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தார்.

''உங்களைக் கேள்வி கேட்க எனக்கு அதிகாரம் இல்லை. நான் என் பெண்ணைக் கேட்கிறேன்'' என்று குரலை உயர்த்தாமலேயே உன்னிடம் பேச எனக்கு விருப்பம் இல்லை என்பதைகாட்ட, அவசரமாக அம்மா விடம் திரும்பினான் ஷ்யாம்.

''அம்மா... என்னம்மா. பேசாமல் இருக்கேங்க...? நீங்க தானே... ப்ச் உங்களிடம் சொல்லி விட்டு தானே, நாங்க ரெண்டு பேரும்...''

''நான் சொல்றதைக் கேட்க அவங்க தயாராக இல்லை ஷ்யாம். நீங்களும் எங்களிடம் உண்மையை மறைத்து விட்டீங்க என்று என் மீதும் அவருக்குக் கோபம் இருக்கு. என்னை ஒன்றும் கேட்காதே ஷ்யாம். ஐ ஆம் ஹெல்ப்ளஸ்...'' என்று சோகமாக கௌசல்யா சொல்ல அவன் விழித்தான்.

இதென்ன கதையில் புது ட்விஸ்ட்? அம்மா மீது மாமா வுக்கு கோபமா ஏன்? அவங்க என்ன பண்ணினாங்க? பண்ணியது எல்லாம் தான் தானே?

''மாமா... நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க. அம்மா அப்பா மீது எந்தத் தப்பும் இல்லை. ஆரம்பத்தில் இருந்தே சுந்தரியை அவங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். நான் தான் முதலில்... சின்னக் குழப்பத்தில்... வேண்டாம்... என்று சொன்னேன்... ஆனால்... அது கூட பாஸ்ட் தான்... இப்ப...'' என்று அவசரமாக விளக்கம் சொல்ல செல்வராணி இடையிட்டாள்.



''போதுமாப்பா...? நான் முதலில் சொன்ன போது நம்ப மாட்டேன் என்று சொன்னீகளே இப்ப அவரே தன் வாயால் ஒத்துக் கொண்டார். போதுமா?''

''ராணி சொன்னது கரெக்ட்தான். உங்களுக்கு இந்தத் திருமணத்தில் சம்மதம் இல்லை என்ற உண்மையை அவங்க என்னிடம் சொல்லவில்லை. இது எவ்வளவு பெரிய விஷயம்? விருப்பம் இல்லாத உங்களைக் கல் யாணம் பண்ணிக் கொண்டு என் பெண்ணோட வாழ்க் கையை வீணாக்க நினைத்தவங்க மேலே எனக்கு கோபம் வராதா...?'' என்று ஷ்யாமிடம் கிருஷ்ணமூர்த்தி கேட்க சுந்தரி பதறினாள்.

''அப்பா, அதெல்லாம் முடிஞ்சு போன கதைப்பா. இப்ப எதுக்கு அதை பற்றி எல்லாம் பேசறீங்க?''

''அப்பா பேசக் கூடாதா? நீ பேசாதே! எல்லாக் குழப்பத்துக்கும் நீதான் காரணம். இந்தக் கல்யாணத்தை நிறுத்தணும். உனக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கித் தருகிறன் என்று நீயும் தானே சொன்னாய்...'' என்று ராணி இடையிட அப்பாவின் மேலே இருந்த கோபத்தை தங்கையிடம் திருப்பினாள் பதறினாள்.

''பட்டுப் படவைக்காக கல்யாணத்தை நிறுத்துகிறேன் என்று ஒத்துக் கொண்ட நீ, அதையாவது ஒழுங்கா செய்தாயே? பாதியில் மாறி விட்டாய் தானே ஷ்யாம் லெட்டர் வந்தப்ப சொதப்பியது யாரு?'' என்று அதட்ட லாகக் கேட்டாள் சுந்தரி.

''ஆமா...! எங்கே பெட்டர் டீல் கிடைக்குதோ... அங்கே அக்ரிமெண்ட் கையெழுத்துப் போட வேண்டியது தானே?''

"சரி அதையாவது கடைசி வரை ஒழுங்கா செய்யாமல் அதுல இருந்து இப்ப ஏன் மாறணும்...? அதுதான் என் கேள்வி...?"

"நல்ல கேள்வி சுந்தரி. ரொம்ப நியாயமானதுகூட. ஆனால் அதுல பாரு. அவர் வேலைக்கு சொல்லி இருக்கிறார் என்று சைலஜா சொன்னாள். சந்தோஷப் பட்டேன். இப்ப கடிதம் வந்தது. அதுல பயிற்சி என்ற வாசகம் இருந்தது. கொஞ்சம் வருத்தமா இருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தால், அதுவும் அடுத்த வருஷம் நான் டிகிரி முடித்த பின்பு என்று சொன்னால் எனக்குக் கோபம் வருமா வராதா? அவர் சொன்ன டீலைக் காப்பாற்றவில்லை. அதனால் நானும் மாறி விட்டேன். இப்ப நான் உன் பக்கம் இந்தக் கல்யாணத்தை நிறுத்திடலாம் எனக்குப் பட்டுப் புடவையே போதும் என்று..."

"ராணி... நீ நினைத்து நினைத்துப் பேசாத! நீ எந்தப் பக்கம் பேசுகிறாய் என்று புரியவே இல்லை... அப்பா கோபமா இருக்காங்க. இப்ப போய் எரியுற கொள்ளியில் என்னை விடுகிற மாதிரி என்னென்னவோ தேவை இல்லாத விஷயத்தை ஏன் எடுத்துக் கொடுக்கிறாய்? முடிந்து போன விஷயத்தை மீண்டும் கிளறுவதற்கும் சின்னச் சின்ன பரிசுப் பொருளுக்காக மனசை மாற்றிக் கொள்ளவும் கல்யாணம் என்ன விளையாட்டு சமாச்சாரமா?" என்று சுந்தரி அதட்ட அவளை கமலம் அதட்டினார்.

"அவள் மேலே ஏன் கோபப்படுகிறாய்? அவள் உண்மையைத் தானே சொல்கிறாள்? கல்யாணம் வேண்டாம் என்று என்னிடமே நீயே சொல்லி இருக்கிறாயே? அதை நீ தான் இப்போ மாற்றி பேசுகிறாய்?" என்று கேட்கும் போதே சுந்தரிக்கு குரல் உள்ளே போனது.



வேகமாக பாட்டியின் அருகே சென்று அவரின் கையைப் பற்றியவள், "பாட்டி... நான் எல்லா உண்மையையும் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்களே ஒரு முடிவெடுங்க..." என்று சொல்லிவிட்டு அவசரமாக மூச்சு விடாமல் இதுவரை நடந்ததைச் சொல்லி முடிக்க அங்கே ஒரு ஆழ்ந்த அமைதி நிலவியது.

"இங்கே வருவதற்கு முன்னாடியே உங்களிடம் எல்லா உண்மையையும் சொல்லி விடுவது என்ற முடிவுடன் தான் வந்தோம். ஆனால் அதுக்குள்ளே இங்கே என்னென்னவோ குழப்பங்கள் நடந்து விட்டது. எங்க இரண்டு பேரையும் பெரியவங்க எல்லோரும் மன்னித்து விடுங்க. பெற்றவர்கள் எப்போதுமே பிள்ளைகளின் நல்லதுக்கு தான் சொல்வாங்க என்ற அரிய உண்மை புரிதற்கு முன்னால் சில குழப்பங்கள் நடந்து விட்டது. சாரி... இப்ப எல்லாம் தெளிவாகி விட்டது என்று நினைக்கிறேன்.." என்று ஷ்யாம்சுந்தரியைத் தொடர்ந்து, மெல்லிய குரலில் பொதுவாக அனைவரிடமும் மன்னிப்பு கோரினான்.

"இல்லை மாப்பிள்ளை. இப்ப குழப்பம் அதிகமாகி விட்டது" என்றவரின் பேச்சில் இருந்த மாப்பிள்ளையை கவனிக்காமல் ஷ்யாம் பதறினான்.

"என்ன மாமா குழப்பம்...?"

"கல்யாணத்தை நிறுத்த கடிதம் எழுதியது நீங்க தான் என்று ஒத்துக் கொண்டீங்க. அதுல இருக்கும்

விஷயம் மட்டும் பொய் என்று நான் எப்படி ஒப்புக் கொள்வது?''

''என்னப்பா நீங்க? எனக்கே அவர் மேலே சந்தேகம் இல்லை. நீங்க ஏன் அவரை போட்டு குடையுறீங்க? விடுங்கப்பா. இப்ப எல்லாம் சரியாகி விட்டது...''

''எப்படிம்மா விடுறது? நமக்கும் எல்லா பிரச்னையும் தீர்ந்து விட்டது. நித்யா கல்யாணத்திற்குக் கொடுக்க வேண்டிய பணம் செட்டில் பண்ணியாச்சு. நீயும் படிக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறாய். இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று என்னிடம் கூட கேட்டாயே சுந்தரி. அப்பா நித்யா கல்யாணத்திற்குக் கொடுக்க வேண்டிய பணம் பற்றிய கவலை இருந்தால் அதை நான் காது கொடுத்துக் கேட்கவில்லை. இப்ப அது முடிஞ்சாச்சே! உன்னுடைய நல்லது தானே எனக்கு முக்கியம்?''

''அப்பா! என்ன பேசறீங்க நீங்க? அப்ப நீங்க ஏற் கனவே மாமாவுக்கு கொடுத்த வாக்கு முக்கியம் இல்லை யாப்பா...? நித்யா கல்யாணத்திற்கு பணம் கொடுக்க உதவி பண்ணிய அவங்க மனசு முக்கியம் இல்லையா?''

''முக்கியம் என்று நினைத்தால் தானேம்மா இந்தக் கல்யாண ஏற்பாடே பண்ணினேன். இப்பக் கல்யாணம் வேண்டாம் பிடிக்கவில்லை என்று சொல்வது மாப் பிள்ளை தானேம்மா? என்னை என்ன செய்யச் சொல் கிறாய்?''

''அவர் சொன்னது முன்னாடிப்பா. இப்ப இல்லை. ஷ்யாம் சொல்லுங்களேன்!''

''ஆமா மாமா! பாட்டி நீங்க சொல்லுங்க. நான் முத லில் போன் பண்ணும்போது கூட உங்களுக்குச் சம்மதமா என்று கேட்டேனே? எனக்கு இஷ்டம் இல்லை என்றால் அப்படி கேட்பேனா பாட்டி? நீங்க சொல்லுங்க ப்ளீஸ்...''



''நீ நல்ல பையன் தான் ஷ்யாம். அன்னிக்கு போனில் என் சம்மதம் கேட்டது மட்டுமில்லை இங்கே காலை வந்தபோதுகூட உடனே என் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கினாயே! அதுவும் என் மனசில் பதிந்து போய் தான் இருக்கு. நீ ரொம்ப மரியாதை தெரிஞ்ச பையன். அதுல எனக்குச் சந்தேகமே இல்லை. அதனால் தான் எனக்கு பயமா இருக்கு. உங்க அம்மா அப்பா ஏற்பாடு பண்ணிட்டாங்க என்பதற்காக அவங்க மனசு நோகக் கூடாது என்பதற்காக நீ சம்மதம் சொல்லி விட் டாயோ என்ற பயம் இருக்குப்பா. எங்க பொண்ணு எதிர் கால வாழ்க்கையை அப்படி எல்லாம் ரிஸ்க் எடுக்க முடி யாது இல்லையா? அதனால் தான் கிருஷ்ணா யோசிக் கிறான். அவனை நான் எப்படிப்பா சமாதானம் செய் வது?'' என்று பாட்டி கையை விரிக்க சுந்தரி அப்பா விடம் வந்து நின்றாள்.

''என் படிப்புக்கு மாமா காரண்டி என்று சொல்லி விட்டார். என்னை இன்னொரு பொண்ணா தத்தெடுத்து கொள்ள கௌசி அத்தை ரெடி. எனக்கு ஷ்யாம்சுந்தர் மேலே முழு நம்பிக்கை இருக்கு. அப்புறம் இன்னும் ஏன்பா தயங்குறீங்க?''

''கல்யாணம் என்பது நேற்று ஒனறும் இன்று ஒன்றும் பேசும் விளையாட்டு சமாசாரம் இல்லை. இப்போதைக்கு இந்த பேச்சை விடு. அப்புறம் கொஞ்சம் நாள் கழித்து

பேசிக் கொள்ளலாம்'' என்று கிருஷ்ணமூர்த்தி சொல்ல, ஷ்யாம் சுந்தர் இடையிட்டான்.

''மாமா, கடைசியா கேட்கிறேன் எங்க கல்யாணம் பற்றி என்ன முடிவு எடுத்து இருக்கீங்க...?'' என்று கேட்ட ஷ்யாமின் குரலில் கண்டிப்பு நிறைந்து இருக்க பத்மநாபனும் கௌசல்யாவும் அதட்டினார்கள்.

''ஷ்யாம், என்ன இது பெரியவங்களிடம் இப்படி கட் அண்ட் ரைட்டா பேசுற? இந்த மரியாதைதான் உனக்கு நாங்க சொல்லிக் கொடுத்தோமா?''

''சும்மா இருங்கப்பா. நான் மரியாதை தெரிஞ்சவன் தான். பெரியவர்களிடம் எப்படி பேசுவது என்று எனக்கும் தெரியும். ஆனால் மாறி மாறி, நானும் சுந்தரியும் சொல்லிட்டே இருக்கோம். அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் ஒன்று ஒரே பிடியா நின்றால் என்ன அர்த்தம்? அவருக்கு தான் நட்பின் அருமையும் புரியலை. காதலுக்குரிய மரியாதையும் தெரியலை.''

''ஓஹோ! அப்படியே வச்சுக்கோங்க மாப்பிள்ளை சார். இப்போ என்ன பண்ணுவதாக உத்தேசம்...?''

''நீங்க உங்க முடிவை சொல்லுங்க. அப்புறம் நான் என் முடிவைச் சொல்கிறேன்...''

''நல்லா கேட்டுக்கோங்க. இப்போதைக்கு இந்தக் கல்யாணம் பண்ணும் உத்தேசம் எனக்கில்லை...'' என்று கிருஷ்ணமூர்த்தி அழுத்தம் திருத்தமாக சொல்ல அங்கே இருந்த அனைவருமே அதிர்ந்தார்கள்.



''அப்பா...'' என்று சுந்தரியின் அதட்டல் மட்டுமே கேட்க, ஷ்யாம் அருகே வந்து அவளின் தோள் மீது கை போட்டு தன் அருகே இழுத்து நிறுத்தினான்.

''நீங்க உங்க முடிவைச் சொல்லிட்டீங்க இல்லையா? இப்ப நான் என் முடிவைச் சொல்றேன் கேட்டுக்கோங்க. நாங்க ரெண்டு பேருமே மேஜர். படித்தவங்க. எங்களுக்கு என்ன வேண்டும் என்று சுயமா யோசித்து முடிவெடுக்கத் தெரிந்தவங்க. எங்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சு இருக்கு. அதனால் நாங்க இரண்டு பேரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டால், உங்களால் ஒன்றும் பண்ண முடியாது...''

''ஷ்யாம் ஒரு நிமிஷம்...'' என்று அவசரமாக அவனின் கை பற்றி இழுத்து நிறுத்தியவள் அவனின் பேச்சைத் தொடர்ந்தாள்.

''அப்பா ப்ளீஸ்! ஒரு விஷயம் மட்டும் புரிஞ்சுக் கோங்க. எனக்கு ஷ்யாமோட கல்யாணம் நடக்கணும் என்பது எவ்வளவு முக்கியமோ அந்த அளவு நீங்களும் எனக்கு முக்கியம் தான்பா. அதனால் கல்யாணம் நடக்க அவருடன் பதிவாளர் அலுவலகத்திற்கு நிச்சயம் போவேன். ஆனால் கல்யாணம் நடந்த பிறகு நான் அவரோடு போக மாட்டேன். எப்ப நீங்க மனசு மாறி உறவினர்கள் மத்தியில் ஊரறிய என்னை அவருக்குத் திருமணம் செய்து கொடுக்கப் போறீங்களோ அதுவரை நான் இங்கேயே நம்ம வீட்டில் காத்திருப்பேன். சரி தானே ஷ்யாம்...'' என்று உறுதியாகச் சொல்ல அவன் பெருமையாக புன்னகை செய்தான்.

''பார்த்தீங்களா? உங்க பொண்ணு உங்க மேலே வைத்து இருக்கும் பாசத்தின் அளவைப் பார்த்தீங்களா?

பெற்றவங்களை மதிக்கும் பிள்ளைகளின் விருப்பத்தை மதிக்க நீங்களும் கற்றுக் கொள்ளுங்க. எதுக்கெடுத் தாலும் உங்களுக்கு ஒன்றும் தெரியாது. சும்மா இரு என்று பிள்ளைகளை அடக்குவதிலேயே...'' என்று ஷ்யாம் மேலும் கோபத்துடன் பொரிய அறைக்குள் இருந்து சைலஜா ஓடி வந்தாள்.

''அண்ணா... ப்ளீஸ்... கண்ட்ரோல்... கண்ட்ரோல்...! வார்த்தைகளை அள்ளித் தெளித்து விடாதீங்க. எல்லாம் டிராமா! உங்களை எல்லோரும் ஒன்றா சேர்ந்து சீண்டு றாங்க...'' என்று ஓடி வந்து அவனின் வாயைப் பொத்த அங்கே அடக்க மாட்டாமல் பெரிய சிரிப்பலை எழுந்தது.

''ஹுர்ரே... எப்படி எப்படி மாம்ஸ்...? நீங்க அக்காவைக் கூட்டிட்டுப்போய் பதிவு திருமணம் செய்வீங்களா...? நீங்க எப்படி மேடம், ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்டு இங்கேயே இருப்பீங்களா அடடா... என்ன லவ்ஸ் என்ன லவ்ஸ்...'' என்று செல்வராணி கேலியாகச் சிரிக்க, அவளை அடிக்கத் துரத்தினாள் சுந்தரி.

''அப்பா... காப்பாத்துங்க...'' என்று அவள் ஓடி, கிருஷ்ணமூர்த்தியின் பின்னே ஒளிய, ''உனக்கு மட்டும் இல்லை, அவருக்கும் சேர்த்து ரெண்டு போடணும். ரெண்டு போடுங்க பாட்டி...'' என்று சொல்லியபடி அவளைத் துரத்த இங்கே ஷ்யாம் அம்மாவை முறைத் தான்.

''ஆபீஸ் வரை நடையா நடந்து என் மேலே என் னிடமே புகார் கொடுத்து இந்தப் பெண்ணை கல்



யாணம் பண்ணிக்கோ என்று கெஞ்சியதென்ன? இப்ப ட்ராமா போட்டு, நடிக்கிறதென்ன? உங்களை...'' என்று வேகமாகத் திரும்ப அவர் ''என்னங்க, உங்க பையன் என்னை அடிக்க வரான். உங்க பிள்ளை தானே நான் செயல்படுத்தினேன்...'' என்று பத்மநாபன் பின்னால் ஒளிய அங்கே ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் சுகமாக நடந்தது.

அந்த சின்ன வீட்டைச் சுற்றிலும் சிறியவர் பெரியவர் அனைவரும் சேர்ந்து ஒருவரை ஒருவர் பிடிக்கவும் பிடித்துக் கொடுக்கவும் முயற்சி செய்ய சில பல நிமி டங்கள் கழித்து, அந்த வீட்டின் பின்புறத் தோட்டத்தில் ஷ்யாம் மூச்சு வாங்க அமர்ந்தபோது, கையில் ஒரு ட்ரேயுடன் வந்து நின்றாள் சுந்தரி.

மாமியார் மணக்க மணக்க செய்து கொடுத்த ஆவி பறக்கும் சேமியா பாயசமும் மொறு மொறுவென்ற மசால் வடையும் தட்டை நிறைக்க, காதலனின் நினைவு நெஞ்சத்தை நிறைக்க, காதலித்தவனையே கைபிடிக்கப் போகும் நினைவில் முகம் மலர்ந்து ஜொலிக்க, அருகே வந்து அமர்ந்தாள் சுந்தரி.

அவளின் கை பற்றி, ''கல்யாண பேச்சை ஸ்வீட் டோடு ஆரம்பிக்கலாமா சுந்தரி...?'' என்று உல்லாசமாகக் கேட்டவனின் மார்பில் சரிந்தவள், ''செய்யலாமே...'' என்று கொஞ்சியபடி கையில் இருந்த சின்ன ஸ்பூனால் சேமியா பாயசத்தை எடுத்து ஊட்டினாள்.

**சுந்தரி...நீயும்... சுந்தரன் ஞானும்...**

**சேர்ந்திருன்னால் திருவோணம்..**

கையில் கையும் வைத்து

கண்ணில் கண்ணும் வைத்து...

நெஞ்சில் கொண்டு சேருன்ன நேரம்

சுந்தரி நீயும் சுந்தரன் ஞானும்...

சேர்ந்திருன்னால் திருவோணம்...

என்ற சைலஜா ராணி இருவரின் கோரஸ் பாடல் ஒலித்த அதே நேரத்தில் ''ஷ்! சும்மா இருங்க...'' என்ற சின்ன குரலில் ஆன கௌசல்யா கமலம் இருவரின் அதட்டல் பின்னணியில் சேர்ந்து ஒலிக்க, ஷ்யாம் சுந்தரி இருவரும் ஒருவரின் இதயத்தில் மற்றவர் புற உலகம் பற்றிய நினைவே இல்லாமல் சரணடைந்தனர்.

இனி எல்லாம் சுகமே...!